[illegible]

[illegible]

[illegible] 23 [illegible] 2 [illegible] JU 21, 200

D
211,31 P02
P02 23
224373

ளியீடு 30-11-2002

Issued 30-11-2002

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

செவ்வாய்க்கிழமை, ஏப்ரல் 23, 2002 – தொகுதி 23 – எண் 2

**Tuesday the 23rd April, 2002 – Volume 23 – No. 2**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009*

**Legislative Assembly Secretariat, Fort St. George, Chennai - 600 009**

லை ரூ. *3.00*]

[Price Rs. 3.00

**23-4-2002**

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| **1. வினாக்கள் விடைகள்—** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 271-320 |
| **2. விதி 110-ன்கீழ் அறிக்கை—** | |
| தமிழக மின் உற்பத்திப் பெருக்கத் திட்டம் மற்றும் மத்தியத் தொகுப்பிலிருந்து மின்சாரம் வழங்கப்படுவது குறித்து மத்திய எரிசக்தித் துறை அமைச்சருடன் நடத்திய பேச்சுவார்த்தை விவரம் பற்றிய முதலமைச்சரின் அறிக்கை | 321-322 |
| **3. தகவல் கோரல்—** | |
| (அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள் | 323-324 |
| (ஆ) வேலூர் மாவட்டத்தில் அதிகாரிகள் மாற்றம் | 324-326 |
| **4. அரசினர் தீர்மானங்கள்—** | |
| (அ) பேரவைப் பணிகளினின்றும் திரு. பரிதி இளம்வழுதி மற்றும் டாக்டர் க. பொன்முடி ஆகியோரைக் கூட்டத் தொடரின் எஞ்சியுள்ள நாட்களுக்கு நீக்கி வைத்தல் | 327-348 |
| (ஆ) பேரவைப் பணிகளினின்றும் திரு. பரிதி இளம்வழுதி மற்றும் டாக்டர் க. பொன்முடி ஆகியோரை ஒரு நாள் மட்டும் நீக்கி வைத்தல் | 349-350 |


53-127—1

224373
சென்னை 600 1 3
நூலகம்



பக்கங்கள்

5. கவன ஈர்ப்பு—

(அ) திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி தாலுகாவை இரண்டாகப் பிரித்தல் 351-354

(ஆ) கடலூர், சிப்காட் வளாகத்திலுள்ள டான்பாக் நிறுவனக் கழிவுநீர் கடலில் கலத்தல் 354-357

6. அறிக்கைகள் அளித்தல்—

பொது நிறுவனங்கள் குழு 358

7. உரிமை மீறல் பிரச்சினை—

நிதி மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர்மீது—தீர்ப்பு 358-359

8. அறிவிப்புகள்—

(அ) ஏற்கெனவே தீர்ப்பளிக்கப்பட்ட ஒரு பொருள் பற்றி மீண்டும் உரிமை மீறல் பிரச்சினை எழுப்ப அனுமதி மறுத்தல் 359-360

(ஆ) பல்கலைக்கழக ஆட்சிமன்றப் பேரவைகள், தமிழ்நாடு நில மேம்பாட்டுக் குழுமத்தின் நிர்வாகக் குழு மற்றும் மாநில நூலகக் குழு ஆகியவற்றிற்கு உறுப்பினர்கள் நியமனம் 360-361

9. மானியக் கோரிக்கைகள், 2002-2003, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

கோரிக்கை எண் 5—வேளாண்மைத் துறை—தொடர்ச்சி 361-427

*திரு. கே.சி. கருணாகரன் 361-370

திரு. வை. சிவபுண்ணியம் 371-379, 410, 411

*திரு. ஜெக. வீரபாண்டியன் 379-384

V2M,31'P02
P02.23.2



பக்கங்கள்

*டாக்டர் பி. வள்ளல் பெருமான் 384-390

திரு. என்.ஆர். ரங்கராஜன் 390-393

*திரு. சி. சண்முகவேலு 394-400

மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம் 400-422

10. அரசினர் சட்டமுன்வடிவு (ஆய்வு செய்தல்)—

தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002 428-440

மாண்புமிகு திரு. சி. துரைராஜ் 428, 436-438, 440

திரு. சி. ஞானசேகரன் 428, 434

திரு. வை. சிவபுண்ணியம் 429-430

*திரு. என். நன்மாறன் 430

திரு. க. முருகவேல் ராஜன் 431-432

திருமதி டி. யசோதா 433

திரு. லா. சந்தானம் 433-435

11. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்— 440-441

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**சித்திரை 10, சித்ரபானு - திருவள்ளுவர் ஆண்டு 2033**

**2002 ஏப்ரல் 23, செவ்வாய்க்கிழமை**

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"உழுவார் உலகத்தார்க்கு ஆணிஅஃ தாற்றாது
எழுவாரை எல்லாம் பொறுத்து."

பல்வேறு தொழில் புரிகின்றவர்களின் பசி போக்கிடும் தொழிலாக உழவுத் தொழில் இருப்பதால் அதுவே உலகத்தாரைத் தாங்கி நிற்கும் அச்சாணி எனப்படும்.

## 1. வினாக்கள்-விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா எண் 200, திரு. ரா. ஈஸ்வரன், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்.

**200—**

**சாலையைப் புதுப்பித்தல்**

***5139—திரு. ரா. ஈஸ்வரன்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வாசுதேவநல்லூர் தொகுதி, தேசம்பட்டி நாரணபுரம் முதல் இராமநாதபுரம் வரையிலான மங்கம்மாள் சாலை பழுதடைந்துள்ளதை உடனடியாகப் புதுப்பித்துத் தர அரசு ஆவன செய்யுமா?

[2002 ஏப்ரல் 23

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்சமயம் இல்லை.

**திரு. ரா. ஈஸ்வரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாரணபுரம் முதல் தேசம்பட்டி வரை சுமார் 3 கிலோ மீட்டர் தூரம் 10 ஆண்டு காலமாக மிக மோசமாக, பஸ் போக்குவரத்து சரியாகப் போக முடியாத சூழ்நிலை இருக்கின்றது. என்னுடைய ஊருக்கு அருகில் அந்தச் சாலை இருக்கிறது. ஆகையால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து, அந்த 3 கிலோ மீட்டர் தூரத்தைப் புதுப்பித்துத் தர ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சாலை, திருநெல்வேலி கோட்டத்தின் பராமரிப்பில் உள்ள திருமலாபுரம் மங்கம்மாள் சாலை - கிலோ மீட்டர் 0/0, 2/2 என்ற ஓர் இதர மாவட்டச் சாலையாகும். இச்சாலையைச் செப்பனிட, தோராயமாக ரூபாய் 12 இலட்சம் தேவைப்படும். இப்பணி, அரசால் அங்கீகரிக்கப்பட்ட எந்தத் திட்டத்திலும் இடம் பெறவில்லை. இருப்பினும், அடுத்து எடுக்கவிருக்கின்ற சாலை மேம்பாட்டுப் பணியில், இச்சாலையைப் புதுப்பிக்க முன்னுரிமை அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 201, திரு. மீ.அ. வைதியலிங்கம், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**201—**

## உயர்நிலைப் பள்ளியாக்குதல்

***7640—திரு. மீ.அ. வைதியலிங்கம்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் **கீழ்க்காணும் வினாக்களுக்கு** விடையளிப்பாரா—



2002 ஏப்ரல் 23]

(அ) தாம்பரம் நகராட்சி நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இன்றைய நிலை என்ன?

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தாம்பரம் நகராட்சியிலுள்ள நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக்குவதற்கு இதுவரை கருத்துரு ஏதும் பெறவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான், குறிப்பாக மேற்குத் தாம்பரத்தில், பழைய தாம்பரத்தில் இருக்கிற பள்ளியைப் பற்றிக் கேட்டிருந்தேன். அந்தப் பள்ளியிலே சற்றொப்ப 350 மாணவர்களுக்கு மேற்பட்டவர்கள் படிக்கின்றார்கள். அந்தப் பள்ளியிலே 1 ஏக்கருக்கு மேற்பட்ட இடம் இருக்கிறது. சுற்றுச்சுவர் எல்லாம் இருக்கிறது. உயர்நிலைப் பள்ளி ஆக்குவதற்குரிய வாய்ப்புகள் அத்தனையும் இருக்கிற காரணத்தினால், உயர்நிலைப் பள்ளியாக மாற்றுவதற்கான இட வசதியும் இருக்கிற காரணத்தினால், மாண்புமிகு அமைச்சர் இந்த ஆண்டு ஏற்பாடு செய்தால், அதற்குரிய 1 இலட்சம் ரூபாய் பணத்தைக்கூடச் செலுத்துவதற்கு அங்கிருக்கிற பொது மக்கள் தயாராக இருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உயர்நிலைப் பள்ளியாக உயர்த்துவதற்கு ஏற்பாடு செய்வாரா எனத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாம்பரத்தில் 4 நடுநிலைப் பள்ளிகள் இருக்கின்றன. கண்ணடியாபுரத்திலுள்ள நடுநிலைப் பள்ளியில் 1½ ஏக்கர் நிலம் மட்டும்தான் இருக்கிறது. அங்கு மாணவர்கள், 6, 7, 8 ஆகிய 3 வகுப்புகளில் படிக்கின்றவர்கள் 115 பேர்தான் இருக்கின்றார்கள். 8 ஆம் வகுப்பில் படிக்கின்றவர்கள் 38 பேர் இருக்கின்றார்கள். அடுத்ததாக, பழைய தாம்பரம் நகராட்சி நடுநிலைப் பள்ளியை எடுத்துக்கொண்டீர்கள் என்றால், அதற்குத் தற்போது 4 ஏக்கர் நிலம் இருக்கிறது. ஆனால், தேவைப்படுவது 5 ஏக்கர் நிலம். நடுநிலைப் பள்ளியில் 6, 7, 8 ஆகிய 3 வகுப்புகளில் 110 மாணவர்கள் படிக்கின்றார்கள். அதில் 8 ஆம் வகுப்பில் 25 மாணவர்கள்தான் படிக்கின்றார்கள். அதேபோல், வினோபா நகரில் 1/2 ஏக்கர் நிலத்தில்தான் அந்தப் பள்ளி இருக்கிறது.

அதிலும் பார்ப்பீர்கள் என்றால், 6, 7, 8 ஆகிய வகுப்புகளில் 82 மாணவர்கள்தான் படிக்கின்றார்கள். 8 ஆம் வகுப்பில் 28 பேர்தான் படிக்கின்றார்கள். இரும்புலியூரில் ¾ ஏக்கர் நிலத்தில்தான் அந்தப் பள்ளி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதிலும் பார்ப்பீர்கள் என்றால், 143 மாணவர்கள் படிக்கின்றார்கள்; 8 ஆம் வகுப்பில் 45 மாணவர்கள் படிக்கின்றார்கள். ஆகவே, உயர்நிலைப் பள்ளியாக ஆக்க வேண்டும் என்றால் அதற்கு 5 ஏக்கர் நிலம் தேவைப்படுகிறது. அதற்கேற்ப நிலத்தை ஏற்பாடு செய்ய வேண்டும். பிறகு, மாணவர்கள் எண்ணிக்கை குறைந்தபட்சம் 50 ஆவது இருக்க வேண்டும் என்ற விதிமுறை இருக்கிறது. அதுவும் சரி செய்யப்படவில்லை. கட்டடங்களைப் பார்த்தால்கூட, தேவையான கட்டடங்கள் முழுவதும் இல்லை. அதைச் செய்ய வேண்டும் என்றால், எம்.எல்.ஏ. நிதியிலிருந்து நீங்கள் தரலாம். மற்றவர்களும் செய்து கொடுக்கலாம். அதோடு, ஒரு பள்ளியைக் கட்ட வேண்டும், அது தரம் உயர்த்தப்பட வேண்டும் என்றால், பொது மக்களுடைய வைப்புத் தொகையாக 1 இலட்சம் ரூபாய் கட்ட வேண்டும். இந்த 4 பள்ளிகளில் யாரும் இதுவரை ஒன்றும் கட்டவில்லை. 1 இலட்சம் ரூபாய் பணத்தைக் கட்டியவர்களே பல பேர் காத்துக்கொண்டிருக்கிறார்கள். நகராட்சிப் பள்ளியிலே இருப்பவர்கள் இந்தக் குறைபாடுகளையெல்லாம் பூர்த்தி செய்தார்கள் என்றால், அதைப்பற்றிப் பரிசீலனை செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மீ.அ. வைதியலிங்கம்.

முற்பகல் 10-05

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சுட்டிக்காட்டிய கேள்வி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், பழைய தாம்பரத்தில் 110 மாணவர்கள் 6, 7, 8 ஆம் வகுப்புகளிலே படிக்கிறார்கள் என்று சுட்டிக்காட்டிய அந்தப் பள்ளியைப் பற்றித்தான். அதற்கு 4 ஏக்கர் இடம் இருக்கிறது. நகரப் பகுதியிலே 5 ஏக்கர் கிடைப்பது என்பது எவ்வளவு சிரமம் என்பது மாண்புமிகு அமைச்சருக்குத் தெரியும். பல இடங்களிலே ஒரு ஏக்கர் இடத்திலேகூட உயர்நிலைப் பள்ளிகள் நடைபெறுகின்றன. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விதியைத் தளர்த்தி 4 ஏக்கர் இடத்திலே ஒப்புக்கொள்வதாக இருந்தால், அதற்குரிய 1 இலட்சம் ரூபாயைச் செலுத்துவதற்கு அங்கே இருக்கிற பொது மக்கள் தயாராக இருக்கிறார்கள். அங்கேயெல்லாம் படிக்கிறவர்கள் நடுத்தரக் குடும்பத்தைச் சார்ந்த பிள்ளைகள், ஏழையெளிய மக்களுடைய பிள்ளைகளாக இருக்கிற





காரணத்தால், அந்தப் பள்ளியைத் தரம் உயர்த்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சட்டத்தைத் தளர்த்தி, 4 ஏக்கர் போதும் என்று உத்தரவிடுவாரா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சட்டத்தைத் தளர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார். இதற்கென்று ஓர் உயர்மட்டக் குழு இருக்கிறது. அந்தப் பகுதி மக்களும் சேர்ந்து, அந்தக் கோரிக்கையை உயர்மட்டக் குழுவினிடத்திலே தாருங்கள். அவர்கள் என்ன முடிவெடுக்கிறார்களோ, அதற்கேற்றாற்போல் அரசானது தன் முடிவைச் செயல்படுத்தும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 202, திரு. ஆஸ்டின், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**202—**

**வழக்குரைஞர் நல நிதி**

***3513—திரு. ஆஸ்டின்:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் வழக்கறிஞர்கள் இறந்துவிட்டால் வழக்குரைஞர் நல நிதியில் இருந்து வழங்கப்படும் தொகையான இரண்டு இலட்சத்தை உயர்த்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**திரு. ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது பொருளாதார ரீதியாகப் பின்தங்கிய குடும்பங்களிலிருந்துதான் பல பேர் சட்டக் கல்லூரியிலே படித்து வழக்கறிஞர்களாகப் பொறுப்பேற்கின்றார்கள். அப்படி அவர்கள் வழக்கறிஞர்களாகப் பணியைத் தொடங்குகின்ற காலத்திலே அவர்களுக்கு மாதந்தோறும் ஒரு நிரந்தரமான வருமானம் இல்லாத நிலைதான்

[2002 ஏப்ரல் 23

இருந்துகொண்டிருக்கிறது. பொதுவாக, டாக்டர்கள், என்ஜினியர்கள்—பொறியாளர்கள்—எல்லாம் பணியில் சேர்ந்தவுடன் அவர்களுக்கு மாதந்தோறும் நிரந்தர வருமானம் வருகிறது. ஆனால் வழக்கறிஞர்களைப் பொறுத்த அளவிலே, அவர்கள் enrolment செய்த பிறகு பணியைத் தொடங்கினால்கூட, 3 ஆண்டுகள், 5 ஆண்டுகளுக்குப் பிறகுதான் அவர்களுக்கு வருமானம் வருவதற்கு வாய்ப்பிருக்கின்றது. எனவே, இளம் வழக்கறிஞர்கள் என்ற அடிப்படையிலே 3 ஆண்டுகளுக்கோ அல்லது 5 ஆண்டுகளுக்கோ இந்த நல நிதியிலிருந்து மாதந்தோறும் 500 ரூபாய் உதவித் தொகையாக, stipend என்கின்ற அடிப்படையிலே அவர்களுக்கு வழங்குவதற்கு அரசு முன்வருமா என்று கேட்டுக்கொள்வதோடு, ஏற்கெனவே வழங்கப்படும் 2 இலட்சம் ரூபாயை உயர்த்தும் உத்தேசம் அரசிடம் இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதை ஒட்டுமொத்தமாக உயர்த்தாமல், ஒரு slab system என்ற அடிப்படையிலே, 50 வயது ஆன வழக்கறிஞர்கள் இறந்தால் 2 இலட்சம் ரூபாய் என்ற அடிப்படையிலும், 40 வயதிலே அவர்கள் மரணம் அடைந்தால் 3 இலட்சம் ரூபாய் என்ற அடிப்படையிலும், 30 வயதிலே அவர்கள் மரணம் அடைந்தால் அவர்களுக்கு 5 இலட்சம் ரூபாய் என்ற அடிப்படையிலும் slab system-இலே இந்த உதவித் தொகையை உயர்த்துவதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது 2 இலட்சம் ரூபாய், வழக்கறிஞர்கள் இறக்கும் பட்சத்திலே நிவாரணமாக வழங்கப்படுகிறது. மாதந்தோறும் 500 ரூபாய் வழங்குகின்ற திட்டத்தினை அமல்படுத்த வேண்டுமென்று சொல்லியிருக்கின்றார்கள். பொருளாதாரத்திலே நலிவுற்ற, ஒடுக்கப்பட்ட மக்களாக, ஒடுக்கப்பட்ட வழக்கறிஞர்களாக இருக்கின்ற ஆதிதிராவிட வழக்கறிஞர்கள், பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த வழக்கறிஞர்களுக்கு, அவர்கள் எந்த சீனியரிடத்திலே பயிற்சி பெறுகின்றார்களோ, அந்த சீனியரிடத்திலே பயிற்சி பெறுவதற்கு வேண்டிய மாதாந்திர உதவித் தொகை வழங்கப்படுகின்றது. எனவே, பொருளாதாரத்திலே பின்தங்கியவர்களுக்குத்தான் அந்தச் சலுகையை நாம் அளிக்க முடியும். எனவே, வருங்காலங்களிலே இந்த Welfare Fund மூலம் எவ்வளவு நன்மைகளை நம்முடைய வழக்கறிஞர்களுக்குச் செய்ய முடியுமோ, அதுகுறித்து ஆராய்ந்து செய்யலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2002 ஏப்ரல் 23]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர்.

**மாண்புமிகு திரு. அ. அருணாசலம் (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு வழக்கறிஞராகப் பணிபுரிந்து அவர் இறந்த பிறகு, அவருடைய குடும்பத்திற்கு வழங்கப்படும் நிவாரணத் தொகையான ரூ. 2 இலட்சத்தை உயர்த்த முடியுமா என்று அமைச்சரிடம் இந்தக் கேள்வியைப் போட்டிருக்கிறார்கள். வழக்கறிஞராக இருக்கிறவர்கள் நிறையப் பேர் சட்டமன்ற உறுப்பினர்களாக இருக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள் இறக்கின்ற நேரத்தில், அவர்களுடைய குடும்பத்திற்கு நிவாரண நிதி வழங்குகிற திட்டமும் இருக்கிறது. ஆகவே, அந்த நிதியையும் சேர்த்து—வழக்கறிஞராக இருக்கிறவர், சட்டமன்ற உறுப்பினராக, முன்னாள் சட்டமன்ற உறுப்பினராக இருந்தால், இந்த இரண்டு நிதியையும் சேர்த்து—கொடுக்கிற திட்டம் ஏதாவது அரசின் பரிசீலனையில் இருக்கிறதா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒன்றுக்கே வழியில்லை என்கிறார். நீங்கள் வேறே!

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலுள்ள வழக்கறிஞர்கள் மற்றும் அவர்களுடைய குடும்பத்தாருடைய நலனுக்காக 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வழக்கறிஞர்கள் நல நிதியச் சட்டம் ஏற்படுத்தப்பட்டு, 1991 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகின்றது. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் சொன்னதைப்போல, எந்த ஒரு உறுப்பினரும் பதிவு செய்து இந்தச் சட்டத்தின்படி உறுப்பினராகும் பட்சத்தில், அவர்கள் சந்தாத் தொகை—உதாரணத்திற்கு ஆண்டுச் சந்தா ரூபாய் 200-ம், ஆயுள் சந்தா ரூபாய் 2500-ம் அதேபோல Senior Counsel ஆக இருக்கின்ற சீனியர் வழக்கறிஞர்கள் ரூ. 6000-ம், ஆயுள் சந்தாவாகச் செலுத்தினால், அவர்கள் அந்த நிவாரணம் பெறுவதற்குத் தகுதியுடையவர்களாக இருக்கின்றார்கள்.

முற்பகல் 10-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆஸ்டின்.

**திரு. ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மற்ற அரசுப் பணியிலே பணிபுரிகிறவர்களுக்கு ஒரு பணிப் பாதுகாப்பு

[2002 ஏப்ரல் 23

இருக்கிறது. அரசுப் பணியாளர்கள் காலமானால், அவர்களுடைய குழந்தைகளுக்கு, வாரிசுகளுக்கு compassionate ground என்ற அடிப்படையிலே வேலையளிப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆனால், வழக்கறிஞர்களுக்கு அந்த நிலை இல்லாமல் இருக்கிறது. எனவே, வழக்கறிஞர் ஒருவர் மரணம் அடையும் நேரத்திலே, அவரது வாரிசுகளுக்கு, நீதித் துறை சம்பந்தமான, கோர்ட்டிலே உள்ள Clerk post-க்கு அல்லது நீதித் துறை சம்பந்தமான அரசுப் பணிகளில் வாய்ப்பளிப்பதற்கு அரசு முன்வருமா என்று கேட்டுக்கொள்வதோடு, இன்று சென்னை உயர் நீதிமன்றத்திலே வழக்கறிஞர்களுக்கென்று 350 சேம்பர்கள் கட்டப்பட்டு, அவர்களுக்கு ஒரு சாதாரண வாடகையில் கொடுக்கப்பட்டிருக்கின்றது. கிட்டத்தட்ட 6000-க்கு மேல் வழக்கறிஞர்கள் அங்கே பணியாற்றி வருகின்றார்கள்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மூலக் கேள்விக்குத் தொடர்பற்றது. இதற்கு மட்டும் பதில் சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனிதாபிமான அடிப்படையிலான கருத்தை நமது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே தெரிவித்தார்கள். தமிழ்நாட்டிலே மொத்தம் 42,000 வழக்குகள் நிலுவையில் இருக்கின்ற சூழ்நிலையில், இதுபோன்ற ஒரு கோரிக்கையை ஏற்க முடியாத நிலையிலே அரசு இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. ஹக்கீம்.

**திரு. எம்.ஏ. ஹக்கீம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்ட அமைச்சர் அவர்கள் ஒரு வழக்கறிஞர்தான். இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கின்ற வழக்கறிஞர்கள், அநேகமாக வருமானத்தையும் அரசுக்கு ஈட்டித் தந்துகொண்டிருக்கிறார்கள். Memo of Appearance அல்லது வக்காலத்துப் போடுவது, வேறு மவுண்ட்கள் எதுவாக இருந்தாலும், அதற்குண்டான ஸ்டாம்புகளை, பணத்தை வாங்கிக்கொண்டு ஒட்டி, அதன் மூலமாகத்தான் வழக்கறிஞர்கள் representatives ஆக, பிரதிநிதிகளாக ஆஜர் ஆகிக்கொண்டிருக்கிறார்கள். பணிபுரிகிறோம் என்கின்ற காரணத்திற்காக மாத்திரம் நிதி ஒதுக்கீட்டைக் கூட்டிக் கொடுக்க வேண்டும் என்பதல்ல. வழக்கறிஞர்களால் நீதிமன்றத்தின் வாயிலாக அரசாங்கத்திற்குக் கோடிக்கணக்கில் வருமானமும் வருகிறது. அதேமாதிரியாக, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆஸ்டின் அவர்கள் குறிப்பிட்டார்கள். வயதைப் பொறுத்து, 50, 40, 30



2002 ஏப்ரல் 23]

என்று வருகின்றபோது Slab system லே, இறங்க, இறங்கக் கூடுதலாக, service அடிப்படையிலே பார்ப்போம் என்று சொன்னால், மூத்த வழக்கறிஞர்களாக இருப்பவர்களுக்குக் கொஞ்சம் அதிகப்படியான தொகையைக் கொடுப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதில் தவறு இல்லை என்று கருதுவதற்கு என்ன காரணம் என்று சொன்னால், அவர்கள் வாயிலாக நிறைய வருமானம் வந்து கொண்டிருக்கிறது. நீதிமன்றத்தைப் பொறுத்தமட்டில், professional ethics as well as professional intelligence என்று இருக்கின்ற காரணத்தினாலே, அந்தக் கண்ணியத்தையும் காப்பாற்றவேண்டும், அதேநேரத்தில், அவர்களுடைய கெட்டிக்காரத்தனத்தின் அடிப்படையில்தான் இது அமையும் என்கின்ற காரணத்தினாலே, வழக்கறிஞர்களுக்கு வேறு வழியில்லை என்பதாலும், வருமானமும் நிறைய வருகிறது என்பதாலும், அப்படிப்பட்ட வழக்கறிஞர்கள் சேம நல நிதிக்கு அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன மாதிரி, ஒரு 200 ரூபாய், ஒரு வருடத்திற்கு 2000 ரூபாய்.... (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியைக் கேளுங்கள்.

**திரு. எம்.ஏ. ஹக்கீம்:** நான் வக்கீலாக இருப்பதனால், அந்த definition-ஐக் கொஞ்சம் கொடுத்தேன் என்று சொன்னால்.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இங்கே வாதாடக்கூடாது.

**திரு. எம்.ஏ. ஹக்கீம்:** ரூபாய் 2500 என்று கட்டுகிற காரணத்தினாலே பெரிய அளவிலே பாதிப்பு இல்லை என்பதை நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்து, இந்த 2 இலட்சம் ரூபாய் என்பது மிகக் குறைவாக இருக்கின்றது. குறைந்தபட்சம் 3 இலட்சம் ரூபாயாக உயர்த்தித் தருவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வக்காலத் நாமா' ஸ்டாம்ப், ரூபாய் 10 பெறுமானமுள்ள முத்திரை வில்லையை ஒட்டுவதன் காரணமாக 1 கோடியே 10 இலட்சம் ரூபாய் வருடத்திற்கு வருவாய் கிடைக்கின்றது. வருவாய் என்று சொன்னால், அந்த நல நிதியத்தில்தான் அது செலுத்தப்படுகின்றது. மொத்தத்திலே, மொத்த நிதி என்று பார்த்தால் ரூபாய் 2 கோடியே 3 இலட்சம் இருக்கிறது. இறந்தவர்களின் எண்ணிக்கையைப் பார்த்தால், ஏறக்குறைய 344 குடும்பங்கள் இதுவரை பலனடைந்திருக்கின்றன. எனவே இதனையும் நாம் கவனத்திலே கொள்ள

[2002 ஏப்ரல் 23

வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினால், நிதியை அதிகமாக உயர்த்துவதன் மூலமாகத்தான் வழக்கறிஞர்களுக்கு அதிகமான அளவிற்கு அந்த நிவாரண உதவியை உயர்த்துவதற்கு வழியை ஏற்படுத்தும். எனவே, அதற்கு ஒரு நல நிதியம் இருக்கின்றது. அதிலே, A.G. அதாவது Advocate General தலைவராக இருக்கிறார். Home Secretary, Law Secretary and Government pleader உறுப்பினர்களாக இருக்கின்றார்கள்; அதுமட்டுமல்லாமல், தமிழ்நாடு வழக்கறிஞர் பதிவு மன்றம் நியமனம் செய்யும் 3 உறுப்பினர்கள்;. மொத்தத்திலே அதனை Trustees Committee நிர்வகிக்கின்றது. அவர்களிடத்திலே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தினை அரசு எடுத்துச் சொல்லி, எந்த அளவிற்கு உயர்த்தலாம் என்பதைக் குறித்து, வேண்டிய அளவிற்கு அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு.

**திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழக்கறிஞர் இயற்கை எய்தினால், அவர்களுக்கு 2 இலட்சம் ரூபாய் கொடுக்கின்றார்கள். ஆனால் சில இனங்களில் 4 ஆண்டுகள், 5 ஆண்டுகள் ஓடிவிடுகின்றன. அந்த 4 ஆண்டுகள், 5 ஆண்டுகளில், அந்தக் குடும்பமே வேறு இடத்திற்குச் செல்லுகின்ற சூழ்நிலை இருக்கிறது. ஆகையால் குறிப்பிட்ட காலத்திற்குள் அந்த நிதியைக் கொடுப்பதற்கு அரசு ஆவன செய்யுமா?

முற்பகல் 10-15

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதுவரையிலே என்னுடைய கவனத்திற்கு இந்த மாதிரியான விஷயங்களைக் கொண்டு வரவில்லை. specific ஆக இது மாதிரியான விஷயங்களை என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தால், நிச்சயமாக உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வழக்கறிஞர்கள் நல நிதிக்குத் தங்கள் பங்கைச் செலுத்துகின்ற நேரத்தில், ஒரு முறை செலுத்திய உடனேயே இறந்து விடுகின்ற சூழ்நிலைகூட ஏற்படுகிறது. அப்படி ஒரு முறை செலுத்திய உடனேயே இறந்து விட்டவர்களுக்கு, இந்த உரிய 2 இலட்சம் ரூபாய்



2002 ஏப்ரல் 23]

கொடுக்கப்படுகின்றதா? எங்கள் கட்சிக்காரர் ஒருவர்கூட, ஒரு முறை செலுத்திவிட்டு இறந்துவிட்ட காரணத்தினால், அந்த நல நிதியிலிருந்து நிவாரணம் இல்லை என்று மறுக்கப்பட்டது; இத்தனை முறை செலுத்தியிருக்கவேண்டும் என்கின்ற விதிமுறை இருக்கின்றதா என்பதைத் தங்கள் மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டுச் சந்தா செலுத்திவிட்டாலே, அதற்குண்டான உரிமை அவருக்குக் கிடைத்து விடுகின்றது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அந்த நிவாரணம் கிடைக்காத அந்த வழக்கறிஞர் பற்றிய தகவலைக் கொடுப்பாரெனில், அதில் என்ன நியாயமான நடவடிக்கை எடுக்கவேண்டுமோ, அதை நிச்சயமாக அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்.

**திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு வழக்கறிஞரின் குடும்பம், அவர் இறந்த பின்பு நலம் பெற, வழக்கறிஞர் நல நிதியிலிருந்து கூட்டுக் காப்பீட்டுத் திட்டம் என்ற Group Insurance Scheme-ஐச் செயல்படுத்த அரசு பரிசீலனை செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Group Insurance Scheme—கூட்டுக் காப்பீட்டுத் திட்டம்—என்று உறுப்பினர் சொன்ன யோசனை, நல்ல யோசனை, எனவே, இதுகுறித்து Turstees Committee-க்கு அரசு சார்பிலே எழுதப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1991 ஆம் ஆண்டு திருத்தச் சட்டம் கொண்டு வருகிறபோது, வழக்கறிஞர்கள் இறந்தால் 2 இலட்சம் ரூபாய் கொடுக்கலாம் என்று ஒரு திருத்தத்தைக் கொண்டு வந்தோம். ஆனால், இப்போது விலைவாசி ஏறிவிட்டிருக்கின்ற சூழ்நிலை. அதேபோல வழக்கறிஞர்கள் இப்போது Bail என்று போட்டால், நிறைய unhealthy competition. போதிய வருவாய் என்பதே இப்போது வழக்கறிஞர்களுக்கு இல்லாத ஒரு நிலை.

[2002 ஏப்ரல் 23

உயர் நீதிமன்றத்திலோ அல்லது உச்ச நீதிமன்றத்திலோ இன்றைக்குப் பணியாற்றிக் கொண்டிருக்கக்கூடிய வழக்கறிஞர்கள் மட்டும்தான் செல்வச் செழிப்போடு இருக்கிறார்களேயொழிய, கிராமப் பகுதிகளிலே, நகரப் பகுதிகளிலே இன்றைக்குப் பணியாற்றிக் கொண்டிருக்கக்கூடிய வழக்கறிஞர்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழே போய்க் கொண்டிருக்கக்கூடிய நிலை இருக்கிற காரணத்தினாலே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த Advocate Welfare Fund Act-க்கு மீண்டும் ஒரு திருத்தத்தை கொண்டுவந்து, Stamp duty-ஐ இன்னும் கொஞ்சம் increase செய்துகூட, ஒரு வழக்கறிஞர் இறந்தால் 5 இலட்சம் ரூபாய் என்று கொடுப்பதற்கான வழிமுறைகளைக் காணத் தயாராக இருக்கிறாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்து நல்ல கருத்தாக இருப்பதால், பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி எஸ். மகேஸ்வரி.

**திருமதி எஸ். மகேஸ்வரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழக்கறிஞர்கள் இறக்கும் காலத்தே அவர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகையானது 1 இலட்சம் ரூபாயிலிருந்து, 2 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்ட காலத்திலேயே இதைக் குறைந்தபட்சம் 5 இலட்சம் ரூபாயாக வழங்கவேண்டும் என்பதாகத்தான் அனைத்து வழக்கறிஞர் சங்கங்களும் கோரிக்கை வைத்தன. 'வக்கத்தவனுக்கு வக்கீல் வேலை, போக்கத்தவனுக்கு போலீஸ் வேலை' என்றெல்லாம் எங்களைப் பார்த்து பரிகாசம் பேசுகின்றார்கள். நாங்கள் இருக்கும்போது எங்கள் குடும்பத்திற்கு உதவிகரமாக இருக்கிறோமோ, இல்லையோ, இறக்கும்போது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மகேஸ்வரி, வாக்குக் கற்றவனுக்குத்தான் வழக்கறிஞர் வேலை. (சிரிப்பு) வக்கற்றவனுக்கு இல்லை.

**திருமதி எஸ். மகேஸ்வரி:** ஆகவே, இருக்கும்போது இல்லாவிட்டாலும், இறக்கும்போதாவது எங்கள் குடும்பத்திற்கு உதவிகரமாக இருக்கவேண்டுமென்று எண்ணுகிறோம். இந்த அடிப்படையிலேதான், Advocate Welfare Fund Stamp கூட 5 ரூபாயிலிருந்து, 10 ரூபாயாக



2002 ஏப்ரல் 23]

அந்தக் கட்டணம் உயர்த்தப்பட்டிருக்கிறது. எனவே நிவாரணத் தொகையை இன்னும்கூட நீங்கள் உயர்த்தலாம். அதற்காக கட்டணத்தை உயர்த்த வேண்டிய அவசியமில்லை. இப்போது உரிமையியல் நீதிமன்றங்களிலே, இந்த Welfare Stamp-ஆனது ஒட்டப்படுவது compulsory செய்யப்பட்டிருக்கிறது. அதேபோன்று, குற்றவியல் நீதிமன்றங்களிலே Memo of Appearance தாக்கல் செய்யும்போது, அதிலேகூட இந்த Welfare Stamp-ஐ ஒட்ட வேண்டுமென்ற ஒரு வழிமுறை இருக்குமேயானால், நிச்சயமாக இதன்மூலம் ஒரு மிகப் பெரும் தொகை ஒவ்வொரு நாளும் நமது சேம நல நிதிக்குக் கிடைக்கும். ஆகவே, இதன் மூலம் இந்தத் தொகையை 5 இலட்சம் ரூபாயாக உயர்த்தலாம். ஆகவே, இப்படி ஒரு யோசனை அரசாங்கத்திற்கு இருக்கிறதா என்பதை நான் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்கு இந்தக் கருத்தை எடுத்துச்சென்று, இந்த நல நிதியத்தை நிர்வகிக்கின்ற Trustees Committee-ஐ அரசு சார்பிலே அழைத்து, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சொன்ன அத்தனை கருத்துகளையும் தொகுத்து, அந்த Tursteees Committee-யிடம் வேண்டுகோள் விடுத்து, அதிகபட்சம் எந்த அளவிற்குச் செய்ய முடியுமோ, அந்த அளவிற்கு நிச்சயமாக நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செய்வார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழக்கறிஞர்கள் இறந்துவிட்டால் அவர்களுடைய நல நிதியிலிருந்து வழங்கப்படும் தொகை 2 இலட்சம் ரூபாய் என்று இருக்கிறது. இளம் வழக்கறிஞர்களுக்கு வழிவிடும் வகையில், வயதான ஒரு வழக்கறிஞர் உயிரோடு இருக்கும்போது, இனிமேல் நான் வழக்குகளில் ஆஜராக மாட்டேன் என்று சொல்லும்போது, அவருக்கு நல நிதியிலிருந்து பணம் கேட்கும்போது, 50 சதவிகிதமாகத் தருகிறார்கள். இளம் வழக்கறிஞர்கள் மேம்பாடடைய, வயதானவர்களெல்லாம் ஓய்வு பெறுவதற்காக 75 சதவிகித பணம் தரும் ஒரு திட்டத்தை அரசு கொண்டு வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழக்கறிஞர் தொழிலை நிறுத்தியவர்களுக்கு, அவர்கள் ஒரு வருடம் உறுப்பினராக இருந்தால் உடனடியாக ரூ. 4,000-ம், 25 வருடம் உறுப்பினராக இருந்தால் 1 இலட்சம் ரூபாயும் வழங்கப்படுகிறது. எனவே, தற்போது இதிலே உயர்த்துவதற்கு உத்தேசமில்லை. எதிர்காலத்திலே இதுபற்றிச் சிந்திக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி.வி. சண்முகம்.

**திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1995 ஆம் ஆண்டு வழக்கறிஞர்கள் சங்கங்கள், இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களைச் சந்தித்துக் கேட்டபோது, வழக்கறிஞர்களுக்கு அத்தொகையை 5 இலட்சம் ரூபாயாக உயர்த்தித் தருவோம் என்று அன்று இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஓர் உறுதிமொழியை அளித்திருக்கிறார்கள். அதை நமது இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இப்போது நிறைவேற்றித் தருவார்களா என்பதை உங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'Corpus Fund'-இலே, நல நிதியத்திலே பங்குத் தொகை குறைவாக இருக்கின்ற காரணத்தினால் அமல்படுத்த முடியவில்லை. எனவே, 'Corpus Fund'-ஐ உயர்த்துகின்ற அந்தச் சூழ்நிலையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்து யோசிக்கப்படும்; பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. முருகவேல் ராஜன்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் ஹக்கீம் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, வழக்கறிஞர்களால்—எங்களால்—இந்த அரசுக்கு அதிக வருமானம் இருக்கிறது. எல்லோருக்கும் ஒரே அளவாக வைத்து வழங்காமல், அவர்களுடைய சர்வீஸ் அடிப்படையில், எவ்வளவு தொகை அவரால் அரசுக்குக் கிடைத்திருக்கிறது, ஒரு வழக்கறிஞரால் எவ்வளவு வருமானம் அரசுக்கு வருகிறது என்பதைக் கணக்கில் வைத்து, கூடுதல் வருமானத்தை அரசுக்கு ஈட்டித் தருகிற வழக்கறிஞர்களுக்காவது இந்த ஐந்து இலட்சம் ரூபாயைக் கொடுக்க அரசு முன்வருமா என்பதை அறிவதோடு, இன்றைக்கு எழுத்தாளர், ஓவியர், சிற்பக் கலைஞன்



போன்று, வறுமை நிலைக்குத் தள்ளப்பட்ட சாதியாக, சமுதாயமாக வழக்கறிஞர் சமுதாயம் மாறியிருக்கிறது. எனவே, உடல் ஊனமுற்றவர்கள், முன்னாள் இராணுவத்தினருக்கு வழங்கப்படுவது போல, ஓய்வு பெற்ற வழக்கறிஞர்கள் அல்லது மரணமடைந்த வழக்கறிஞர்களின் குழந்தைகளுக்கு சட்டக் கல்லூரியில் சேர்ந்து படிப்பதில் ஏதாவது இடஒதுக்கீடு கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அரசுக்கு வழக்கறிஞர்கள் மூலமாக வருவாய் வருகின்ற ஒரு கருத்தைச் சொன்னார்கள். அது எந்த வருவாய் என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால், வக்காலத்து நாமாவில் மட்டும் ஒரு கோடியே 10 இலட்சம் ரூபாய்—அதுவும் அரசுக்கு வருவாயாக வருவதில்லை; வழக்கறிஞர்களுடைய நலனுக்காகத்தான் அந்த வருவாய் செலவிடப்படுகின்றது. எனவே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்க முடியாத ஒரு நிலையிலே அரசு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 203, திரு. வை. சிவபுண்ணியம், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

**203—**

### குடமுழுக்கு

***542—திரு. வை. சிவபுண்ணியம்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மன்னார்குடி தொகுதியிலுள்ள பிரசித்தி பெற்ற திருராமேஸ்வரம் திருக்கோயிலைப் புதுப்பித்து குடமுழுக்குச் செய்திட அரசு நிதி ஒதுக்கீடு செய்து தருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[2002 ஏப்ரல் 23

(அ) மற்றும் (ஆ) மன்னார்குடி தொகுதியிலுள்ள பிரசித்தி பெற்ற திருராமேஸ்வரம் திருக்கோயில் திருப்பணிக்கு ரூ.7,61,000 மதிப்பில் உபயதாரர்கள் மூலம் 8 திருப்பணி வேலைகளும், ரூ. 5,42,000 மதிப்பில் பொது நல நிதியின் மூலம் 4 திருப்பணி வேலைகளும் மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டு, விரைவில் திருப்பணி வேலைகள் முடிந்து, குடமுழுக்குச் செய்யப்படும் என்பதை உங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், திருப்பணி வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதாக அறிவித்திருக்கிறார்கள். நானும் அறிவேன். இது முன்னாலேயே போடப்பட்ட கேள்வி. குறிப்பாக, நமது அறநிலையத் துறையின் மூலமாக அதற்கு நிதியொதுக்கீடு செய்து, திருப்பணி வேலைகளைச் செய்வதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்பதற்கான கேள்வியாகத்தான் இந்தக் கேள்வியைப் போட்டேன். பொது மக்கள் நிதியாக வழங்கியிருக்கிறார்கள். நன்கொடையாளர்களும் வழங்கி இருக்கிறார்கள். அதிலே ஆர்வம் மிகுதியாக உடையவர்கள் நிறையப் பேர் பங்கேற்றிருக்கிற காரணத்தினாலேதான், அந்தப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆகவே, அரசின் சார்பிலே, அறநிலையத் துறையின் சார்பிலே, மேலும் கூடுதலாக நிதி ஒதுக்குவது என்பது, அந்த ஆலயத் திருப்பணிக்குரிய வசதியாக இருக்கும் என்று அந்தப் பகுதியைச் சார்ந்த பக்தர்கள் கருதுகிற காரணத்தினாலே கூடுதல் நிதியொதுக்கீடு செய்து, அந்தக் குடமுழுக்கு விழாவை நிறை செய்வதற்கான முயற்சியை மேற்கொள்வார்களா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-25

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் வட்டம், திருராமேஸ்வரம் அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில், சட்டப் பிரிவு 46(1)-இன்கீழ், அறிவிக்கப்பட்ட பட்டியலைச் சேர்ந்த திருக்கோயில். அந்தத் திருக்கோயில் நிர்வாகத்தை கோட்டூர் அருள்மிகு குழந்தீஸ்வரர் திருக்கோயில் செயல் அலுவலர் சட்டப் பிரிவு 45(1)-ன்கீழ் கவனித்து வருகிறார். பசலி 1409-க்கு 91,471 ரூபாய் உதவித் தொகை வருமானம் வருகிறது. இந்தத் திருக்கோயிலுக்கு ஏறக்குறைய 104 ஏக்கர் 93 சென்ட் நஞ்சை நிலமும், 42 ஏக்கர் 62 சென்ட் புஞ்சை நிலமும் இருக்கிறது. இந்தத் திருக்கோயிலில் தினமும் 5 கால பூஜை நடைபெறுகிறது. இந்த நிலங்கள் எல்லாம் இருக்கின்றன.



2002 ஏப்ரல் 23]

இத்திருக்கோயில் சீதாபிராட்டியாரால் பூஜிக்கப்பட்டதாக வரலாறு கூறுகிறது. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கின்ற அடிப்படையிலேதான், அந்தப் பகுதியிலே இருக்கின்ற, ஆண்டவன்மீது பக்தி உள்ளவர்கள் மனமுவந்து கொடுத்து, ஏறக்குறைய 7 இலட்சத்து 61 ஆயிரம் ரூபாய் அங்கே வந்து, அதன் மூலமாக 8 பணிகளும், இந்து சமய அறநிலையத் துறை மூலமாக ஏறக்குறைய 5 இலட்சத்து 42 ஆயிரம் ரூபாயைத் தொகையாகக் கொடுத்து, இப்பொழுது 75 சதவிகிதப் பணிகள் முடிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், அங்கே இருக்கின்ற 104 ஏக்கர் நிலங்களை—பெரும்பான்மையானவர்கள், நான் நேற்றைக்குத் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு கேட்டதில், கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள் 28 பேர் அங்கே 40 பேர் உழுது கொண்டு இருக்கிறார்கள். அதில் 28 பேர் கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்தவர்கள்தான் அதை உழுது கொண்டிருக்கிறார்கள். நீங்களும் அதற்குரிய தொகையைக் கொடுப்பீர்களேயானால், கூடிய விரைவில் நடவடிக்கை எடுத்து, இப்போது செலவு செய்யப்படுகின்ற அந்தத் தொகையைவிட இன்னும் அதிகமாகச் செய்து, மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை அழைத்து, தாங்களும் அந்தத் திருப்பணியைச் செய்யலாம் என்பதைத் தலைவர் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) இல்லை, இல்லை. ஒரு கட்சியின்மீது சுமத்தப்படுகின்ற குற்றம்..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது குற்றச்சாட்டு அல்ல. நீங்கள் உழுது கொண்டிருக்கிறீர்கள் என்று சொல்கிறார்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே தொடர்ந்து அமைச்சர் அவர்களுடைய பதிலிலே, அநேக கோயிலுக்குச் சொந்தமான நிலங்கள் அனைத்துமே கம்யூனிஸ்ட் கட்சியிடம் இருப்பதாகவும், அவையெல்லாம்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லாவற்றையும் சொல்லவில்லை. குறிப்பிட்ட கோயிலைத்தான் சொல்கிறார்.

**திரு. ஜி. பழனிசாமி:** அதுபோல—ஒரு பாணியை, தமிழ்நாட்டிலே—சொல்வது என்பது சரியல்ல. சம்பந்தப்பட்ட அதிகாரிகள், மாண்புமிகு

[2002 ஏப்ரல் 23

அமைச்சருக்குக் கொடுத்திருக்கின்ற இந்தத் தகவல்களுக்காக, அவர்கள்மீது உரிமைப் பிரச்சினையைத் தங்கள் மூலமாக எழுப்ப நான் விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் வேண்டுமென்றே அவர்களுடைய கட்சிமீது குற்றம் சுமத்த வேண்டும், அவர்கள் மீது குறைகள் கூற வேண்டுமென்பதற்காகச் சொல்லவில்லை. இன்றைக்கு சிவபுண்ணியம் அவர்கள் கேட்டிருக்கின்ற கேள்விக்கு சரியான பதிலைத் தர வேண்டுமென்ற நோக்கத்தோடு, தொலைபேசி மூலமாக நான் தொடர்புகொண்டு, யார், யார் அந்த நிலங்களை, 104 ஏக்கர் நிலங்களை உழுது கொண்டு இருக்கிறார்கள் என்பதைத் தெரிந்து, அறிந்து, புரிந்துதான், இன்றைக்கு 28 நபர்கள் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள்—தென்னந்தோப்பு 9 ஏக்கரில் ஒருவர் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர் ஒருவர் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்—அதை இன்றைக்கு உழுது கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் அதிகாரபூர்வமாகத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஓர் அற்புதமான கூட்டணியாக இருக்கிறதே?

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் திருராமேஸ்வரம் கோயிலினுடைய குடமுழுக்குக்காகக் கேள்வியைக் கேட்கப் போய், மாண்புமிகு அமைச்சரவர்கள் வேறு செய்தியைச் சொல்கிறார்கள். குறிப்பாக, நிலப் பிரச்சினையைப் பொறுத்தவரையிலும், அந்தப் பகுதியிலே எங்களுடைய கட்சி வலுவாக இருப்பது உண்மைதான். குறிப்பாக, ஒன்றுபட்ட தஞ்சை மாவட்டத்திலும் அந்த நிலை இருக்கிறது. ஆனால், ஒரு கட்சியை மட்டும் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுக் கூறுகிறார்கள் என்றுதான் எங்களுடைய தலைவர் அவர்கள் வருத்தப்படுகின்றார்கள். எனவே, அரசியல் அல்ல. நாங்கள் சொல்கிற, கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே சொல்கிற யோசனையாகத் தயவுசெய்து, பேரவைத் தலைவர் அவர்களே, இதைப் பதிவு செய்வதற்காக நான் சொல்கிறேன். இந்த நிலங்கள் என்பவை, நாலரை இலட்சம் ஏக்கர், ஒன்றுபட்ட தஞ்சை மாவட்டத்திலே பெரும்பான்மையான இடங்களிலே இருக்கின்றன. ஆகையினால் வருமானம் வரவில்லை என்று அரசு கருதுகிறபொழுதுதான், இதிலே இயற்கைச் சீற்றத்தால் பாதிக்கப்படுகிற காரணத்தினாலே குத்தகை வராத நிலை இருக்கிறது என்பதை அரசு உணர்ந்திருக்கிற காரணத்தினாலேயும், இந்த நிலங்களை உழுது கொண்டிருக்கின்ற



2002 ஏப்ரல் 23]

விவசாயிகளுக்கே சொந்தமாக்குவதற்கு அல்லது விலைக்குக் கொடுப்பதற்கான முயற்சிகளை அரசு எடுக்குமானால் அதன்மீது வருகிற தொகையே 2 ஆயிரம் கோடி ரூபாய் வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது. வைப்பு நிதியாக வைத்தால் கோயில்கள் பராமரிக்கப்படும், சம்பளமும் வழங்கப்படும். பூசாரிகளுக்குச் சம்பளம் இல்லையென்கிற நிலைகூடச் செல்வதற்கான வாய்ப்பும் இருக்கிறது. ஆகவே, இந்தக் கருத்தை அரசு பரிசீலிக்க வேண்டுமென்றுகேட்டு இதைச் சந்தர்ப்பமாகக் கருதி, அந்தக் கோயில் திருப்பணிகளுக்காக நிதியொதுக்கியிருக்கின்ற அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒரே ஒரு கோரிக்கை. அந்தக் கோயிலுக்கு நம்முடைய மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள்கூட நேரிலே வருகை தந்து தரிசித்திருக்கிற காரணத்தினாலே, அந்தக் கோயிலுக்குச் செல்வதற்கான முள்ளி ஆற்றிலே ஒரு பாலம் அமைக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை இருக்கிறது. அரிச்சந்திரா நதி என்ற ஆற்றிலும் பாலம் அமைக்கப்பட வேண்டுமென்ற சூழ்நிலை இருக்கிறது. அதன் காரணமாக 20 கிலோ மீட்டர் சுற்றிச் செல்லவேண்டிய காரணம் இருக்கின்றதனாலே, பொதுப் பணித் துறை அமைச்சரவர்கள் அரிச்சந்திரா நதியிலும், முள்ளி ஆற்றிலும் போக்குவரத்திற்குரிய பாலங்களை அமைத்துத் தருவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்தக் கேள்வியை நீங்கள் பொதுப் பணித் துறையிலே போடுங்கள்.

வினா எண் 204, திருமதி கே. பவானி கருணாகரன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

**204—**

## ஆரம்ப சுகாதார நிலையம்

***1757—திருமதி கே. பவானி கருணாகரன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, நெமிலி, கரியாகுடலில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

[2002 ஏப்ரல் 23

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) நெமிலி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த நெமிலி பேரூராட்சிக்கு உட்பட்ட புன்னை என்ற கிராமத்தில் ஏற்கெனவே ஓர் ஒன்றிய தலைமை ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருவதால், அதே பேரூராட்சிக்கு உட்பட்ட கரியாகுடல் என்ற இடத்தில் கூடுதலாக இன்னொரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறு இல்லை.

முற்பகல் 10-30

**திருமதி கே. பவானி கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, ஏழையெளியவர்களின் துயர்களைத் துடைக்கும் அரசாகும். என்னுடைய அரக்கோணம் தொகுதி, நெமிலி, கரியாகுடலில் உள்ள மக்கள் மிகவும் பின்தங்கிய வகுப்பைச் சார்ந்தவர்கள் மட்டுமல்லாமல், விவசாயத்தை நம்பி வாழும் கூலித் தொழிலாளர்கள் ஆவார்கள். அவர்கள் அரக்கோணம் G.H.-க்கோ அல்லது புன்னை P.H.C.-கோ வருவதற்கு மிகுந்த அவதிக்கு உள்ளாகிறார்கள். கரியாகுடலிலிருந்து புன்னைக்கு வரவேண்டும் என்றால் 12 கிலோ மீட்டர் ஆகிறது. அவர்களின் நலனைக் காக்கவேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவரின் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன். மேலும், நெமிலி, புன்னை ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ஏற்கெனவே 30 படுக்கைகள் கொடுத்து, அங்கு அதிகாரிகள் பார்வையிட்டு, திடீரென்று அந்தப் பணி நின்றுவிட்ட காரணத்தினால், நெமிலி கிராம மக்கள் மிகவும் வேதனையடைந்துள்ளனர். மறுபடியும் அந்தப் படுக்கை வசதியை ஏற்படுத்தித்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெமிலி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த மக்கள் மருத்துவ சிகிச்சைக்காக அரக்கோணம் அரசு மருத்துவமனைக்கு அவ்வளவு நீண்ட தூரம் செல்லக்கூடாது என்ற காரணத்தினால்தான், நம்முடைய மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் நெமிலி ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட புன்னை ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகளைக் கொண்ட தரம் உயர்த்தப்பட்ட ஆரம்ப சுகாதார



2002 ஏப்ரல் 23]

நிலையமாக மாற்றுவதற்கு உத்தரவிட்டிருக்கிறார்கள். எனவே, அந்த வகையிலே புன்னை ஆரம்ப சுகாதார நிலையம் நிச்சயமாகத் தரம் உயர்த்தப்படும். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிற கரியாகுடல் என்ற அந்தப் பகுதியில் ஒரு துணை சுகாதார நிலையம் இருந்து வருகிறது. அந்தத் துணை சுகாதார நிலையத்திற்கும் இப்பொழுது கட்டடம் கட்டுவதற்கு 6 இலட்சம் ரூபாயை ஒதுக்கியிருக்கிறோம் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 205, திரு. எஸ்.கே. செல்வம், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**205—**

**மேம்பாட்டு நிதி**

***7518—திரு. எஸ்.கே. செல்வம்:**

**மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்** கீழ்க்காணும் வினாவிற்கு **விடையளிப்பாரா—**

அரசு உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்த செலுத்த வேண்டிய இரண்டு இலட்சம் ரூபாய் தொகையைச் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து உறுப்பினர் கட்ட முன்வந்தால் அதை அரசு ஏற்றுக் கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரசு உயர்நிலைப் பள்ளியினை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்குச் செலுத்த வேண்டிய மக்கள் பங்குத் தொகையான ரூ. 2 இலட்சத்தினை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து பயன்படுத்த இயலாது என்பதைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எஸ்.கே. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது வீரபாண்டி தொகுதி அதிகமான கிராமங்கள் நிறைந்த தொகுதி. மிகவும் வறுமைக் கோட்டிற்குக்கீழ் வசித்துக்கொண்டிருக்கின்ற மக்கள் நிறைந்த தொகுதி. எனது தொகுதியில் இருக்கின்ற சிவதாபுரம் உயர்நிலைப் பள்ளியும், வீரபாண்டியில் இருக்கின்ற உயர்நிலைப்

பள்ளியும் மேல்நிலைப் பள்ளிகளாக உயர்வதற்கு அரசினுடைய அனைத்துத் தகுதிகளும் இருக்கின்றன. அப்படி இருந்தும்கூட, அரசுக்குச் செலுத்தவேண்டிய 2 இலட்சம் ரூபாயைச் செலுத்தக்கூடிய வசதி வாய்ப்பு அப்பகுதி மக்களிடத்திலே இல்லை. எனவே, கருணை அடிப்படையிலே அம்மா அரசு இந்த 2 இலட்சம் ரூபாயை, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கொடுப்பதற்கு ஏற்ப அனுமதி அளிக்குமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வறுமை, ஏழ்மை, பின்தங்கிய பகுதிகளிலே இருக்கக்கூடிய பகுதிகளுக்கு அடிப்படை வசதிகளைச் செய்து கொடுப்பதற்குத்தான் சட்டமன்ற உறுப்பினர்கள் விரும்புகின்றபொழுது இந்த நிதியைப் பயன்படுத்தலாம் என்றுதான் விதிமுறை இருக்கிறது. எனவே, பொது மக்கள் பங்களிப்பு, நன்கொடை—பெற்றோர்—ஆசிரியர் கழகம் போன்ற பல்வேறு அமைப்புகள் மூலமாக நன்கொடைகளைப் பெற்றுத்தான் பள்ளிகளைத் தரம் உயர்த்துவதற்குப் பணம் கட்ட முடியும். மக்களுடைய அடிப்படை வசதிகளைச் செய்வதற்காகத்தான் சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து இன்னின்ன பணிகளைச் செய்யலாம் என்று அரசு சில விதிமுறைகளையும், வழிகாட்டுதல் நெறிமுறைகளையும் உருவாக்கியிருக்கிறது. இந்தக் குறிப்பிட்ட காரியத்திற்குப் பயன்படுத்த இயலாது என்பதை மீண்டும் கூறிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.கே. சேகர்பாபு.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து எந்தெந்தப் பணிகளுக்கு நிதி வழங்கிச் செலவிடலாம் என்ற வழிகாட்டிக் கையேடு ஒன்றை உறுப்பினர்களுக்கு வழங்கினால் வசதியாக இருக்கும் என்பதைத் தெரிவித்து, இதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்து சட்டமன்ற உறுப்பினர் பெருமக்களுக்கும், மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக இன்னின்ன பணிகளைத் தேர்வு செய்யலாம், நடைமுறைப்படுத்தலாம் என்று வழிகாட்டு நெறிமுறைகளாக ஓர் உத்தரவு போட்டு அனுப்பப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இனிமேல் அனுப்பப்படும். இதுவரைக்கும் அனுப்பப்படவில்லையென்றால், அமைச்சர் அனுப்புவதற்கு ஆவன செய்வார்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அனுப்பி இருப்பதை மாண்புமிகு நம்முடைய ஞானசேகரன் அவர்களுக்கு நேரிடையாகக் காண்பித்தும் இருக்கிறேன் என்பது தங்கள் முன்னிலையில் காண்பிக்கப்பட்டிருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாகத்தான் அனுப்பப்பட்டிருக்கிறது. கிடைக்கப்பெறாத உறுப்பினர்களுக்கு விரைவிலே அனுப்புவதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படும்.

முற்பகல் 10-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அனுப்பப்பட்டு, அதனுடைய நகல் உறுப்பினர்களுக்கு அனுப்பப்பட்டது. அதிலிருந்த தொனி சரியாக அமையவில்லை என்று அத்தனை பேரும் அப்போது ஆட்சேபம் தெரிவித்தார்கள். ஏதோ கட்டளையிடுவதைப் போல அன்றைக்கு இருந்தது. அதை மாற்றி, முறையாக எந்தப் பணிகளுக்கெல்லாம் அந்த நிதியை ஒதுக்கலாம் என்பதைத் தெளிவுபடுத்தி நேரடியாக சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அரசின் சார்பிலே எழுதினால், அது முறையாக இருக்கும். அரசு அதைச் செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்களுடைய விருப்பங்களுக்கு ஏற்ப, உறுப்பினர்களிடம் நேரடியாகக் கொடுப்பதற்கு அரசு முன்வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து, ஏற்கெனவே அறிவித்திருக்கக்கூடிய ஆரம்ப சுகாதார நிலையங்கள், இரண்டு விடுதிகள், 10 கிராம நிர்வாக அலுவலகங்கள் போன்றவை கட்டாயம் கட்டப்பட வேண்டுமென்று இருக்கிறது. இவற்றைக் கட்டுவதற்கு ஏற்பாடு நடந்து,

[2002 ஏப்ரல் 23

பிறகு அதில் ஒன்றோ, இரண்டோ, அந்தப் பகுதிகளில் ஆரம்ப சுகாதார நிலைய வளாகம் அமைக்க முடியாமல், அல்லது ஹாஸ்டல் அல்லது துப்புரவு வளாகம் அமைக்க முடியாமல் போனால் (குறுக்கீடு) அந்தப் பணத்தைச் சட்டமன்ற உறுப்பினர்கள் கருதுகிற இதர பணிகளுக்குப் பயன்படுத்துவதற்கு அரசு அனுமதிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்களுடைய கோரிக்கையைப் போல, — ஒரு குறிப்பிட்ட 5, 6 உறுப்பினர் பெருமக்களுடைய இப்படிப்பட்ட கோரிக்கைகளை அரசுக்கு எழுதி, அது சம்பந்தமாகப் பரிசீலனை செய்து, அந்த விதிமுறைகளைத் தளர்த்தி, அதற்கு மாற்றுப் பணிகளாக எவற்றையெல்லாம் தேர்வு செய்யலாம் என்றுகூட அவர்களுக்கு அனுப்பப்பட்டு இருக்கிறது. அந்தப் புதிய விதிமுறை பற்றிய விவரங்களை ஏனைய எல்லா உறுப்பினர் பெருமக்களுக்கும் கொடுப்பதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. து. நெப்போலியன்.

**திரு. து. நெப்போலியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய உயரத்திற்கேற்ப மைக்கை வைத்ததற்கு முதற்கண் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். சென்ற ஆண்டு 82 இலட்சம் ரூபாய் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியாக ஒதுக்கியிருந்ததில் 50 இலட்சம் ரூபாயை அரசாங்கம் எடுத்துக்கொண்டது. வெறும் 32 இலட்சம் ரூபாய்தான் தொகுதி மேம்பாட்டுக்காக எங்களுக்கு அளித்தார்கள். என்னுடைய தொகுதி ஆசியாவிலேயே பெரிய தொகுதி. 32 இலட்சம் ரூபாயை கிள்ளிக்கூடக் கொடுக்கமுடியவில்லை. அதனால் இந்த ஆண்டும் அதே மாதிரி ரூ. 50 இலட்சத்தை அரசு எடுத்துக்கொள்ளுமா? அல்லது 25 இலட்சம் ரூபாய் அதிகப்படுத்தி எங்களுக்கு வழங்குவதற்கு ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த தி.மு.க. ஆட்சியின்போது இதற்கு 77 இலட்சம் ரூபாய்தான் ஒதுக்கியிருந்தார்கள். எங்களுடைய ஆட்சியில் 5 இலட்சம் ரூபாய் உயர்த்தப்பட்டு, 82 இலட்சம் ரூபாயாக வழங்கியிருக்கிறோம் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.



2002 ஏப்ரல் 23]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. நெப்போலியன் அவர்களின் உயரத்திற்கு மைக்கை உயர்த்திய தாங்கள் என்னுடைய உயரத்திற்கு ஏற்றவாறும் உயர்த்திக் கொடுத்தால் நன்றாக இருக்கும். (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏற்கெனவே உங்கள் தொந்தரவு தாங்க முடியவில்லை. (சிரிப்பு)

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிச்சயமாக உங்களுடைய பணிக்கு நான் இடையூறாக இருக்கமாட்டேன். சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில், ஏற்கெனவே அரசு அறிவித்ததில், ஏற்கெனவே அரசு அறிவித்திருக்கிற சில திட்டங்களுக்குக் கொடுக்கவேண்டுமென்று ஒரு நிபந்தனை விதிக்கப்பட்டு, அதில் யாருக்கெல்லாம் விடுதிகள் இல்லையோ அல்லது துப்புரவு வளாகம் இல்லையோ அல்லது V.A.O. office இல்லையோ, அதற்கு மாற்றுப் பணிகளைத் தேர்ந்தெடுக்கலாம் என்று அரசாணை எண் 26, நாள் 9-4-2002-ல் ஆணை போட்டார்கள். அந்த அரசாணையில். எனது கடிதத்தையே மேற்கோளாகக் காட்டி, எனக்கு அந்த ஹாஸ்டல் கட்ட வேண்டிய நிலை ஏற்படாத காரணத்தால், அங்கே ஆழ்துளைக் கிணறு அமைக்கவேண்டுமென்று கேட்டபோது, அதற்குப் பரிகாரம் காணாமல் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுங்கள் என்று அவர்கள் கூறியிருந்தார்கள். அதற்கு நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடமும், அதேபோல அமைச்சர் அவர்களிடமும் சொல்லி, அதற்கு நீங்கள் விதிவிலக்கை அளித்து, மீண்டும் அந்த அரசாணை எண் 26-ஐ (நாள் 9-4-2002) மாற்றி, சட்டமன்ற உறுப்பினர்கள் விரும்புகிற சில பணிகளைக் கொடுப்பதற்கு ஆவன செய்யவேண்டுமென்ற ஒரு கோரிக்கையைத் தெரிவித்தேன். முதலமைச்சரிடமும் கொடுத்தேன். அமைச்சரிடமும் கடிதம் அளித்தேன். ஆகவே, மீண்டும் அந்த அரசாணையைத் திருத்தம் செய்வதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா, திருத்திய அரசாணையின் நகலை எங்களுக்குக் கொடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-40

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய வேண்டுகோளை

[2002 ஏப்ரல் 23

ஏற்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஆலோசனை மற்றும் நிதியமைச்சர் அவர்களுடைய ஆலோசனையையும் பெற்று விரைவிலே நல்ல முடிவு எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. கே.என். இலட்சுமணன்.

**திரு. கே.என். இலட்சுமணன்:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, மயிலாப்பூர் தொகுதியிலே சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் கட்டுவதற்குத் தீர்மானம் நிறைவேற்றி மூன்று ஆண்டுகள் ஆகியும்கூட.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. இலட்சுமணன், இது அது சம்பந்தமானது அல்ல. திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்.

**திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்**: மாண்புமிகு ...... (குறுக்கீடுகள்) கேள்விகூடக் கேட்க விடமாட்டோம் என்கிறீர்களே?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் எழுகிறபோதே, அவ்வளவு கம்பீரமாக எழுகிறீர்கள். (சிரிப்பு)

**திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** எல்லோரும் 'ஓ' போடுகிறீர்களா? (சிரிப்பு) எல்லாம் உங்களுக்கும் சேர்த்துத்தான் கேட்கிறோம். (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய தலைவர் 78 இலட்சம்... (குறுக்கீடுகள்) 77 இலட்சம் கொடுத்தார்கள். சரி, ஒரு இலட்சம் கூட்டிச் சொன்னேன். அதைக் கொடுத்திருக்கிறார்கள். இப்போது, அமைச்சர் சொன்னார் 5 இலட்சம் எங்களுடைய புரட்சித் தலைவி அவர்கள் கொடுத்தார்கள் என்று. கூடுதலாகக் கொடுத்தார்கள்; 82 இலட்சம் கொடுத்து இருக்கிறார்கள். ஆனால் 82 இலட்சம் கொடுத்து, 50 இலட்சத்தைப் பிடுங்கி விட்டார்கள். அதிலும், அரசுத் திட்டங்களை, அறிவிக்கப்பட்ட திட்டங்களைச் சட்டமன்ற உறுப்பினர்கள் கட்டாயமாகச் செய்ய வேண்டுமென்று நிர்ப்பந்திக்கப்படுகிற ஒரு சூழ்நிலையை அது உருவாக்கியுள்ளது. இந்த விதியைத் தளர்த்தி எங்களுடைய தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள், அறிவித்த 77 இலட்சத்தையும், சட்டமன்ற உறுப்பினர்கள் எந்தெந்தப் பணிகளைத் தேர்வு செய்யலாம் என்ற வரையறை இல்லாமல் கொடுத்தார்கள். எதிர்க்கட்சி உறுப்பினர்களும் இருந்தார்கள்; திரு. ஞானசேகரன் எல்லாம் கேட்டார்கள் அந்தக் கேள்வியை உடனடியாக...



2002 ஏப்ரல் 23]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பன்னீர்செல்வம், உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள். விதியைத் தளர்த்த முடியுமா என்று கேட்கிறார்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், குறிப்பிட்ட காலகட்டங்களில், அவர்களுடைய ஆட்சிப் பொறுப்பிலேயும் சரி, அவர்கள் இன்ன பணியைத்தான் செய்ய வேண்டும்; இன்ன பணிக்கு இத்தனை சதவிகித தொகையை ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்றும் நெறிமுறைகளை உருவாக்கி இருந்தார்கள் என்பதை ஏற்கெனவே இந்தப் பேரவையிலே சொல்லியிருக்கிறேன். பள்ளிக் கட்டடம்தான் கட்ட வேண்டும்; அல்லது கணினி மையம் மட்டும்தான், கட்ட வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தார்கள். அதனுடைய வழிமுறைப்படிதான் நாங்களும், இன்றைக்குள்ள சூழ்நிலையில் எந்தெந்தப் பணிகள் மக்களுக்கு அவசியம் என்பதைக் குறிப்பிட்டு, அந்தப் பணிகளைத் தேர்வு செய்ய வேண்டுமென்று (மேசையைத் தட்டும் ஒலி) எங்களுடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவுறுத்தியிருக்கிறார்கள் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விரும்புகிற பணியை அரசுக்குத் தெரிவிப்பாரேயானால், அந்தப் பணி, அந்தப் பகுதியிலே நடை பெறவில்லை அல்லது நீண்ட காலத் தேவையாக இருந்தால், அந்தப் பணிக்கு முன்னுரிமை கொடுப்பதற்கு வேண்டிய நல்ல முயற்சியை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள்மீது அக்கறை கொண்டிருக்கிற நமது அரசு, மக்களிடத்திலே இருந்து 2 இலட்சம் ரூபாயை வசூல் செய்ய முடியாமல், சில பள்ளிகளைத் தரம் உயர்த்த முடியாமலே, அந்தப் பகுதிகளிலுள்ள குழந்தைகள் பல மைல் தூரம் சென்று படிப்பதற்கான ஒரு நிலையில் தடைப்பட்டுக் கொண்டிருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர்களுடைய தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து இந்த 2 இலட்சம் ரூபாயை அரசினுடைய கல்வி இலாகாவுக்குச் செலுத்திட ஏற்கெனவே சில இடங்களிலே அனுமதிக்கப்பட்டிருக்கிறது. அப்படி அனுமதிக்கப்பட்ட பின்னால், அதற்குப் பிறகு கேட்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அனுமதி மறுக்கப்படுகிறது. இதை அரசு மறுபரிசீலனை செய்யுமா?

[2002 ஏப்ரல் 23

மக்களுடைய நலனைக் கருதி, மீண்டும் இதை நீங்கள் பரிசீலிப்பீர்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை, மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று பரிசீலிக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 206, திரு. வே. கிருஷ்ணமூர்த்தி, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**206—**

## சமுதாயக் கிணறு

***11042—திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம், சந்திரப்பட்டி ஊராட்சி, வெள்ளிமலை நரிக்குறவர் காலனி இன மக்களுக்குச் சமுதாய நலக் கிணறு அமைத்துக் கொடுக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. நரிக்குறவர்கள் என்பவர்கள், இன்றும் நாடோடி வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய இன மக்களாகும். அவர்களின் தொழில்கள் பாசி மணி, ஊசி விற்பது; ஆண்கள் காடுகளிலே சென்று காடை போன்ற பறவைகளைப் பிடித்து வேட்டையாடுவது; இத்தகைய தொழில்களில் ஈடுபட்டிருந்த அவர்களுக்கு, இப்போது அந்தத் தொழிலிலும்கூட நெருக்கடி வந்துவிட்டது. பாசி மணி போன்றவைகள்



2002 ஏப்ரல் 23]

எல்லாம் கிராமக் கடைகளிலே விற்கப்படுகிற அளவுக்கு வந்துவிட்டன. அந்தத் தொழில் செய்கிற அந்தப் பெண்கள், பேசும்போதும், நடக்கும்போதும், உட்காரும்போதும், சினிமா பார்க்கும்போதும்கூட அந்த மணியைப் பின்னுகிற பணியிலே ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள். இன்றைக்கு அவற்றில்கூட பெரிய அளவிலே வருமானம் இல்லை என்ற நிலை உருவாகி இருக்கிறது. ஆண்கள் எங்குமே வேட்டையாட முடியாது என்ற நெருக்கடியான நிலையில் இப்போது அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு ஏதேனும் தொழில்கள் செய்ய அரசு நிதியுதவி வழங்க இயலுமா என்பதைக் கேட்க விரும்புகிறேன். தருமபுரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம், சந்திரப்பட்டி ஊராட்சி, வெள்ளிமலை நரிக்குறவர் காலனி இன மக்கள் சிலர் நிலம் வைத்திருக்கிறார்கள். அவர்களுக்கு ஒரு சமுதாய நலக் கிணறு கொடுத்து வெட்டிக் கொடுத்தால் அவர்கள், சிறப்பான முறையிலே விவசாயம் செய்ய ஏதுவாக இருக்கும்; அப்படிப்பட்ட திட்டம் இருக்கிறதா என்பதைத் தங்களின் மூலம் அறிய விரும்பகிறேன்.

முற்பகல் 10-45

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நரிக்குறவர்கள் ஒரு கூட்டுறவுச் சங்கமாக அமைத்து—கூட்டுறவு முறையிலே விவசாயம் செய்வதற்கு அவர்கள் சங்கம் அமைத்து—அதன் மூலம் இவ்வாறு ஒரு கிணறு அமைப்பதற்கு விரும்பினால், அது சம்பந்தமாக அந்தக் கோரிக்கையை அரசு பரிசீலிக்கும், ஏற்கெனவே 1965-1970 ஆம் ஆண்டுகளிலே சமுதாயக் கிணறு என்று பல்வேறு கிராமங்களிலே கிணறுகள் வெட்டி, அந்தக் கிணறுகள் அரைகுறையாக உள்ளன. அந்தக் கிணறுகளுக்குத் தேவையான மின் இணைப்பு வசதி மற்றும் நீர் ஆதாரம் இல்லாத காரணத்தினால், பல ஆண்டுகளுக்கு முன்பே, சமுதாயக் கிணறு அமைக்கின்ற திட்டம், வெட்டுகின்ற திட்டம் கைவிடப்பட்டுள்ளது. மாண்புமிகு உறுப்பினர் விரும்பினால், அவர்கள் உடனடியாகக் கூட்டுறவுச் சங்கம் அமைத்தால், அதன்மூலம் அவர்கள் 'போர்'—ஆழ்துளைக் கிணறுகள்—வெட்டி, அதன்மூலமாக விவசாயம் செய்வதற்கு வேண்டிய வழிவகைகளைச் செய்வதற்கு அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 207, திரு. வெ. ஏழுமலை, மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.

[2002 ஏப்ரல் 23

**207—**

## இலவச மனைப் பட்டா

***4203—திரு. வெ. ஏழுமலை:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு முழுவதும் தனி வட்டாட்சியர் மூலம் தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் ஆகிய வகுப்பினருக்கு அரசு, விலை கொடுத்து நிலம் வாங்கி, ஏழைகளுக்குப் பட்டா வழங்கியதை நிறுத்திவிட்டது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், மீண்டும் வழங்கப்படுமா?

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டம் நிறுத்தப்படவில்லை. இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்டோர், பழங்குடி வகுப்பினருக்கு அரசு, விலை கொடுத்து நிலம் வாங்கி, பட்டா வழங்குகின்ற திட்டம் தொடர்ந்து நடைபெற்று வருவதாக அமைச்சர் அவர்கள் பதில் கூறியதற்கு நன்றி. என்னுடைய தொகுதியைச் சேர்ந்த சாரம், ஆவணிப்பூர், நொளம்பூர், மேல்பேட்டை, தாதாபுரம், மேல்சிவிரி, மேல்மாவிளங்கை, பெரப்பேரி, பாதிரி ஆகிய கிராமங்களில் வசிக்கின்ற ஆதிதிராவிட மக்கள் என்னிடத்திலே வீட்டுமனைப் பட்டா கேட்டு, மனுக்கள் தந்தார்கள். அவை திண்டிவனம் தனி வட்டாட்சியர் அவர்களுக்குப் பரிந்துரை செய்யப்பட்டன. ஆனால், இதுநாள் வரை பட்டா வழங்கவில்லை. அந்த மக்களுக்கும், செஞ்சி பேரூராட்சியில் தேசூர்பேட்டை, எம்.ஜி.ஆர். நகர் மக்களுக்கும் பட்டா வழங்குவதோடு, என்னுடைய மூல வினாவிலே மிகவும் பிற்படுத்தப்பட்டோர்களுக்குப் பட்டா நிறுத்தப்பட்டு இருக்கிறது என்று தெரிவிக்கப்பட்டு இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்களின் மூலபதிலிலே, அதுபற்றிப் பதில் இல்லாவிட்டாலும்கூட, என்னுடைய தொகுதியிலே மிகவும் பிற்படுத்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த நரிக்குறவர்கள் மொடையூர் கிராமத்திலும், பூம் பூம் மாட்டுக்காரன்



2002 ஏப்ரல் 23]

என்று சொல்கிற ஆதிரை இனத்தைச் சேர்ந்தவர்கள், செஞ்சி தாலுகாவைச் சேர்ந்த ஜெயங்கொண்டான், ஒலக்கூர் ஒன்றியத்தைச் சேர்ந்த கல்பாக்கம் போன்ற பகுதிகளிலே மரத்தடியிலே வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு மனைப் பட்டா வழங்கப்படுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர் நலத் துறை மூலம் தனியார் நிலத்தைக் கையகப்படுத்தி இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டம் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொறுப்பேற்றவுடனே, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை ஆய்வுக் கூட்டத்திலே ஏற்கெனவே பட்டா வழங்கப்பட்ட அநேக இடங்களில் குடிநீர், இணைப்புச் சாலை, தெரு விளக்குகள், வடிகால் போன்ற அடிப்படை வசதிகள் இல்லாத காரணத்தினால் பயனாளிகள் வீடு கட்ட இயலவில்லை எனவும், இம்மாதிரியான இடங்களை மேம்படுத்தி பயனாளிகள் தாங்களாகவோ அல்லது அரசுத் திட்டங்கள் மூலமாகவோ வீடுகள் கட்டிக்கொள்ள வழி வகுக்கலாம் எனவும் கருத்துகள் தெரிவிக்கப்பட்டு, சம நிலையான அணுகுமுறையைக் கையாள வேண்டும் என முடிவு எடுக்கப்பட்டவாறு, 2001-2002-ல் திருத்திய வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.4 கோடி வீட்டுமனைப் பட்டா வழங்குவதற்கும், புதியதிட்டப் பணிகள் வரிசையில் வீட்டுமனைகள் வழங்கப்பட்ட பகுதிகளில் அடிப்படை வசதிகள் என்ற திட்டத்திற்கு 5 கோடி ரூபாயும் மாண்புமிகு அம்மா அவர்கள் நிதி ஒதுக்கித் தந்துள்ளார்கள். எனவே, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டம் நிறுத்தப்படவில்லை; தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

மாண்புமிகு உறுப்பினர் ஏழுமலை அவர்கள் குறிப்பிட்ட சில கிராமங்களில் வீட்டுமனைப் பட்டா வழங்குவது நிறுத்தப்பட்டு இருப்பதாகவும், இன்னும் வீட்டுமனைப் பட்டா விரைவில் வழங்கப்படவில்லை என்கிற குறையை இப்போது மாண்புமிகு உறுப்பினர் சொல்லியுள்ளார்கள். அந்தக் குறிப்பிட்ட இடங்களில் அவர்கள் கேட்கின்ற வீட்டுமனைப் பட்டா வழங்குவதற்காக நிலத்தைக் கையகப்படுத்துகின்ற திட்டத்திற்கு, அந்த நில உரிமையாளர்கள் தடையாணை ஏதும் பெற்று இருக்கிறார்களா, எந்தெந்தக் கிராமங்கள் என்பதுபற்றித் தனிக் கேள்வி போட்டால், தக்க நடவடிக்கை எடுத்து

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
சென்னை-600 008

[2002 ஏப்ரல் 23

விரைவில் பட்டா வழங்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு முனைப்போடு செயல்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குப் பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நரசிம்மன்.

முற்பகல் 10-50

**திரு. பி.எம். நரசிம்மன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் பல மாவட்டங்களில் அரசு விலை கொடுத்து நிலம் வாங்கியும் பயனீட்டாளர்களுக்குப் பட்டாக்களாகப் பிரித்துக் கொடுக்கப்படாமல் உள்ளன. அவை எங்கெங்கு உள்ளன எனக் கண்டு, ஏழை எளியவர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, குறிப்பாக ஆதிதிராவிட, பழங்குடியின மக்களுக்கான தேவைகள், அவர்கள் கேட்கிற கோரிக்கைகள் குறித்து விரைவான முறையில் நடவடிக்கை எடுத்து, வீட்டு மனைப் பட்டாக்கள் ஆனாலும் சரி, அவர்கள் கேட்கின்ற கோரிக்கைகள் எதுவானாலும் சரி, தக்க நடவடிக்கை எடுத்து, விரைவாகக் கொடுக்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லிய கருத்துபற்றியும், விரைவாக நடவடிக்கை எடுப்பதற்கு ஏற்ப மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு செயல்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குப் பேரவைத் தலைவர் மூலமாகத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி டி. யசோதா.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் நிலங்களைக் கையகப்படுத்தி, தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் பட்டா வழங்குவதற்குரிய அந்த நடவடிக்கைகளில், ஆண்டாண்டு காலமாக, ஓராண்டு, ஈராண்டு அல்ல, 5 ஆண்டுகள், 10 ஆண்டுகளாகக்கூட அவை கையகப்படுத்தப்பட முடியாமல், அவர்களுக்குக் கொடுக்கப்பட முடியாமல் இருக்கிற அந்தக் காலதாமதத்தைப் போக்கி, விரைவாக நடவடிக்கை எடுப்பதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.



2002 ஏப்ரல் 23]

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடனே மேற்கொண்ட ஆய்வினையொட்டி வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டிய அந்த நிலம், கையகப்படுத்தப்பட வேண்டிய நிலையில் அந்த நில உரிமையாளர்கள் தடையாணை பெற்று கிட்டத்தட்ட கடந்த 5 ஆண்டு கால தி.மு.க. ஆட்சிக் காலத்தில் 679 வழக்குகள் நிலுவையில் இருந்ததன் காரணமாகப் பல்வேறு இடங்களிலே பட்டா வழங்குவது நிறுத்தப்பட்டதாலும் தாமதமாகி, அதற்குத் தடையாக இருந்துவிட்டது. அதை விரைவாக—அந்த வழக்குகளை எல்லாம்—விரைவாக முடித்து அவர்கள் கேட்ட, வழங்க இருக்கின்ற அந்த வீட்டுமனைப் பட்டாக்களை விரைவாக வழங்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு தக்க நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குப் பேரவைத் தலைவர் மூலமாகத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அரசு ஆதிதிராவிட, பழங்குடியின, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்காகத் தனியாரிடத்திலே விலை கொடுத்து நிலம் வாங்கி, வீட்டுமனைப் பட்டா வழங்கக்கூடிய இந்த நிகழ்வுகளிலே தடையாணை பெறுவது மாத்திரமல்ல, அங்கே இருக்கக்கூடிய நிலத்தைக் கையகப்படுத்துகின்ற நேரத்திலே, வாங்குகின்ற நேரத்திலே, குறைந்த விலையிலே, அதாவது அரசுக் குறியீட்டின் அடிப்படையிலே அந்த விலையைக் கொடுக்கின்ற காரணத்தாலே அந்த நிலப் பிரச்சினை விரைவில் முடிவடைவது இல்லை. சிலர் நீதிமன்றத்திற்குச் செல்கிறார்கள்; பிரச்சினை என்று சொல்லி, உள்ளூரிலே வைத்து பிரச்சினைகளைப் பெரிதாக்கி, அந்த நிலத்திற்குப் பட்டா கொடுக்கப்படாமல் காலதாமதம் ஏற்படுகிறது. எனவே, அந்தக் குறைகளைப் போக்குவதற்கு நம்முடைய அமைச்சர் அவர்கள், அந்த நில உரிமையாளர்களை அழைத்துப் பேசி, அந்தப் பிரச்சினைகளைச் சுமுகமாகத் தீர்ப்பதற்கு, விரைவிலே வீட்டுமனைப் பட்டா வழங்குவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்து, அந்தந்தக் கிராமங்களில் வீட்டுமனை இல்லாத, வீடுகள் இல்லாத அத்தகைய

[2002 ஏப்ரல் 23

குடும்பத்தினரிடமிருந்து வீட்டுமனை கேட்டு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசுக்குக் கோரிக்கை வந்தால் அதற்கு உடனடியாகத் தக்க நடவடிக்கை எடுப்பதற்குத் துறையின் மூலமாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிற நேரத்தில், தங்களுடைய கிராமத்தைச் சேர்ந்தவர்கள், தங்களுடைய கிராமத்திலுள்ள அவர்கள், வேலை பார்ப்பவர்களாக அல்லது பணி செய்பவர்களாக, ஒருவருக்கொருவர் தொடர்பு உள்ளவர்களாகத்தான் இருந்து வருகிறார்கள். அந்த வகையில் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிற நம்முடைய கிராமத்தைச் சேர்ந்தவருக்கு வீட்டுமனைப் பட்டா கொடுக்க வேண்டும் என்கிற நிலையில், அரசு இப்போது அந்த நிலத்திற்கு என்ன மதிப்பீடு செய்கிறதோ, அந்த மதிப்பீட்டுத் தொகையை அரசு கொடுத்து வருகிறது. ஏதாவது வெள்ளியூரிலிருந்து—இந்த மாதிரியான பிரச்சினைகளில் பட்டா கொடுப்பதாக, நான் வாங்கித் தருகிறேன் என்று சில வெளியூர்களிலிருந்து—சம்பந்தம் இல்லாதவர்கள் வந்து, விலையைக் கூட்டிக் கொடுக்கக்கூடாது என்று நில உரிமையாளர்களிடம் தகராறு செய்து, பிரச்சினை எழுப்பி, பட்டா கிடைப்பதற்கும் தாமதப்படுத்தி வருகிறார்கள். ஆகவே, சட்டமன்ற உறுப்பினர்கள் ஆங்காங்கு தங்களுடைய தொகுதிகளில் இந்த மாதிரிப் பிரச்சினைகள் வந்தால், முன்னின்று அந்தப் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கு ஏற்பாடு செய்தால், விரைவாக அந்தக் கிராமத்தைச் சேர்ந்தவர்களுக்கு, அந்தக் கிராமத்திலுள்ள நில உரிமையாளர்கள் வீட்டுமனைப் பட்டா கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறார்கள். எனவே, சட்டமன்ற உறுப்பினர்கள் முன்னின்று செயல்படுத்த வேண்டும். கண்டிப்பாக அனைத்து ஏழையெளிய மக்கள், குறிப்பாக, தாழ்த்தப்பட்ட, ஆதிதிராவிட, பழங்குடியின மக்களுக்கு விரைவாக வீட்டுமனைப் பட்டா வழங்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு தக்க நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதைத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

முற்பகல் 10-55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் கொடுத்த இடத்திலே, சாலைகள், விளக்கு வசதிகள் எல்லாம் செய்யப்படுகின்றன என்று அமைச்சர் சொன்னார். அப்படிச் செய்யப்படுகின்ற இடங்களில் முன்னுரிமையாக இலவசமாகத் தொகுப்பு வீடுகள் வழங்குகிற திட்டத்தை அரசு செயல்படுத்துமா என அறிய விரும்புகிறேன்.



2002 ஏப்ரல் 23]

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள், ஆதிதிராவிடர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று—31,000 வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று—உத்தரவிட்டிருக்கிறார்கள். ஏற்கெனவே வீட்டுமனைப் பட்டா வழங்கி—கிட்டத்தட்ட கடந்த ஐந்தாண்டு காலமாக வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டு இருக்கிறது. ஆனால், அந்த வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்ட இடங்களில் வீடுகள் கட்டவே இல்லை. அவர்களுக்குப் பட்டா மட்டும்தான் கொடுக்கப்பட்டு இருக்கிறது. ஆனால், சமத்துவபுரம் என்று சொல்லி தாழ்த்தப்பட்டவர்களுக்கு வீடுகள் கட்டி ஒதுக்கியும் அங்கேயும் குடியிருக்கவில்லை. வீட்டுமனைப் பட்டா கொடுத்ததிலும் வீடு கட்டிக் குடியிருக்கவில்லை. இதையெல்லாம் மாண்புமிகு அம்மா அவர்கள் கவனத்தில் கொண்டுதான் அப்படிப்பட்ட வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்ட இடங்களுக்கு அடிப்படைத் தேவையான குடிநீர் வசதி தெரு விளக்கு வசதி, சாலைகள் வசதி, இப்படிப் பல்வேறு வசதிகளை அவர்களுக்குச் செய்து கொடுத்தால், கண்டிப்பாக அந்த இடத்தில் தானாகவே வீடு கட்டுவதற்கு அல்லது அரசுத் திட்டங்கள் மூலமாக வீடு கட்டுவதற்கு முன்வருவார்கள், அவர்கள் குடியிருப்பதற்கு வாய்ப்பாக அமையும் என்றுதான் மாண்புமிகு அம்மா அவர்கள் பொறுப்பேற்றவுடன் 5 கோடி ரூபாய் ஒதுக்கி மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக அந்தப் பணிகள் எல்லாம் விரைவாக நடந்துகொண்டிருக்கின்றன. ஆகவே, தேவையான வீடுகளைக் கட்டிக் கொடுப்பதற்கு, தேவையான இடங்களில் குடியிருப்பதற்குத் தக்க நடவடிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்கள் அரசு எடுத்து வருகிறது என்பதைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 208, திரு. கு. அண்ணாமலை, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**208—**

### பேருந்துகள் நிறுத்தம்

***7016—திரு. கு. அண்ணாமலை:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தென்காசி நகராட்சி, ஆசாத் நகர், சுடலைமாடசாமி கோயில் முன்பு அனைத்துப் பேருந்துகளும் நின்று செல்ல அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தென்காசி நகராட்சி, ஆசாத் நகர், சுடலைமாடசாமி கோயில் முன்பு ஏற்கெனவே திருநெல்வேலி போக்குவரத்துக் கழக நகரப் பேருந்துகள் நின்று பயணிகளை ஏற்றி, இறக்கிச் செல்கின்றன. தற்பொழுது அப்போக்குவரத்துக் கழகத்தில் சாதாரண புறநகர்ப் பேருந்துகளும் நின்று செல்ல உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கு. அண்ணாமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்காசி நகராட்சி, ஆசாத் நகர், சுடலைமாடசாமி கோயில் மிகவும் புகழ்பெற்றதாகும். இங்கே பல பகுதிகளிலிருந்தும் பக்தர்கள் வருவதால், சுடலைமாடசாமி கோயில் முன்பு விரைவுப் பேருந்துகள் அனைத்தும் நின்று செல்ல அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுடலைமாடசாமி கோயில் முன்பாக இதற்கு முன்பு நகரப் பேருந்துகள் மட்டும்தான் நின்று சென்று வந்தன. தற்போது புறநகர்ப் பேருந்துகளும், அந்த இடத்தில், கோயில் முன்பாக, நின்று பயணிகளை ஏற்றி, இறக்கிச் செல்கின்றன. இதுவே பயணிகளுக்குப் போதுமானதாக, பயணிகள் வசதிக்குப் போதுமானதாக இருக்கிறது. விரைவுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் அங்கு நின்று செல்கிற அளவுக்கு பயணிகள் எண்ணிக்கை அதிகமாக இருக்காது என்று கருதுகிறோம். ஆகவே, பயணிகள் எண்ணிக்கை அங்கு கூடுதலாக வரும் என்று கருதினால், அதைப்பற்றி, அந்த உறுப்பினரின் கோரிக்கையைப் பரிசீலித்து, அந்த விரைவுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளும் அந்த இடத்தில் நின்று, பயணிகளை ஏற்றி, இறக்கிச் செல்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளை அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 209, திரு. பி.எஸ். அருள், மாண்புமிகு போக்குவரத்துத் துறை ...



**209—**

## கூடுதல் பேருந்துகள்

***7744—திரு. பி.எஸ். அருள்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரத்திலிருந்து இயக்கப்படும் அரசுப் பேருந்துகள் பெரும்பாலும் பழுதடைந்துள்ளதால், அப்பேருந்துகளுக்குப் பதிலாக புதிய கூடுதல் பேருந்துகள் வழங்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சிதம்பரத்திலிருந்து இயக்கப்படும் விழுப்புரம், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் அனைத்தும் இயக்கத் தகுதி உள்ள நிலையில் உள்ளன. பழைய பேருந்துகளுக்குப் பதிலாக புதிய கூடுதல் பேருந்துகளை விடுவதற்குரிய நடவடிக்கைகளை அரசு எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பி.எஸ். அருள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் போக்குவரத்துத் துறையில் புதிய மறுமலர்ச்சியை ஏற்படுத்தி, பழைய பேருந்துகளுக்குப் பதில் புதிய பேருந்துகளை இலாபகரமாக இயக்கிக் காட்டி, தமிழக மக்களின் நலன் காத்த ஆட்சியாக, கடந்த 1991-1996 ஆண்டுகளில் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சி அமைந்தது. ** போக்குவரத்துக் கழகம் .. (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவைக் குறிப்பில் இருந்து நீக்கப்படுகிறது. கேள்வியைக் கேளுங்கள். திரு. அருள்.

**திரு. பி.எஸ். அருள்:** சிதம்பரம், அரசுப் போக்குவரத்துக் கழகத்தில் தற்போது 97 பேருந்துகள் இயங்குகின்றன. இவற்றில் 20 பேருந்துகள் பயணிகள் பயணம் செய்ய இயலாத வகையில் பழுதடைந்த நிலையில் உள்ளன. சாலை வசதி சரியில்லாததால் தடம் எண்கள் 33, 21, 40, 4டி போன்ற நான்கு பேருந்துகள் இயக்கப்படாமல் நிறுத்தி

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2002 ஏப்ரல் 23

வைக்கப்பட்டுள்ளன. மேலும், சிதம்பரம் டெப்போவில் உள்ள 97 பேருந்துகளில் பாதிக்கும் மேற்பட்ட பேருந்துகள் பயணிகள் பயணம் செய்ய இயலாத வகையில் படிக்கட்டுகளின்றியும், இருக்கை வசதிகள் சரியில்லாமலும் உள்ளதை அரசு அறியுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன் அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரம் கிளையில் நகரப் பேருந்துகள் 59-ம், புறநகர்ப் பேருந்துகள் 38-ம் இயங்கிக் கொண்டிருக்கின்றன. இதிலே மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோல, சில பேருந்துகள் மிக மோசமான நிலையில் இருப்பதை அறிந்து, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்தவுடனே, அப்படி இயக்குவதற்குத் தகுதியில்லாத நிலையில் இருந்த, மிகவும் மோசமான நிலையில் இருந்த, 8 பழைய பேருந்துகளை மாற்றி, புதிய பேருந்துகள் அங்கு இயக்கப்பட்டு வருகின்றன என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு மட்டுமல்ல, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோல, இன்னும் ஒரு சில பேருந்துகள், பழைய பேருந்துகள் அங்கு இயக்கப்படுவதற்குத் தகுதி இல்லாத நிலையில் இருப்பதாகச் சொல்லியிருக்கிறார். அதையும் அரசு கருத்தில்கொண்டு, அந்தப் பேருந்துகளையும் விரைவில் மாற்றி, புதிய பேருந்துகள் இயக்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசு எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நான்கு வழித்தடங்களில் பேருந்துகள் நிறுத்தப்பட்டிருக்கின்றன என்று சொன்னார். பேருந்துகள் இயக்க முடியாத நிலையில் சாலை இருப்பதால், சாலைப் பழுது நீக்கப்பட்டவுடன் அந்தப் பகுதியில் தொடர்ந்து, நிறுத்தப்பட்ட அந்தப் பேருந்துகளை இயக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பி.எஸ். அருள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு எனது பணிவான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல, சிதம்பரம் அருகே உள்ள பழையாறு கிராமம். இதைச் சுற்றி 20-க்கும் மேற்பட்ட மீனவக் கிராமங்கள் உள்ளன. இப்பகுதி மீனவப் பெண்கள் மீன் வியாபாரம் செய்வதற்கு சிதம்பரம் வந்தாக வேண்டும். ஆனால், சிதம்பரத்திலிருந்து



2002 ஏப்ரல் 23]

பழையாறு கிராமத்திற்கு ஒரே ஒரு பேருந்து மட்டுமே இயக்கப்படுவதால், மினி வேன்களில் மீனவப் பெண்கள் சிதம்பரம் வரும் நிலை ஏற்பட்டு, மினி வேன் உரிமையாளர்கள் கொள்ளை இலாபம் அடிக்கும் நிலை உள்ளது. எனவே, சிதம்பரத்திலிருந்து பழையாறு பகுதிக்குக் கூடுதலாக ஒரே ஒரு பேருந்து இயக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் உலகப் புகழ்பெற்ற நடராசர் ஆலயமும், தில்லைக் காளியம்மன் கோயிலும், அண்ணாமலைப் பல்கலைக்கழகமும் சிதம்பரத்தில் அமைந்துள்ளன. புவனகிரி அருகே புகழ்பெற்ற சுற்றுலா மையமான பிச்சாவரம் வனப் பகுதியும், புவனகிரி நகர் ஸ்ரீ இராகவேந்திரர் பிறந்த புண்ணியத்தலமாகவும் இருப்பதால், வெளிநாட்டினரும், வெளி மாநிலத்தவர்களும், சுற்றுலாப் பயணிகளும் சிதம்பரம் வந்து செல்கின்றனர். எனவே, இப்பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான, சிதம்பரத்திலிருந்து திருப்பதிக்கும், சிதம்பரத்திலிருந்து பெங்களூருக்கும் புதிய பேருந்துகள் இயக்க வேண்டுமென்பதை, மக்களின் தேவைகளை அறிந்து கேட்காமலேயே கொடுக்கக்கூடிய மாண்புமிகு அம்மா அவர்களுடைய கழக அரசு, செயல்படுத்த முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அருள் அவர்களுடைய கோரிக்கையை, நிதிநிலைக்கேற்ப, சூழ்நிலைகளுக்கேற்ப அரசு பரிசீலித்து, தகுந்த நடவடிக்கைகளை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 210, திரு. கே.எஸ். பழனிசாமி, மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்.

**210—**

**சாயப் பட்டறைக் கழிவு நீர்**

***10144—திரு. கே.எஸ். பழனிசாமி:**

மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூரில் சாயப் பட்டறைகள் கழிவு நீரைச் சுத்தப்படுத்தாமல் வெளியேற்றுவதால், ஊத்துக்குளி பகுதியில் உள்ள கிணறுகளில் தண்ணீர் கெட்டு, விவசாயம், கால்நடைகள் பாதிக்கப்பட்டுள்ளன என்பது அரசுக்குத் தெரியுமா?

[2002 ஏப்ரல் 23

(ஆ) ஆம் எனில், விரைவில் அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. ப. மோகன், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) அரசிற்குத் தெரியும்.

(ஆ) சாயப் பட்டறைகளிலிருந்து வெளிவரும் கழிவு நீரால் ஏற்படும் பாதிப்பை அகற்றும் வகையில், 1999 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திலிருந்து அனைத்து சாயப் பட்டறைகளும் தனித்தனியாகவோ, பொதுவாகவோ கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்க, தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. தற்போது திருப்பூரில் சுத்திகரிப்பு நிலையம் அமைக்காத சாயப் பட்டறை எதுவும் இயக்கத்தில் இல்லை என்பதைத் தங்கள் வாயிலாக அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே.எஸ். பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாதாரணத் தொண்டனான எனக்கு, இம்மாமன்றத்தில் பேசுவதற்கு வாய்ப்பளித்த என்னுடைய அன்னை, மாண்புமிகு தமிழக முதல்வர், இதயதெய்வம் அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்கி, எனது கேள்வியைத் தொடுக்கின்றேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் சாயப் பட்டறைகள், கழிவு நீரைச் சுத்தப்படுத்தாமல் நொய்யல் ஆற்றின் வழியாக வெளியேற்றுவதால் எனது தொகுதியில் ஊத்துக்குளி பகுதியில் உள்ள கிணறுகள் மற்றும் நிலத்தடி நீர் ஆகியவற்றில் மாசு ஏற்பட்டுள்ளதால், அப்பகுதியில் நல்ல முறையில் விளைந்த நெல், கரும்பு, மஞ்சள், தென்னை ஆகியவற்றில் மிகப் பெரிய அளவிலே மகசூல் பாதிக்கப்பட்டுள்ளது. மேலும், இந்த நீரைக் குடிப்பதால் கால்நடைகள் பல்வேறு நோய்களால் பாதிக்கப்படுகின்றன. கிராமப் பகுதிகளில் வாழும் ஏழை விவசாயிகள் கால்நடைகளை நம்பி வாழ்வதால் பெரிதும் பாதிப்புக்கு உள்ளாகிறார்கள். நீர் சுத்திகரிக்கப்படுவதாகக் கூறினாலும், சாயப் பட்டறைகளினுடைய ஆலை அதிபர்கள் சரியான முறையில் நீரைச் சுத்திகரிப்பது இல்லை. எனவே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, திருப்பூர் நகருக்குள் வருகின்ற பாதுகாக்கப்பட்ட குடிநீரை, பாதிக்கப்பட்ட ஊத்துக்குளி பகுதி மக்களுக்கும் வழங்க ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.



2002 ஏப்ரல் 23]

முற்பகல் 11-05

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 691 தொழிற்சாலைகளில் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களை நிறுவி, அவற்றுள் 403 தொழிற்சாலைகளில் தனித் தனி சுத்திகரிப்பு நிலையங்களாகவும், 288 தொழிற்சாலைகளில் 8 குழுக்களைச் சேர்த்து, 8 இடங்களில் பொதுக் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களாகவும் அமைத்து, அவற்றின் மூலம் கழிவு நீர், சுத்திகரித்து வெளியேற்றப்படுகிறது. 21 தொழிற்சாலைகளில் தனிச் சுத்திகரிப்பு நிலையங்கள் புதிதாக அமைக்கப்பட்டு இயங்கி வருகின்றன. சுத்திகரிப்பு நிலையங்களை அமைக்காத எந்தவொரு சாயம், சலவைத் தொழிற்சாலையும் தற்போது திருப்பூரில் இயங்கவில்லை என்பதையும், அதேபோன்று, மாண்புமிகு அம்மா அவர்கள் 615 கோடி ரூபாயில் 3-வது குடிநீர்த் திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள், அதன் மூலமாக அங்கே சுத்திகரிப்பு நிலையங்கள் சிறப்போடு திருப்பூரிலே அமைக்கப்பட இருக்கின்றன என்பதையும், மாண்புமிகு அம்மா அவர்கள் எடுத்திட்ட இந்த முயற்சிகள் மூலமாக அந்தச் சுத்திகரிப்பு நிலையங்கள் சிறப்போடு செயல்படுவதற்குச் சரியாக இருக்கும் என்பதையும் நான் இந்த நேரத்தில் அவைக்குப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.எஸ். பழனிசாமி.

**திரு. கே.எஸ். பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் சாயப் பட்டறைக் கழிவு நீர், நொய்யல் ஆறு வழியாக ஒரத்துப்பாளையம் அணைக்குச் செல்கிறது. அந்த அணையில் கழிவு நீர் தேக்கி வைக்கப்பட்டுள்ளதால் அணையைச் சுற்றியுள்ள விவசாய பூமிகள் மற்றும் கிணறுகள் பாழ்பட்டுவிட்டன. கடந்த வாரம் நம்முடைய மாண்புமிகு சுற்றுச்சூழல் அமைச்சர்கூட நேரடியாக வந்து அணையைப் பார்வையிட்டார்கள். எனவே, இந்தக் கழிவு நீரால் பாதிக்கப்பட்ட ஊத்துக்குளி மற்றும் சென்னிமலைப் பகுதி விவசாயிகளுக்கு திருப்பூர் சாயப் பட்டறை ஆலை அதிபர்களிடமிருந்து நிவாரண உதவியைப் பெற்றுத் தர, தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரத்துப்பாளையம் அருகேயுள்ள தடுப்பு அணையில் சாயத்

[2002 ஏப்ரல் 23

தொழிற்சாலையில் கழிவுநீர் தேங்கியுள்ளதால் அதன் அடியிலுள்ள நிலத்தடி நீர் பாதிக்கப்பட்டுள்ளது என்று உறுப்பினரவர்கள் சொன்னார்கள். அது பாதிக்காத வகையில் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்பதை இந்த நேரத்தில் பணிவோடு அவைக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி செல்வி முருகேசன்.

**திருமதி செல்வி முருகேசன்:** 'தர்மத்தின் வாழ்வுதன்னைச் சூது கவ்வும், மறுபடியும் தர்மமே வெல்லும்' என்று நிரூபித்துக் காட்டிய எங்களுடைய சத்தியத் தாய் மாண்புமிகு இதயதெய்வம், அம்மா அவர்களுடைய பொற்பாதங்களை வணங்கி, நன்றியைக் காணிக்கையாக்கிக் கொள்கிறேன். திருப்பூரிலிருந்து வரும் சாயக் கழிவு நீர், எங்களுடைய காங்கேயம் தொகுதியில், சென்னிமலை—காங்கேயம் ஒன்றியத்திற்கு நடுவில் இருக்கும் ஒரத்துப்பாளையம் அணைக்கட்டுக்குத்தான் வந்து சேருகிறது. போதாக் குறைக்கு திருப்பூரில் இருக்கும் சாக்கடைத் தண்ணீரும் சேர்ந்து கழிவு நீரோடு இந்த அணைக்கட்டுக்கு வந்து, அணையில் இருக்கும் தண்ணீர் அனைத்தும் மாசு கலந்து தற்போது விவசாயத்திற்கோ அல்லது கால்நடை வளர்ப்புக்கோ, எதற்குமே பயன்படாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. மக்கள் மிகவும் அவதிக்குள்ளாகி கிட்டத்தட்ட இரண்டாயிரம் ஏக்கருக்கு மேல் விவசாயம் செய்யக்கூட முடியாத சூழ்நிலை ஏற்பட்டு மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். ஆகையால், மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்களுடைய அரசு, விவசாயிகளைக் காக்க வந்த எங்கள் காவல் தெய்வம், இந்த அணையில் இருக்கும் தண்ணீரை விவசாயத்திற்குப் பயன்படுத்துவதற்கு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர்கள் சொல்லிய இடத்திற்கு, அந்த ஒரத்துப்பாளையம் அணைக்கு நேரடியாகச் சென்று, அந்தப் பகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர்கள் அத்தனை பேரையும் சந்தித்து அழைத்துச் சென்று, அது பார்க்கப்பட்டிருக்கிறது. அதிலே என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமோ, அவையெல்லாம் நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்களுடைய உத்தரவினைப் பெற்று, அதன் மூலமாகத் தக்கவாறு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே பணிந்து தெரிவித்துக்கொள்கின்றேன்.



2002 ஏப்ரல் 23]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. சிவசாமி.

**திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் நகரில் இருக்கிற சாயப் பட்டறையிலிருந்து வெளியேறுகின்ற கழிவு நீர் 8 பொது சுத்திகரிப்பு நிலையங்கள் மூலமாகவும், 400-க்கும் மேற்பட்ட தனியார் சுத்திகரிப்பு நிலையங்கள் மூலமாகவும் சுத்திகரித்து வெளியேற்றப்படுகின்றது. அப்படி வெளியேறுகின்ற அந்த நீரை மீண்டும் 100 சதவிகிதம் சுத்திகரித்து புதிய சவ்வூடு பரவல் முறையில் மீண்டும் தொழிற்சாலைகளே பயன்படுத்திக்கொள்கிற விதத்தில், புதிய சவ்வூடு பரவல் முறை என்ற முறையில் அங்கே புதிய சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அவ்வாறு அமைக்கப்படுகின்ற அந்தப் புதிய சவ்வூடு பரவல் முறை சுத்திகரிப்பு நிலையங்களுக்கு அரசு உதவி செய்ய ஆவன செய்யுமா? மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் திருப்பூர் நகரத்திலேயிருந்து வெளியேறுகிற கழிவு நீரைச் சுத்திகரிப்பதற்காக சுமார் 300 கோடி ரூபாய்க்கு மேலாக ஒரு புதிய திட்டத்தை இங்கே அறிவித்திருக்கிறார்கள். மேலும் அந்தத் தொழிற்சாலைகளிலுள்ள நீரின் உப்புத் தன்மையைக் குறைப்பதற்காக மூன்றாவது குடிநீர்த் திட்டத்தின் மூலமாக அங்கே தொழிற்சாலைகளுக்குத் தண்ணீர் வழங்க ஒரு நல்ல திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். அதற்காக முதற்கண் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு திருப்பூர் தொகுதி மக்களின் சார்பாகவும், தொழில் புரிகின்ற தொழில் அதிபர்கள் மற்றும் தொழிலாளர்கள் சார்பாகவும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவ்வாறு 100 சதவிகிதம் புதிய முறையில் அந்தத் தண்ணீரைச் சுத்திகரித்து மீண்டும் தொழிற்சாலைக்கே பயன்படுத்திக்கொள்கின்ற அந்த சவ்வூடு பரவல் முறையிலான சுத்திகரிப்பு நிலையங்களை நிறுவுகின்ற அந்த நிறுவனங்களுக்கு அரசு உதவி செய்து, ஊக்குவிக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-10

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூரிலேயிருந்து விடப்படுகிற இந்தத் தண்ணீர்தான் ஒரத்துப்பாளையம் அணைக்கட்டிற்குச் செல்கிறது என்று அவர்களுடைய குறைபாடு ஒரு பக்கம் இருந்தாலும், திருப்பூரிலே ஏற்படுத்தியிருக்கிற தொழிற்சாலைகளைக் காப்பாற்றுவதற்கு வேண்டிய ஒரு நிலையும் இருந்து கொண்டிருக்கிறது. அதற்காக அம்மா அவர்கள் 615 கோடி ரூபாயைத் தந்து, அதன் மூலமாக, குடிதண்ணீர்த் திட்டத்திற்கும், அந்தச் சுத்திகரிப்பு நிலையத்தை அமைத்திடவும் நல்ல நடவடிக்கையை

எடுத்திருக்கிறார்கள். அத்தனை தொழிற்சாலைகளும் பல்வேறு நடவடிக்கைகள் மூலமாகக் கட்டுப்பட்டிருந்தாலும் அந்தப் பகுதியிலே உப்புத் தண்ணீர் மிக அதிகமாக இருக்கின்ற காரணத்தால் சவ்வூடு பரவல் முறையை நடைமுறைப்படுத்துவதற்குத் தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, அது அரசினுடைய நல் கவனத்திற்கும் கொண்டு வரப்பட்டிருக்கிறது. மேலும், அதை அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, அவருடைய ஒத்துழைப்போடு அதற்குத் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அவைக்குப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 211, திரு. எஸ். நடராஜன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

**211—**

**மாணவர் விடுதி**

***11342—திரு. எஸ். நடராஜன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், நாட்ராம்பள்ளி தொகுதி, கந்திலி ஒன்றியம், கெஜல்நாயக்கன்பட்டியில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவ/மாணவியர் விடுதி அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கே. சுதர்சனம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கழகத் தொண்டர்களை அரியாசனத்தில் அமர்த்திய எங்கள் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.

விடை—

(அ) வேலூர் மாவட்டம், நாட்ராம்பள்ளி தொகுதி, கந்திலி ஒன்றியம், கெஜல்நாயக்கன்பட்டியில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவ/மாணவியர் விடுதி 'கட்டும் பணி' அரசின் ஆய்வில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**மாண்புமிகு பே;வைத் தலைவர்:** திரு. எஸ். நடராஜன்.



**திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய நாட்ராம்பள்ளி தொகுதி பகுதியிலுள்ள கந்திலி ஒன்றியம், பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாய மக்கள் வாழ்ந்து வரும் பகுதியாகும். கெஜல்நாயக்கன்பட்டியிலுள்ள ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் 1250 மாணவர்களும், பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் 980 மாணவியர்களும் படித்து வருகிறார்கள். அதுமட்டுமல்ல, அருகிலுள்ள தோக்கியம் உயர்நிலைப் பள்ளியில் 480 மாணவர்களும், கசிநாயக்கன்பட்டி உயர்நிலைப் பள்ளியில் 430 மாணவர்களும் படித்து வருகின்றார்கள். இவர்களின் நலன் காக்க இந்த நிதியாண்டில், மாணவர்களுக்கு இல்லாவிட்டாலும், மாணவியர்கள் தங்கிப் படிப்பதற்காவது ஒரு விடுதியைக் கட்டிக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இசைவளிப்பார்களா? மேலும், என்னுடைய தொகுதியில், ஏற்கெனவே தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ஒதுக்கப்பட்ட திட்டத்தில், புதுப்பேட்டை பிற்படுத்தப்பட்டோர் நல விடுதி கட்டுவதற்கு ஒதுக்கப்பட்ட அந்தப் பணி ஆரம்பிக்கப்பட்டு விட்டதா, இல்லையா என்பதையும் தங்களின் மூலம் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் கட்டடங்களில் இயங்கிவரும் விடுதிகளுக்குப் போதிய அடிப்படை வசதிகளுடன் அரசின் சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கும், அரசின் கட்டடங்களில் இயங்கி வரும் விடுதிகளுக்குப் போதிய அடிப்படை வசதிகள் செய்வதற்கும் அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இப்பணிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும் என்பதில், அரசின் தற்போதைய நிதிநிலையைக் கருத்தில் கொண்டு, நாட்ராம்பள்ளி தொகுதியில், கெஜல்நாயக்கன்பட்டியில் புதிய மாணவர் விடுதி தொடங்கப்படுவது சாத்தியம் இல்லை என்பதை இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மேலும், சட்டமன்ற உறுப்பினர்களுடைய நிதியிலிருந்து அளிக்கப்பட்ட நிதியைக் கொண்டு அரசாணை எண் 5-ன்படி, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையினருக்காக 2001-2002 ஆம் நிதியாண்டில் வேலூர் மாவட்டத்தில் மூன்று அரசுக் கட்டடங்கள் கட்ட ஆயத்தப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[2002 ஏப்ரல் 23

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 212, திரு. ஜெ. குரு என்கிற குருநாதன், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்.

**212—**

**விற்பனைச் சங்கம்**

***2290—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதி, வாரியங்காவலில் நெசவாளர் கைத்தறி கூட்டுறவு விற்பனைச் சங்கத்தை மீண்டும் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்,** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆண்டிமடம், வாரியங்காவலில் நெசவாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கம் மிகுந்த நட்டத்தினாலும், ஆதாரக் குறைவினாலும் ஓராண்டு காலமாகச் செயல்படாமல் இருப்பதால், 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டப் பிரிவு 137(1)-ன்கீழ் இச்சங்கத்தைக் கலைப்பதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதால், இச்சங்கத்தினை மீண்டும் செயல்படுத்துவதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெ. குரு என்கிற குருநாதன், இருக்கையில் இல்லை.

வினா எண் 213, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர்.



2002 ஏப்ரல் 23]

முற்பகல் 11-15

**213—**

**மீன்பிடித் தளம்**

***6703—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:**

மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, மல்லிப்பட்டினம் மீன்பிடித் தளத்தை விரிவுபடுத்தும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, மல்லிப்பட்டினம் மீன்பிடித் தளத்தை விரிவுபடுத்தும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளது.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம், பேராவூரணி தொகுதி, மல்லிப்பட்டினம் மீன்பிடித் தளம் தொடங்கப்பட்டு 30 ஆண்டுகள் ஆகின்றன. அது தொடங்கப்பட்டபோது, வெறும் 100 விசைப் படகுகள் மட்டுமே இயக்கப்பட்டன. தற்போது ஆயிரத்திற்கும் அதிகமான விசைப் படகுகள் இயக்கப்பட்டு, அதனால் 5 ஆயிரத்திற்கும் அதிகமானவர்கள் வேலைவாய்ப்பைப் பெறுகின்ற சூழ்நிலை இருக்கிறது. விரிவுபடுத்தும் திட்டத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தொடங்குவதற்கு நன்றி. அப்பணி எப்போது தொடங்கப்படும்? அதற்கான திட்ட மதிப்பீடு எவ்வளவு என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மல்லிப்பட்டினத்தில் மீன்பிடித் துறைமுகம் ஒன்று ஏற்கெனவே செயல்பட்டு வருகின்றது. மல்லிப்பட்டினம் மீன்பிடித் துறைமுகத்தை விரிவுபடுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது. இந்தத் துறைமுக விரிவாக்கம் இரண்டாம் கட்டப் பணியாக மேற்கொள்ளப்படவுள்ளது. பெங்களூர் மத்தியக் கடலோர மீன்வளப் பொறியியல் மையத்தால் பூர்வாங்க ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, மாநிலத்

[2002 ஏப்ரல் 23

தொலைநோக்குத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. திட்ட மதிப்பீடு, மீன்பிடித் துறைமுகத் திட்ட, வட்டக் கண்காணிப்புப் பொறியாளரால் தயார் செய்யப்பட்டு வருகிறது. வருகிற 24 ஆம் தேதி பெங்களூர் மத்தியக் கடலோர மீன்வளப் பொறியியல் மைய இயக்குநர் திரு. கே. ஓம்பிரகாஷ் அவர்கள் சென்னை வரவுள்ளார். அவர் 25 அல்லது 26 தேதிகளில் இத்திட்ட இடத்தைப் பார்வையிட உள்ளார். பார்வையிட்ட பின்புதான் மதிப்பீடு தயாரிப்பதற்கான வரைபடம் தயாரிக்கப்படும். இத்திட்டத்தின் உத்தேச மதிப்பீடு, ரூபாய் 8 கோடியிலிருந்து 10 கோடி ஆகும் என்று உத்தேசிக்கப்பட்டுள்ளது என்பதை உறுப்பினர்களுக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 214, திரு. மா.ப. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

**214—**

**சுற்றுலா மையங்கள்**

***6003—திரு. மா.ப. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை அருகே குமரலிங்கம் காசி விசுவநாதர் கோயில், கொழுமம் தத்தாத்ரேயர் ஆலயம், கடத்தூர் சிவன் கோயில், காரத்தொழுவு சிவன் கோயில் ஆகியவற்றைச் சுற்றுலா மையங்களாக அபிவிருத்தி செய்ய அரசு பரிசீலிக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை அருகே குமரலிங்கம் காசி விசுவநாதர் கோயில், கொழுமம் தத்தாத்ரேயர் ஆலயம், கடத்தூர் சிவன் கோயில், காரத்தொழுவு சிவன் கோயில் ஆகியவற்றைச் சுற்றுலா மையங்களாக அபிவிருத்தி செய்யும் செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.



2002 ஏப்ரல் 23]

**திரு. மா.ப. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அல்லிப்பூ சொற்களால் ஆராதிக்கப்படும் அழகுமணிக் கோயிலும், குங்குமச் சாற்றினிலே குழைத்தெடுத்த தங்க நிற விக்கிரகமும், அகில உலகமும் போற்றுகின்ற புன்னகையால் புவியாளும் தமிழக முதல்வர் இதயதெய்வம் அம்மா அவர்களை வணங்கி, நான் என் வினாவினை எடுத்து வைக்கின்றேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம், உடுமலைப்பேட்டை அருகே கொழுமம் தத்தாத்ரேயர் கோயில், அருள்மிகு பழனி முருகன் கோயிலுக்கு அருகிலே 15 கிலோ மீட்டர் தொலைவில்தான் உள்ளது. அதற்கு அடுத்தபடியாக, வருகிற அதே வழியிலே குமரலிங்கம், காசி விசுவநாதர் ஆலயமும் அமைந்துள்ளது. இந்தக் கோயில்கள் எல்லாம் பழமை வாய்ந்த, பிரசித்தி பெற்ற கோயில்களாக இருந்து வருவதால், பழனி வருகின்ற பக்தர்கள் எல்லாம் இந்த ஆலயங்களைப் பார்த்து, தரிசித்துவிட்டு, அதே வழியாக வருகிறபோது அமராவதி dam இருக்கிறது. அதையும் பார்த்துவிட்டு, பிறகு அதே வழியாக, திருமூர்த்தி மலையிலுள்ள அமரலிங்கேஸ்வரர் ஆலயத்தைப் பார்த்து தரிசித்துவிட்டு அதே வழியாக இயற்கைச் செழிப்பு வாய்ந்த பகுதியான top-slip சென்று, பிறகு வால்பாறை செல்வதற்கான வசதிகள் உள்ளன. ஆகவே, பழமை வாய்ந்த, பிரசித்தி பெற்ற கோயில்களும், இயற்கைச் செழிப்பு வாய்ந்த பகுதிகளும் அதிகமாக இருப்பதால், அடுத்த நிதியாண்டிலாவது இந்தப் பகுதிகளைச் சுற்றுலா மையங்களாக அபிவிருத்தி செய்ய அரசு பரிசீலிக்குமா என்பதை நான் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் 11-20

**மாண்புமிகு திரு. அ. மில்லர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடுமலைப்பேட்டை பகுதியில் அமைந்துள்ள குமரலிங்கம், அருள்மிகு காசி விசுவநாதர் திருக்கோயில், கொழுமம் அருள்மிகு தத்தாத்ரேயர் ஆலயம், கடத்தூர் அருள்மிகு அர்ச்சலேஸ்வரர் திருக்கோயில், காரத்தொழுவு அருள்மிகு அகஸ்தீஸ்வரர் திருக்கோயில் ஆகியவை உள்ளூர் மக்களாலும், அருகிலுள்ள ஊர்ப் பொதுமக்களாலும் வழிபாடு செய்யப்பட்டு வருகின்றன. மேற்படி கோயில்கள் அனைத்தும் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் பராமரிப்பில் உள்ளன. இத்திருக்கோயில்களில் சிற்பங்கள், வரலாற்று ஆதாரங்கள் மற்றும் திருவிழாக்கள் இல்லை. நாம் எந்த ஒரு இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை. இத்தலங்களுக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை குறைவாக உள்ளது. சுற்றுலாப் பயணிகள்

வருகைக்கு ஏற்ப, மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆலோசனைப்படி அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல, பல்வேறு பிரசித்தி பெற்ற கோயில்களையும், சுற்றுலா மையங்களையும் தொடர்பு கொண்டு, வருகின்ற வழியில் இந்த ஆலயங்கள் இருப்பதால், வருகின்ற நிதியாண்டில், நிதிநிலைக்கு ஏற்ப மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆலோசனையை ஏற்று, அடிப்படை வசதிகளைச் செய்திட அரசு சிந்திக்கும் என்பதை அவைக்குத் தெரியப்படுத்துகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதி உடுமலைப்பேட்டை அருகிலே குமரலிங்கம் காசி விசுவநாதர் கோயில், கொழுமம் தத்தாத்ரேயர் ஆலயம், கடத்தூர் சிவன் கோயில், காரத்தொழுவு சிவன் கோயில் ஆகிய சிவன் கோயில்கள் அமராவதி ஆற்றங்கரை அருகிலே உள்ளன. மிகச் செழிப்பு வாய்ந்த இடமாக உள்ளது. பழனியிலிருந்து வரக்கூடிய பக்தர்களுக்கும், அதேபோல, திருமூர்த்தி மலை, வால்பாறையிலுள்ள டாப்-சிலிப் போன்ற பகுதியிலேயிருந்து வரக்கூடிய பக்தர்களுக்கும் அது ஏதுவான இடமாக உள்ளதால், நம்முடைய அரசு சுற்றுலாத் துறை வாரியத்தின் மூலமாக, அதற்கு சிறப்பு சேர்க்கக்கூடிய வகையிலே அதைச் செய்ய வேண்டுமென்று கேட்டு, மேலும், அந்தப் பகுதியானது—கொழுமம் பகுதி—கடையேழு வள்ளல்களில் ஒருவரான குமணன் வாழ்ந்த இடமாக உள்ளதால், அதற்கு முன்னுரிமை கொடுக்கப்படுமா என்று தங்கள் வாயிலாகக் கேட்க விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. அ. மில்லர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதைப்போல, மிகவும் பிரசித்தி பெற்ற இந்தக் கோயில்களுக்கு, நிதிநிலைக்கு ஏற்ப, அம்மா அவர்களின் ஆலோசனையை ஏற்று, அடிப்படை வசதிகள் செய்து தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன. (குறுக்கீடுகள்)

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]



## 2. விதி 110-ன்கீழ் அறிக்கை

### தமிழக மின் உற்பத்திப் பெருக்கத் திட்டம் மற்றும் மத்தியத் தொகுப்பிலிருந்து மின்சாரம் வழங்கப்படுவது குறித்து மத்திய எரிசக்தித் துறை அமைச்சருடன் நடத்திய பேச்சுவார்த்தை விவரம் பற்றிய முதலமைச்சரின் அறிக்கை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விதி 110-ன்கீழ் அறிக்கை ஒன்றினை அளிக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கேட்டிருக்கின்றார்கள். அனுமதி வழங்கப்படுகிறது. மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று, அதாவது 22-4-2002 அன்று மாண்புமிகு மத்திய எரிசக்தித் துறை அமைச்சர் திரு. சுரேஷ் பிரபு அவர்கள் என்னைத் தலைமைச் செயலகத்தில் சந்தித்தார். தமிழ்நாட்டில் மின்சார உற்பத்தியின் அளவைப் பெருக்குவதற்கான திட்டங்கள் குறித்து அப்போது நான் மத்திய அமைச்சரிடம் விவாதித்தேன்.

முதலாவதாக, தமிழ்நாட்டின் வளர்ந்து வரும் மின்சாரத் தேவையைக் கருத்தில் கொண்டு, மத்திய மின் உற்பத்தி நிலையங்களின் பொதுத் தொகுப்பில் இருந்து இதுவரை ஒதுக்கீடு செய்யப்படாத 300 மெகாவாட் மின்சாரத்தைத் தமிழ்நாட்டிற்கு வழங்க வேண்டும் என்று நான் மத்திய எரிசக்தித் துறை அமைச்சரிடம் வலியுறுத்தினேன். மாண்புமிகு மத்திய எரிசக்தித் துறை அமைச்சர் அவர்களும், நான் கேட்டதற்கும் மேலாகவே 335 மெகாவாட் மின்சாரத்தைத் (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டிற்கு ஒதுக்கீடு செய்ய நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்தார்.

மேலும், சென்னையை அடுத்து அமைந்துள்ள எண்ணூர் துறைமுகத்தின் கட்டமைப்பு வசதிகளையும், அடிப்படை வசதிகளையும், முழுமையாகப் பயன்படுத்தி, மத்திய அரசு நிறுவனமான National Thermal Power Corporation—தேசிய அனல் மின் கழகத்தின் வாயிலாக, தமிழ்நாட்டில் 1000 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட ஓர் அனல் மின் உற்பத்தி நிலையத்தைப் புதிதாக நிறுவ வேண்டும் என்றும், இந்தத் திட்டத்தின் மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சாரம் முழுவதையும் தமிழ்நாட்டிற்கே வழங்க வேண்டும் என்றும் நான் அவரிடம் கூறினேன்.

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2002 ஏப்ரல் 23

மாண்புமிகு மத்திய மின் துறை அமைச்சர் அவர்களும் இதற்கு உடனடியாக இசைவு தெரிவித்து, ஏறத்தாழ 5000 கோடி ரூபாய் செலவு பிடிக்கும் இந்தப் புதிய அனல் மின் நிலையத்தைத் தமிழ்நாடு மின்சார வாரியமும், தேசிய அனல் மின் கழகமும் சேர்ந்து Joint Sector-ல், கூட்டுத் துறையில் அமைக்க சம்மதம் தெரிவித்துள்ளார்கள். இதற்கான Memorandum of Understanding ஒப்பந்தத்தில் உடனடியாகக் கையொப்பம் இடலாம் என்ற விருப்பம் இருந்தாலும், தமிழ்நாட்டில் வருகின்ற மே மாதம் 31ஆம் தேதி சட்டமன்ற இடைத் தேர்தல்கள் நடக்க இருப்பதால், வரும் ஜூன் மாதம் முதல் வாரத்தில் இந்த ஒப்பந்தத்தில் கையொப்பம் இடலாம் என்று திட்டமிட்டுள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், நாடு முழுவதும் மத்திய அரசினால் Accelerated Power Development and Reforms Programme என்னும் விரைவுபடுத்தப்பட்ட எரிசக்தி மேம்பாடு மற்றும் சீரமைப்புத் திட்டம் அமல்படுத்தப்பட்டு வருகிறது. ஏற்கெனவே தமிழ்நாட்டில் உள்ள 37 மின் பகிர்மான வட்டங்களில், 3 வட்டங்களில் இந்தச் சீரமைப்புத் திட்டம் 233 கோடி ரூபாய் செலவில் அமல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த அளவு குறைந்த வேகத்தில் திட்டம் நிறைவேற்றப்படுமானால், இந்தத் திட்டம் நிறைவு பெற பல ஆண்டுகள் பிடிக்கும் என்பதால், இந்த ஆண்டே 10 மின் பகிர்மான வட்டங்களில் இந்தத் திட்டத்தை அமல்படுத்த வேண்டுமென்று மாண்புமிகு மத்திய எரிசக்தித் துறை அமைச்சரிடம் நான் தெரிவித்தேன். அவரும் இதை உடனடியாக ஏற்றுக் கொண்டு, இதற்கான நடவடிக்கைகளை எடுப்பதாக உறுதி அளித்துச் சென்றுள்ளார்.

முற்பகல் 11-25

மத்தியத் தொகுப்பில் இருந்து தமிழ்நாட்டிற்குக் கிடைக்கும் மின்சாரத்தின் அளவை அதிகரிக்கச் செய்தல், மத்திய மின் உற்பத்தி நிலையங்களைத் தமிழ்நாட்டில் அமைக்க உதவி புரிதல் ஆகிய நடவடிக்கைகள் மூலம், தமிழ்நாட்டில் மின் உற்பத்தியை அதிகரிக்க இந்த அரசு முனைப்போடு பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. தமிழ்நாட்டின் பெருகி வரும் மின்சாரத் தேவையைக் கருத்தில் கொண்டு, தமிழக அரசு இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன். (மேசையை தட்டும் ஒலி)



2002 ஏப்ரல் 23]

## 3. தகவல் கோரல்

### (அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன புகழேந்தி? சொல்லுங்கள்.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சைதாப்பேட்டை, வாணியம்பாடியில் நடைபெறவிருக்கின்ற தேர்தல்கள் குறித்து தேர்தல் கமிஷன் அறிவிப்புக்குப் பிறகு..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கவன ஈர்ப்பு என் ஆய்வில் இருக்கிறது. உட்காருங்கள் (குறுக்கீடு) கவன ஈர்ப்பு என் ஆய்வில் இருக்கிறது. என் அறைக்கு வாருங்கள், அதைப் பற்றிப் பேசலாம். திரு. சி. ஞானசேகரன். (குறுக்கீடு)

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கவன ஈர்ப்புக்கான அறிவிப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. என் ஆய்வில் இருக்கிறது. அறைக்கு வாருங்கள் அதைப் பற்றிப் பேசலாம். திரு. ஞானசேகரன் (குறுக்கீடு) கவன ஈர்ப்பு என் ஆய்வில் இருக்கிறது. சொல்லிவிட்டேன். உட்காருங்கள். திரு. புகழேந்தி, உட்காருங்கள், திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். இப்படித் தேவையில்லாமல் குழப்பம் விளைவிக்கக் கூடாது. திரு. புகழேந்தி, கவன ஈர்ப்புக்கான அறிவிப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. என் ஆய்வில் இருக்கிறது. சொல்லிவிட்டேன். மறுபடியும் ஏன் இப்படித் தகராறு பண்ணுகிறீர்கள். உட்காருங்கள். திரு. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) ஒத்திவைப்புத் தீர்மானம் எல்லாம் ஒத்திவைக்கப்பட்டு நீண்டகாலம் ஆகிவிட்டது. (குறுக்கீடு) என்னுடைய அறைக்கு வந்து பேசுங்கள். என்னுடைய அறைக்கு வந்து பேசுங்கள். (குறுக்கீடு) கையை

[பேரவைத் தலைவர்] [2002 ஏப்ரல் 23

நீட்டிப் பேசுவது முறையல்ல. உட்காருங்கள், உட்காருங்கள் (குறுக்கீடுகள்) உட்காருங்கள் (குறுக்கீடுகள்) பொன்முடி, நேற்றே நீங்கள் இரண்டு பேரும் பேசிய பேச்சுகள் சரியில்லை. முறைகேடாக நீங்கள் பேசுகிறீர்கள். தயவுசெய்து உட்காருங்கள். இல்லாவிட்டால் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். நேற்றே நீங்கள் இரண்டு பேரும் முறைகேடாகப் பேசியிருக்கிறீர்கள். (குறுக்கீடு) துரைமுருகன் அவர்கள் அப்போது அவையில் இல்லை. (குறுக்கீடு) நீங்கள் நேற்று அவையில் இல்லை. (குறுக்கீடுகள்)

(திரு. பரிதி இளம்வழுதி, திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் உட்பட பல தி.மு.க. உறுப்பினர்கள் பேரவைத் தலைவர் இருக்கை முன்பு தரையில் அமர்ந்தனர்.)

### (ஆ) வேலூர் மாவட்டத்தில் அதிகாரிகள் மாற்றம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துரைமுருகன், சொல்லுங்கள்.

***திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேவைத் தலைவர் அவர்களே, ஒத்திவைப்புத் தீர்மானம் என்பது பல, உங்களுடைய ஆய்வில் நீங்கள் எடுத்துக்கொள்கிறீர்கள். நான் அதற்கு மறுப்புச் சொல்லவில்லை. ஆனால், இது தேர்தலை முன்னிட்டு, வாணியம்பாடியிலும்......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கவன ஈர்ப்பு முன்னறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள்.

**திரு. துரைமுருகன்:** இருக்கின்ற அதிகாரிகளை மாற்றியிருக்கிறார்கள், என்றும், 18 ஆம் தேதி வேலூர் மாவட்டத்தில் உத்தரவு போட்டு, 19-ஆம் தேதி காலையிலேயே அந்த B.D.O.-க்கள் மாற்றம் serve செய்த காரணத்தால் அவர்கள் 18-ஆம் தேதி வரையிலே நாங்கள் வேலை செய்திருக்கிறோம். எனவே நாங்கள் எப்படி மாறிப்போக முடியும்? 12 ஆம் தேதியே relieve ஆனதாக அவர்கள் வற்புறுத்தப்படுகின்ற காரணத்தால்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், அதெல்லாம் எடுத்துக் கொண்ட பிறகு பேச வேண்டியது.

**திரு. துரைமுருகன்:** நான் உள்ளே போகவில்லை. சொல்லியிருக்கிற காரணத்தால், இதற்கு நீங்கள் ஒரு தனி முக்கியத்துவம் கொடுத்து இந்தக் கவன ஈர்ப்பை எடுத்துக்கொள்வது சரியாக இருக்குமென்ற எனது வேண்டுகோளைத் தாங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும்.



2002 ஏப்ரல் 23]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லா கவன ஈர்ப்பும் முக்கியத்துவம் உடையன. நான் அதை மறுக்கவில்லை. ஆனால், கவன ஈர்ப்புக்கான அறிவிப்புகள் என்னிடத்திலே கொடுக்கப்பட்டதற்குப் பிறகு, அவற்றை சம்பந்தப்பட்ட துறைக்கு அனுப்பி, அவற்றிற்கான பதிலைப் பெற்று, அவற்றை ஆய்வு செய்து, அதற்குப் பிறகு எடுத்துக்கொள்வதுதான் வழக்கம். இன்றே கூட இரண்டு கவன ஈர்ப்பு வருகின்றது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். உட்காருங்கள் (குறுக்கீடுகள்) நீங்கள் பேரவைத் துணைத் தலைவராக இருந்தவரா? உட்காருங்கள். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை. துரைமுருகன். (குறுக்கீடுகள்) துரைமுருகன். கவன ஈர்ப்பு, தாங்கள் தந்திருக்கின்ற கவன ஈர்ப்புப் பொருள் முக்கியத்துவம் உடையது என்பதை நான் மறுக்கவில்லை. சம்பந்தப்பட்ட துறையிடமிருந்து விளக்கம் கேட்டு, அது எப்போது எடுத்துக் கொள்ளப்படும் என்று ஆய்வு செய்வதற்குகூட பேரவைத் தலைவருக்கு உரிமை கிடையாதா? இதே பதில்தானே கடந்த காலத்திலும் சட்டமன்றத்தில் சொல்லப்பட்டது? கடந்த சட்டப் பேரவைத் தலைவரும் (குறுக்கீடுகள்) கடந்த சட்டப் பேரவைத் தலைவர் இருந்தபோதுகூட இதே பதில்தானே சொல்லப்பட்டது? (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

(பேரவைத் தலைவர் இருக்கை முன்பு தரையில் அமர்ந்து தி.மு.க. உறுப்பினர்கள் கோஷமிட்டனர்)

உட்காருங்கள். (குறுக்கீடுகள்) துரைமுருகன், சொல்லுங்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) நீங்கள் பல முறை (குறுக்கீடுகள்) பல (குறுக்கீடுகள்) பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் பல முறை, ஆய்விலே இருக்கிறது என்று சொல்லியிருக்கிறீர்கள். நான் அதை மறுக்கவில்லை (குறுக்கீடுகள்) ஆனால், இன்று நிலைமை மோசமாகி இருக்கிற காரணத்தால்... (குறுக்கீடுகள்)

முற்பகல் 11-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உங்கள் துணைத் தலைவர்தான் பேசுகிறார். (குறுக்கீடுகள்)

**திரு. துரைமுருகன்:** சென்னை மாநகரத்தினுடைய மேயர் அவர்களும்கூட இன்றைக்கு உண்ணாவிரதத்திலே உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்)

[2002 ஏப்ரல் 23

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

**திரு. துரைமுருகன்:** இந்தப் பிரச்சினை வெளியிலே மிகப் பெரிய ஒரு புயலை உருவாக்குகின்ற நிலையில், அரசியல் தட்ப வெப்ப நிலை சரியில்லாமல் போய்க்கொண்டிருக்கிறது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளுங்கட்சி உறுப்பினர்கள் அமைதியாக அமருங்கள்.

**திரு. துரைமுருகன்:** மேயர் அவர்கள் உண்ணாவிரதத்திலே உட்கார்ந்திருக்கிறார்கள். அதனால் அருள்கூர்ந்து இன்றைக்கு நீங்கள் எடுத்துக்கொள்வது சரியாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அமைதியாக அமருங்கள். (குறுக்கீடுகள்) என்ன, துரைமுருகன்? சொல்லுங்கள்.

**திரு. துரைமுருகன்:** அதனால் தாங்கள், பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை (குறுக்கீடுகள்) தாங்கள் கொஞ்சம் தனிக் கவனம் செலுத்தி எடுத்துக்கொள்வது நல்லது என்று கேட்கிறேன். காரணம், அங்கே மேயர் போன்றவர்கள் எல்லாம் உண்ணாவிரதம் இருக்கிறார்கள். ஒரு 5 நிமிடம் எங்களுக்காக அவகாசத்தைக் கொடுங்களேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நினைத்த உடனே கவன ஈர்ப்பை (குறுக்கீடுகள்) துரைமுருகன் அவர்களே (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். நினைத்த உடனே இப்படியொரு கவன ஈர்ப்பு எடுக்க முடியாது. (குறுக்கீடுகள்) நான் பேரவைத் தலைவர் (குறுக்கீடுகள்) விரும்பிய உடனே ஒரு கவன ஈர்ப்பு எடுக்க முடியாது. அதை ஆய்வு செய்துதான் (குறுக்கீடுகள்) அதை ஆய்வு செய்துதான் எடுக்க முடியும். ஆனால் இப்போது உள்ள பிரச்சினை... (குறுக்கீடுகள்).



2002 ஏப்ரல் 23]

## 4. அரசினர் தீர்மானங்கள்

### (அ) பேரவைப் பணிகளினின்றும் திரு. பரிதி இளம்வழுதி மற்றும் டாக்டர் க. பொன்முடி ஆகியோரைக் கூட்டத் தொடரின் எஞ்சியுள்ள நாட்களுக்கு நீக்கி வைத்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் பரிதி இளம்வழுதி அவர்களும், பொன்முடி போன்றவர்களும் நேற்று தரக்குறைவான வார்த்தைகளை இந்த மன்றத்திலே பேசியிருக்கிறார்கள். மிகக் கேவலமான வார்த்தைகளை, பெண்கள் இருக்கக்கூடிய இந்த அவையில் மிகக் கேவலமான, அமங்கலமான வார்த்தைகளைத் தொடர்ந்து பேசிக்கொண்டிருக்கிறார்கள். நான் நேற்றே சொல்லியிருக்கிறேன். (குறுக்கீடுகள்) இதை அனுமதிக்க முடியாது. (குறுக்கீடுகள்) உரிய நடவடிக்கை எடுப்பேன் என்று சொல்லியிருக்கிறேன். (குறுக்கீடுகள்) இது முறைகேடானது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பரிதி இளம்வழுதி, தயவுசெய்து நீங்கள் வெளியே போங்கள். (குறுக்கீடுகள்) தயவுசெய்து வெளியே போங்கள். (குறுக்கீடுகள்) தயவுசெய்து வெளியே போங்கள். பேரவைத் தலைவர் என்ற முறையில் நான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) பரிதி இளம்வழுதி, வெளியே போங்கள். (குறுக்கீடுகள்) பெண்கள் இருக்கும் இந்த அவையில், நாகூசக்கூடிய, செவிமடுக்க முடியாத, அமங்கலமான கெட்ட வார்த்தைகளை (குறுக்கீடுகள்) அவையில் தொடர்ந்து மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. க. பொன்முடி மற்றும் திரு. பரிதி இளம்வழுதி ஆகியோர் பேசுவது அவை அறிந்திருக்கிற உண்மை. (குறுக்கீடுகள்). இதுகுறித்துக் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவை உறுப்பினர்கள் அவ்வப்போது கூறியபோதும், அவைப் பண்போடு நடந்துகொள்ள வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர்களுக்குப் பலமுறை அறிவுரைகளையும், எச்சரிக்கைகளையும் தந்தபோதிலும் அவர்கள் திருந்தியபாடில்லை. சட்டமன்றப் பண்புகளுக்கு மாறாக, அவையின் கண்ணியத்தைக் குறைக்கும் வகையில் தொடர்ந்து நாகூசும் கெட்ட வார்த்தைகளைப் பேசி வருகிறார்கள். (குறுக்கீடுகள்) பலமுறை எச்சரித்தும் திருந்தியபாடில்லை. எனவே, அவையின் மாண்பினையும், கண்ணியத்தையும் காக்கும் வகையில், மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. பொன்முடி மற்றும் திரு. பரிதி இளம்வழுதி ஆகியோரை எஞ்சிய இக்கூட்டத் தொடர் முழுவதும் நீக்கி வைப்பதற்கான தீர்மானத்தை

[பேரவைத் தலைவர்] [2002 ஏப்ரல் 23

மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் முன்மொழியக் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அவை நடவடிக்கைகள் நடைபெறாத அளவு தொடர்ந்து வேண்டுமென்றே இடைமறித்தும், (குறுக்கீடுகள்) அவைத் தலைவரை மதியாமலும், (குறுக்கீடுகள்) பேரவை விதிகளைத் தொடர்ந்து முறையற்றுப் பயன்படுத்துவதாலும், சட்டமன்றப் பேரவை விதி 121, உள் விதி 2-ன்கீழ் இன்று அவைக்கு வருகை தந்திருக்கும் திருவாளர்கள் பரிதி இளம்வழுதி மற்றும் க. பொன்முடி ஆகியோரை பேரவைக் கூட்டத் தொடரின் எஞ்சியுள்ள நாட்களுக்கு மிகாமல் பேரவைப் பணிகளிலிருந்து தற்காலிக நீக்கம் செய்ய வேண்டும்."

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

உறுப்பினர்கள் திரு. க. பொன்முடி மற்றும் திரு. பரிதி இளம்வழுதி ஆகியோர் இக்கூட்டத் தொடரின் எஞ்சிய நாட்கள் முழுவதும் பேரவைப் பணிகளிலிருந்து தற்காலிக நீக்கம் செய்யப்படுகிறார்கள் என்பதை அவைக்கு அறிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

பேரவை விதி 55-ன்கீழ் (குறுக்கீடுகள்) துரைமுருகன், சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, எல்லோரும் பேசாதீர்கள்.

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துரைமுருகன்... (குறுக்கீடுகள்)

**திரு. துரைமுருகன்:** தலைவர் அவர்களே, நான் அறிந்தவரையில், அவர்கள் எந்தவிதமான ஆபாச வார்த்தைகளையும் இன்றைக்கு உபயோகிக்கவில்லை.



2002 ஏப்ரல் 23]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்போது நடந்துகொண்டது முறையா அது? (குறுக்கீடுகள்) நடந்துகொண்டது முறையா?

**திரு. துரைமுருகன்:** நேற்று நடந்ததற்கு நேற்றே நீங்கள் நடவடிக்கை எடுத்திருக்கலாம். (குறுக்கீடுகள்)

முற்பகல் 11-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலில் நீங்கள் பேசுவதற்கு முன்னால் உங்கள் உறுப்பினர்களை ஒழுங்குபடுத்திவிட்டு, "இருக்கையில் இருக்கச் சொல்லிவிட்டுப் பேசுங்கள். (குறுக்கீடுகள்)

பேரவை விதி 55-ன்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. (குறுக்கீடுகள்) பேரவை விதி 55-ன்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. திரு. ஜி. பழனிசாமி அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். (குறுக்கீடு) திரு. பழனிசாமி, கவன ஈர்ப்பை ஆரம்பியுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொஞ்சம் இருங்கண்ணே ...... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலில் அவர்களை அமைதிப்படுத்திவிட்டு நீங்கள் பேசுங்கள்; இருக்கையில் போய் உட்காரச் சொல்லிவிட்டுப் பேசுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன், கொஞ்சம் இருக்கட்டும். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன். இருக்கட்டும். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்படி நடக்க வைத்துக்கொண்டு பேசினால் எப்படி? (குறுக்கீடுகள்)

[2002 ஏப்ரல் 23

(உறுப்பினர் திரு. பா. பரணிகுமார், இரண்டாவது வரிசையில் உள்ள இருக்கையின்மீது ஏறி நின்று கூச்சலிட்டார்.)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீர்ப்பு அளிக்கப்பட்டுவிட்டது. மாண்புமிகு உறுப்பினர்கள் பரிதி இளம்வழுதி அவர்களையும், பொன்முடி அவர்களையும் வெளியேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எப்படிப் பேசுவீர்கள் நீங்கள்? (குறுக்கீடுகள்) உறுப்பினர்கள் பொன்முடி, பரிதி இளம்வழுதி, அவையை விட்டு வெளியேறுங்கள். எஞ்சியவர்கள் இருக்கையில் போய் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) சொல்லுங்கள்.

**திரு. துரைமுருகன்:** மைக் வரவில்லையே! பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் நேற்றைக்குச் சொன்னதற்கு இன்றைக்கு நீங்கள் நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள். ஆனால், இன்றைக்கு அவர்கள் சொல்லவில்லை. மூன்றாவதாக, மாண்புமிகு மேயர் அவர்கள் இன்றைக்கு உண்ணாவிரதம் இருக்கிறார்கள். அதையும் கேட்பதற்காகத்தான் நான் கேட்டேன். நீங்கள் நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள். அதைத் தாங்கள் செய்து—இன்றைக்குச் சொல்லாத வார்த்தைக்குத் தண்டனை கொடுத்திருக்கிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்றைக்கு அல்ல, நேற்று. நேற்று, அதனுடைய தொடர்ச்சியாக இன்றைக்கு. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) பழனிசாமி, அவை நடவடிக்கைகளை ஆரம்பியுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு....(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்னுடைய தீர்ப்பை நிறைவேற்றக்கூடிய வகையில் திரு. பொன்முடி அவர்களையும், திரு. பரிதி இளம்வழுதி அவர்களையும் அவையை விட்டு அகற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் திரு. பரிதி இளம்வழுதி, திரு. பொன்முடி ஆகியோர் பேரவைக் காவலர்களால் வெளியேற்றப்பட்டனர்.)

(உறுப்பினர் திரு .எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் வழிமறித்து அமர்ந்திருந்ததால் பேரவைக் காவலர்களால் அப்புறப்படுத்தப்பட்டார்.)



2002 ஏப்ரல் 23]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடுகள்) பழனிசாமி, அவையினுடைய நேரம் முக்கியம். கவன ஈர்ப்பைக் கொண்டு வாருங்கள்.

**திரு. துரைமுருகன்:** நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள், 'சபாநாயகர் ஒழிக' என்று கோஷமிட்டுக் கொண்டே வெளிநடப்புச் செய்தனர்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளுங்கட்சி உறுப்பினர்கள் அமைதியாக அமருங்கள். (குறுக்கீடுகள்) ஆளுங்கட்சி உறுப்பினர்கள் அமைதியாக அமருங்கள்.

முற்பகல் 11-40

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**திரு. கா.பூ. முனுசாமி:** தலைவர் அவர்களே, Point of order (குறுக்கீடு)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** இன்று அவையில் நடந்த சம்பவங்கள்....

**திரு. கா.பூ. முனுசாமி:** 'சபாநாயகர் ஒழிக' என்று அவர்கள் சொன்னதை....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, 'சபாநாயகர் ஒழிக' என்றுதான் அவர்கள் சொன்னார்கள். அவர்கள் சொன்னால் நான் ஒழிந்துவிடப் போவதில்லை. என்னை வாழ வைப்பதற்கு என் தாய் இருக்கிறார். எனக்கு அதைப் பற்றிக் கவலை இல்லை. திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் பேசுங்கள். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி).

***திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அவையில் நடந்த சம்பவங்கள் வருத்தத்திற்கு உரியவை. வழங்கப்பட்ட தண்டனை என்பது மிகவும் அதிகமான தண்டனை. ஏன் என்றால்... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் (குறுக்கீடு) திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள், நேற்றையதினம் (குறுக்கீடு) எஸ்.ஆர்.பி. அவர்கள், நேற்றையதினம்....

[2002 ஏப்ரல் 23

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** நேற்றையதினம் நான் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி. அவர்களே, நேற்றையதினம் தாங்கள் இல்லை. திரு. துரைமுருகன் அவர்களும் அவையில் இல்லை. பரிதி இளம்வழுதி அவர்களும்... (குறுக்கீடு) உட்காருங்கள், நான் சொல்கிறேன். (குறுக்கீடு) உட்காருங்கள், நான் சொல்கிறேன். பரிதி இளம்வழுதி அவர்களும், பொன்முடி அவர்களும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள். ஒரு பெண் முதலமைச்சர், ஒரு தாய். இங்கே பெண் உறுப்பினர்கள் நிறையப் பேர் இருக்கிறார்கள். வாயிலே சொல்ல முடியாத, உச்சரிக்க முடியாத கெட்ட வார்த்தைகளை அவர்கள் தொடர்ந்து பேசிக் கொண்டிருக்கிறார்கள். நான் 4, 5 முறை பொறுத்துப் பொறுத்துப் பார்த்தேன். வேறு வழியில்லாமல்தான் இந்த நடவடிக்கை எடுக்க வேண்டியதாயிற்று. இதில் ஒன்றும் நான் மகிழ்ச்சி காணவில்லை.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** நான் நிச்சயமாக அதை நியாயப்படுத்த வரவில்லை. அதை நியாயப்படுத்த மாட்டேன். ஆனால் முதன்முறையாக, நீங்கள் அவர்களை எச்சரிக்கக்கூடச் செய்யாமல், எடுத்த உடனேயே, இரண்டு பேரும் எஞ்சிய இந்தத் தொடர் முழுவதும் கலந்துகொள்ள முடியாமல், கலந்துகொள்ளக் கூடாது என்று ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி அவர்களை வெளியேற்றியிருக்கிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேற்றையதினமே நான் எச்சரித்தேன். பத்திரிகையிலேகூட வந்திருக்கிறது. பரிதி இளம்வழுதி அவர்கள்.....

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** இன்றைக்குக்கூட ஒரு முறை எச்சரித்திருக்கலாம். தவறில்லை. (குறுக்கீடுகள்) ஒரு முறை எச்சரித்திருக்கலாம். (குறுக்கீடுகள்) ஒரு முறை எச்சரித்திருக்கலாம். (குறுக்கீடுகள்) இது கண்ணியம் ஆகாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. (குறுக்கீடு)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** இது கண்ணியம் ஆகாது. நான் அவையிலே இருக்கிற எல்லோருடைய சார்பிலேயும் பொறுப்புணர்வோடு பேசினால், அதற்கும் ஒரு எதிர்ப்புச் சத்தம் என்றால், இது கண்ணியம் கிடையாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை.



2002 ஏப்ரல் 23]

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** நான் என்ன சொல்கிறேன் என்றால், நான் ஒருவன் நினைக்கவில்லை, இந்த வரிசையிலே இருக்கிற அத்தனைபேரும் நினைப்பதைத்தான் நான் பிரதிபலிக்கிறேன். நானாகச் சொல்கிறேன் என்று நினைக்காதீர்கள். இந்த வரிசையில் உட்கார்ந்திருக்கிற அனைத்துக் கட்சிகளின் சார்பிலேயும், அனைத்துக் கட்சிகளின் உறுப்பினர்களுடைய உணர்வுகளையும் பிரதிபலிக்கின்ற வகையிலே நான் பேசுகின்றேன். (குறுக்கீடு) இந்த அவையிலே ஒரு நடைமுறை பின்பற்றப்பட்டு வந்திருக்கிறது. முதன்முறையாக வெளியேற்றப்படும்போது யாராக இருந்தாலும், எச்சரிக்கை செய்யப்பட்ட பிறகும் அவர்கள் அதேபோல தொடர்ந்து நடந்துகொள்வார்களேயானால், அன்றையதினம் வெளியேற்றப்படுவது உண்டு. இரண்டாவது முறை வெளியேற்றப்படும்போது மட்டுமே, அவையிலேயிருந்து முழுவதுமாக, அவைத் தொடர் முழுவதும் கலந்துகொள்ளக் கூடாது என்று சொல்வது, தீர்ப்பு வழங்குவதுதான் வழக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி. அவர்களே, நான் சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடு) சரி, நீங்கள் பேசுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அதுதான் பழக்கமாக, வழக்கமாக இருந்து வந்திருக்கிறது. இப்போதும்கூட, அதாவது, அதற்கு இடமிருக்கிறது என்று விதியைக் காட்டலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** ஆனால், நடைமுறை என்று ஒன்று இருக்கிறது; மரபு ஒன்று இருக்கிறது. விதி இருக்கலாம். விதியை மட்டுமே வைத்து செய்வது என்றால், Parliamentary Practice என்பதே வேண்டாம் Parliamentary Practice and Procedure என்று ஒரு புத்தகமே வேண்டாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி. அவர்களே, உட்காருங்கள். நான் சொல்லிவிடுகிறேன். நடவடிக்கை எடுத்து நீக்கப்பட்ட இரண்டு பேரும் அனுபவம் இல்லாத உறுப்பினர்கள் அல்ல. ஒருவர் பேரவைத் துணைத் தலைவராக இருந்தவர்; ஒருவர் அமைச்சராக இருந்தவர். இரண்டு பேரும் வாயில் உச்சரிக்க முடியாத கெட்ட வார்த்தைகளைத் தொடர்ந்து பேசிக்கொண்டிருக்கிறார்கள் என்றால், அது அவர்கள் அறியாமல் செய்யக்கூடியது அல்ல. இது, பேரவைத் தலைவர் எச்சரித்து, அதற்குப் பிறகு திருத்திக் கொள்ளக்கூடியவர்கள் என்கின்ற நிலைமையிலே இல்லை. அதனால்தான்

[பேரவைத் தலைவர்] [2002 ஏப்ரல் 23

நான் நிலைமைகளைப் பார்த்ததற்குப் பிறகுதான், நான் இந்த நடவடிக்கைக்குப் போக வேண்டிய சூழ்நிலை வந்தது.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் பயன்படுத்திய வார்த்தைகளுக்கு நான் நிச்சயமாக வருத்தப்படுகிறேன். அதுவும் பெண்கள் பெரிய அளவில் இருக்கின்ற இந்த அவையில், முதலமைச்சரும் ஒரு பெண்ணாக இருக்கின்ற இந்த நேரத்திலே இதுபோன்ற சொற்றொடர்களை அவர்கள் பயன்படுத்தி இருப்பார்களேயானால், அது வருந்தத்தக்கது; கண்டிக்கத்தக்கது. நான் அதைத் தவறு சொல்லவில்லை. இன்னும் சொல்லப்போனால், நீங்கள் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய கவனத்திற்கே கொண்டு வந்து, துணைத் தலைவர் இருந்தால், துணைத் தலைவர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, அந்த வார்த்தைகளை அதுபோல் பயன்படுத்தக் கூடாது, அது சரியல்ல என்று அவர்களுக்கு நீங்கள் சொல்லியிருந்தால் மிகவும் மகிழ்ச்சி. அவர்களைக் கட்டுப்படுத்தியிருக்க வேண்டும். கட்டுப்படாதவர்களை, பொதுவாக அவையிலே அவை உறுப்பினர்களை வெளியேற்றுகிறபோது, முதல் முறை எச்சரித்து வெளியேற்றிவிட்டு, பிறகும் அவர்கள் தொடர்ந்து அதேபோல நடந்துகொள்வார்களேயானால் அவர்களை அவைத் தொடர் முழுவதும் நீக்கி வைப்பதுதான் இதுவரை மரபாக இருந்து வந்திருக்கிறது. அதைத்தான் பின்பற்ற வேண்டும். விதி இருக்கிறது என்கிற ஒரே காரணத்திற்காக அதை நாங்கள் பயன்படுத்தினோம் என்று சொல்வது சரியாகாது. ஏன் என்றால், நடைமுறை என்று ஒன்று இருக்கிறது. நடைமுறைதான் இதிலே முக்கியமே தவிர, விதியல்ல. விதிதான் முக்கியம் என்று சொன்னால், Parliamentary Practice என்கிற ஒரு புத்தகமே தேவை இல்லை. Kaul & Shakder-ம் தேவையில்லை. May's Parliamentary Practice-ம் தேவையில்லை. பிராக்டீஸ், என்பது இங்கே முக்கியம். இங்கே நாம் பின்பற்றுகிற நடைமுறை என்ன, மரபு என்ன என்பதைப் பார்த்து, அதைத்தான் பின்பற்ற வேண்டும். முதல் முறையாக இருக்கின்ற காரணத்தினால்—இன்றையதினம் அவர்கள் வெளியேறிவிட்டார்கள். வெளியேற்றப்பட்ட அவர்கள் இரண்டு பேரையும் தவிர மற்றவர்கள் இங்கே இருந்து பேசியிருக்க வேண்டும். பேசாமல் ஜனநாயகக் கடமைகளை மறந்து வெளியேறுவது அவ்வளவு சரியல்ல. என்றாலும், அவர்கள் வெளியேறியிருந்தாலும்கூட, எதிர்க்கட்சிகளின் சார்பில், அனைத்துக் கட்சிகளின்—இந்த வரிசையிலே உட்கார்ந்திருக்கிற அனைத்துக் கட்சிகளின் சார்பில்—நான் சொல்லிக்கொள்ள விரும்புவது; முதல் முறையாக இருக்கிறது. இன்று



2002 ஏப்ரல் 23] [திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்]

வெளியேற்றியிருக்கிறீர்கள். அதிலே எல்லாம்கூட நான் குறுக்கிடவில்லை. ஆனால், தொடர்ந்து அவைத் தொடர் முழுவதும் அவர்கள் கலந்துகொள்ள முடியாது என்கிற தீர்ப்பை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** தலைவர் அவர்களே.....

**திரு. ஜி. பழனிசாமி:** தலைவர் அவர்களே, ஒரேயொரு நிமிடம்....

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அவர் சொல்லி முடிக்கட்டும். திரு. சுந்தரம் சொல்லி முடிக்கட்டும்.

முற்பகல் 11-45

***திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற சட்டமன்றக் கூட்டத் தொடரில், ராஜீவ் காந்தி கொலையில் சம்பந்தப்பட்ட சிவராசன், தணு புகைப்படத்துடன் புரட்சித் தலைவி அவர்களை சம்பந்தப்படுத்திய ஒரு புகைப்படத்தை இங்கே எடுத்துக் காட்டினார்கள். அதற்கு நாங்கள் அப்போது ஆட்சேபணை செய்தோம். அன்றைக்கு புரட்சித் தலைவி அவர்களுடன் ராஜீவ் கொலையாளிகள் அந்தப் படத்திலே இருக்கிறார்கள் என்ற பொய்யான தகவலை அவர்கள் கூறியபோது, பேச எங்களுக்கு அனுமதியளிக்கவில்லை. அடுத்த நாள் நாங்கள் அதைப் பற்றி ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம், கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்தபோது, அதை எடுத்து, அந்தப் போட்டோவைக் காட்டி, டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடன் ராஜீவ் காந்தி கொலையாளிகள் அந்தப் படத்தில் இல்லை என்றும், எங்களுடைய வக்கீல் பிரிவைச் சேர்ந்த, தருமபுரியைச் சேர்ந்தவர்கள், அவர்கள்தான் அங்கே இருக்கிறார்கள் என்று எடுத்துக் கூறுவதற்கு அவர்கள் வாய்ப்பே அளிக்காமல்—இப்பொழுது கூறுகிறார்கள் எஸ்.ஆர்.பி. அவர்கள் கூட எச்சரிக்கை என்று கூறுகிறார்கள் எச்சரிக்கைகூடச் சொல்லவில்லை—அந்தப் புகைப்படத்தை எடுத்துக் காட்டுவதற்கு, பேசுவதற்குக்கூட அனுமதிக்காமல், என்னையும், கருப்பசாமி அவர்களையும் சபையை விட்டு, காவலர்களை விட்டு தூக்கி வெளியே எறிந்த நடைமுறைதான் அப்போது நடந்தது. அதேபோல்—அவர்களுக்கு நேற்றைக்கு நீங்கள்

[திரு. பி. ஆர். சுந்தரம்] [2002 ஏப்ரல் 23

எச்சரிக்கை கொடுத்தீர்கள். அதற்கு முன்பு புரட்சித் தலைவி அவர்களை இங்கே மிகக் கேவலமாகக் கூறியபோது—மிகக் கேவலமாகப் பேசியது நேற்றைக்குக்கூட பத்திரிகையிலே வந்திருக்கிறது—சபாநாயகர் அவர்கள் பரிதி இளம்வழுதிக்கு எச்சரிக்கை கொடுத்திருக்கிறார்கள் என்று பேப்பரிலே எல்லாம் வந்திருக்கிறது, இன்றைக்கு. இவ்வளவு நடந்த பிறகு, நீங்கள் கொடுத்த தீர்ப்பு சரியான தீர்ப்பு என்று கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. பழனிசாமி, நீங்கள் சொல்லுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அவை ஒரு கண்ணியம் மிக்க அவை. அநேகமாக இந்த சட்டமன்றக் கூட்டத் தொடர் தொடங்கியதிலிருந்து இன்று வரைக்கும் தாங்கள் நிதானத்தோடு இந்தச் சபையை நடத்திக் கொண்டிருப்பதை—அசம்பாவிதம் ஏதும் இல்லாமல் சபையை நடத்த வேண்டும் என்று நீங்கள் விரும்புவதை—எதிர்க்கட்சி வரிசையிலே இருக்கக்கூடிய நாங்கள் பாராட்டுகின்றோம். குறிப்பாக, அவையிலே மாண்புமிகு உறுப்பினர்கள் ஒருமையிலே பேசுவது என்பது மிகப் பெரிய கண்ணியக் குறைவாகும். அது யார் பேசியிருந்தாலும் சரி. அது எதிர்க்கட்சித் தரப்பிலேயிருந்து பேசினாலும், ஆளுங்கட்சித் தரப்பிலேயிருந்து பேசினாலும், சபையினுடைய நேரத்தை கண்ணியமாகக் கருதி, கூச்சல் குழப்பத்தை விளைவித்த யாராக இருந்தாலும், அது போன்ற சம்பவங்களை நீங்கள் கண்டிக்க வேண்டியவர்கள். அந்த வகையிலே, மாண்புமிகு உறுப்பினர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் ஒருமையிலே பேசியிருந்தாலும்கூட, தாங்கள் இங்கே எதிர்க்கட்சியினுடைய கவனத்திற்குக் கொண்டு வரலாம், ஒன்றும் தப்பில்லை. அதை அவையினுடைய கவனத்திற்குக் கொண்டு வரலாம். ஆனால், இப்பொழுது கொடுத்திருக்கக் கூடிய ஒரு தீர்ப்பு என்பது அதிகபட்சமான தீர்ப்பு. நீங்கள் எச்சரிக்கை செய்யலாம், கண்டிக்கலாம். இந்த அவையை நடத்துவதற்கு உங்களுக்கு ஒத்துழைப்புக் கொடுக்காமல், நேரத்தை எடுத்துக்கொள்கிறார்கள் என்று சொன்னால், எங்களுக்கெல்லாம் வருத்தமாகத்தான் இருக்கிறது. தேவையில்லாமல், பேச வேண்டிய மக்கள் பிரச்சினையை விட்டு, தேவையற்ற முறையிலே இந்த அவையிலே நீண்ட நேரத்தை நாம் எடுத்துக்கொள்வது என்பது மக்களுடைய நலனிலே அக்கறை காட்டவில்லை என்பதைத்தான் நாம்



2002 ஏப்ரல் 23] [திரு. ஜி. பழனிசாமி]

சொல்ல வேண்டியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் தமிழ் மாநில காங்கிரஸினுடைய சட்டமன்றக் குழுத் தலைவர் எஸ்.ஆர்.பி. அவர்கள் சொல்லியிருக்கிறார்கள், உங்களுடைய தீர்ப்பினை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று. அப்படி அவர்கள் எல்லாம் இந்த அவை முடிகிற வரையிலும் அவர்கள் வெளியேற்றப்பட வேண்டும் என்பதை, தார்மீகமான முறையிலே உங்களுடைய பெருந்தன்மை காரணமாகவே இந்தச் சட்டமன்றத்தினுடைய சட்டமன்ற உறுப்பினர்களின் கடமையை அவர்கள் செய்ய வேண்டியிருக்கிற காரணத்தால், உங்களுடைய தீர்ப்பினை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடு)

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதி 120-லேகூட, "The Speaker may direct any member whose conduct is, in his opinion, grossly disorderly to withdraw immediately from the House, and any member so ordered to withdraw shall do so forthwith and absent himself during the remainder of the day meeting. If any member is ordered to withdraw a second time in the same session, the Speaker may direct the member to absent himself from the meetings of the Assembly for any period not longer than the remainder of the session, and the member so directed shall absent himself accordingly." முதல் முறையாகச் செய்தவர்களை அப்படி;கூ செய்ய முடியாது. இரண்டாவது முறை அப்படிச் செய்தால்தான் விதி 120-ன்படி தொடர் முழுவதும் நீங்கள் நீக்கி வைக்கமுடியுமே ஒழிய....

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன் சொல்வது வேறு....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஞானசேகரன், நீங்கள் படிக்கிற விதி வேறு.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** விதி 121 (1)-ன்கீழ் "The Speaker may, if he deems it necessary, name a member who disregards the authority of the Chair or abuses the rules of the House by persistently and wilfully obstructing the business thereof."

[திரு. சி. பொன்னையன்] [2002 ஏப்ரல் 23

முற்பகல் 11-50

To be followed by (2) "If a member is so named by the Speaker, the Speaker shall, on a motion being made forthwith without any discussion, put the question that the member (naming him) be suspended from the service of the House for a period not exceeding the remainder of the session," எனத் தெளிவாக்கப்பட்டிருக்கிறது. இதிலே உண்மை என்னவென்றால், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களிடம் பல உறுப்பினர்களால், இப்படிக் கெட்ட வார்த்தைகளில் பெண் உறுப்பினர்கள் அதிகமாக இருக்கின்ற இந்த அவையில் மாண்புமிகு உறுப்பினர் பொன்முடி அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் பரிதி இளம்வழுதி அவர்களும் தொடர்ந்து பேசிக் கொண்டிருக்கிறார்கள், நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரப்பட்டது. பலமுறை பேசினார்கள். பலமுறை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களும் எச்சரித்திருக்கிறார்கள். பலமுறை எச்சரித்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் யசோதா அவர்கள்கூட ஒருமுறை வெளிப்படையாகவே சொன்னார்கள். பெண் உறுப்பினர்கள் இருக்கிற அந்த அவையிலே நாகூசக்கூடிய, காதிலே கேட்க முடியாத இப்படிப்பட்ட கெட்ட, வார்த்தைகளைப் பேசுகிறார்களே, பேரவைத் தலைவர் அவர்களே, ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்று பேரவைத் தலைவர் அவர்களிடத்தில் மாண்புமிகு உறுப்பினர் யசோதா அவர்கள்கூடக் கேட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, இதிலே எந்த ஒரு தவறும் இல்லை என்பதை அவைக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நானும், நண்பர் பழனிசாமி அவர்களும், ஞானசேகரன் அவர்களும் சுட்டிக்காட்டியவை விதியிலே இருப்பது மட்டுமல்ல, அது நடைமுறையில் இதுவரை பின்பற்றப்பட்டும் வந்திருக்கிறது. ஆனால் விதி 121 (1), (2)-ஐப் படித்துக் காட்டினார்கள். அதற்குப் பின்னால் There is a Proviso - "Provided that the House may, at any time, on a motion being made resolve that such suspension be terminated" இப்போது நான் கேட்பது அதைத்தான். நான், அந்த உரிமை உங்களுக்கு இல்லை, நீங்கள் அப்படிச் செயல்படவே முடியாது என்று சொல்ல வரவில்லை. ஆனால், சாதாரணமாக இந்த அவையிலே முதல் முறையாக ஒருவர் வெளியேற்றப்படுகின்ற நேரத்திலே ஒரு நாளைக்குத்தான் வெளியேற்றப்படுவார். இரண்டாவது முறையாக வெளியேற்றப்படும் போதுகூட, நீங்கள் கேட்டு, அவை முன்னவர் அவர்கள் தீர்மானத்தை



2002 ஏப்ரல் 23] [திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்]

முன்மொழிவார்கள். அதுதான் 121(1), 121 (2). அதைப்போல பலரும் உங்களிடத்திலே எடுத்துச் சொல்கின்ற நேரத்திலே அதை நீங்கள் தாராளமாகக் குறைக்கலாம். அதற்கு விதியிலே இடமிருக்கிறது. அதுதான் Proviso—121(2) Proviso அதிலே தெளிவாக இருக்கிறது. "Provided that the House may, at any time, on a motion being made resolve that such suspension be terminated" என்றிருக்கிறது. அதனால் எல்லோருடைய உணர்வுகளையும் நீங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும். நான் அதை நியாயப்படுத்தமாட்டேன். சரி என்று சொல்லமாட்டேன். தவறான வார்த்தைகளைப் பயன்படுத்தினால் கண்டிப்பாக அதை நானும் உங்களோடு சேர்ந்துகொண்டு கண்டிப்பதற்குத் தயாராக இருக்கிறேன். ஆனால் நேற்றையதினம் என்ன நடந்தது என்பது எனக்குத் தெரியாது. இன்றையதினம் நடந்ததை நான் பார்த்துக் கொண்டுதான் இருந்தேன். பொதுவாக, இந்த அவையிலே, அவையைப் பொறுத்தவரையில், உள்ளே வருவதும், சபாநாயகருக்கு முன்னாலே நிற்பதும், சரி என்று ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. அதை நான் ஒப்புக்கொள்ளவில்லை. குறுக்கே நிற்கவில்லை. ஆனால் சில நேரங்களிலே உணர்வு மிகுதியின் காரணமாக தவறு நடைபெறுகின்ற நேரத்தில், நீங்கள் எச்சரித்து வெளியேற்றினால்கூட நான் குறுக்கிட மாட்டேன். நீங்கள் எச்சரித்து வெளியேற்றி இருக்கலாம். நான் தவறு என்று சொல்லவில்லை. வெளியேற்றிய பிறகு அவர்கள் சென்றுவிட வேண்டும். செல்லாவிட்டால் நீங்கள் மார்ஷலை அழைத்து வெளியேற்றச் சொல்வதில் தவறில்லை. வெளியேற்றப்பட்டுவிட்டார்கள். ஆனால் அதிலேகூட—மார்ஷல் செய்தது—அங்கே சின்னத் தவறு நடந்திருக்கிறது. அதைச் சுட்டிக்காட்டவில்லை. வேண்டாம், அதுவும் தேவையில்லை. நீங்கள் சொல்லாமலேயே சிலர் வெளியேற்றப்பட்டார்கள். அது தவறு. வெளியேற்றப்பட்டு இருக்கக்கூடாது. ஒருவர் வெளியேற்றப்பட்டார். அது மிகவும் தவறு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர்கள் எல்லோரும் போக வேண்டுமென்று விரும்புகிறார்கள். அதனாலேதான்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** ஒருவர் வெளியேற்றப்பட்டார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொன்முடியையும், பரிதி இளம்வழுதியையும்தான் வெளியேற்றச் சொன்னேன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** இல்லை, நான் பரிதியைப் பற்றிச் சொல்லவில்லை. வெளியேற்றப்பட்டார். நான் பெயருக்கே போகவில்லை.

[திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்] [2002 ஏப்ரல் 23

வெளியேற்றப்பட்டிருக்கிறார்: இப்போது நாங்கள் எல்லாம் கேட்டுக்கொள்வது, அந்த ஒரு நாள் வெளியேற்றத்திலேகூட நாங்கள் தலையிடவில்லை. இருக்கட்டும். ஆனால் தொடர்ந்து இந்த அவைத் தொடர் முழுவதும் கலந்துகொள்ள முடியாது என்கிற நிலைமையை மாற்றி அவர்கள் தொடர்ந்து கலந்துகொள்வதற்கு, நாளையிலிருந்தாவது அந்த உறுப்பினர்கள் கலந்துகொள்வதற்கு நீங்கள், பேரவைத் தலைவர், அவை முன்னவர் மூலமாக ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியோ அல்லது நீங்கள் தீர்ப்பாகவே வழங்கி, அவர்கள் தொடர்ந்து கலந்து கொள்வதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எஸ்.ஆர்.பி. அவர்களும், மாண்புமிகு பழனிசாமி அவர்களும், தாங்கள் வழங்கிய தீர்ப்பை இங்கே மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டு, இந்த அவை நிறைவேற்றிய தீர்மானத்தையே மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டு, பல விதிகளை இங்கே சுட்டிக்காட்டினார்கள்.

பேரவைத் தலைவர் அவர்கள் தொடர்ந்து, இன்று வெளியேற்றப்பட்ட அந்த 2 உறுப்பினர்களை எச்சரித்துக் கொண்டுதான் வருகிறார்கள். அவர்கள் ஏதோ இன்று மட்டும் தகாத முறையில் பேசவில்லை. இந்தக் கூட்டத் தொடர் தொடங்கப்பட்ட நாள் முதல் தொடர்ந்து அவர்கள் அவையில் proceedings சுமுகமான முறையில், நல்ல முறையில் நடக்கவிடாமல் தினமும் ஏதோ ஒரு தகராறு செய்து கொண்டுதான் இருக்கிறார்கள். தினமும் அவர்கள் இத்தகைய ஒரு ரகளையை ஏற்படுத்தி, கெட்ட வார்த்தைகளைப் பேசிக் கொண்டுதான் இருக்கிறார்கள். பல முறை பேரவைத் தலைவர் அவர்கள் எச்சரித்திருக்கிறார்கள். ஒருமுறை காங்கிரஸ் கட்சியின் சட்டமன்றத் தலைவர் மாண்புமிகு திருமதி யசோதா அவர்கள்கூட, "இந்த அவையில் இத்தனை பெண் உறுப்பினர்கள் இருக்கிறார்கள்; 'மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே பெண் உறுப்பினர்களுக்கு என்ன பாதுகாப்பு; இப்படிக் காதில் கேட்க முடியாத, சொல்லக்கூடாத வார்த்தைகளையெல்லாம் பேசிக் கொண்டிருக்கிறார்களே" என்று மாண்புமிகு உறுப்பினர் யசோதா அவர்கள்கூட இங்கே ஒரு முறை முறையிட்டார்கள். ஆகவே, அன்றையதினமே பேரவைத் தலைவர் அவர்கள், அவர்களை வெளியேற்றி இருக்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால் பெருந்தன்மையோடு, அவர்களை எச்சரிப்போடு பேரவைத் தலைவர் அவர்கள் விட்டுவிட்டார்கள். அதனால் இன்று



2002 ஏப்ரல் 23] [செல்வி ஜெ ஜெயலலிதா]

வெளியேற்றியதைக் குற்றம் என்று சொல்ல முடியாது. தவறு என்று சொல்ல முடியாது. மேலும் மாண்புமிகு எஸ்.ஆர்.பி. அவர்கள் பேசுகின்றபோது ஒரு கருத்தை இங்கே பதிவு செய்திருக்கிறார்கள். அதனால் அதற்கு நான் இங்கே திருத்தம் கூற விரும்புகிறேன். இன்று பேரவைத் தலைவர் தி.மு.க. உறுப்பினர்கள் 2 பேரின் பெயர்களைச் சொல்லி, அவர்கள் வெளியேற்றப்பட வேண்டும் என்று காவலர்களுக்கு உத்தரவிட்டார். ஆனால் பெயர் குறிப்பிடாத ஒருவரைக்கூட வெளியேற்றிவிட்டார்கள் என்று மாண்புமிகு எஸ்.ஆர்.பி. அவர்கள் குற்றம் சாட்டினார்கள். நான் இங்கேயே உட்கார்ந்துகொண்டு, எதிரில் என்ன நடக்கிறது என்று பார்த்துக் கொண்டுதான் இருந்தேன். காவலர்கள் முதலில் பரிதி இளம்வழுதியை வெளியேற்றினார்கள். அடுத்து மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டிருந்தது மாண்புமிகு பொன்முடி அவர்களை. அவரை நெருங்கவிடாமல் மற்ற தி.மு.க. உறுப்பினர்கள் தடுத்துக்கொண்டிருந்தார்கள், காவலர்களுக்கு வழிவிடவில்லை. அதனால், திரு. பொன்முடி அவர்களை நெருங்க வேண்டுமே என்பதற்காகத்தான் வழிமறித்துக் கொண்டிருந்தவர்களை காவலர்கள் அப்புறப்படுத்தினார்களே தவிர, காவலர்கள் அத்துமீறி எதையும் செய்யவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-55

மாண்புமிகு உறுப்பினர்கள் 2 பேரை இந்த அவையின் நடவடிக்கைகளில் கலந்து கொள்ளவிடாமல் அவர்களை வெளியேற்றிவிட வேண்டும் என்று யாரும் இங்கே விரும்பவில்லை. எல்லா மாமன்ற உறுப்பினர்களும் இந்த அவையின் நடவடிக்கைகளில் கலந்துகொள்ள வேண்டும். ஆக்கபூர்வமான கருத்துகளைச் சொல்லவேண்டுமென்றுதான் பேரவைத் தலைவர் அவர்களும் விரும்புகிறார்கள். நாங்களும் விரும்புகிறோம். ஆனால், தொடர்ந்து சில தி.மு.க. உறுப்பினர்கள் இப்படி அவையின் கண்ணியத்தைக் கெடுக்கின்ற வகையில் பேசிக்கொண்டிருப்பதை இந்த அவை பார்த்துக்கொண்டு சும்மா இருக்க முடியாது. அதை சகித்துக்கொள்ள முடியாது. ஆகவே, மாண்புமிகு எஸ்.ஆர்.பி. அவர்களும், மாண்புமிகு பழனிசாமி அவர்களும் கேட்டுக்கொள்வதற்கிணங்க இப்பொழுது நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை மறுபரிசீலனை செய்ய வேண்டுமானால், மாண்புமிகு பேரவைத் தலைவர் அளித்த தீர்ப்பை மறுபரிசீலனை செய்யவேண்டுமானால், இங்கே இத்தனை பெண் உறுப்பினர்கள் இருக்கின்ற மாமன்றத்தைக் கொச்சைப்படுத்துகின்ற வகையில் கெட்ட வார்த்தைகளைப் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் பரிதி இளம்வழுதி

அவர்களும், பொன்முடி அவர்களும் வருத்தம் தெரிவிக்க வேண்டும். அவர்கள் வருத்தம் தெரிவித்தால், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் இந்தத் தீர்ப்பை மறுபரிசீலனை செய்யலாம் என்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்னுடைய தீர்ப்பையொட்டிச் சொல்லிவிடுகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்ததைப்போல, என்னிடத்திலே மன்னிப்புக்கூட கேட்க வேண்டாம். வருத்தம் தெரிவித்து, இனிமேல் இப்படிப் பேசமாட்டோம், கொச்சையாகப் பேசமாட்டோம், அமங்கலமான வார்த்தைகளை, கெட்ட வார்த்தைகளைப் பேசமாட்டோம் என்று அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டால் நான் இந்தத் தீர்ப்பை மறுபரிசீலனை செய்வதைப் பற்றிக்கூடச் சிந்திக்கிறேன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைவர் அவர்களுடைய தீர்ப்பை எதிர்த்தோ, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசியதைப் பிரதிவாதம் பண்ணியோ கருத்துகளைச் சொல்ல விரும்பவில்லை. நான் ஒன்றை மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஏற்கெனவே இந்த அவையிலே பல நேரங்களில் அவர்கள் நடந்துகொண்ட முறையை நாங்கள் நியாயப்படுத்தவில்லை. ஆனால், பகிரங்கமாக இந்த அவையிலே ஒரு warning அவர்களுக்குக் கொடுப்பதற்கு சபாநாயகர் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இருக்க வேண்டும். அதைச் செய்யவில்லை என்பது என்னுடைய தாழ்மையான கருத்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன், நேற்றே நான் சொன்னேன்—நேற்றைக்கும் சொன்னேன். அதற்கு முன்னாலேயும் சொல்லியிருக்கிறேன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** நேற்றைக்கு நான் அவையில் இல்லை, என்ன நடந்தது என்று எனக்குத் தெரியாது. நான் விசாரித்ததில்.....

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தி.மு.க. உறுப்பினர்கள் வெளியேறுவதற்கு முன்பாக, அவர்களுடைய துணைத் தலைவர் மாண்புமிகு துரைமுருகன் அவர்கள், பேரவைத் தலைவரைப் பார்த்து, தி.மு.க. உறுப்பினர்கள் நேற்றுப் பேசிய பேச்சுக்கு இன்று நடவடிக்கை எடுக்கலாமா என்று கேட்டார். ஆகவே, நேற்று பேசக்கூடாத பேச்சுகளை, பேசக்கூடாத வார்த்தைகளை





அவர்கள் பேசினார்கள் என்று திரு. துரைமுருகன் அவர்களே ஒப்புக்கொண்டுவிட்டார்கள்; உறுதிப்படுத்திவிட்டார்கள். ஆகவே, இந்த நேரத்தில் மீண்டும் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இவ்வளவு தூரம், தி.மு.க. உறுப்பினர்களுக்காக வாதாடுகின்ற மாண்புமிகு உறுப்பினர் எஸ்.ஆர்.பி. அவர்களும், மாண்புமிகு பழனிசாமி அவர்களும், மாண்புமிகு ஹேமச்சந்திரன் அவர்களும், மாண்புமிகு அப்பாவு அவர்களும் (குறுக்கீடு)

**திரு. மு. அப்பாவு:** நான் இல்லை.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** நீங்கள் இல்லையா, சரி, திருத்திக்கொள்கிறேன். இன்னும் வேறு யாராவது அவர்களுக்காகப் பரிந்து பேசுவதாக இருந்தால், அவர்கள் அனைவரும் மீண்டும்—தி.மு.க. உறுப்பினர்கள், குறிப்பாக திரு. பொன்முடி அவர்களும், திரு. பரிதி இளம்வழுதி அவர்களும்—இத்தகைய கெட்ட வார்த்தைகளைப் பேசவே மாட்டார்கள்—இந்த அவையில் இத்தகைய தகாத வார்த்தைகளைப் பேசவே மாட்டார்கள் என்ற உத்தரவாதத்தை அவர்களுக்காக இவர்கள் கொடுத்தால், தாங்கள் மறுப்ரிசீலனை செய்யலாம் என்று கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஹேமச்சந்திரன் அவர்களுக்கும் பழனிசாமி அவர்களுக்கும், எஸ்.ஆர்.பி. அவர்களுக்கும் அவர்களைப்பற்றி மிக நன்றாகத் தெரியும். (குறுக்கீடு) அப்பாவு, கொஞ்சம் இருங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள், நாங்கள் பரிந்து பேசியதாகச் சொன்னார்கள். பரிந்து பேசவில்லை. அவையினுடைய கண்ணியத்தைப் பாதுகாத்துக்கொள்வதற்கு அவர்களுக்கு ஒரு சந்தர்ப்பத்தைக் கொடுக்க வேண்டும் என்ற கருத்தைத்தான் நாங்கள் சொன்னோமே தவிர, அவர்கள் செயலை நாங்கள் நியாயப்படுத்தவில்லை, அவர்களை நாங்கள் பாதுகாக்கவும் இல்லை.

நண்பகல் 12-00

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்று இந்த மைக்கை உயர்த்தித் தாருங்கள் என்று சொன்னவுடனேயே, உயர்த்தித் தந்திருக்கிறீர்கள். அதற்கு முதலில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எல்லோரும் பேசினார்கள். நானும் என்னுடைய கருத்தைச் சொல்வதற்கு எழுந்தால், விடமாட்டேன்

என்று மறுக்கிறீர்கள். எனக்கு அந்த வாய்ப்பைத் தாருங்கள். நான் கடந்த 5 ஆண்டுகளிலே இந்தச் சட்டமன்றத்திலே இருந்த ஆள். இப்போது சுயேட்சையாக இருக்கிறேன். போன முறை இருந்த ஆட்கள் எல்லோரும் இருக்கிறார்கள். எப்போதாவது ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கோ அல்லது கவன ஈர்ப்புக்கோ, இந்த zero hour-ல் எழுந்து நின்று பேசுவதற்கு வாய்ப்புக் கொடுக்கவில்லை என்றால், யாராவது வந்து சபாநாயகருக்கு முன்னாலே போய் இதுவரை உட்கார்ந்து இருக்கிறார்களா என்றால், கடந்த 5 ஆண்டு காலத்திலே எதிர்க்கட்சியாக இருந்தவர்கள் யாருமே உட்காரவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த முறை, திராவிட முன்னேற்றக் கழகம் இப்போது எதிர்க்கட்சியாக வந்ததற்குப் பிறகுதான், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள்தான் முதலிலே வந்து உட்கார்ந்தார்கள். (குறுக்கீடு) சபாநாயகருக்கு முன்னாலே வந்து உட்காருவதை நம்முடைய முன்னாள் பொதுப் பணித் துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள்தான் முதலிலே ஆரம்பித்து வைத்தார்கள். தொடர்ந்து அதே மாதிரி சபாநாயகருக்கு முன்னாலே வந்து உட்காருகிறார்கள். நடைமுறை உண்மையைச் சொல்கிறேன். எனக்கு யார் மேலேயும் விருப்பு, வெறுப்பு எல்லாம் கிடையாது. உண்மையைச் சொல்கிற ஆள் நான்.

அதே மாதிரி சிட்டின் மேலே ஏறி நின்று, கடந்த 5 ஆண்டு காலத்திலே யாருமே தகராறு பண்ணவில்லை. சீட்டுக்கு மேலே ஏறி நின்று தகராறு பண்ணியது யாரும் கிடையாது. இன்னும் சொல்லப் போனால், நான் ஒரு முறை ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்தேன். ஆசிரியர் பயிற்சி முடித்து, தென் மாவட்டங்களில் உள்ளவர்களுக்கு மாவட்டந்தோறும், மாவட்ட அளவிலேதான் அவர்களைத் தேர்வு செய்கிறார்கள். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியிலே இருந்தபோது, மாநில அளவிலே அவர்களுக்கு seniority இருந்தது. அதே மாதிரி வேண்டுமென்று ஓர் ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்தேன். என்னை அப்போது சபாநாயகர் தூக்கி வெளியே போட்டார்கள். ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்து, நான் எழுந்துதான் நின்றேன். என்னை, சபை நடவடிக்கைகளிலிருந்து, நாள் முழுவதும் 'நீ இந்த நாள் முழுவதும் கலந்துகொள்ளக் கூடாது 'என்று சொல்லி—என்னை சபையை விட்டு ஒரு 2 நாளோ, 3 நாளோ சேர்த்து வரக்கூடாது—என்று வெளியே அனுப்பினார்கள். எனக்கு warning-ம் தரவில்லை, ஒன்றுமே தரவில்லை. அதற்குப் பிறகு முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் அழகிரி அவர்கள் எனக்காகப் பரிந்து



பேசினார்கள். எங்கள் கட்சியிலேயிருந்து யாரும் என்கூடப் பின்னாலே வரவில்லை. நான் ஒரு ஆள் தூக்கிப் போடப்பட்டேன். எல்லோரும் இங்கேதான் இருந்தார்கள். அண்ணன் ஞானசேகரன், எல்லோரும் இருந்தார்கள். கம்மென்று உட்கார்ந்திருந்தார்களே தவிர, ஒரு (மேசையைத் தட்டும் ஒலி) பொதுப் பிரச்சினை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதனால்தான் சுயேட்சையாக ஆகிவிட்டீர்களா? (சிரிப்பு)

**திரு. மு. அப்பாவு:** என் சொந்த விஷயத்திற்காக நான் இங்கே வந்து பேசவில்லை. நான் பேசியது, 'நெல்லை, கன்னியாகுமரி, தூத்துக்குடி மாவட்டங்களிலே இடைநிலை ஆசிரியர் பயிற்சி முடித்த மாணவர்களுக்கு, வருடத்திற்கு 10 பேருக்குக்கூட வேலை கிடைக்கவில்லை. இன்றைய முதல்வர் அம்மா அவர்கள் முன்பு முதல்வராக இருந்தபோது மாநில அளவில் seniority இருந்தது. இப்போது அந்தந்த மாவட்ட அளவு seniority என்று ஆக்கிவிட்டீர்கள் நீங்கள், அதை ரத்து செய்யுங்கள்' என்று கேட்டு, அதற்கு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். யாருமே என் பின்னால் வரவில்லை. என்னைத் தூக்கிப் போட்டதற்குப் பிறகு, 3 நாட்களுக்கு வரக்கூடாது என்றார்கள். எனக்கு warning-ம் கொடுக்கவில்லை. எங்கள் கட்சிக்காரர்களே சும்மாயிருந்து, மற்றவர்கள், அண்ணன் பழனிசாமி, இப்படி யாருமே கேட்கவில்லை. அதற்குப் பிறகு அழகிரி அண்ணன் எழுந்து, 'ஐயோ பாவம், உங்களுடைய நண்பர்தானே, உங்களிடம் நன்றாகச் சிரித்துப் பேசுவாரே, அவர் எழுந்துதானே நின்றார், என்ன தவறாகச் சொன்னார் என்று சொல்லுங்கள்' என்று கேட்டார்கள். அதற்குப் பிறகு, 'சரி, வரச் சொல்லுங்கள்' என்று சொன்னார்கள்.

அதனாலே தண்டனை வழங்குவது ஒரு பெரிய குற்றமல்ல. இங்கே சபாநாயகரே சபையை நடத்த வேண்டும். அதற்கு நாம் எல்லோரும் ஒத்துழைப்புக் கொடுக்க வேண்டும். இந்தச் சபையிலே வந்து மக்களுடைய பிரச்சினைகளைப் பற்றிப் பேச வேண்டும். அரசியல் பண்ண வேண்டுமென்று சொன்னால், வெளியிலேயிருந்து பண்ணிக் கொள்ளலாம். இங்கே வந்து மக்களுடைய பிரச்சினைகளை எடுத்து வைக்க வேண்டும். நியாயமான கோரிக்கைகளை வைக்க வேண்டும். எல்லோருக்கும் வாய்ப்புக் கொடுக்கத்தான் செய்கிறீர்கள், என்னைத் தவிர. (சிரிப்பு) ஆகவே, அந்த அளவிலே எல்லோரும் சொன்னதற்குப் பிறகு, நானும் ஒரு சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையிலே—நான்

[திரு. மு. அப்பாவு] [2002 ஏப்ரல் 23

ஒரு சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையிலே, மனிதாபிமானத்தோடு— மறுபரிசீலனை பண்ணுவது உங்களுடைய உரிமை. அப்படி நீங்கள் மறுபரிசீலனை செய்து, தண்டனையைக் குறைப்பதற்கு—முடிந்தால் முடிந்த அளவிற்குக் குறைத்துக் கொடுப்பதற்கு—வரவே கூடாது என்று சொல்லவில்லை. இங்கே இருப்பவர்கள், அவர்கள் வரவில்லை என்றால், இங்கே என்னவோ சபையிலே அவர்கள் வந்து ஏதாவது பண்ணிவிடலாம் என்பதெல்லாம் இல்லை. மக்களுடைய பிரச்சினைகளைப் பற்றி அவர்கள் பேச வேண்டும். அப்படி அரசியல் பண்ண வேண்டும் என்றால், வெளியிலேயிருந்து உண்ணாவிரதம் இருக்கலாம்; இருக்கிறார்கள். அதை வேண்டுமானால் தொடர்ந்து continue பண்ணட்டும். இன்றைக்கு மக்களின் பிரச்சினைகளுக்குத் ஏதாவது தேவையானவற்றைச் செய்ய வேண்டும் என்று கேட்டு— அதை மறுபரிசீலனை பண்ணுவதற்கு நானும் அதை எதிர்க்கட்சிகளோடு சேர்ந்து..

பிற்பகல் 12-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, அப்பாவு, முதலமைச்சர் அவர்களும் அதைத்தான் கேட்டார்கள். ஓர் உத்தரவாதம் கொடுத்தால் பரவாயில்லை. நீங்கள் உத்தரவாதம் கொடுக்கிறீர்களா?

**திரு. மு. அப்பாவு:** நான் எப்படிக் கொடுக்க முடியும்? (சிரிப்பு) நான் உங்களுக்கு வேண்டுமானால் உத்தரவாதம் தரலாம். நீங்கள் சொன்னபடி, பரிசீலிக்கப்படும் என்றீர்கள். மைக்கை உடனே உயர்த்திக் கொடுத்துவிட்டீர்கள். உங்களுக்கு வேண்டுமானால் உத்தரவாதம் தரலாமே தவிர, ஒரு சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையிலே, நீங்கள் அறையிலே கூப்பிட்டு வைத்து, நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் பேராசிரியர் அவர்களைக் கூப்பிட்டு வைத்து, அதற்கு ஒரு முடிவு பண்ணி, மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டு, அமர்கிறேன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, வேண்டாம். பிரச்சினையை இத்தோடு முடித்துவிடுவோம். ரங்கநாதன், உங்களையும், வள்ளல் பெருமான் அவர்களையும் நான் பெரிதும் பாராட்டுகிறேன். உங்களுடைய தனித்தன்மையை நீங்கள் நிலைநாட்டிக் காட்டியதற்காக உங்களைப் பாராட்டுகிறேன். திரு. ஐ. கணேசன்.



2002 ஏப்ரல் 23]

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாட்டாளி மக்கள் கட்சியினுடைய சார்பாக, தங்களையும், தாங்கள் அமர்ந்திருக்கக்கூடிய அந்த நாற்காலியையும் மிகவும் மதிக்கக்கூடியவர்கள் நாங்கள். உங்களுடைய தீர்ப்பை எதிர்த்தோ, முதலமைச்சர் அவர்கள் வாதத்தை எதிர்த்தோ எங்களுடைய கருத்து சொல்லப்படுவதில்லை. ஆனால், இந்தச் சட்டமன்றத்திற்கு என்று எப்படி விதிகள் இருக்கின்றனவோ, அதுபோலப் பல்வேறு மரபுகள் இருக்கின்றன. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் இந்த அரியணையிலே அமர்ந்திருக்கும்போது, நீங்கள் அமைச்சராக இருக்கும்போது, சுப்பு அவர்களும், துரைமுருகன் அவர்களும், இரகுமான்கான் அவர்களும் செய்த பல்வேறு குற்றங்களுக்காகப் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட காலகட்டத்திலேகூட, நடக்கக்கூடிய அத்தனை சட்டமன்ற நாட்களுக்கும் தொடர்ந்து அவர்களை வெளியேற்றிய வரலாறு இல்லை. பல முறை அவர்களுக்கு....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, வெளியேற்றப்பட்டார்கள்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை, கடைசியாகப் பல முறை அவர்களுக்குத் தீர்ப்பு அளித்து, அளித்து, 7 நாட்கள், 15 நாட்கள் என்று தீர்ப்பு அளித்து, எதிர்க்கட்சிகள் அத்தனையும் கேட்டுக்கொண்டதற்குப் பிறகு, நான்கு, ஐந்து முறைக்குப் பின்னால் வேண்டுமானால் தொடர்ந்து அவர்களை வெளியேற்றியிருக்கிறார்கள். இருப்பினும், நீங்கள் தயவு செய்து—எதிர்க்கட்சியினுடைய உணர்வுகளுக்கு மதிப்பு அளிக்கக்கூடியவர்கள்; அந்த எதிர்க்கட்சியினுடைய உணர்வுகளை மதித்து—அவர்களுக்கு முதல் முறையாக இந்தத் தீர்ப்பு அதிகபட்சமானது என்பதை எப்படி எஸ்.ஆர்.பி. அவர்கள் எடுத்துச் சொன்னாரோ, அதே வழியிலே, முதல் முறையாக இருப்பதனால், ஒரு நாளோ அல்லது மூன்று நாளோ என்று அந்தத் தீர்ப்பைத் தயவுசெய்து மாற்றி இந்த அவையிலே நீங்கள் அறிவித்தால் உங்களுடைய அரசு இன்னும் பல சிறப்பான முறையிலே ஆளக்கூடியது என்பதனை நாட்டு மக்கள் புரிந்துகொள்வார்கள். ஆகையால், இந்தக் கடுமையான தீர்ப்பைக் குறைக்க வேண்டும் என்று மிகப் பணிவோடு உங்களை வேண்டி, விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. ரங்கநாதன், சொல்லுங்கள்.

***திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று தாங்கள், திராவிட முன்னேற்றக் கழகச் சட்டமன்ற

[திரு. ப. ரங்கநாதன்] [2002 ஏப்ரல் 23

உறுப்பினர்கள் மாண்புமிகு பொன்முடி அவர்களையும், பரிதி இளமவழுதி அவர்களையும் கூட்டத் தொடரின் எஞ்சிய நாட்களுக்குக் கலந்து கொள்ள முடியாத ஒரு தீர்ப்பினை வழங்கியுள்ளீர்கள். அந்தத் தீர்ப்பினை விலக்கிக்கொள்ள வேண்டும்; அதே நேரத்திலே மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று தமிழ் மாநில காங்கிரஸ் சட்டமன்றக் கட்சித் தலைவர் மாண்புமிகு எஸ்.ஆர்.பி. அவர்களும், பாட்டாளி மக்கள் கட்சியின் சட்டமன்றக் கட்சித் துணைத் தலைவர் ஐ. கணேசன் அவர்களும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய குழுத் தலைவர் பழனிசாமி அவர்களும் மற்றும் மாண்புமிகு சுயேட்சை உறுப்பினர் அப்பாவு அவர்களும், ஹேமச்சந்திரன் அவர்களும், எல்லோரும் வேண்டுகோள் வைத்திருக்கின்றார்கள்; எதிர்க்கட்சிகளைச் சார்ந்த அனைத்து உறுப்பினர்களும் வேண்டுகோள் வைத்திருக்கின்றார்கள். எங்களுடைய உணர்வுகளைத் தாங்கள் உணர்ந்து—இதுபோன்ற சம்பவங்கள் இந்தியாவில் இருக்கின்ற பல மாநிலச் சட்டமன்றங்களிலும் நடப்பது இயல்புதான். எதிர்க்கட்சியாக இருந்தால், தங்களுடைய கருத்துகளைக் கொஞ்சம் வேகமாக எடுத்துச் சொல்வார்கள்—அதை நீங்கள்...

பிற்பகல் 12-10

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் . தங்கள் கருத்துகளை வேகமாகச் சொல்வதற்கு இந்த அரசோ, பேரவைத் தலைவர் அவர்களோ என்றைக்கும் எந்தவிதமான ஆட்சேபனையும் தெரிவிக்கவில்லை. அவர்கள் கெட்ட வார்த்தை பேசுகிறார்கள். அதைத்தான் நாங்கள் ஆட்சேபிக்கிறோம்.

**திரு. ப. ரங்கநாதன்:** நான் பேசி முடித்துக்கொள்கிறேன்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் சொல்லி விடுகிறேன். ஆவேசமாகப் பேசுவது என்பது வேறு, ஆபாசமாகப் பேசுவது என்பது வேறு. அவர்கள் பேசியது; ஆபாசமாகப் பேசுகிறார்கள். நீங்கள் அவர்களோடுகூட இருந்தவர்கள். இனியும் இருக்கப் போகிறீர்களா என்பது எனக்குத் தெரியவில்லை. ஆனால், நான் கேட்பது நீங்கள் ஓர் உத்தரவாதம் கொடுப்பதாக இருந்தால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே தெரிவித்தார்கள். அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டு வருத்தம் தெரிவித்தால்கூட நான் மறுபரிசிலனை செய்வதற்குத் தயாராக இருக்கிறேன்.



2002 ஏப்ரல் 23]

## (ஆ) பேரவைப் பணிகளினின்றும் திரு. பரிதி இளம்வழுதி மற்றும் டாக்டர் க. பொன்முடி ஆகியோரை ஒரு நாள் மட்டும் நீக்கி வைத்தல்.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைப்பதற்காகவும், தவறு செய்பவர்களுக்கு, திருந்துவதற்கு ஒரு வாய்ப்பு அளிக்க வேண்டுமென்ற அடிப்படையிலும் தாங்கள் தங்களுடைய தீர்ப்பை மறுபரிசிலனை செய்து, இன்று வெளியேற்றப்பட்ட உறுப்பினர்கள், இன்று கூட்டத் தொடர் முடியும் வரை கலந்துகொள்ளக் கூடாது என்ற அளவில் தங்கள் தீர்ப்பைத் தாங்கள் மாற்றிக்கொண்டு, நாளை மீண்டும் இந்த அவையின் நடவடிக்கைகளில் கலந்துகொள்ள அவர்களைத் தாங்கள் அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மீண்டும் அவர்கள் இதேபோல நடந்துகொண்டு ஆபாசமாகப் பேசினால், அப்போது தாங்கள், எஞ்சிய கூட்டத் தொடர் முடியும் வரை அவர்களை வெளியேற்ற வேண்டுமென்று தங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அனைத்துக் கட்சிகளினுடைய தலைவர் பெருமக்கள் எல்லோரும் சொன்ன அந்தக் கருத்தையொட்டி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்த அந்தக் கருத்தையொட்டி—மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்ன கருத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன். மன்னிக்கக்கூடிய விசாலமான இதயம் எங்கள் அனைவருக்குமே இருக்கிறது. எங்கள் புரட்சித் தலைவர் அண்ணன் எம்.ஜி.ஆர். அவர்கள் எங்களை அப்படித்தான் வளர்த்தார்கள். எங்களுக்குக் கற்றுக் கொடுக்கிற புரட்சித் தலைவி அவர்களும் எங்களுக்கு அப்படித்தான் கற்றுக் கொடுக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) “கடிதோச்சி மெல்ல எறிக” என்பதுதான் நாங்கள் பின்பற்றக்கூடிய நெறி. முதலமைச்சர் அவர்கள் சொன்ன கருத்தை ஏற்றுக்கொள்கிறேன். இன்றைக்கு மட்டும் அவர்கள் கூட்டத்திலே கலந்துகொள்வதை நான் நீக்கி வைக்கிறேன். ‘எஞ்சிய கூட்டத் தொடர் முழுவதும்’ என்பதை நான் மாற்றுகிறேன். பேரவை முன்னவர் அவர்கள் தீர்மானம் கொண்டுவரக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[திரு. சி. பொன்னையன்] [2002 ஏப்ரல் 23

"விதி 121(2) proviso அடிப்படையில், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், மாண்புமிகு பரிதி இளம்வழுதி அவர்களையும், மாண்புமிகு பொன்முடி அவர்களையும் இக்கூட்டத் தொடரின் எஞ்சிய காலம் வரை அவைக்கு வரக்கூடாது* என்று அளித்த தீர்ப்பை மறுபரிசீலனை செய்து, இன்று மட்டும் அவர்கள் அவையிலிருந்து நீக்கி வைக்கப்பட வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறிய ஆலோசனைக்கு ஏற்ப, இன்று மட்டும் அவர்களை அவையிலிருந்து நீக்கி வைக்க வேண்டும்." என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

உறுப்பினர்கள் திரு. க. பொன்முடி மற்றும் திரு. பரிதி இளம்வழுதி, இன்று மட்டும் பேரவைப் பணிகளிலிருந்து தற்காலிக நீக்கம் செய்யப்படுகிறார்கள்.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்களும், பத்திரிகையாளர்களும் கடந்த 5 ஆண்டு காலம் நடந்த அராஜக தி.மு.க. ஆட்சிக்கும், இப்போது ஜனநாயக நெறிமுறைகளைக் கட்டிக் காக்கின்ற இந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) உள்ள வேறுபாட்டை உணர்ந்து, இப்போதாவது ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமைகிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....



2002 ஏப்ரல் 23]

## 5. கவன ஈர்ப்பு

### (அ) திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி தாலுகாவை இரண்டாகப் பிரித்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 55-ன்கீழ் (குறுக்கீடு) இல்லை, நிகழ்ச்சிக்குப் போய் விடுவோம். நேரம் இல்லை. அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. ஜி. பழனிசாமி அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி தாலுகாவை இரண்டாகப் பிரித்து முத்துப்பேட்டையைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய தாலுகா அமைப்பது" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது:

**அறிக்கை**

திருவாரூர் மாவட்டம் 1997-ல் தொடங்கப்பட்டதாகும். திருவாரூர் மாவட்டத்தில் திருவாரூர் மற்றும் மன்னார்குடி ஆகிய இரு வருவாய்க் கோட்டங்கள் அமைந்துள்ளன. திருவாரூர் வருவாய்க் கோட்டத்தில் (1) திருவாரூர் (2) நன்னிலம் (3) குடவாசல் மற்றும் (4) வலங்கைமான் ஆகிய நான்கு வட்டங்களும், மன்னார்குடி கோட்டத்தில் (1) மன்னார்குடி (2) திருத்துறைப்பூண்டி மற்றும் (3) நீடாமங்கலம் ஆகிய மூன்று வட்டங்களும், ஆக மொத்தம் 7 வருவாய் வட்டங்கள் திருவாரூர் மாவட்டத்தில் அமைந்துள்ளன. திருவாரூர் மாவட்டத்தின் மொத்தப் பரப்பு 2612.23 சதுர கிலோ மீட்டர் ஆகும். இம்மாவட்டத்தின் மொத்த மக்கள் தொகை, 2001 மக்கள் தொகைக் கணக்கீட்டின்படி 11,65,213 ஆகும். இம்மாவட்டத்தில் 574 வருவாய் கிராமங்களும், 430 கிராமப் பஞ்சாயத்துகளும் உள்ளன.

[திரு. ந. தளவாய் சுந்தரம்] [2002 ஏப்ரல் 23

2. மன்னார்குடி கோட்டத்தில் அடங்கியுள்ள மூன்று வட்டங்களின் பரப்பளவு, மக்கள் தொகை (2001 கணக்கு இருப்பின்படி) போன்ற விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன:—

| வ. எண் | வட்டத்தின் பெயர் | பரப்பு (சதுர கிலோ மீட்டர்) | வருவாய் கிராமங்களின் எண்ணிக்கை | மக்கள் தொகை | ஊராட்சிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 1. | மன்னார்குடி | 541.46 | 128 | 287059 | 100 |
| 2. | திருத்துறைப்பூண்டி | 569.60 | 78 | 197636 | 61 |
| 3. | நீடாமங்கலம் | 212.10 | 70 | 137085 | 44 |
| | ஆக மொத்தம் | **1323.16** | **276** | **621780** | **205** |

(மன்னார்குடி கோட்ட நிர்வாகம்)

3. மேற்கண்ட புள்ளிவிவரங்களை நோக்குங்கால் திருத்துறைப்பூண்டி வட்டம் 78 வருவாய் கிராமங்கள் மற்றும் 61 கிராமப் பஞ்சாயத்துகள் அடங்கிய 1,97,636 மக்கள் தொகை கொண்ட ஒரு சிறிய வட்டம் என்பது புலப்படும். இவ்வாறான இச்சிறிய வட்டத்தை மேலும் இரண்டாகப் பிரித்து, முத்துப்பேட்டையைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய வட்டம் தோற்றுவித்தால், திருத்துறைப்பூண்டி வட்டம் மேலும் சிறிய வட்டமாக அமைவதுடன், புதியதாகத் தோற்றுவிக்கக் கோரும் முத்துப்பேட்டை வட்டமும் மிகச் சிறிய வட்டமாக அமையும். இதனால் பொது நிருவாகத்திற்கு ஏற்புடைமையற்றதான நிலைத்திருக்காத நிலை (unviable) ஏற்படும். இதன் காரணத்தால், வட்டாட்சியர் தொடங்கி, காவலர் வரையிலான (அடிப்படைப் பணியாளர்) பல்வேறு புதிய பணியிடங்களைத் தோற்றுவிக்கக்கூடிய நிலையும், அதன் காரணத்தால் அதிக அளவில் கூடுதல் தொடர் செலவினமும், புதிதாக வட்டாட்சியர் அலுவலகம் கட்டவும், தேவையான ஏனைய உள்ளமைப்புகள் ஏற்படுத்தவும் அதிக அளவில் தொடராச் செலவினமும் ஏற்படும்.

4. மேலே கூறிய காரணங்களினால் சட்டமன்ற உறுப்பினர் திரு. ஜி. பழனிசாமி அவர்களின் கோரிக்கையான திருத்துறைப்பூண்டி



2002 ஏப்ரல் 23] [திரு. ந. தளவாய் சுந்தரம்]

வட்டத்தை இரண்டாகப் பிரித்து, முத்துப்பேட்டையைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டம் அமைக்கக் கோரும் கோரிக்கையை நிராகரிக்காலம்.

பிற்பகல் 12-15

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் விவர அறிக்கையைப் படித்தேன். அரசினுடைய விதிகளின்படிப் பார்த்தால், ஒரு இலட்சம் மக்கள் கொண்டிருக்கின்ற வட்டங்களை உருவாக்கலாம் என்றிருக்கிறது. அதேபோன்று, திருத்துறைப்பூண்டியிலே மக்கள் தொகையினுடைய கணக்கைப் பார்த்தால் 1,97,636, பேர் என்று மக்கள் தொகைக் கணக்கெடுப்பிலே உள்ள புள்ளிவிவரங்களில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதோடு மட்டுமல்ல, மன்னார்குடியை எடுத்துக்கொண்டோம் என்று சொன்னால், 128 வருவாய் கிராமங்கள் இருக்கின்றன. மன்னார்குடி வருவாய் வட்டத்திலிருந்து சித்தம்பள்ளி, சிறுகளத்தூர், நொச்சியூர், கொம்படித்தெரு போன்ற அந்தக் கிராமங்களை முத்துப்பேட்டை தாலுகா புதியதாகத் தொடங்குவதாக இருந்தால், அதிலே இணைத்துக்கொண்டு புதிய தாலுகாவை இங்கே உருவாக்கலாம். ஏனென்று சொன்னால், இந்த 4 ஊராட்சிகளில் உள்ளவர்களும் இங்கேயிருந்து 50 கிலோ மீட்டர் தூரம் மன்னார்குடி செல்லவேண்டியிருக்கிறது. அதேபோன்று, முத்துப்பேட்டை ஊராட்சியில், ஊராட்சி ஒன்றியம், நிலப் பதிவேடு அலுவலகம், காவல் துறையினுடைய வட்டார அலுவலகம் போன்ற அலுவலகங்களும் இருக்கின்றன. அரசிற்கு, சொல்லியிருக்கிறதைப் போன்ற புதிய செலவினங்களை உருவாக்குவதற்கு எந்த வாய்ப்புகளும் கிடையாது. மக்களுடைய நலனைக் கருதி, இந்தப் புதிய வட்டாட்சியர் அலுவலகத்தை முத்துப்பேட்டையைத் தலைமையிடமாகக் கொண்டு தொடங்குவதற்கு அரசு மறுபரிசீலனை செய்யுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதியதாக வட்டம் உருவாக்க வேண்டுமென்றால், குறைந்தது 123.68 இலட்சம் ரூபாய் செலவாகிறது. அதுமட்டுமல்லாமல், மன்னார்குடி வட்டத்தினுடைய மொத்தப் பரப்பு 541.46 சதுர கிலோ மீட்டர் ஆகும். அங்கே மக்கள் தொகை 2,87,059 ஆகும். வருவாய் கிராமங்கள் 128 இருக்கின்றன. கிராமப் பஞ்சாயத்துகள் 100 இருக்கின்றன. திருத்துறைப்பூண்டி வட்டத்தை எடுத்துக்கொண்டால், மொத்தப் பரப்பு 569.60 சதுர கிலோ மீட்டர் ஆகும். மக்கள் தொகை

[திரு. ந. தளவாய் சுந்தரம்] [2002 ஏப்ரல் 23

1,97,636, வருவாய் கிராமங்கள் 78, கிராமப் பஞ்சாயத்துகள் 61. நீடாமங்கலம் வட்டத்தை எடுத்துக்கொண்டால், மொத்தப் பரப்பு 212.10 சதுர கிலோ மீட்டர் ஆகும். மக்கள் தொகை 1,37,,085 ஆகும். வருவாய் கிராமங்கள் 70 ஆகவும், கிராமப் பஞ்சாயத்துகள் 44 ஆகவும் இருக்கின்றன. பொதுவாக, தற்சமயம் அரசாங்கத்தின் முதன்மை ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் ஒரு பரிந்துரை செய்திருக்கிறார்கள். அந்தப் பரிந்துரையின் அடிப்படையிலே, குறைந்தது 3 இலட்சம் மக்கள் தொகை இருக்க வேண்டும். அதுமட்டுமல்லாமல், நீங்கள் கூறியது போல் இந்த வட்டம் சிறிய வட்டமாக இருக்கிறது. இதையும் பிரித்து விட்டால், அது இன்னும் சிறிய வட்டமாகிறது. நிதிநிலையைக் கருதி, உங்களுடைய கோரிக்கையை, அதாவது மக்கள் தொகையினுடைய அடிப்படையிலே நாங்கள் இதை, ஏற்றுக்கொள்ள முடியாது என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**(ஆ) கடலூர், சிப்காட் வளாகத்திலுள்ள டான்பாக் நிறுவனக் கழிவு நீர் கடலில் கலத்தல்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்த கவன ஈர்ப்பு திரு. தி. வேல் முருகன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்ர். திரு. தி. வேல் முருகன்.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கடலூர் மாவட்டம், கடலூர் சிப்காட் வளாகத்தில் அமைந்துள்ள டான்பாக் நிறுவனத்தின் கழிவு நீர் சுத்திகரிக்கப்படாமல் கடலில் விடப்படுவதால் மீன்கள் இறப்பது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது:

**அறிக்கை**

திருவாளர்கள் டான்பாக் இன்டஸ்ட்ரீஸ் லிமிடெட் என்ற இத்தொழிற்சாலையானது சிப்காட், குடிகாடு, கடலூரில் 1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்துடன் (டிட்கோ) இணைந்து ஆரம்பிக்கப்பட்டது. இத்தொழிற்சாலையில் அலுமினியம்-ஃப்புளோரைடு மற்றும் கிரையோலைட், மேலும் அதைச் சார்ந்த



2002 ஏப்ரல் 23] [திரு. ப. மோகன்]

இரசாயனப் பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இத்தொழிற்சாலையிலிருந்து நாளொன்றுக்கு 1440 கிலோ லிட்டர் தொழில் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் மூலம் சுத்தம் செய்யப்பட்டு, கடலூர் சிப்காட் தொழிற்சாலைகள் பொது உபயோக மையம் (Cusecs) அமைத்துள்ள குழாய் வழியாக வெளியேற்றப்படுகின்றது. இப்பொதுக் குழாய் வழியாக அனைத்துத் தொழிற்சாலைகளிலிருந்தும் வெளியேற்றப்படும் சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீர் கடலுக்குள் 960 மீட்டர் தூரம் எடுத்துச் செல்லப்பட்டு நீருடன் கலக்கப்படுகின்றது. மேலும், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம், சம்பந்தப்பட்ட தொழிற்சாலையிலும், கழிவு நீர் கடலில் கலப்பதற்கு முன்னும் மாதிரிகள் சேகரித்து, வாரிய ஆய்வகத்தில் ஆய்வு செய்ததில், கழிவு நீரின் தரம் கடல் நீரில் விடுவதற்கான தரத்திற்குள் உட்பட்டிருப்பதும் அறியப்பட்டது. மேலும், சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீர் கடலில் கலப்பதால் மீன்கள் இறந்ததாக இதுவரை எந்த ஒரு புகாரும் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்திற்குக் கிடைக்கப்பெறவில்லை.

பிற்பகல் 12-20

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த அறிக்கையை நான் படித்துப் பார்த்தேன். இன்றைக்கு அந்த நிறுவனம், Aluminium Flouride, Hydroflouric Acid, Cryolite, இதுபோன்ற சில அமிலங்களைத் தயாரித்து வருகிறது. இவை அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஐரோப்பா நாடுகளில் தடை செய்யப்பட்டிருக்கின்ற பொருட்களாகும். இப்படி இதுபோன்று பல்வேறு நாடுகளிலே தடை செய்யப்பட்டிருக்கின்ற இந்த அமிலங்களைத் தயார் செய்கின்ற அந்த நிறுவனம் கழிவு நீரைச் சுத்திகரிக்காமல் கடலிலேயும், அருகில் இருக்கின்ற ஆற்றுப் பள்ளத்தாக்கிலேயும் விட்டு, அதன்மூலம் மீன்கள் இறப்பதோடு மட்டுமல்லாமல், சில மீன்களை வாங்கி உண்ணுகின்ற பொது மக்கள் அதன் மூலமாகப் பல்வேறு நோய்களுக்கு ஆட்பட்டு, இன்றைக்கு அவதியுற்று பல்வேறு பிரச்சினைகள் அந்த மக்களுக்கு ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன. அதோடு மட்டுமல்ல, கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு மத்திய மாசுக் கட்டுப்பாட்டு வாரியம், அந்தப் பகுதிக்குச் சென்று ஆய்வு செய்கின்றபோது, இந்தியாவில் இருக்கின்ற 40 இடங்களில் அதிக அளவில் மாசுக் கேடு ஏற்படுகிறது என்று அறிவித்து, அதில் கடலூர் பகுதியில் இந்தத் தொழிற்சாலை இருக்கின்ற பகுதியும் ஒன்று என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே, இவ்வளவு மாசுத் தன்மையோடு அந்த நிறுவனம் நடந்து கொண்டிருக்கிறது. அதோடு மட்டுமல்லாமல், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின்

மூலமாக வழங்கப்படுகின்ற மாசுக் கட்டுப்பாட்டுக்கான—licence—உரிமம்கூட அவர்கள் பெறவில்லை. நான் அரசு உறுதிமொழிக் குழுவின் உறுப்பினராக இருக்கிறேன். அந்தக் குழுவுடன் நான் அங்கே சென்று பார்வையிட்டபோது; அந்த நிறுவனம் அதற்கான உரிமம் கூடப் பெறாமல் அந்த நிறுவனத்தை நடத்தி வருகிறார்கள். அதோடு மட்டுமல்ல, நம்முடைய மாசுக் கட்டுப்பாட்டு வாரியம், 45 டன் உற்பத்தி செய்யலாம் என விதித்திருக்கிறது. ஆனால், அந்த நிறுவனம் 75-க்கு மேற்பட்ட டன்கள் உற்பத்தி செய்கின்றது. அதனால் அந்தப் பகுதியில் உள்ள பொது மக்களுக்குப் பாதிப்பு ஏற்பட்டு, எதிர்காலத்தில் அவர்கள் வாழ்கிற நிலையைத் தடுக்கிற வகையில் அந்த நிறுவனம் அங்கே இயங்கிக் கொண்டிருக்கிறது. அந்த நிறுவனத்தின்மீது நம்முடைய அரசு இது வரையில் எடுத்திருக்கிற நடவடிக்கை என்ன என்பதையும்..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவ்வளவுதான், நடவடிக்கை என்ன என்று மட்டும் கேளுங்கள், ஒரு கேள்விதான் கேட்கலாம். உட்காருங்கள். மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. TANFAC Industries Limited என்ற இந்தத் தொழிற்சாலையானது. கடலூர், சிப்காட் வளாகத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது. தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்துடன் இணைந்து ஆரம்பிக்கப்பட்டது. இந்தத் தொழிற்சாலையில், அலுமினியம் ஃப்ளோரைடு மற்றும் கிரையோலைட், மேலும் அதைச் சார்ந்த இரசாயனப் பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இத்தொழிற்சாலையிலிருந்து நாளொன்றுக்கு 1440 கிலோ லிட்டர் தொழில் கழிவு நீர் வெளிவருகிறது. சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீர், பொதுக் குழாய் வழியாக அனைத்துத் தொழிற்சாலைகளிலிருந்தும் வெளியேற்றப்படும் சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீருடன் கடலுக்குள் 960 மீட்டர் தூரத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு கடலுடன் கலக்கப்படுகிறது.

மேலும், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம், சம்பந்தப்பட்ட தொழிற்சாலைகளின் கழிவு நீரின் மாதிரிகளைச் சேகரித்து, வாரிய ஆய்வகத்தில் ஆய்வு செய்ததில், கழிவு நீரில் தரம் கடல் நீரில் விடுவதற்கான தரத்திற்குட்பட்டு இருக்கிறது என்று அறிவித்திருக்கிறது. மேலும், சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீர், கடலில் கலப்பதால் மீன்கள் இறப்பதாக இதுவரை எந்தப் புகாரும் வாரியத்திற்குக் கிடைக்கப் பெறவில்லை என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.





அதே நேரத்தில், பல்வேறு குற்றச்சாட்டுகள் இருப்பதாக உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அந்தக் குற்றச்சாட்டுகள் இருக்குமானால், நான் நேரிலேயே அந்தத் தொழிற்சாலையைப் பார்வையிட்டு, தக்க நடவடிக்கை எடுக்கிறேன் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கின்றபோது, இதுவரையில் மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்திற்கு எந்தவொரு புகாரும் வரவில்லை என்று சொல்கிறார்கள். நானே, மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் தலைவராக இருப்பவருக்கு என்னுடைய லெட்டர் பேடில் என் கைப்படக் கடிதம் எழுதி அதைத் தெரிவித்திருக்கிறேன். அரசு உறுதிமொழிக் குழு பார்வையிட்டபோதும், பொதுமக்களும் அதைப்பற்றிக் குறிப்புத் தந்திருக்கின்றார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வேல் முருகன், அமைச்சர் அவர்கள் அதைப் பார்வையிட்டு நடவடிக்கை எடுப்பேன் என்று சொல்லி விட்டார்.

**திரு. தி. வேல் முருகன்:** ஆனால் இப்படிப் புகார் ஏதும் வரவில்லை என்று துறையினுடைய அதிகாரிகள் இந்த அவைக்கு தவறான தகவலைத் தந்திருக்கிறார்கள் என்பதை நான் வருத்தத்தோடு சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இதுபோன்ற சம்பவங்கள் நடக்கிறபோது தவறான ஒரு தகவலை இந்த அவைக்குத் தருகிற அந்த மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தினுடைய அதிகாரிகள்மீது நம்முடைய அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதையும் இந்த நேரத்தில் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் இங்கே புகார் தந்ததாகச் சொன்னார்கள். இதுவரை அது எங்களுடைய கவனத்திற்கு வரவில்லை. உறுப்பினர் அவர்கள் சொல்வது தவறு என்று நான் சொல்லவில்லை. உறுப்பினர் அவர்களுடைய நியாயமான கோரிக்கையை ஏற்றுத்தான், நேரடியாகப் பார்வையிட்டு நடவடிக்கை எடுப்பேன் என்று முன்பே சொன்னேன். மீண்டும் அதை அவர்கள் வலியுறுத்துவதன் மூலமாக, நல்லதொரு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2002 ஏப்ரல் 23

## 6. அறிக்கைகள் அளித்தல்

### பொது நிறுவனங்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். குழுவின் தலைவர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி அவர்கள்.

**திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001-2002 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் பத்தொன்பது மற்றும் இருபது (பன்னிரெண்டாவது சட்டமன்றப் பேரவை) ஆகிய இரண்டு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

## 7. உரிமை மீறல் பிரச்சினை

### நிதி மற்றும் தகவல் தொழில் நுட்பத் துறை அமைச்சர்மீது—தீர்ப்பு

பிற்பகல் 12-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரிமை மீறல் பிரச்சினை.

மாண்புமிகு நிதி மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள், 9-4-2002 அன்று, 2002-2003 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின்மீது நடைபெற்ற விவாதத்திற்குப் பதிலளிக்கும்போது "1972-ல் அன்றைய முதல்வராக இருந்த கலைஞர் அவர்கள், காவிரிப் பிரச்சினை குறித்து, உச்ச நீதிமன்றத்தில் தொடுத்த வழக்கைத் திரும்பப் பெற, இந்திரா காந்தி அம்மையாரிடம் தன் மீதுள்ள கோதுமை பேர ஊழல், பூச்சி மருந்து ஊழல் ஆகிய இரு வழக்குகளையும், சர்க்காரியா கமிஷன் வழக்குகளையும் திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று பேரம் பேசி, காலில் விழுந்ததாக" தவறான தகவலை வேண்டுமென்றே கலைஞரின்மீது களங்கம் கற்பிக்கிற உள்நோக்கத்தோடு பேசியிருக்கிறார் என்று குறிப்பிட்டு, அவர்மீது திருவாளர்கள் துரைமுருகன், டாக்டர் க. பொன்முடி, இ. புகழேந்தி, எ.வ. வேலு, மீ.அ. வைதியலிங்கம், கு. பிச்சாண்டி, ஆர். சக்ரபாணி மற்றும் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் ஆகிய சட்டமன்ற உறுப்பினர்கள், 15-4-2002 ஆம் நாளிட்டு அவை உரிமை மீறல் பிரச்சினைக்கான அறிவிப்புக் கொடுத்துள்ளனர்.

உறுப்பினர்களது உரிமை மீறல் பிரச்சினைக்கான அறிவிப்பில், அமைச்சரின் உரையில் பிரச்சினைக்குரிய பகுதிகளைப் பேரவை விதி



220-ன்படி இணைத்துத் தந்திருக்க வேண்டும். பிரச்சினைக்குரிய பகுதிகளை அறிவிப்புடன் இணைத்துத் தராதது, பேரவை விதி 220-க்கு முரணானது.

மேலும், இதுகுறித்து நிருபர்கள் பிரிவிலிருந்து அச்சிடப் பெறுவதற்காக வைக்கப்பட்டிருந்த 9-4-2002 நாளிட்ட நடவடிக்கைக் குறிப்புகளை நான் பார்வையிட்டேன். அதில் மாண்புமிகு நிதி மற்றும் தகவல் தொழில் நுட்பத் துறை அமைச்சர் அவர்களது பதிலுரை முழுவதையும் படித்துப் பார்த்ததில், மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள வாக்கியத்தை, மாண்புமிகு நிதி மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள் தன் உரையில் கூறவில்லை. மாறாக, முன்னாள் முதல்வர் திரு. கருணாநிதி அவர்கள், மைய அரசு புலன் விசாரணையால் அவருக்கு ஏற்பட்ட அச்சத்தினால், உச்ச நீதிமன்றத்தில் இருந்த காவிரி நதி நீர் தொடர்பான வழக்கைத் திரும்பப் பெற்றுவிட்டார் என்ற பொருள்படத்தான் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாநிதிமீது வேண்டுமென்றே உண்மைக்கு மாறாக உள்நோக்கத்தோடு, களங்கம் கற்பிக்கும் வகையில் மாண்புமிகு நிதி மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள் பேரவையில் பேசியுள்ளார் என்பதை ஏற்பதற்கில்லை.

மேற்கூறியவற்றைக் கருத்தில் கொண்டு, இப்பிரச்சினையில் அவை உரிமை மீறல் ஏதும் இல்லை என்ற எனது தீர்ப்பினைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

## 8. அறிவிப்புகள்

### (அ) ஏற்கெனவே தீர்ப்பளிக்கப்பட்ட ஒரு பொருள் பற்றி மீண்டும் உரிமை மீறல் பிரச்சினை எழுப்ப அனுமதி மறுத்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் ஏற்பட்ட திரண்ட இழப்பு குறித்த புள்ளிவிவரங்களில், அரசால் வெளியிடப்பட்ட நூலில் சில தவறுகள் உள்ளதாக, மாண்புமிகு உறுப்பினர்கள் டாக்டர் க. பொன்முடி, திரு. இ. புகழேந்தி ஆகியோர் எனது கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளார்கள்.

[பேரவைத் தலைவர்] [2002 ஏப்ரல் 23

இப்பிரச்சினை குறித்து, நான் 16-4-2002 அன்றே தீர்ப்பளித்துள்ளேன். இப்பொழுது, மாண்புமிகு உறுப்பினர்கள் அதே பொருள் குறித்து உரிமைப் பிரச்சினை கொடுத்துள்ளனர். ஏற்கெனவே இதுகுறித்து விரிவாக நான் தீர்ப்பளித்துள்ளதால், புதிதாக எந்த விளக்கமும் தேவையில்லை. இவ்வுரிமை மீறல் பிரச்சினைக்கு அனுமதி மறுக்கிறேன்.

பேரவையில், ஓர் உரிமைப் பிரச்சினை எழுப்புவதற்கு என்னென்ன நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டும் என்று பேரவை விதி 222-ல் கொடுக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை உறுப்பினர்கள் அனைவரும் நன்கு அறிவர்.

ஓர் உரிமைப் பிரச்சினை தொடர்பாக, ஒரு பொருள் குறித்துப் பேரவைத் தலைவர் தனது தீர்ப்பினை அளித்த பிறகு, அதே பொருள் குறித்த உரிமைப் பிரச்சினை எழுப்புவது, பேரவைத் தலைவருடைய தீர்ப்பிற்கு உள்நோக்கம் கற்பிப்பதாக அமையும். இது முற்றிலும் பாராளுமன்ற நடைமுறைகளுக்கு மாறானது. பாராளுமன்றத்திலும், இதர சட்டமன்றங்களிலும் இம்முறையே கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

எனவே, வருங்காலத்தில் உறுப்பினர்கள் அனைவரும் எனது தீர்ப்பிற்குப் பின்னர் அதே பொருள் குறித்து அவையில் எழுப்புவதோ, பேசுவதோ தவிர்க்கப்பட வேண்டும் என உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**(ஆ) பல்கலைக்கழக ஆட்சிமன்றப் பேரவைகள், தமிழ்நாடு நில மேம்பாட்டுக் குழுமத்தின் நிர்வாகக் குழு மற்றும் மாநில நூலகக் குழு ஆகியவற்றிற்கு உறுப்பினர்கள் நியமனம்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. கீழ்க்கண்ட பல்கலைக்கழகங்களின் ஆட்சிமன்றப் பேரவை (Senate) களுக்கும், தமிழ்நாடு நில மேம்பாட்டுக் குழுமத்தின் நிர்வாகக் குழுவிற்கும், மாநில நூலகக் குழுவிற்கும் அவற்றின் எதிரே குறிப்பிடப்பெற்றுள்ள மாண்புமிகு உறுப்பினர்களிடமிருந்து முறையான நியமனத் தாள்கள் வரப்பெற்றுள்ளன:

*அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.*

ஆட்சிமன்றப் பேரவை - திருமதி தமிழ்மொழி ராஜதத்தன்
செல்வி சி. கனகதாரா
திருப்பூர் திரு. சி. சிவசாமி



2002 ஏப்ரல் 23] [பேரவைத் தலைவர்]

சென்னைப் பல்கலைக்கழகம்

ஆட்சிமன்றப் பேரவை .. திரு. எஸ்.எஸ். ரமணீதரன்
திரு. கே.பி. அன்பழகன்

பாரதியார் பல்கலைக்கழகம்

ஆட்சிமன்றப் பேரவை .. திரு. ஆர்.டி. கணேசன்

தமிழ்நாடு நில மேம்பாட்டுக் குழுமம்

நிர்வாகக் குழு .. திரு. ப. இளவழகன்

மாநில நூலகக் குழு .. திரு. எம். சக்திவேல் முருகன்

தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கையும், முறையாக வரப்பெற்றுள்ள நியமனத் தாள்களின் எண்ணிக்கையும் சமமாக இருப்பதால், மேற்கண்ட மாண்புமிகு உறுப்பினர்கள், அந்தப் பதவிகளுக்கு முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன்.

## 9. மானியக் கோரிக்கைகள், 2002-2003, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### கோரிக்கை எண் 5—வேளாண்மைத் துறை—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளின்மீது விவாதமும்-வாக்கெடுப்பும்—தொடர்ச்சி, திரு. கே.சி. கருணாகரன்

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

***திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறைக்கான மானியக் கோரிக்கையின்மீது, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில், சில கருத்துகளை இங்கே நான் முன்வைக்க விரும்புகிறேன்.

வேளாண்மைத் துறையினுடைய மெய்யான நோக்கங்கள் நிறைவேறுகிற வகையில், மாநில அளவிலான வேளாண்மை உயர்மட்டக் குழு அமைக்கப்பட வேண்டும் என்பதை நான் வலியுறுத்துகிறேன். வேளாண்மைத் துறை அமைச்சர், துறை அதிகாரிகள், வேளாண் விஞ்ஞானிகள், விவசாயிகள் சங்கங்களின் தலைவர்கள் உள்ளிட்டதாய்

[திரு. கே.சி. கருணாகரன்] [2002 ஏப்ரல் 23

இக்குழு இருக்க வேண்டியதையும், இதுபோல மாவட்ட அளவிலே அமைக்கப்படுகின்ற குழுக்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், விவசாய சங்கப் பிரதிநிதிகளை உள்ளடக்கியதாய் இருக்க வேண்டுமென்ற கருத்தையும் நான் வலியுறுத்துகிறேன். வேளாண்மைத் துறையில் உழபடைக் கருவிகளைக், கூடுதல் எண்ணிக்கையிலே உற்பத்தி செய்து, தடையின்றிக் கருவிகள் விவசாயிகளுக்குக் கிடைக்கச் செய்ய வேண்டும் என்பதையும், ஒருங்கிணைந்த பழங்குடி விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் பழங்குடி மக்களின் சமூக மற்றும் பொருளாதார நிலையை உயர்த்துகிற நோக்கத்தில், அந்தப் பகுதியிலுள்ள வளங்களைச் சிறந்த முறையிலே பயன்படுத்தும்பொருட்டுச் செயல்படும் இந்தத் திட்டத்தின்கீழ், கோவை மாவட்டத்தில் உள்ள டாப்ஸ்லிப் பகுதி, சின்னாம்பதி மலைப் பகுதி, பில்லூர் மலைப் பகுதி, ஆனைகட்டி மலைப் பகுதி ஆகியவற்றையும் சேர்த்துக்கொள்ள வேண்டுகிறேன்.

பிற்பகல் 12-30

பழங்குடியினர் மேம்பாடு மற்றும் நலன்கள் சம்பந்தமாக அரசு அமைக்கின்ற கமிட்டிகளில் பழங்குடியினருடைய அமைப்புகளுக்குப் பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்துகிறேன். பழங்குடியினர் தொழில் செய்யக் கடனுதவி மற்றும் அரசு நலத் திட்டங்கள் முழுமையாக அமல்படுத்தப்பட வேண்டும். குடியிருப்பு, மின்சாரம், சாலை, குடிநீர், போக்குவரத்து உள்ளிட்ட அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும். மலைப் பகுதிகளிலே கிடைக்கின்ற மூலப் பொருட்களைக் கொண்டு, சிறு தொழில்கள் அமைக்கப்படுவதற்கும், வன செட்டில்மென்ட் குடியிருப்புப் பகுதிகளிலே அனைத்து வளர்ச்சிப் பணிகளையும் மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மலைவாழ் மக்கள் சேகரிக்கின்ற பொருட்களைக் கொள்முதல் செய்வதுடன், கடனுதவி உட்பட வழங்கப்படவேண்டும். மேய்ச்சல் நிலம் ஒதுக்கீடு செய்து பால் உற்பத்தியாளர் சங்கம் அமைப்பதற்கும் வகை செய்ய வேண்டும்.

தமிழகத்திலே த்ாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினரின் பகுதிகளுக்கு அடிப்படை வசதிகளைச் செய்து கொடுப்பதற்காக, இதர நலன்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள 33 கோடி ரூபாய் நிதியில் உரிய அந்தச் செலவினங்களைச் செய்யாமல் மத்திய அரசுக்குத் திருப்பி அனுப்பி இருப்பதாகக் கேள்விப்படுகிறோம். அது உண்மையா?



2002 ஏப்ரல் 23] [திரு. கே.சி. கருணாகரன்]

அது உண்மையெனில், அதற்குக் காரணமான அதிகாரிகள்மீது அரசு நடவடிக்கை எடுக்குமா என்றும் கேட்க விரும்புகிறேன்.

அதேபோல விவசாயிகளுக்கு உண்டான தரமான விதைகள் உரிய காலத்தில் வழங்கப்படவேண்டும், உர மானியத்தை நீட்டிக்க வேண்டும். பயிர்ப் பாதுகாப்பு, பூச்சிக்கொல்லி மருந்துகளை இலவசமாக வழங்குவதுடன், பயிர்களைத் தாக்கி அழிக்கும் பயிர்க்கொல்லிகளிடமிருந்து பயிர்களைப் பாதுகாக்க நிரந்தரத் தீர்வு காணுகிற வகையில் விஞ்ஞானபூர்வ வேளாண்மைத் திட்டக் கொள்கை ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் வலியுறுத்துகிறேன்.

மோட்டார் பம்பு செட்டுகளுக்கு வழங்கப்படுகிற இலவச மின்சாரத் திட்டம் தொடர வேண்டும். சிறு, குறு நில விவசாயிகளைப் பாதிக்கும் எந்த நிர்பந்தத்திற்கும் நம்முடைய மாநில அரசு இரையாகக் கூடாது என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இலவச மின்சாரம் குறித்து நேற்றையதினம் இந்த அவையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் சில விளக்கங்களை அளித்தார்கள். மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புவது, இன்று காலையிலேகூட, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், மத்திய மின் துறை அமைச்சருடன் விரிவாகப் பேசி, செய்துகொள்ளப்பட இருப்பதாகக் கூறப்பட்ட சில முக்கிய திட்டங்கள் சம்பந்தமான அறிவிப்புகளை வெளியிட்டு இருப்பதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்கிறது. ஆனால், என்ன கேள்வி எழுகிறது என்றால், இன்று 'தினமணி' பத்திரிகையில் ஒரு செய்தி வந்திருக்கிறது. இலவச மின்சாரம் குறித்து—மின்சாரத் துறையில் சீர்திருத்தத் திட்டங்களைத் தமிழகம் நடைமுறைப்படுத்தும் என்று மத்திய மின் துறை அமைச்சர் மாண்புமிகு சுரேஷ் பிரபுவிடம் முதல்வர் அவர்கள் உறுதி அளித்தார்கள் என்று 'தினமணி' பத்திரிகையில் செய்தி வந்திருக்கிறது. 'மின் துறையில் சீர்திருத்தங்கள்', 'மத்திய அமைச்சரிடம் ஜெ. உறுதி' என்ற தலைப்பில் செய்தி வந்திருக்கிறது. இதிலே அப்படிச் சொல்லிவிட்டு, அவர் பேட்டி கொடுத்து இருக்கிறார்; முதல்வர் அவர்களின் சந்திப்புக்குப் பின்னர் மத்திய அமைச்சர் சுரேஷ் பிரபு அளித்துள்ள பேட்டியில், இலவச மின்சாரத்தைத் தொடர்ந்து அமல்படுத்துவதும், அதை நிறுத்திக்கொள்வதும் அந்தந்த மாநில முதல்வர்களின் கையில்தான்

[திரு. கே.சி. கருணாகரன்] [2002 ஏப்ரல் 23

இருக்கிறது என்று சொல்லி, அதோடு அவர் நிறுத்தவில்லை; அதற்குப் பினனால் அவர் என்ன சொல்கிறார் என்று சொன்னால், அப்படிக் கூறிவிட்டு, 'மின்சாரத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு நிதி உதவி தேவை என்று மாநில மின்சார வாரியங்கள் மத்திய அரசைக் கேட்டு வருகின்றன; சீர்திருத்தத் திட்டங்களை நிறைவேற்றும் மாநிலங்களுக்கு மட்டுமே இனி நிதி உதவி செய்யப்படும்.' இது மத்திய அமைச்சர் சொல்லியிருப்பது. முதல்வர் அவர்களிடம் பேசியதில் இருந்து தமிழகத்தில் மின்சார சீர்திருத்தத் திட்டம் சிறப்பாகச் செயல்படும் என்ற நம்பிக்கை தனக்கு இருப்பதாகவும் அவர் சொல்லி இருக்கிறார். இதிலே கேள்வி என்னவென்று சொன்னால், மத்திய அரசாங்கத்தினுடைய நிதி உதவியைப் பெறுவதற்கு, மின்சார சீர்திருத்தத் திட்டங்களை தமிழகத்திலே அமலாக்குகிறபோது இலவச மின்சாரத் திட்டம் தொடர்ந்து அமல் நடத்தப்படுமா, நீடிக்குமா, ரத்து செய்யப்படுமா என்பது தான் கேள்வி.

பிற்பகல் 12-35

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாநில அரசு தன் திட்டங்களை ஈடேற்றத் தேவையான நிதியாதாரத்தைப் பல வழிகளில் பெற வேண்டிய கட்டாய நிலையில் உள்ளது. வரிச் சுமை மூலமாக நமக்கு வேண்டிய நிதியைப் பெறக்கூடிய அளவிற்கான சூழல் தமிழகத்திலே இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் நன்கு அறிவார். மைய அரசினுடைய உதவி தேவை. மைய அரசினுடைய உதவியைப் பெற்றுத்தான் உலக வங்கியிடமிருந்தோ, ஏஷியன் டெவலப்மென்ட் பேங்கிலிருந்தோ—அதுவும் இந்த ஆண்டிலிருந்து—பிற நிதி நிறுவனங்களிடமிருந்தோ நிதியைப் பெற வேண்டுமானாலும்கூட மைய அரசினுடைய அனுமதி தேவைப்படுகிறது.

இந்த அடிப்படையில்தான், மைய அரசினுடைய ஒரு சில கட்டாயம் நமக்கு கொள்கை ரீதியாக ஒத்துவராத ஒன்று என்றாலும்கூட, ஏற்புடைய ஒன்று அல்ல என்றாலும்கூட, மாநிலத் திட்டங்களை ஈடேற்ற சில வழிகளில் நாம் மைய அரசோடு, அவர்கள் சொல்கிற கட்டளைகளுக்கு இணங்க வேண்டிய சூழல் உருவாகிறது. ஆனால், அதே நேரத்தில், மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள் ஏற்கெனவே அவையிலே தெளிவுபடுத்தியிருக்கிறார்கள், இந்த மின்சாரத் துறையிலே நிர்வாகச் சீர்திருத்தத்தை, fiscal reform and structural reform என்ற இரண்டு சீர்திருத்தங்களை நடைமுறைக்குக் கொண்டு



2002 ஏப்ரல் 23] [திரு. சி. பொன்னையன்]

வருகிறபோது எந்தவிதத்திலும் உழவர் பெருமக்களுக்கு, விவசாயப் பெருங்குடி மக்களுக்குப் புரட்சித் தலைவர் காலத்திலிருந்து தந்து வருகிற அந்த இலவச மின்சாரத் திட்டத்திற்குக் குந்தகம் ஏற்படா, பாதிப்பு ஏற்படாது, பாதுகாவலராகப் புரட்சித் தலைவி இருப்பார்கள் என்பதைச் சொல்லி இருக்கிறார்; அந்த நிலை தொடரும். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. அடுத்து, விவசாய விளைபொருட்களுக்குக் கட்டுப்படியான விலை நிர்ணயம் செய்ய வேண்டும் என்ற பிரச்சினை தமிழ்நாட்டில் பல ஆண்டு காலமாக, இப்போது வரைக்கும் நீடித்து, நிலைத்து, தீர்க்க முடியாமல் அதிகரித்து வருகிற பிரச்சினையாக இருக்கிறது. நான் 1995 ஆவது ஆண்டில் வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கையின்மீது நடைபெற்று இருக்கிற விவாதக் குறிப்புகளைப் பார்த்தேன். அன்றைய வேளாண் துறை அமைச்சர் தந்திருக்கக்கூடிய ஏராளமான விளக்கங்களைப் பார்த்தேன். அதேபோல, திராவிட முன்னேற்றக் கழகம் 4 ஆண்டுகள் ஆட்சி புரிந்து, கடந்த 2000-2001 ஆம் ஆண்டு நடந்திருக்கக்கூடிய வேளாண்மை மானியக் கோரிக்கையின்மீது நடைபெற்ற விவாதத்தினுடைய மொத்தக் குறிப்புகளையும் படித்துப் பார்த்தேன். அதிலே அறிவிக்கப்பட்டு இருக்கக்கூடிய அறிவிப்புகளில் அநேகமாக 50 சதவிகிதத்தை நிறைவேற்றி இருந்தாலே, தமிழ்நாட்டில் பசுமைப் புரட்சி நிகழ்ந்திருக்கும். அது அவ்வாறு நிகழவில்லை என்பது மட்டும் இருக்கிறது: புள்ளிவிவரத் தொகுப்பாகவும், பாராட்டுகளை அதிகமாகச் சொல்வதாகவும் இருக்கிறது. விவசாய விளைபொருட்களுக்குக் கட்டுப்படியான விலை சம்பந்தமான பிரச்சினை, தொடர்ந்து இருந்து கொண்டிருக்கக்கூடிய விஷயமாக, வேதனை அளிக்கும் விஷயமாக இருக்கிறது.

கரும்புக்கு டன் ஒன்றுக்கு 1,000 ரூபாய் விலை வேண்டும் என்பதை நம்முடைய இந்தப் புதிய அரசு வந்ததற்குப் பிறகு, சென்ற பட்ஜெட் கூட்டத் தொடரிலும் அனைத்துக் கட்சிகளுடைய உறுப்பினர்களும் கேட்டோம், இப்போதும் அது கேட்கப்பட வேண்டிய நிலையில் இருக்கிறது. இந்தச் சூழ்நிலையிலாவது கரும்புக்கு டன் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் என்று விலை நிர்ணயம் செய்ய நம்முடைய அரசு முன்வருமா என்று கேட்க விரும்புகிறேன்; அறிவிக்க வேண்டுமென்று வலியுறுத்துகிறேன்.

[திரு. கே.சி. கருணாகரன்] [2002 ஏப்ரல் 23

அடுத்து, தென்னை, தேயிலை போன்ற பயிர்களுக்கும், இதர பணப் பயிர்களுக்கும் கட்டுப்படியான விலை இல்லை. ஒரு பெட்டிக் கடைக்காரருக்கும், ஒரு ரொட்டிக் கடைக்காரருக்கும், ஒரு பேக்கரி கடைக்காரருக்கும், ஒரு மளிகைக் கடைக்காரருக்கும் இருக்கக்கூடிய விலை நிர்ணயம் செய்கிற உரிமை என்பது, தமிழக, இந்திய விவசாயிகளுக்கு இல்லாமல் இருப்பது சுதந்திர இந்தியாவில் மிகவும் வருத்தப்பட வேண்டிய விஷயம். தான் உற்பத்தி செய்யக்கூடிய பொருள் இன்ன விலைதான் என்று சொல்கிற உரிமை விவசாயிகளுக்குக் கிடையாது. அரசு நிர்ணயிக்கிறபோது போதிய விலை கிடைப்பது இல்லை. அதிலே குளித்தலையிலும், லால்குடியிலும் 40 பழம் 10 ரூபாய் என்ற முறையில் வாழைப்பழங்களை பஸ்ஸிலே விற்கிறார்கள். பஸ்ஸிலே போனால் தெரியும். 40 பழம் 10 ரூபாய்க்குக் கிடைக்கிறது. அந்தப் பழம் சென்னைக்கு வந்தால் 2 ரூபாய் இருக்கும். விஷயம் என்னவென்றால், உற்பத்தி செய்கிற விவசாயிகளுக்கு விலை இல்லை. வாங்கிச் சாப்பிடுகிற ஜனங்களுக்கும் விலை குறையவில்லை. அப்போது நுகர்வோருக்கும் பயன் இல்லை, விவசாயிகளுக்கும் பயன் இல்லை. அதனால்தான் விவசாய விலை நிர்ணயம் சம்பந்தமான கொள்கையில் ஒரு தெளிவான நிலைப்பாடு வேண்டும் என்பது தமிழகத்தில் ஒட்டுமொத்தத் தேவையாக இருக்கிறது என்பதை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். அது சம்பந்தமாகவும் வேளாண்மைத் துறை அமைச்சர் நியாயம் வழங்குவார் என்று எதிர்பார்க்கிறேன்.

பிற்பகல் 12-40

அதுபோல, நேற்றையதினம் நம்முடைய வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் விவசாயத் தொழில் வாரியம் சம்பந்தமாக சில விளக்கங்களைச் சொன்னார்கள். தொடர்ந்து கம்யூனிஸ்ட் கட்சிகள் அல்லது இதர கட்சிகள் எல்லாமே கோலப்பன் குழுவின் பரிந்துரையை அமல்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தி வருகின்றன. கோலப்பன் குழுவினுடைய அறிக்கை என்பதற்கும், வாரியக் கூலி நிர்ணயம் என்பதற்கும் வேறுபாடு உள்ளது. அது வேறு. இது வேறு. நேற்று அமைச்சர் அளித்த விளக்கம் முழுவதுமே; ஏற்கெனவே அமைக்கப்பட்ட வாரியத்தில் வந்திருக்கக்கூடிய எண்ணிக்கையையும், பணத்தின் மதிப்புத் தொகையையும் சொன்னார். கோலப்பன் குழுவினுடைய அறிக்கையில் அது மட்டும் சொல்லப்படவில்லை. 1968 ஆம் ஆண்டிற்குப் பிறகு, பல்வேறு சந்தர்ப்பங்களில் பல குழுக்கள் அமைக்கப்பட்டு இருக்கின்றன. கமிஷன்கள் அமைக்கப்பட்டு இருக்கின்றன. திரு. கணபதியா பிள்ளை



2002 ஏப்ரல் 23] [திரு. கே.சி. கருணாகரன்]

கமிஷன், திரு. கார்த்திகேயன் தலைமையிலான குழு, திரு. [illegible]ணி தலைமையிலான குழு, திரு. திரவியம் தலைமையிலான குழு, திரு. ஹரிபாஸ்கர் தலைமையிலான குழு என இந்த 5 குழுக்கள் கடந்த 33 ஆண்டுகளில் அமைக்கப்பட்டன. ஆனால், இந்த 5 குழுக்களுக்கும், கோலப்பன் குழுவுக்கும் வித்தியாசம் உண்டு. மொத்தம் 5 குழுக்கள், குறைந்தபட்சக் கூலி நிர்ணயிக்க அல்லது மாற்றியமைக்க எவ்வளவு முயற்சி செய்யலாம் என்ற கருத்தைச் சொல்ல மாத்திரம் அமைக்கப்பட்டன. ஆனால், இந்தக் குழுக்களில் இருந்து கோலப்பன் குழு முற்றிலும் மாறுபட்டு, விவசாயிகளின் வாழ்விலே, விவசாயத் தொழிலாளிகளின் சமூகப் பொருளாதார நிலையை உயர்த்துவதற்குத்தான் ஆலோசனைகள் சொல்லப்பட்டு இருக்கிற ஒரு குழுவாகத் தன் அறிக்கையை வெளியிட்டு இருக்கிறது. ஆகவே அதை அமல்படுத்துவதற்கு இப்போதைய அரசு உரிய கவனத்தைச் செலுத்துவதும், நிறைவேற்றுவதும் வேண்டும். கிராமப்புறக் கூலித் தொழிலாளர்களின் சமூக நிலையைப் பொருளாதார ரீதியில் உயர்த்தவில்லை என்றால், சமூக நீதி என்பதும், ஜாதீய ஒடுக்குமுறை என்பதும், தீண்டாமை என்பதும் தமிழ்நாட்டை விட்டு ஒருபோதும் ஒழியாது என்பதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

அதுபோல ஒன்றிரண்டு கோரிக்கைகளைச் சொல்லி நான் என்னுடைய உரையை நிறைவு செய்தாக வேண்டும். அந்த வகையிலே நீர் வள-ஆதார அமைப்பு. பாசனப் பொருளாதாரத் திட்டத்தின் கீழே, பரம்பிக்குளம்-ஆழியாறு அணைக்கட்டுத் திட்டத்தில் பூர்த்தியாகாமல் உள்ள ஆனைமலையாறு திட்டத்தை நிறைவேற்றினால் அதன் மூலம் 2.5 டி.எம்.சி. தண்ணீர் கூடுதலாகப் பெற வாய்ப்பு இருக்கிறது. நல்லாறு திட்டம் நிறைவேற்றப்பட்டால், 150 மெகாவாட் நீர் மின்சாரம் தயார் செய்ய முடியும். மேலும், சுமார் 150 கிலோ மீட்டர் தூரம் சுற்றி வந்து, திருமூர்த்தி அணை வந்து சேருகிற இடத்தில் நீர்ச் சேதத்தைத் தடுப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. மேலும், 4 இலட்சம் ஏக்கர் விவசாயம், கோவை மாவட்டத்தில் பொள்ளாச்சி, உடுமலை தாலூகாக்களில் உள்ள பகுதிகளில் பயன்படுத்துவதற்கு வாய்ப்பு இருக்கிறது. இதன் மூலம் உரிய ஆலோசனைகளைத் திட்டத்தில் வரையறுத்து, அவற்றை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, ஏரிகள், குளங்கள், குட்டைகள். சிங்காநல்லூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சர்க்கார் சாமக்குளம் ஒன்றியத்தில் உள்ள அக்கிரகாரம் சாமக்குளம், கோவில்பாளையம், சின்னவேடம்பட்டி, வெள்ளக்கிணறு ஆகிய பகுதிகளில் உள்ள ஏரிகள், குளங்கள், குட்டைகளைத் தூர் வாரி, ஆழப்படுத்தி, கரைகளைப் பலப்படுத்த வேண்டும். இதன் மூலம் ஆயிரக்கணக்கான விவசாயிகள் பயன் பெறுவார்கள். நடப்பு நிதியாண்டில் இதற்கான திட்டத்தை வரையறுத்து செயல்படுத்திட வலியுறுத்துகிறேன்.

வேளாண்மைப் பொறியியல் சேவைக் கூட்டுறவு மையங்கள் சம்பந்தமாக; அதிலே '750' பணியாளர்கள் வேலை பார்க்கிறார்கள். இந்த நிறுவனத்திற்கு . அரசினுடைய திட்டப் பணிகள் ஒதுக்கீடு இல்லாததால், நிறுவனம் நலிவடைந்து, பணியாற்றும் ஊழியர்கள் பல மாதங்களாக ஊதியம் இல்லாமல் இருக்கிறார்கள். வருங்கால வைப்பு நிதிகூட ஊழியர் கணக்கில் செலுத்தப்படாமல் உள்ளது. இந்த நிறுவன்ங்களை ம்று சீரமைப்புச் செய்ய வேண்டும். அல்லது நலிவடைந்த நிறுவனங்களில் பணிபுரிகின்ற ஊழியர்களை அந்தத் துறையிலே காலியாக உள்ள பணியிடங்களிலே பணியமர்த்திட வேண்டும். அவர்களது குடும்பங்களை அரசு பாதுகாத்திட வேண்டும் (மணியடிக்கப்பெற்றது). வேளாண்மைத் துறையில் பணியாற்றும் வேளாண்மை அலுவலர்கள்மீது சுமார் 400-க்கும் மேற்பட்ட ஒழுங்கு நடவடிக்கைகள் 10 முதல் 15 வருட காலமாக நிலுவையில் இருப்பதாகத் தெரிகிறது. அவற்றை விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து கொள்கைக் குறிப்பில் சொல்லப்பட்டிருக்கிற சில நல்ல அம்சங்களை நாங்கள் வரவேற்கின்றோம். அதே நேரத்தில், வணிக மலர் அபிவிருத்தித்திட்டம் என்பது பற்றி ஒரு கருத்தைச் சொல்ல வேண்டி இருக்கிறது.

பிற்பகல் 12-45

நவீனத் தொழில்நுட்பச் சாகுபடி முறைகளின் மூலம் வணிக மலர்களின் சாகுபடிப் பரப்பை அதிகரித்திட இத்திட்டம் செயல்படுத்தப் படுகிறது. விவசாயிகளின் நிலங்களில் செயல் விளக்கப் பாத்திகள் அமைக்க இடுபொருள்கள் மானிய விலையில் விநியோகிக்கப்படுகின்றன. 'மாதிரி .மலர் மையம்' ஒன்று உதகையில் நிறுவப்பட்டுள்ளது. இதன் மூலம் திசு வளர்ப்புச் செடிகள் உற்பத்தி செய்து, வெளிநாடுகளுக்கு





ஏற்றுமதி செய்கிற ஒரு முக்கியமான விஷயம், இங்கே அறிவிக்கப்பட்டிருக்கிற மாதிரி—நீலகிரியில் இருப்பது பாராட்டுக்குரியது. கோயம்புத்தூரில் தொண்டாமுத்தூர் தொகுதியில் ஆலாந்துறையை ஒட்டியிருக்கக்கூடிய பகுதியிலே 'ஸ்பிக்' என்கிற தனியார் நிறுவனம் Agro Bio-tech Centre என்று ஒன்று வைத்து, நூற்றுக்கணக்கான ஏக்கரில் பண்ணை அமைத்து, குளிர்பதன வசதியூட்டி, tissue culture பண்ணி, மலர்களைப் பதப்படுத்தி, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிற அற்புதமான வேலையைச் செய்கிறார்கள். கோவையைச் சுற்றி இருக்கக்கூடிய மாவட்டங்களில் நிறைய மலர்கள் உற்பத்தியாகின்றன. ஆகவே, இதுபோன்ற ஒரு 'மாதிரி மலர் மையத்தை' நம்முடைய அரசின் சார்பில் கோயம்புத்தூரில் அமைப்பதற்கு அரசு முடிவு எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, தரிசு நில மேம்பாடு குறித்து நேற்றைய தினம்கூட நம்முடைய முதல்வர் அவர்கள் ஒரு விளக்கத்தை மாண்புமிகு காங்கிரஸ் உறுப்பினர் பேசுகிறபோது குறுக்கிட்டுச் சொன்னார்கள். அதிலே இன்னும்கூட எங்களுக்கு விளக்கம் கிடைக்க வேண்டியிருக்கிறது. அது என்னவென்று சொன்னால், இப்போது தரிசு நில மேம்பாடு என்ற விளக்கத்திலே, 50 இலட்சம் ஏக்கர் நிலங்களில், 70 சதவிகிதம் தனியாரிடம் இருக்கிறது, 30 சதவிகிதம்தான் அரசு நிலங்களாக இருக்கின்றன என்று முதலமைச்சர் சொன்னார். அதிலே ஒரு ஆயிரம் ஏக்கராவை விவாதத்திற்கு எடுத்துக்கொண்டால், 700 ஏக்கரா வரை, 5 ஏக்கர், 10 ஏக்கர் என்று வைத்திருப்பவர்களிடம் இருக்கிறது. மிச்சம் இருக்கிற 300 ஏக்கரா அரசாங்கத்திடம் இருக்கிறது. இந்த 300 ஏக்கராவைத்தான் தனியார்களிடம் மொத்தமாகக் கொடுத்து விவசாயம் செய்வது; அவர்களோடு அந்த 700 ஏக்கரா விவசாயிகளையும் இணைத்து இயக்குவது என்ற முறையில் விளக்கம் தரப்பட்டது. அது சரியானது. எங்கள் கேள்வி என்னவென்றால், அரசிடம் இருக்கும் 300 ஏக்கராவில், உதாரணத்திற்கு, அந்த 30 சதவிகிதம் நிலத்தில், நிலமில்லாத விவசாயிகளுக்கு, விவசாயத் தொழிலாளர்களுக்கு, கிராமப்புற மக்களுக்கு ஏதாவது நிலம் வழங்கப்படுமா என்பதுதான் கேள்வி...

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்துக்கூட மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள் ஏற்கெனவே அவையில் தெளிவுபடுத்தியிருக்கிறார்கள். நிலமற்ற ஏழைகளுக்கு, அப்படிப்பட்ட அரசுக்குச் சொந்தமான தரிசு நிலங்களைப் பிரித்துத் தருவதில் அரசுக்கு எந்தவித மாறுபட்ட கருத்தும்

[திரு. சி. பொன்னையன்] [2002 ஏப்ரல் 23

இல்லை. அப்படி நிலமற்ற ஏழைகள் ஒன்று சேர்ந்து ஏதேனும் ஓர் அமைப்பை உருவாக்கி, ஒரு கூட்டுறவு அமைப்பை, பிறிதொரு registered society என்று உருவாக்கி, அவர்கள் ஒருங்கிணைந்து இப்பணியை மேற்கொள்ள வருகிறபோதுதான் இதிலே அவர்களுக்குப் பலன் கிடைக்கும். காரணம், நவீன சாகுபடித் திட்டத்தை வேளாண்மைத் துறை தற்போது நடைமுறைப்படுத்த இருக்கிறது. அதிலே, உயர்தர, உயரின விதைகள், அதைப்போலவே Water Management, Scientific Water Management, Scientific Pest Control, Scientific Nutrition Method என்றெல்லாம் வேளாண்மைத் துறை பல திட்டங்களை வகுத்திருக்கிறது. அப்படிப்பட்ட திட்டங்களை நடைமுறைப்படுத்துகிறபோது, அதற்குச் செலவு அதிகமாகும். அந்த நிலத்தைப் பண்படுத்துவதற்குக்கூட தற்போது நடைமுறையில் ஒரு அரை அடி ஆழத்திற்குத்தான் நிலத்தை உழுகிறோம். ஆனால் தற்போது வேளாண்மைத் துறை மேற்கொண்டிருக்கிற முறையில் 1½ அடி ஆழத்திற்கு நிலத்தை உழ வேண்டும் என்று அவர்கள் முடிவு செய்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட நவீன முறை, பிற நாடுகளில் இருப்பதுபோல், மராட்டிய மாநிலத்தில் சில பகுதிகளில் இருப்பதுபோல், கொண்டுவரப்பட வேண்டும் என்று சொல்கிறார்கள். அதற்கு மூலதனச் செலவு அதிகம் ஆகிறது. Equipment செலவு அதிகம் ஆகிறது. தண்ணீர் கொண்டு வருவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்கிறபோது செலவு அதிகம் ஆகிறது. அரசே இதற்கு நிதியை முழுவதும் தர முடியாத நிலை இருக்கிற காரணத்தால், தனியார்களுடைய ஒத்துழைப்பு அதற்குத் தேவைப்படுகிறது. நிலமற்ற ஏழைகள் ஒருங்கிணைந்து ஓர் அமைப்பின் மூலமாக வருகின்றபோது நிதி நிறுவனங்கள் மூலம் பணத்தைப் பெற்று, அவர்களுக்கும் அப்படித் தரிசு நிலத்தைத் தருவதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஏற்கெனவே அவர்களுடைய கொள்கையைச் சொல்லியிருக்கிறார்கள். அதற்குத் தடை ஏதும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் கருணாகரன், சீக்கிரம் உரையை முடியுங்கள்.

பிற்பகல் 12-50

**திரு. கே.சி. கருணாகரன்:** நன்றி. அது நடை முறைப்படுத்தப்படுகிறபோது ஏற்படுகிற அனுபவங்களையும் நாம் மீண்டும் பரிசிலனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதனை மாத்திரம் தெரிவித்து, வாய்ப்புக்கு நன்றி கூறி, உரையை நிறைவு செய்கிறேன்.



2002 ஏப்ரல் 23]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவருக்குப் பணிவான வணக்கம். காலத்தின் அருமை கருதி விரைவாகச் சில செய்திகளைச் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு வேளாண் துறை மானியக் கோரிக்கையின்மீது விரிவாகப் பேச வேண்டுமென்ற விருப்பத்தோடு வந்த எங்களுக்கு ஏமாற்றம்தான். 70 சதவிகித மக்கள்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் பேசலாம். உறுப்பினர்கள் இருக்கமாட்டார்கள். பசி. (சிரிப்பு)

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை, எவ்வளவு நேரம் பேசினாலும் விருப்பத்தோடு இருப்பார்கள். ஒரு மணி நேரம் தேவையற்ற விவாதங்களுக்குச் சென்றுவிட்டதே என்ற வருத்தத்தைத் தெரிவிக்கத்தான் நான் வந்தேன். இருந்தாலும், இப்பொழுது இருக்கிற பிரச்சினைகளில் வேளாண் துறையிலே மிக அவசரத் தேவையாக இருப்பது காவிரி நீர்ப் பிரச்சினை. வருகிற ஜூன் 12 ஆம் தேதி விவசாயத்திற்கு, குறுவை சாகுபடிக்குத் தண்ணீர் திறந்துவிட்டாக வேண்டும். இது ஆண்டுதோறும் நடைபெறக்கூடிய ஒரு செயல்பாடு. இப்பொழுது மேட்டூரில் தண்ணீர் மிகவும் குறைந்து கொண்டே இருக்கிறது. கர்நாடகத்திலிருந்து தண்ணீர் பெறுவதற்கான முயற்சிகளை நம்முடைய அரசு தொடர்ந்து வெகுவாக எடுத்துக் கொண்டிருக்கிறது. இருந்தாலும், இந்தக் குறுவை சாகுபடிக்கான முறையிலே தண்ணீர் பெறுவதை, உத்தரவாதப்படுத்துவதற்கான முயற்சியை நமது அரசு மேற்கொண்டு இருக்கிறதா? அதற்கான விரைவான காரியங்களைத் தொடர்ந்து நடைமுறைப்படுத்துவதற்கான முயற்சிகளை நம்முடைய பொதுப் பணித் துறையும், நமது அரசும் மேற்கொண்டிருக்கிறதா என்பதைத் தெளிவுபடுத்த வேண்டும். காரணம், இயற்கைச் சீற்றத்தால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் விவசாயிகள். கடந்த முறை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு, விவசாயம் அழிக்கப்பட்டு விட்டது. இந்த ஆண்டாவது, காலத்திலே சாகுபடியைத் தொடங்கலாமா என்ற ஏக்கத்தோடு இருக்கிற விவசாயிகள் மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் பெறுவதற்காகக் காத்திருக்கிறார்கள். கர்நாடகத்திலிருந்து காவிரி மூலமாகத் தண்ணீர் பெறுவதற்கான முயற்சியை நமது அரசு மேற்கொள்ளுமா? மேற்கொள்ள வேண்டுமென்ற கருத்தை நான் வலியுறுத்திச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக, இந்தக் காவிரிப் பிரச்சினையைப் பொறுத்தவரை, நாம் இங்கே பல்வேறு......

[2002 ஏப்ரல் 23

***மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேட்டூர் அணையின் இன்றைய நீர்மட்டம் 42.74 அடி ஆகும். தஞ்சையில் குறுவை சாகுபடிக்கு எந்தவிதக் குந்தகமும் ஏற்படாமல், தொடர்ந்து மேட்டூரிலிருந்து நீர் கிடைப்பதற்கு நம்முடைய மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மாவின் அரசு கர்நாடகத்துடன் தொடர்ந்து முயற்சி செய்து பேசிக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரியப்படுத்திக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. இந்த எதிர்பார்ப்போடுதான் அந்த விவசாயிகள் காத்திருக்கிறார்கள். நாம் இங்கே விவாதங்களை நடத்திக் கொண்டிருக்கிறோம். நான் கருத்தின் உள்ளே செல்லவில்லை. ஆனால், ஒற்றுமை ஏற்பட வேண்டுமென்று மட்டும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் வலுவாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். கர்நாடகத்தில் இருக்கிற அனைத்து அரசியல் கட்சிகள்கூட, நமக்குத் தண்ணீர் கிடைக்கக் கூடாது என்பதிலே ஒற்றுமையாக இருக்கிறார்கள். நாம் தண்ணீர் பெறுவதில், அனைத்துக் கட்சிகளும் ஒற்றுமையில்லாமல் இருக்கிறோம் என்பதுதான் வேதனைக்குரியதாக இருக்கிறது. ஆகவே, பகைமை உணர்வுகளை மறந்து, அனைவருமே ஒன்றுபட்ட நடவடிக்கையின் மூலமாக காவிரி நீரைப் பெறுவதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, எங்களுடைய மாவட்டத்தில் பருவம் தவறிப் பெய்த பெருமழையில் ஏற்பட்ட இழப்பீடுகள் பற்றியெல்லாம் இங்கே குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கிறது. அதில் நிவாரணம் என்பது போதுமானதாக இல்லை என்பதைப் பற்றியும் இங்கே குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். அப்படிப் பாதிக்கப்பட்டு இருக்கிற அந்தப் பகுதி விவசாயிகளின் நில வரி, நீர் வரி, தல வரி ஆகியவற்றை ரத்து செய்ய வேண்டும். இல்லையென்று சொன்னால், மறு உற்பத்தி செய்ய இயலாத நிலைக்கு ஆளாக்கப்பட்டு விடுவார்கள். ஆகவே, அந்த நில வரியையும், நீர் வரியையும், தல வரியையும் இந்த ஆண்டு ரத்து செய்வதற்கான முயற்சியை எடுக்க வேண்டும். இதைச் சொல்கிறபோது மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுக்குச், சிரமமாக இருக்கும் என்பதும் எனக்குத் தெரியும். என்றாலும், எங்களுடைய சிரமத்தில் நமது ஆட்சி பங்குகொள்ள வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.



2002 ஏப்ரல் 23] [திரு. வை. சிவபுண்ணியம்]

நீங்கள் அதைத் தள்ளுபடி செய்தால்தான் விவசாயிகளுக்குப் பாதுகாப்பான சூழ்நிலை ஏற்படும் என்பதை நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போல, கூட்டுறவுக் கடன்களையும் தள்ளுபடி செய்ய வேண்டும். இல்லையென்று சொன்னால், விவசாயிகள் மறு உற்பத்தி செய்வதிலே ஈடுபட இயலாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதையும் சொல்லிக்கொள்கிறேன்.

அரசு சொல்லியிருக்கிறது; வேளாண்மை வளர்ச்சியிலே 4% உற்பத்தி இலக்கை எட்டுவதற்கான முயற்சி என்று சொல்லப்பட்டிருப்பது வரவேற்கக்கூடிய ஒன்று. பல்வேறு துறைகளில் நாம் வெற்றி பெற்றிருக்கிறோம். அதற்காக முயற்சி எடுக்கிறோம். குறிப்பாக, தரிசு நில மேம்பாடு என்கிறபோதுகூட, அந்தத் திட்டம் விரிவான திட்டமாக அமைக்கப்பட்டிருப்பதை நான் வரவேற்கிறேன். அதே நேரத்தில் தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் என்று சொல்கிறபோது, அதற்கு நல்ல பாசனம் தேவைப்படுகிறது. நாம் இங்கே பேசுகிறபோது, நீராதாரம் இல்லையென்று சொல்கிறோம். நிலத்தடி நீரும் இல்லை, பாசன வசதியும் இல்லை. ஆனால், தரிசு நிலத்தை மேம்படுத்துவதற்கான முயற்சி என்று சொல்கிறபோது, இது நேர் எதிரான கருத்துகளையோ அல்லது செயல்பாட்டில் தடையாகவோ இருந்துவிடக் கூடாது என்பதற்காக நான் சொல்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே பல முறை அவையிலே தெரிவிக்கப்பட்டிருக்கிறது. தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் என்பது, தரிசு நிலத்தை மேம்படுத்துகிற திட்டம் என்பது பல உட்பிரிவுகளை உள்ளடக்கியது. உதாரணமாக அதற்கு 'Rain water harvesting, existing tanks and ponds to be desilted and deepened' என்ற முறையிலே இருக்கின்ற ஏரி, குளங்களை ஆழப்படுத்துதல், அகலப்படுத்துதல், அதுமட்டுமல்லாமல், rain water harvesting மூலமாக நிலத்தடி நீரை அதிகப்படுத்த மழை நீரைச் சேகரிக்கும் திட்டம். இவை அனைத்தையும் உள்ளடக்கிய திட்டம்தான் தரிசு நில மேம்பாட்டுத் திட்டம். அதனாலேதான் அதற்குச் செலவே அதிகமாகிறது; தனியார் முதலீடும் தேவைப்படுகிறது. நிதி நிறுவனங்களுடைய முதலீடும் தேவைப்படுகிறது. இப்படி நீர்வளத்தைப் பெருக்குவதற்கான முயற்சியையும் இதில் உள்ளடக்கி இருக்கிற காரணத்தினால்தான் இந்த நிலை இருக்கிறது.

[2002 ஏப்ரல் 23

பிற்பகல் 12-55

**திரு. வை. சிவபுண்ணியம்:** நன்றி. இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துகிறபொழுது, இங்கே மாண்புமிகு உறுப்பினர் கருணாகரன் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். இதை நாங்கள் குறை சொல்வதாகத் தவறாக எடுத்துக்கொள்ளக் கூடாது. அரசு நல்ல நோக்கத்திற்காகத் திட்டத்தைத் தொடங்குகிறபோது, இடையில் வரக்கூடியவர்கள் அதை வேறுவிதமாகப் பயன்படுத்தக் கூடாது என்ற கவலையின் அடிப்படையிலேயும், விவசாயிகளையும், விவசாயத் தொழிலாளர்களையும் பங்குபெறச் செய்வதன் மூலமாகத்தான் இந்தத் திட்டம் முழுமையடைய முடியும் என்ற காரணத்தினாலேயும்தான் அந்தக் கருத்தைச் சொல்கிறோம். இங்கே ஆயிரம் ஏக்கர் என்று சொன்னால்—அதிலே உள்ளதை நமது முதலமைச்சர் அவர்கள் விளக்கிச் சொன்னார்கள்—300 ஏக்கர் அரசு நிலம், 700 ஏக்கர் தனியார் நிலம் என்று சொன்னார்கள். ஆக, தனியார் நிலத்தை—அந்த 300 ஏக்கர் அரசு நிலத்தைப் பெறுகிற அந்தத் தனியார் முதலாளி என்பவர்—நான் இதைத்தான் சென்ற முறை குறிப்பிட்டுச் சொன்னேன் ஆக, தனியார் முதலாளி என்று வருகிறபோது—5 ஏக்கர், 10 ஏக்கர், 15 ஏக்கர் வரை வைத்து இருப்பவர்கள் தனியாக அந்த சாகுபடியை, தரிசு நில மேம்பாட்டைச் செய்ய இயலாது என்றுதான் இந்தத் திட்டத்தில் இருக்கிறது. ஆகவே, தனியார் முதலாளி, இந்தச் சிறு விவசாயிகளை வளைத்துப் போட்டு குறைந்த விலைக்குப் பெற்று விடுவதற்கான சந்தர்ப்பம் இதிலே இருக்கிறது.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதனுடைய பொருள் வேறு. It would result only in contract farming. இப்போது எப்படிக் கரும்பு சாகுபடி செய்கிறோம்? சர்க்கரை ஆலைகள் எப்படி கரும்பு உற்பத்தி செய்கின்ற விவசாயிகளிடம் ஒப்பந்தம் போட்டுக்கொண்டு கரும்பை விவசாயிகள் கரும்பு ஆலைகளுக்குத் தருகிறார்களோ, அதுபோல, contract farming will be encouraged in this. That is the concept.

**திரு. வை. சிவபுண்ணியம்:** விவசாயிகளுக்கு வேலைவாய்ப்பு என்று நாம் சொல்கிறோம். ஆனால், விவசாயிகள் வேலைவாய்ப்பு என்பது, இப்போதிருக்கிற நவீன விவசாய உற்பத்தியில் கண்டிப்பாக இருக்காது. இது ஏமாற்றமாகத்தான் இருக்குமென்று நான் கருதுகிறேன். காரணம், ஆயிரம் ஏக்கர்களுக்கு உரிய இந்தத் தொழிற்நுட்பங்களை விவசாயத் தொழிலாளர்களைக் கொண்டு நடத்துகின்ற வேலை என்பது வேறு.



2002 ஏப்ரல் 23] [திரு. வை. சிவபுண்ணியம்]

நவீனமயமாக்கப்பட்டு விட்டால் அதிநவீனத் தொழில்நுட்பக் கருவிகளைப் பயன்படுத்தி, தொழிலாளர்களுடைய வேலை எண்ணிக்கை என்பது குறைந்து, ஐந்து பேர், பத்துப் பேர்களுக்கு உள்ளாகவே ஒரு பண்ணையிலே அந்த வேலைகளைச் செய்து முடித்துவிடுவார்கள். ஆகவே, பல நூறு பேர்களுக்கு வேலை இழக்கிற வாய்ப்புக்கூட அப்படி ஏற்பட்டுவிடும். இப்படியெல்லாம் அதிலே இருக்கிறது. இதையெல்லாம் நீங்கள் கொஞ்சம் ஆழமாகச் சிந்திக்க வேண்டும் என்பதற்காகத்தான் சொல்கிறேன். திட்டத்தை நிறுத்தவேண்டும் என்றோ அல்லது தவறு என்றோ நான் சொல்லவில்லை. இப்படிப்பட்ட குறைபாடுகளும், இடைவெளிகளும், பிரச்சினைகளும் வருமென்ற அந்தக் கருத்தைப் பரிசீலிக்க வேண்டும் என்பதற்காக மட்டும் சொல்கிறேன்.

அதேபோல, மேற்குத் தொடர்ச்சி மலைத் திட்டத்தைப் பொறுத்தவரையிலும், அங்கே இருக்கிற, அந்தப் பகுதியிலே வாழ்ந்துகொண்டிருக்கிற பழங்குடியின மக்களுக்குப் பயன் கிடைப்பதற்கு முயற்சி எடுக்க வேண்டும். அந்தப் பலனை அவர்கள் அனுபவித்துக் கொள்வதற்காக 2-சி பட்டா என்ற ஒரு நடைமுறை இருக்கிறது. கேரளாவிலேகூட அப்படி அமல்படுத்தப்படுகிறது. அந்த நடைமுறையை இங்கே நமது தமிழகத்திலேயும் கொடுப்பதற்கான முயற்சியை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தூர் வாருகிற பணிகளைப் பற்றி எந்த அறிவிப்புமே நமது அரசின் சார்பிலே சொல்லப்படவில்லை. இந்த ஆண்டு நடக்குமென்ற முழு நம்பிக்கையிலே நாங்கள் எல்லாம் இருக்கிறோம், காவிரி டெல்டா விவசாயிகள். ஆகவே, அதை முழுமையாகப் பொதுப் பணித் துறை அமைச்சர் மூலமாக நிறைவேற்ற வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, இலவச மின்சாரத் திட்டத்தைப் பற்றி இங்கே குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். மீட்டர் பொருத்துகிற முறை வருகிறது என்று சொன்னால், மணியோசை வரும் முன்னே, யானை வரும் பின்னே என்று சொல்வதற்கிணங்க, இந்தத் திட்டம் சொல்லப்படுகிறபோது, மீட்டர் பொருத்துவது என்று சொன்னாலே, பின்னாலே கட்டணம் வசூலிப்பதற்கான முயற்சியாக இருக்குமோ என்ற ஐயமும், கருத்தும் வந்துகொண்டிருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது) ஆகவே, இந்த....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அந்தத் துறை அப்படிப்பட்டது ஷாக் அடிக்கிற மாதிரி. (சிரிப்பு)

**திரு. வை. சிவபுண்ணியம்:** ஆமாம். மின்சாரம் என்றாலே அது ஷாக் அடிக்கிறது. மின்சாரம் என்றாலே அதை சம்சாரத்தைப் போல பாதுகாக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அதைப் பயன்படுத்த... (மணியடிக்கப்பெற்றது)

***மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மீட்டர் பொருத்துவது பற்றி இப்போது ஏற்கெனவே கருணாகரன் அவர்கள் பேசிய பேச்சிலும் வந்தது. நமது மத்திய அரசு சில நடவடிக்கைகளை, சில சீர்திருத்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று விடுத்த கோரிக்கையின் அடிப்படையிலே எவ்வளவு மின்சாரம் செலவிடப்படுகிறது என்பதைக் கணக்கிடுவதற்குத்தான் மீட்டர் பொருத்தப்படுகிறதே தவிர, அவர்களுக்கு வேறெந்த அச்சமும், பயமும் தேவையில்லை என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** அமைச்சர்...(மணியடிக்கப்பெற்றது) முடித்துவிடுகிறேன். அமைச்சர் அவர்கள் சொல்வதையும் ஒருவகையிலே எடுத்துக்கொள்ளலாம், ஆனால், ஒட்டுமொத்தமாக மின்சார உற்பத்தி எவ்வளவு என்பதும், அரசுக் கணக்கில் அவர்களிடத்திலே இருக்கிறது. செலவு எவ்வளவு ஆகிறது என்பதற்கும் கணக்கு அவர்களிடத்திலே இருக்கிறது. திருடப்படுவது எவ்வளவு என்பதற்கும் அரசாங்கத்திலே கணக்கு இருக்கிறது. ஆகவே, line loss என்பதற்கு அரசாங்கத்திலே கணக்கு இருக்கிறபோது, இலவச மின்சாரம் எவ்வளவு பயன்படுகிறது என்பதற்கும் உங்களிடத்திலே கணக்கு இருக்கும். இருந்தாலும், இந்தக் காரணத்தின் மூலமாகக் கட்டணம் வசூலிக்கிற முயற்சி என்பதாகத்தான் நான் உறுதியாகக் கருதுகிறேன். அதைப்பற்றி அரசு பரிசீலிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர், அவர்களே, அந்தக் கணக்கையெல்லாம் சரிபார்ப்பதற்காகத்தான் மீட்டர் பொருத்தப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



பிற்பகல் 1-00

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எப்படியோ, விவசாயிகள் கட்டணம் செலுத்தாமல் இலவச மின்சாரம் தொடரும் என்று முதலமைச்சர் அறிவித்திருக்கிற அறிவிப்பை உறுதி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக, எங்களுடைய மாவட்டத்தைப் பொறுத்தவரையிலும், கொள்முதலைப் பொறுத்தவரையிலும் பிரச்சினை இருக்கிறது. அதைத் தொடர்ந்து சொல்லிக் கொண்டே இருக்கிறோம். அது வேறு விஷயம். ஆனால், எங்களுக்கு இருக்கிற ஐயப்பாடு என்னவென்றால், வருகின்ற காலங்களில் இந்தக் கொள்முதலையே கைவிட்டு விடுவீர்களோ என்ற அச்சமே இருக்கிறது. 30 ஆண்டு காலமாக நடைமுறைப்படுத்தி வருகிற இந்தக் கொள்முதல் கொள்கையையே நம்முடைய அரசு கைவிட்டு விடுமோ என்ற அச்சம் ஏற்பட்டிருக்கிறது. இல்லை என்று சொல்லலாம். ஆனால், எங்களுக்கு அது ஆழமான அச்சமாக இருக்கிறது. அப்படி ஏற்படுமானால், மிகப் பெரிய பாதிப்பு அந்தப் பகுதியிலே ஏற்பட்டு விடும். விவசாயமே செய்ய முடியாது. விவசாயிகளிடத்திலேபோய், லெவி முறையிலே நெல் கொள்முதல் செய்த காலம் என்பது 1965, 1975ஆம் ஆண்டுகளிலே நடைபெற்றது. விவசாயிகளிடத்திலே லெவி முறையிலே நெல் வசூலித்த காலம் ஒன்று இருந்தது. அதற்குப் பின்னாலேதான் இந்தக் கொள்முதல் கொள்கை கொண்டு வரப்பட்டது. இப்போது அதிகமாகக் கொள்முதல் வருகின்ற காரணத்தினாலேயே அதை மாற்றிவிடக் கூடாது. நிதியமைச்சர்கூட ஒரு கருத்தைச் சொன்னார்கள். 1,600 கோடி ரூபாய்க்கு நெல்லைக் கொள்முதல் செய்ததாலேயே இந்த அரசுக்குச் சுமையாகப் போய்விட்டது என்று சொன்னால், விவசாயிகளே இந்த அரசிற்குச் சுமையாகப் போய்விட்டார்கள் என்று கருதுகிறீர்களோ என்ற வருத்தம் எங்களுக்கு இருக்கிறது.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த கால ஆட்சியில், விவசாயிகளிடமிருந்து கொள்முதல் என்று சொல்லிக்கொண்டு, சராசரியாக ஆண்டிற்கு 10 இலட்சம் டன்தான் கொள்முதல் செய்யப்பட்டு வந்தது. ஆனால், சென்ற ஆண்டு, நாங்கள் வருவதற்கு முன்னால், தி.மு.க. ஆட்சியிலே 19 இலட்சம் டன் நெல்லைக் கொள்முதல் செய்துவிட்டார்கள். விவசாயிகளிடமிருந்து அவ்வளவு நெல் கொள்முதல் செய்யப்படவில்லை. இலாப நோக்கோடு, வியாபாரிகளிடமிருந்து, பிற மாவட்டங்களில், பிற மாநிலங்களிலிருந்து கொண்டு வந்த நெல்லைக் கொள்முதல் செய்து

அரசுக்குச் சுமையை—எங்கள் தலைமீது அந்தச் சுமையை—ஏற்றிவிட்டார்கள். விவசாயிகளுக்கு உதவுவது விவசாயிகளுடைய பாதுகாவலனாக இருக்கின்ற புரட்சித் தலைவி அரசினுடைய தலையாய கொள்கை என்பதனை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** முடித்துவிடுகின்றேன். எல்லோரும் கேட்டதுபோல், கரும்புக்கு டன்னுக்கு 1000 ரூபாய் வழங்க வேண்டும். அமைச்சர் அவர்கள் இன்றைக்கு நல்ல அறிவிப்பை, இனிமையான அறிவிப்பை அறிவிப்பார், கண்டிப்பாக அறிவிப்பார் என்ற நம்பிக்கையோடு, எதிர்பார்த்துக் காத்து இருக்கின்றோம். தென்னை விவசாயிகளைப் பொறுத்தவரையிலும் பலவித பிரச்சினைகள் இருக்கின்றன. தென்னையினால் இழப்பு ஏற்பட்டிருக்கிற விவசாயிகளுக்கு நஷ்டயீடு வழங்க வேண்டும். நோயினால் பாதிக்கப்பட்ட தென்னைகளைப் பாதுகாப்பதற்கான முயற்சிகளை நம்முடைய விவசாயத் துறையின் மூலமாக எடுக்க வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

கொப்பரைத் தேங்காய்க் கொள்முதல் என்பதை மாற்றி தேங்காயாகவே கொள்முதல் செய்தால்தான் விவசாயிகளைப் பாதுகாக்க முடியும். அதற்குரிய முயற்சிகளை அரசு எடுக்க வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, தேயிலைப் பிரச்சினை இருக்கிறது. தேயிலை விவசாயிகளுடைய அந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணுவதற்கான முயற்சியாக, தேயிலைச் சட்டப்படி மத்திய அரசை வலியுறுத்தி, விலை நிர்ணயம் செய்வதற்கான முயற்சிகளை எடுப்பதற்கான வகையில் நமது சட்டமன்றத்தில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கான முயற்சியை எடுக்க வேண்டும்.

அதேபோல, பால் உற்பத்தியில் பிரச்சினை இருக்கிறது. வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகிற பால் பவுடர் போன்ற பொருட்களைத் தடை செய்து இங்கே உற்பத்தி செய்கின்ற பொருட்களுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

அதேபோல, வேளாண் பொறியியல் சேவைக் கூட்டுறவு மையம் பிரச்சினைக்குட்பட்டு இருக்கிறது. 1000 பேர்கள் வேலையை இழக்கின்ற அபாயம் இருக்கிறது. ஆகவே, அமைச்சர் அவர்கள் இதைப்பற்றி



என்ன கருத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியாது. ஆனால், அதில் பணிபுரிகிற சுமார் 1,500 தொழிலாளர்களையும் பாதுகாக்கக்கூடிய வகையிலே அதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டும். அது நலிவடைந்திருக்கிறது என்பதும் எனக்குத் தெரியும். அதனால் சிரமம் இருக்கிறது என்பதும் எனக்குத் தெரியும். என்றாலும், மாற்று யோசனையைப்பற்றிச் சிந்தித்து, அதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டும் என்று மட்டும் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

திருவாரூர் மாவட்டம், நாகை மாவட்டம், தஞ்சை மாவட்டம் ஆகியன முற்றிலும் விவசாய மாவட்டங்கள். அந்தப் பகுதிகளில் வேளாண்மைக் கல்லூரி இல்லை என்பதுதான் ஆச்சரியமாக இருக்கிறது. ஆகவே, எவ்வளவோ இடங்களிலே இருக்கிற அந்தச் சிந்தனையை மாற்றி, ஒன்றுபட்ட தஞ்சை மாவட்டப் பகுதியில், குறிப்பாக திருவாரூர் மாவட்டத்தில் மன்னார்குடிப் பகுதியிலே வேளாண்மைக் கல்லூரி அமைப்பதற்கான முயற்சியை அரசு எடுக்க வேண்டும் என்று கேட்டு முடிக்கின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வீரபாண்டியன், பாரதிய ஜனதா (குறுக்கீடு) திரு. ஜெக. வீரபாண்டியன்.

***திரு. ஜெக. வீரபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

''உழுவார் உலகத்தார்க்கு ஆணிஅஃ தாற்றாது
எழுவாரை எல்லாம் பொறுத்து''

என்ற குறள்மொழிக்கேற்ப உலகத்திலுள்ள அனைத்துத் தொழில்களிலும் தலையாய தொழிலாகக் கருதப்படும் வேளாண் தொடர்புடைய மானியக் கோரிக்கையின்மீது சில கருத்துகளைக் கூற வாய்ப்பு அளித்த தங்களுக்கு மனதார என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். சாதாரண விவசாயக் குடும்பத்திலே பிறந்த என்னை வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்த மாமன்றத்திலே உறுப்பினராக்கி, பேசுவதற்கு ஒரு வாய்ப்பினை உருவாக்கித் தந்த, உலகம் போற்றும் உன்னதத் தலைவர் பாரதப் பிரதமர் திரு. அட்டல் பிகாரி வாஜ்பாய் அவர்களுக்கும், தேசிய ஜனநாயகக் கூட்டணியிலே மயிலாடுதுறை தொகுதியை எனக்குப் பெற்றுத் தந்தது மட்டுமல்லாமல், எனது வெற்றிக்காகத் தனிப்பட்ட முறையிலே பிரத்தியேகமாக மயிலாடுதுறைக்கே வந்திருந்து பிரச்சாரம்

செய்த இந்தியத் திருநாட்டின் இரண்டாவது இரும்பு மனிதர் மாண்புமிகு மத்திய உள் துறை அமைச்சர் திரு. எல்.கே. அத்வானி அவர்களுக்கும், இளைய சமுதாயத்தினுடைய விடிவெள்ளியாக தேசிய பணியாற்றி வரும் எங்கள் பொதுச் செயலாளர் இளம் கர்மயோகி இல. கணேசன் அவர்களுக்கும், உடல்நிலையைக்கூடப் பொருட்படுத்தாமல் மயிலாடுதுறைக்கு வந்து தேர்தல் பிரச்சாரம் செய்த முன்னாள் முதல்வர் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், ஓய்வறியா உழைப்பாளி முன்னாள் உள்ளாட்சித் துறை அமைச்சர் சோழமண்டலத் தளபதி கோ.சி. மணி அவர்களுக்கும், விடுதலைச் சிறுத்தைகள் உள்ளிட்ட அனைத்துத் தோழமைக் கட்சி நண்பர்களுக்கும், தொகுதி மக்களுக்கும் முதற்கண் என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

*பிற்பகல் 1-05*

இது என்னுடைய கன்னிப் பேச்சு. நன்றி தெரிவிப்பது தமிழனுடைய தலையாய கடமை. எனது வெற்றிக்கு உழைத்த அத்தனை பேருக்கும், வாக்காளர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியை இந்த அவையிலே நான் காணிக்கையாக்குகின்றேன். மனித முயற்சிகளின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்டு, பெய்தும், பெய்யாமலும் கெடுக்கும் வான் மழையை, பருவ மழையை முழுமையாக நம்பிச் செயல்பட வேண்டிய துறை வேளாண்மைத் துறை. ஆகையால், வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடிய வள்ளலாரின் மனோபாவத்துடன் அரசு வேளாண்மைத் துறைக்குக் கூடுதல் முக்கியத்துவம் அளிக்க வேண்டும். தமிழகத்தில் 70 சதவீதம் பேர் கிராமத்தையே, விவசாயத்தையே மையத் தொழிலாகக் கொண்டு வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள் என்று வேளாண்மைத் துறையினுடைய கொள்கை விளக்கக் குறிப்பேடுகூட ஒப்புக்கொள்கிறது. ஆனால், இவர்கள் எல்லாம் சுபிட்சமாக, மகிழ்ச்சியாக இருக்கிறார்களா என்று சொன்னால், இல்லை என்பதுதான் பொதுவான கருத்து. பாரதிய ஜனதாக் கட்சியை உருவாக்கிய தலைவர்களில் ஒருவரான தீனதயாள் உபாத்தியாயா அவர்கள் தெரிவித்தது, அரசின் நோக்கம், "Poorest among poor in a country should be glad". கடையனுக்கும் கடைத்தேற்றம் என்ற நோக்கத்திலேதான் எங்களுடைய இயக்கம் தோன்றியது. அதேபோல, அறிஞர் அண்ணா அவர்கள்கூட இந்தக் கருத்தை, "ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்" என்று கிராமப்புற விவசாயிகளை மையப்படுத்தித்தான் சொன்னார்கள். மத்திய அரசில் கடந்த 50 ஆண்டுகளுக்குப் பிறகு அட்டல் பிகாரி வாஜ்பாய்





அவர்கள் பாரதப் பிரதமராகப் பொறுப்பேற்றதற்குப் பிறகு, முதன்முதலாகக் கடந்த மூன்று ஆண்டுகளில் இராணுவத்திற்குத் தருகின்ற முக்கியத்துவத்தையடுத்து விவசாயிகளுக்காக மத்திய அரசு பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்தியிருக்கிறது. நம்முடைய கொள்கை விளக்கக் குறிப்பேட்டிலேகூட, பக்கம் 23 முதல் தொடர்ந்து மத்திய அரசினுடைய திட்டங்களையெல்லாம் வெளிப்படையாக விலாவாரியாக ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

தென்னை மேம்பாட்டுத் திட்டம், தேசிய பயறு வகை அபிவிருத்தித் திட்டம், பருத்தி தொழில்நுட்பவியல் குழுத் திட்டம், எண்ணெய் வித்துக்கள் உற்பத்தித் திட்டம், எண்ணெய்ப் பனை சாகுபடித் திட்டம், தென்னை உற்பத்தித் திறனை அதிகரிக்க ஒருங்கிணைந்த பண்ணை முறை, நெட்டை, குட்டை தென்னைகள் உற்பத்தி, நெல் மற்றும் சிறு தானிய சிறு தழைகள் திட்டம், பாசன மேம்பாட்டுத் திட்டம், அதுமட்டுமல்லாமல், தேசிய முழுமைக்கும் பொருத்தமாக இருக்கிற Dry Area Development Programme தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் Drought-prone project அதாவது, வறட்சி நில மேம்பாட்டுத் திட்டம், மத்திய நிதியாதாரத் திட்டம், மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம், Hill Area Development Programme என்று பல்வேறு ஆக்கபூர்வமான திட்டங்களையெல்லாம் மத்திய அரசு அறிவித்திருக்கிறது; நடைமுறைப்படுத்தியிருக்கிறது. மத்திய அரசும், இந்த அரசும் இணைந்து இந்தத் திட்டங்களிலே பணியாற்றினால், நிச்சயமாக, 'இந்தியாவிலேயே தமிழகத்தை முதல் இடமாக ஆக்குவேன்' என்று சூளுரைத்து இருக்கின்ற மாண்புமிகு தமிழக முதல்வருடைய எண்ணம் நிறைவேறும் என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை எனக்கு இருக்கிறது. என்னுடைய மாவட்டம் முழுமையான விவசாயிகள் மாவட்டம். பருவம் தவறிப் பெய்த மழையினுடைய கொடுமை; நம்முடைய வேளாண்மைத் துறை அமைச்சர் ஜீவானந்தம் அவர்கள் ஆண்டிப்பட்டி தேர்தலிலே பிரச்சாரம் செய்ய வந்தபோதுகூட, எங்களுடைய வேண்டுகோளை ஏற்று, நேரடியாகவே கொட்டும் மழையில் தொப்பலாக நனைந்து விவசாயிகளுக்கெல்லாம் ஆறுதல் கூறிய சம்பவத்தை நான் நினைவுகூர்கிறேன். நேரில் வந்து ஆறுதல் கூறியதையெல்லாம் நாங்கள் மறக்கவில்லை. ஆனால், அந்த முழுமையான ஆறுதல் வார்த்தையோடு மட்டுமல்லாமல், ஏறத்தாழ 49 கோடி ரூபாய் நிவாரணமாக அளித்தால்கூட, அது போதாத நிலையிலே இன்று வரை கஷ்டப்பட்டு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர், நம்முடைய சிவபுண்ணியம் அவர்கள் சொல்லியதைப் போல, முழுமையாக நில வரியிலிருந்து எங்களை விடுவிக்க வேண்டும்.

[திரு. ஜெக. வீரபாண்டியன்] [2002 ஏப்ரல் 23

அதேபோல, நெல் கொள்முதலை நிறுத்தி இருப்பதை மாற்றி, வேண்டுமானால் தயவுசெய்து ஒரு தாலுகாவுக்கு மூன்று சென்டர்கள் வீதம் நிச்சயமாகக் கொள்முதல் செய்ய வேண்டும். ஏராளமான அளவில் நெல் இன்று காத்திருக்கின்றது. தற்போது நம்முடைய அமைச்சருக்குச் சொந்த மாவட்டமான நாகை தெற்கு மாவட்டத்திலே அறுவடை நடந்துகொண்டிருக்கிறது. விவசாயிகள் எல்லாம் நிச்சயமாக, உற்பத்தி செய்த நெல்லை விற்க முடியாமல் திணறுவதை எங்களால் கண்கூடாகப் பார்க்க முடிகிறது. ஆகையால், அரசு அதிலே பிடிவாதம் காட்டாமல்; மக்களுடைய கோரிக்கையை ஏற்று, தயவுசெய்து தாலுகாவுக்கு மூன்று சென்டர்களில் நெல்லை அரசே கொள்முதல் செய்ய வேண்டுமென்ற கோரிக்கையை நான் முன்வைக்க விரும்புகிறேன்.

பிற்பகல் 1-10

அதேபோல், என்னுடைய தொகுதிப் பிரச்சினைகள்; நேரம் குறைவாக இருக்கிற காரணத்தால், மிகச் சுருக்கமாக முடிக்க விரும்புகிறேன். தொகுதிக்கு நேரடியாக வந்து விடுகிறேன். தற்போது எங்கள் நாகை மாவட்டத்திலே, மயிலாடுதுறை தொகுதியிலே ஒரே ஒரு நூற்பாலை, கூட்டுறவு நூற்பாலை இயங்கிக் கொண்டிருக்கிறது. அது நஷ்டத்தில் இயங்கிக் கொண்டிருந்தாலும்கூட, கடந்த 3 மாத காலமாக அங்கு ஊழியர்களுக்குச் சம்பளம்கூடக் கொடுக்காமல் இன்று வரை அவர்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள். ஒட்டுமொத்தத் தொழிலாளிகளும் விருப்ப ஓய்வுத் திட்டத்தை மனதார ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அரசே நேரடியாக அந்த ஆலையை மேற்கொண்டு சிக்கனமான நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டால், நிச்சயமாக அது இலாபகரமான நிலைக்கு வரும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. அதேபோல, எங்கள் தொகுதியில் ஒன்றே ஒன்று அது நடிப்பிசைப் புலவர் கே.ஆர். இராமசாமி கூட்டுறவு சர்க்கரை ஆலைதான். இந்தச் சர்க்கரை ஆலை தற்போது நஷ்டத்தில் இயங்கிக் கொண்டு இருப்பதாகச் சொல்கிறார்கள். தமிழகத்திலே தொடங்கிய அத்தனை ஆலைகளிலும், இந்தச் சர்க்கரை ஆலை மிக உன்னத நிலையில் இருந்தது.

**(மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. பி.ஆர். சுந்தரம் தலைமை)**

விரிவாக்கம் செய்யப்பட்டபோதுதான் தவறான நடவடிக்கை காரணமாக, நஷ்டத்தில் இயங்கி, இப்போது மேலும் பிரச்சினைகளோடு இயங்கிக் கொண்டிருக்கிறது. விவசாயிகள் அனைவரும் கரும்புக்கு டன்னுக்கு ஆயிரம் ரூபாய் எதிர்பார்ப்பதைவிட கொடுத்த கரும்புக்கு



2002 ஏப்ரல் 23] [திரு. ஜெக. வீரபாண்டியன்]

உடனடியாகப் பணம் கொடுத்தால் போதும் என்கிற நிலைமைக்கு, மனப் பக்குவத்திற்கு வந்திருக்கிறார்கள். ஆயிரம் ரூபாய் அறிவித்தால் சந்தோஷம் அடைவோம் என்றாலும், அரவைக்குக் கொடுத்த கரும்புக்கு உடனடியாக நிர்வாகம் பணமாகக் கொடுத்தால் நிச்சயமாக எங்கள் விவசாயிகள் மகிழ்ச்சியடைவார்கள். சென்ற முறை கரும்பு விவசாயிகளுக்கு நிலுவைத் தொகை கொடுக்கப்படாதபோது நம்முடைய பாரதிய ஜனதா கட்சி சார்பாக, நாங்களும், அதேபோல 8-1-2002 அன்று நம்முடைய முன்னாள் அமைச்சர் திரு. பாண்டுரங்கன் அவர்களும், கூட்டுறவுத் துறை அமைச்சர் அன்பிற்குரிய அண்ணன் திரு. தனபால் அவர்களும்... (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.ஆர். சுந்தரம்):** இரண்டு நிமிடங்களில் உரையை முடித்து விடுங்கள். பெல் அடித்ததை மறந்து விட்டீர்கள் போலிருக்கிறது.

**திரு. ஜெக. வீரபாண்டியன்:** இரண்டு நிமிடங்களில் முடித்து விடுகிறேன். நாங்களும் மத்திய அமைச்சரை நேரில் சந்தித்து, அதன் தொடர்ச்சியாக, ஈரோடு வரைக்கும் நேரடியாகச் சென்று கரும்பு விவசாயிகளுடைய நிலைமையை நேரில் சொல்லி, என்னுடைய அகில இந்தியத் தலைவர் திரு. ஜனா. கிருஷ்ணமூர்த்தி மூலமாகவும் வலியுறுத்தி 87.20 கோடி ரூபாயைப் பெற்றுத் தந்திருக்கிறோம். ஆனால், எங்களுடைய ஆலை நிருவாகம் ஒரு நன்றிக் கடிதம்கூட எழுதவில்லை என்பதை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பொதுவாக—மக்களுடைய ஏகோபித்த விருப்பத்தைச் சொல்லி விடைபெறுகின்றேன்.—மயிலாடுதுறை, பல்வேறு காரணங்களால் மாவட்டத் தலைநகரமாக ஆக்குவதற்கான அத்தனை உரிமையையும் பெற்றிருக்கிறது: மாவட்டப் பிரிவினையின்போது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் உள்ளிட்ட அனைத்துக் கட்சிகளும் என்னுடைய தலைமையில் கூடி, ஒரு போராட்டக் குழுவை அமைத்து மிகப் பெரிய அளவில் போராடினோம். மயிலாடுதுறை மட்டுமல்லாமல், பக்கத்தில் உள்ள பூம்புகார், சீர்காழியில்கூட அந்தப் போராட்டம் முழுமையாக வெற்றி பெற்றது. போராட்டம் வெற்றி பெற்றதே தவிர, எங்கள் கோரிக்கை நிறைவேறவில்லை. என்றாலும்கூட, அந்தக் கோரிக்கையானது நியாயமானது; இன்று வரை இருக்கிறது. ஆகையினால், தமிழக அரசு மயிலாடுதுறையை மாவட்டத் தலைநகரமாக ஆக்க வேண்டுமென்ற கருத்தை இந்த அவையிலே பதிய வைக்க விரும்புகிறேன். அதேபோல....

[2002 ஏப்ரல் 23

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.ஆர். சுந்தரம்):** பேச்சை முடியுங்கள்.

**திரு. ஜெக. வீரபாண்டியன்:** ஒரு நிமிடம். புதிய பேருந்து நிலையம் அமைப்பதற்கு, தனிப்பட்ட முறையிலே ஒரு நீண்ட கோரிக்கையை எழுத்து மூலமாக நாங்கள் முதலமைச்சர் அவர்களிடம் தர இருக்கிறோம். இன்று வரை மயிலாடுதுறை பாதாளச் சாக்கடைத் திட்டத்தை முழுமையாக நிறைவேற்றுவதற்கு ஒத்துழைப்பு நல்கிய அனைத்திந்திய அண்ணா தி.மு.க.-விற்கும், அரசுக்கும் நன்றி தெரிவித்துக்கொண்டு, புதிய பேருந்து நிலையம் அமைப்பதற்கு இந்த அரசு முழுமையான உத்தரவாதம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, நிச்சயமாக பாரத நாட்டை உலகத்திலேயே ஒரு முன்னுதாரணமாக ஆக்க வேண்டுமென்ற இலட்சியம் எங்களுக்கு இருக்கிறது. தமிழகத்தை ஒரு முன், மாதிரி மாநிலமாக ஆக்கவேண்டுமென்று தமிழக முதலமைச்சர் சூளுரைத்ததைப் போல, பாரதிய ஜனதா கட்சிக்கு, இந்தியத் திருநாட்டை உலகம் தழுவிய நிலையில் உயர்த்த வேண்டுமென்ற ஒப்பற்ற லட்சியம் இருக்கிறது. மத்திய அரசினுடைய திட்டங்களை முழுமையாக மாநில அரசு நிறைவேற்றுமேயானால் நிச்சயமாக இந்தக் கனவு நிறைவேறும் என்று சொல்லி, நேரம் குறைவாக இருந்தபோதும் இந்த அளவிற்கு ஒத்துழைப்பு நல்கிய அவைத் தலைவர் உள்ளிட்ட அத்தனை உறுப்பினர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்து, விடைபெறுகின்றேன், வணக்கம்.

பிற்பகல் 1-15

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.ஆர். சுந்தரம்):** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் பி. வள்ளல் பெருமான்.

***டாக்டர் பி. வள்ளல் பெருமான்:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறையின் மீதான மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு வாய்ப்புத் தந்தமைக்கு நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன். எங்களுடைய கடலூர் மாவட்டத்தில் விவசாயிகள், சிறு விவசாயிகள், விவசாயக் கூலிகள், நிலமற்ற விவசாயிகள், இலட்சக்கணக்கான விவசாயிகள் வீராணம் ஏரிப் பாசனத்தையே நம்பியிருக்கிறார்கள். இந்த வீராணம் ஏரி, கிட்டத்தட்ட



2002 ஏப்ரல் 23] [டாக்டர் பி. வள்ளல் பெருமான்]

சுமார் 1,15,000 ஏக்கர் விவசாய நிலத்திற்குப் பாசனம் செய்கின்றது. இந்த வீராணம் ஏரி, பல ஆண்டுகளாக மண்மேடிட்டதன் காரணமாக இருபோக சாகுபடிகள் இன்றைக்குக் குறைந்து, ஒருபோக சாகுபடியாகவே இன்றைக்கு இருந்துகொண்டிருக்கின்றது. அந்த ஒருபோக சாகுபடியும், உரிய காலகட்டத்திலே பருவமழை இல்லாத காரணத்தால் பாதித்து, காவிரி நீர்ப் பிரச்சினையின் காரணமாகவும் விவசாயம் செய்ய முடியாமல் விவசாயிகள் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையிலே தமிழக அரசு புதிய வீராணம் திட்டம் என்ற திட்டத்தினை சென்னை மாநகருக்குக் குடிநீரை எடுத்துச் செல்வதற்காக அறிவித்திருக்கின்றது. சென்னை மாநகருக்குக் குடிநீர் எடுத்துச் செல்வதிலே, வீராணம் ஏரியை நம்பியிருக்கின்ற விவசாயிகளுக்கு எந்தவித ஆட்சேபனையும் இல்லை. ஆனால், விவசாயத்தையே நம்பிக் கொண்டிருக்கின்ற விவசாயிகளுக்கு அச்சம் ஏற்பட்டிருக்கின்றது. காரணம், 39 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்டது வீராணம் ஏரி அதனுடைய கொள்ளளவு 1923 ஆம் ஆண்டு 1,440 மில்லியன் கன அடியாக இருந்து, இன்றைக்கு 930 மில்லியன் கன அடியாகக் குறைந்திருக்கின்றது.

கொள்ளிடம் கீழ் அணையிலிருந்து வீராணம் ஏரிக்குத் தண்ணீர் கொண்டு வரும் வரத்து வாய்க்காலான வடவாறு இன்றைக்குத் தூர்ந்து இருக்கின்றது. அதைப்போல, வீராணம் ஏரியும் தூர்ந்து இருப்பதன் காரணமாக, விவசாயிகளுக்கு அச்சம் ஏற்பட்டிருக்கின்றது. அந்த அச்சத்தைப் போக்குகின்ற வகையிலே தமிழக அரசு ஒரு நிலையான கொள்கையை அறிவிக்க வேண்டும் என்று நான் இந்த அரிய சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

***மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, வீராணம் ஏரியிலிருந்து சென்னைக் குடிநீருக்காகத் திட்டம் தயாரிக்கப்பட்டு, அது நடைமுறையில் செயல்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசியபோது, வீராணம் ஏரியிலிருந்து பாசனத்திற்குத் தண்ணீர் உறுதி செய்யப்பட வேண்டும் என்றும், அங்கே அந்தப் பாசனத்தின் மூலம் பயன்பெறுகின்ற விவசாயப் பெருங்குடி மக்களுடைய அச்சத்தைப் போக்க வேண்டும் என்றும் சொன்னார்கள்.

மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசு எந்த வகையிலும் விவசாயத்திற்குண்டான நீரினைக் குறைக்காது என்பதனையும், மேலும், அந்த வீராணம் ஏரியினுடைய உயரத்தினை உயர்த்துவதற்கு உண்டான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதனையும், மற்றபடி அந்த வரத்து வாய்க்காலையும், ஏரியிலிருந்து பெறப்படுகின்ற் நீரினைப் பகிர்ந்து கொள்கின்ற வாய்க்காலையும் சீரமைக்கும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதனையும், சென்னைக் குடிநீருக்கு அந்த ஏரியிலிருந்து எடுத்துக்கொள்ளப்படும் நீரின் அளவு எந்தவிதத்திலும் அந்தப் பகுதியில் இருக்கிற விவசாயப் பெருங்குடி மக்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தாது என்பதனையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

**டாக்டர் பி. வள்ளல் பெருமான்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றிகூறக் கடமைப்பட்டிருக்கிறேன். அதே சமயத்திலே, அந்தக் கொள்ளளவை உயர்த்துவதற்கும், அந்த வீராணம் ஏரியை மேம்படுத்துவதற்கும் கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே 106 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, 40 கோடி ரூபாய்தான் செலவு செய்யப்பட்டிருக்கின்றது. அதேபோல், வரத்து வாய்க்காலான அந்த வடவாற்றிலே 21 கிலோ மீட்டரில் 13 கிலோ மீட்டர் அளவிற்குத்தான் வாய்க்கால் கரைகளை strengthen செய்து, கீழ்தளங்களுக்கு cement concrete போட்டிருக்கின்றார்கள். மீதம் 8 கிலோ மீட்டர் இன்னும் சரி செய்யப்படவில்லை. அதைப்போல, வீராணம் ஏரியின் கரையை சரியான முறையிலே உயர்த்தவில்லை. 30 சதவிகிதம் அளவில்தான், மண்மேடிட்ட அந்தப் பகுதிகளை அகற்றி இருக்கின்றார்கள். மீதம் 70 சதவிகிதம் இன்னும் மண் அகற்றப்படவில்லை என்பதை இந்த மாமன்றத்திலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 1-20

அதைப்போல, இந்த ஆண்டும் 77 கோடி ரூபாய் அளவுக்கு நிதி ஒதுக்கீடு செய்திருப்பதாக அறிவித்திருக்கின்றீர்கள். அதுகூட அந்த ரெகுலேட்டர்களைச் சரிசெய்வதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகின்றது. வரத்து வாய்க்காலான வடவாற்றிலிருந்து 24 பாசன வாய்க்கால்களும், வீராணம் ஏரியிலிருந்து 35 பாசன





வாய்க்கால்களும் பிரிந்து விவசாயத்திற்குத் தண்ணீர் எடுத்துச் செல்லப்படுகின்றது. அந்த 35 வாய்க்கால்களும், 24 வாய்க்கால்களும் தூர்ந்துபோய் சரியான முறையிலே இல்லை. தண்ணீர் திறந்துவிட்டால் தலைமடையிலிருந்து கடைசி வரையிலே செல்வதற்கு வாரக் கணக்கிலே ஆவதால் விவசாயிகள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இந்தத் திட்டத்தின் மூலமாக, தலைப்பிலிருந்து மதகுகளைச் சரிசெய்து, ஷட்டர்களைச் சரிசெய்து தண்ணீர் திறந்துவிட்டால், ஓரிரு நாட்களுக்குள் விவசாயிகளுக்குக் கடைமடை வரையில் தாராளமாகச் செல்லும்; அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இதுபோன்று பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. ஒரு பக்கம் மண்மேடிட்டு, கொள்ளளவு குறைவாக இருக்கிறது. இன்னொரு பக்கம் காவிரி நீர்ப் பிரச்சினை இருக்கிறது. இன்னொரு பக்கம் பருவ காலங்களிலே சரியான முறையிலே மழை பெய்வது கிடையாது. இப்படிப்பட்ட சூழ்நிலையிலே இந்தப் பிரச்சினைகளை எல்லாம் தீர்க்கின்ற வகையிலே வாய்க்கால்களைச் சரிசெய்து, கொள்ளளவை உயர்த்தி, தண்ணீர் எடுத்துச் செல்வதிலே எங்களுக்கு எந்தவிதமான ஆட்சேபனையும் இல்லை என்று விவசாயிகள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இந்தத் திட்டம் அறிவிக்கப்பட்ட பிறகு, பல கூட்டங்கள், பல போராட்டங்கள் நடைபெற்றன. ஆகவே, இதுபோன்ற பிரச்சினைகளைத் தீர்க்காமல், விவசாயிகளுடைய அடிப்படை வசதிகளைச் சரிசெய்து கொடுக்காமல், ஒரு சொட்டுத் தண்ணீர்கூட எடுத்துச் செல்வது மிகவும் கஷ்டமாக இருக்கும் என்று விவசாயிகள் மத்தியிலே பேசப்படுகிறது. இதை அரசு கவனத்தில் கொள்ள வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, தமிழகம் முழுவதும் பல ஆயிரக்கணக்கான பாசன வாய்க்கால்கள், இன்றைக்கு Revenue channel—வருவாய்த் துறை பாசன வாய்க்கால்கள்—ஆக இருக்கின்றன. அந்தக் காலத்திலே குடிமராமத்து மூலமாக விவசாயிகளே அதை maintain செய்து வந்தார்கள். ஆனால், இன்றைக்கு விவசாயிகள் விவசாயப் பொருட்களை உற்பத்தி செய்வதற்கு மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். உற்பத்தி செய்கின்ற விவசாயப் பொருட்களை விற்பதற்கும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அப்படியே உற்பத்தி செய்தாலும் அரசு கொள்முதல் செய்வது கிடையாது. இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையிலே விவசாயிகளே வருவாய்த் துறையில் இருக்கின்ற வாய்க்கால்களை எப்படிச் சரிசெய்வார்கள் என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவர நான் விரும்புகிறேன்.

[டாக்டர் பி. வள்ளல் பெருமான்] [2002 ஏப்ரல் 23

சிதம்பரம் டிவிஷனில்—பொதுப் பணித் துறை—கிட்டத்தட்ட 287 பாசன வாய்க்கால்கள் இருக்கின்றன. அந்த 287 பாசன வாய்க்கால்களிலே 232 வாய்க்கால்கள் வருவாய்த் துறையின்கீழ் வருகின்றன. ஆகவே, வருவாய்த் துறையின்கீழ் வருகின்ற அந்தப் பாசன வாய்க்கால்களை பொதுப் பணித் துறையின்கீழ் எடுத்துக்கொள்ள அரசு முன்வர வேண்டுமென்று நான் கோரக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) ஏற்கெனவே காவிரி நீர்ப் பற்றாக்குறையினால் வாலாஜா ஏரிப் பகுதியில் இருக்கின்ற விவசாயிகள், நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்திலிருந்து வெளியேற்றப்படுகின்ற தண்ணீர் மூலமாக 20 ஆயிரம் ஏக்கர் பயிர் செய்கின்றார்கள். அந்தத் தண்ணீர் மிகவும் மோசமான நிலையில், கெமிக்கல் கலந்து இருப்பதால் அங்கும் விவசாயிகள் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதற்கும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் இந்த அரிய சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன். ஆகவே, விவசாயிகள் அதிகமாக நம்பிக் கொண்டிருக்கின்ற அந்த வீராணம் ஏரிக்கு ஒரு விமோசனமாக, தமிழக அரசு நல்ல முறையிலே அங்கே இருக்கின்ற விவசாயிகளுடைய குறைகளை முதலிலே போக்கிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மழைக்காலங்களில் வெள்ள நீர் வடிவதற்கு ஏதுவாக வடிகால்களைச் சீர்செய்து கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். தஞ்சை, திருவாரூர், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, கடலூர் போன்ற மாவட்டங்களில், குறிப்பாக வடிகால் வசதிகள் குறைவாக இருக்கின்றன. வடிகால் பாசன வாய்க்கால்கள் பெரும்பாலும் தனியார் துறையினரால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கின்றன. அந்த வடிகால்களைச் சீர்செய்து கொடுத்தால் மழை பெய்த ஓரிரு நாட்களிலேயே தண்ணீர் வடிந்துவிடும். Prevention is better than cure என்று சொல்லுவார்கள். அதைப்போல நாம் வெள்ள நீர் வடிவதற்கு வடிகால்களைச் சீர்செய்து கொடுத்தால் நன்றாக இருக்கும். அரசு இந்த ஆண்டு மட்டும் 49 கோடி ரூபாய் வெள்ள நிவாரண நிதி கொடுத்திருக்கிறது. இதுபோன்ற வெள்ள நிவாரணம் கொடுக்கவே தேவையில்லை. எங்கெங்கெல்லாம் புதிதாக வடிகால்களை வெட்ட வேண்டுமோ, அங்கெங்கெல்லாம் வெட்டிக் கொடுக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, இன்றைக்குத் தமிழக அரசு மூலமாக இலவச மின்சாரம் விவசாயிகளுக்குத் தொடர்ந்து கிடைத்திட வேண்டுமென்பதில் எல்லா அரசியல் இயக்கங்களும் கண்ணுங்கருத்துமாக இருக்கின்றன. அதே சமயத்திலே, விவசாயிகள் பயன்படுத்துகின்ற பம்புசெட்டுகளுக்கு



2002 ஏப்ரல் 23] [டாக்டர் பி. வள்ளல் பெருமான்]

மீட்டர் பொருத்துவது என்ற ஒரு திட்டத்தைக் கொண்டு வந்திருக்கின்றீர்கள். இதை உண்மையிலேயே நான் வரவேற்கின்றேன். காரணம், நானே பல இடங்களில் பார்த்து இருக்கின்றேன். இந்தப் பம்புசெட்டுகளுக்கான மின்சாரத்தைப் பல பேர் வீட்டு உபயோகம் அனைத்திற்கும் உபயோகித்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே, இது ஒரு நல்ல திட்டம் என்பதை என்னுடைய கருத்தாக நான் இங்கே வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 1-25

நம்முடைய கிராமங்களிலே விவசாயிகள் பயன்படுத்திக்கொள்வதற்கு உலர் களங்கள் இல்லை; களங்கள் கிடையாது. அது நெல்லாக இருந்தாலும், சோளமாக இருந்தாலும், கேழ்வரகாக இருந்தாலும் அல்லது உளுந்து, பயறு போன்றவையாக இருந்தாலும் ரோட்டிலே போட்டு அடித்துக்கொண்டிருக்கின்றார்கள். ஆனால், (மணியடிக்கப்பெற்றது) இரண்டு நிமிடங்கள் கூடக்கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள், ஒரு கிராமத்திற்கு ஒரு களம் என்று.

**டாக்டர் பி. வள்ளல் பெருமான்:** ஒரு களம் என்பது போதாது. கிராமத்திற்குக் குறைந்த, அளவு இரண்டு களங்களாவது இருக்க வேண்டும். ஒரு களம் என்றால், அது போதியதாக இருக்க முடியாது. 40-க்கு 80 என்ற அளவிலே ஒவ்வொரு கிராமத்திற்கும் 2 களங்களாவது கொடுத்தால் நன்றாக இருக்கும் என்று நான் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன். காரணம், ரோட்டிலே இப்படி அடித்துக்கொண்டிருப்பதால் தரமான விதைகள் கிடைப்பது கிடையாது. கலப்படமான விதைகள்தான் கிடைக்கின்றன. அதைப் போலவே போக்குவரத்துக்கு இடையூறாகி பல சாலை விபத்துகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

விவசாயக் கருவிகளை எடுத்துக்கொண்டால், டிராக்டர், போன்றவற்றுக்குத் தற்சமயம் அரசு மானியமாக 30,000 ரூபாய்தான் கொடுக்கப்படுகின்றது. அதுவும், மாவட்டத்திற்கு 30 முதல் 40 பயனாளிகளுக்குத்தான் கொடுக்கப்படுகின்றது. அந்த மானியத்தை உயர்த்தி, குறைந்தது மாவட்டத்திற்கு 200 பயனாளிகள் பயனடைய தமிழக அரசு ஒதுக்கீடு செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கின்றேன். (மணியடிக்கப்பெற்றது)

[2002 ஏப்ரல் 23

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி, உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

**டாக்டர் பி. வள்ளல் பெருமான்:** மீண்டும் நான் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். விவசாயத்தையே நம்பியிருக்கின்ற கடலூர் மாவட்ட விவசாயிகளுக்கான அந்த வீராணம் ஏரியைச் சரியான முறையிலே தூர் வாரி பாசன வாய்க்கால்களைச் சரிசெய்து நீர் எடுத்துச் செல்ல வேண்டும். அதில் எந்தவித ஆட்சேபனையும் இல்லை. அப்படி மேம்பாட்டுத் திட்டத்தை முறையாக 100-க்கு 100 சரி செய்யவில்லை என்றால், அங்கிருந்து ஒரு சொட்டுத் தண்ணீர்கூட எடுத்துச்செல்ல முடியாது என்பதை, நானும் ஒரு விவசாயி என்ற முறையிலே கூறி, இந்த வீராணம் ஏரி என்னுடைய சட்டமன்றத் தொகுதியிலே அமைந்திருக்கிறது என்பதையும் கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. என்.ஆர். ரங்கராஜன், தமிழ் மாநில காங்கிரஸ்.

**திரு. என்.ஆர். ரங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறையைப் பற்றிய மானியக் கோரிக்கையில் எனது கருத்துகளை தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பாகக் கூற அனுமதி அளித்ததற்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

எங்கள் தலைவர் ஐயா ஜி.கே. வாசன், எம்.பி. அவர்களை வணங்கி, எனது உரையைத் தொடங்குகின்றேன்.

தமிழகத்தில் உள்ள பெரும்பான்மையான மக்கள் விவசாயத்தையே நம்பி இருக்கக்கூடியவர்கள். குறிப்பாக, தஞ்சை மாவட்டத்திலே 90 சதவீதம் பேர் விவசாயிகளாகவும், விவசாயக் கூலிகளாகவும் உள்ளனர். தமிழக அரசு இப்போது கொண்டு வந்துள்ள, "5 ஆண்டுகளில் 20 இலட்சம் எக்டேர் தரிசு நிலத்தை மேம்படுத்தக்கூடிய திட்டத்தை" — சிறப்பான திட்டத்தை நான் வரவேற்கின்றேன். இதன் மூலம் பல விவசாயிகளுக்கும், ஆயிரக்கணக்கான விவசாயத் தொழிலாளர்களுக்கும் நிச்சயம் பலன் கிடைக்கும் என்று நம்பலாம். எனவே, இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில், சிறப்போடு விரைவிலே செயல்படுத்திட வேண்டுமென்று மரியாதைக்குரிய முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுக்கு எனது கோரிக்கையையும், பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.



2002 ஏப்ரல் 23] [திரு. என்.ஆர். ரங்கராஜன்]

தோட்டக்கலையைப் பொறுத்தவரையிலே, தோட்டக்கலை வளர்ச்சி இயக்ககம் அமைக்கப்பட்டு, சொட்டு நீர் மூலம் நீர்வளப் பாதுகாப்பு, விளைபொருள் பாதுகாப்பு, வர்த்தக மண்டலம் ஏற்படுத்தல் போன்ற, பயிரிடுவது முதல் விற்பனை வரை ஒருங்கிணைப்பு ஆகியவற்றைச் செயல்படுத்துவதை நான் வரவேற்கின்றேன்.

சுற்றுச்சூழலில் ஏற்பட்ட வீழ்ச்சியின் காரணமாக இயற்கை உரங்கள், மண்புழுக் கழிவு உரங்கள் போன்றவற்றை விவசாயிகள் இடுபொருளாக இடுவதை ஊக்கப்படுத்த இவ்வரசு முடிவு செய்ததை நான் வரவேற்கின்றேன். இவ்வாறு இந்த அரசு, இயற்கை உரங்களை விளைவிக்கக்கூடிய வாய்ப்பை, இன்று இருக்கக்கூடிய மகளிர் சுய உதவிக் குழுக்களுக்குக் கொடுத்து, அவர்கள் மூலம் செயல்படுத்தினால் சிறந்த இயற்கை உரங்களைப் பெறக்கூடிய வாய்ப்பு இருக்கும். தமிழகத்தைப் பொறுத்தவரை அதிக அளவிலே பெண்களுக்கு அதன் மூலம் வேலைவாய்ப்பும் கிடைக்கும் என்பதையும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

பிற்பகல் 1-30

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் முன் அனுமதியோடு பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. என்.ஆர். ரங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய நெற்களஞ்சியமாம் தஞ்சை மண்ணிலிருந்து வந்தவன் விவசாயக் குடும்பத்தைச் சார்ந்தவன் என்ற முறையிலே சில கருத்துகளை இந்த அவையிலே சொல்ல விரும்புகின்றேன். பட்டுக்கோட்டை சட்டமன்றத் தொகுதியைப் பொறுத்தவரையில், சுமார் 20,000 எக்டேரில் நெற்பயிரும், 10,000 எக்டேரில் தென்னையும் சாகுபடி செய்யப்படுகின்றன. வேளாண்மைத் துறையின் மூலமாக வழங்கப்படக்கூடிய சான்று பெற்ற விதைகளுக்கு, கிலோ ஒன்றுக்கு ரூ. 2 மானியம் வழங்கப்பட்டு வருகின்றது. ஆனால், இந்த மானியம் 10 ஆண்டுகளுக்குட்பட்ட காலத்தில் வெளியிடப்பட்ட விதைகளுக்கு மட்டுமே வழங்கப்படுகின்றது. பட்டுக்கோட்டைப் பகுதியில் நிலவும் பருவ நிலைக்கேற்ப அதிக மகசூல் தரக்கூடிய ரகங்களான சி.ஆர். 1009, கோ-43, ஆடுதுறை-33, போன்ற ரகங்கள் பத்து ஆண்டுகளுக்கு முன்பு வெளிவந்த காரணத்தால் மானியம் வழங்கப்படுவதில்லை. ஆனால் விவசாயிகளைப் பொறுத்தவரையில் இந்த விதைகளை அதிகமாகப் பயன்படுத்துகின்றார்கள். எனவே, இந்த

[திரு. என்.ஆர். ரங்கராஜன்] [2002 ஏப்ரல் 23

விவசாயிகளுக்குப் பயன் அளிக்கக்கூடிய வகையிலே மேற்கண்ட இந்த ரகங்களுக்கும் மானியத்தை அதிகரித்து வழங்க வேண்டுமாய் அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, இந்த ஆண்டு பட்டுக்கோட்டைப் பகுதி கடைமடைப் பகுதியாக இருக்கக்கூடிய காரணத்தினால், தண்ணீர் காலதாமதமாக வந்ததால் அறுவடை தாமதமானது. அதே சமயத்தில், இடையில் பெய்த பெருமழையின் காரணமாக, வெள்ளமும் வந்து அறுவடைப் பணிகள் தொடராமல் நின்று போயின. விவசாயிகள் பெருமளவிலே பாதிக்கப்பட்டனர். நெற்பயிர்கள் நீரிலே மூழ்கியதன் காரணமாக, இதற்காக அரசு 49 கோடி ரூபாய் உதவித் தொகை வழங்கியுள்ளதை வரவேற்கக்கூடிய அதே நேரத்தில், இன்னும் அந்தப் பணி முழுமை பெறாமல் இருப்பதால், மத்திய அரசிடம் கேட்டு, அதிக நிதி பெற்று, விவசாயிகளுடைய துயரைத் துடைக்கும்படி மரியாதைக்குரிய நமது முதல்வர் அம்மா அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், விவசாயிகளுடைய சுமையைக் குறைக்கக்கூடிய வகையிலே நில வரியை இந்த வருடம் ரத்து செய்ய வேண்டும் என்றும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இலவச மின்சாரத்தைப் பொறுத்தவரையிலே, மீட்டர் இணைப்பைக் கணக்கிட வேண்டும் என்று கூறுவதும்கூடத் தேவையற்றது என்பது என்னுடைய எண்ணம். அதேபோல், இலவச மின்சாரத்தை எக்காரணத்தைக் கொண்டும் நிறுத்திவிடக் கூடாது என்பதையும் எனது கருத்தாக இந்த நேரத்திலே நான் கூறிக்கொள்கிறேன். கடந்த மாதம் நுகர்பொருள் வாணிபக் கழகம்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இத்துடன் உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. என்.ஆர். ரங்கராஜன்:** கொள்முதலை நிறுத்திவிட்ட காரணத்தால் விவசாயிகள் அறுவடை செய்த நெல்லை விற்க முடியாமல் இந்த நேரத்திலே மிகவும் சிரமப்பட்டனர். எனவே, வரக்கூடிய காலங்களில் நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் கொள்முதல் செய்வதை நீட்டித்து விவசாயிகளுக்கு உதவிட வேண்டுகிறேன். அறுவடைக் காலங்களில் மழை போன்ற இயற்கைச் சீற்றங்களுக்கு உள்ளாகும் சிறு விவசாயிகள் பயன்பெறும் விதத்திலே அவர்களுக்குத் தார்ப்பாய்கள் போன்றவற்றையெல்லாம் இருப்பு வைத்து வாடகைக்கு வழங்க ஏற்பாடு செய்யக் கோருகிறேன். விவசாய இடுபொருட்கள், தெளிப்பான்கள் மானிய விலையில் வழங்குவதை அதிகரித்து வழங்க வேண்டுகிறேன்.



2002 ஏப்ரல் 23] [திரு. என்.ஆர். ரங்கராஜன்]

அதைப்போலவே, பட்டுக்கோட்டையைப் பொறுத்தவரையில், பட்டுக்கோட்டை மற்றும் பேராவூரணி பகுதிகளிலே மிக அதிக அளவிற்குத் தேங்காய்கள் விளைகின்றன. 1980-ல் 3 ரூபாய்க்கு விற்ற தேங்காய் இன்று 2 ரூபாய்க்கு வாங்குவதற்கு ஆளின்றிக் கிடக்கிறது. கொப்பரைக் கொள்முதலைப் பொறுத்தவரையிலே, அதற்கொரு இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, குறிப்பிட்ட அளவிற்கு, அடையாள அட்டை வந்தால்தான் கொள்முதல் செய்வோம் என்று அதிகாரிகள் கூறுகின்றார்கள். அதை மாற்றியமைத்து, எந்த நேரத்திலும் கொப்பரையைக் கொள்முதல் செய்ய அரசு ஆவன செய்ய வேண்டுகிறேன். வரக்கூடிய காலங்களில் மத்திய அரசுடன் பேசி, கேரளாவில் செய்வதைப்போல, தேங்காய்களை நேரடியாக சொசைட்டி மூலம் கொள்முதல் செய்ய அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, சிலந்திப்பூச்சித் தாக்குதல்களினால் தென்னை மரங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டு வருகின்றன. ஒருங்கிணைந்த நோய் தீர்க்கும் திட்டத்தை உருவாக்கி, தென்னை மரத்தைப் பொறுத்தவரையில் நோய் தீர்க்கும் திட்டத்தை உருவாக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு, என்னுடைய தொகுதிப் பிரச்சினைகள் சிலவற்றை இந்த நேரத்திலே கூற வாய்ப்பளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மதுங்கூர், பட்டுக்கோட்டை தொகுதி, மதுங்கூர், கண்ணாறு புதிய தடுப்பு அணையிலிருந்து பம்பிங் சிஸ்டம் மூலம் கன்னியாகுறிச்சி, உலையகுன்னம் பகுதிகளில், சுமார் 2,500 ஏக்கர் பரப்பளவில் சாகுபடி செய்யப்படும் பயிர்களுக்குப் பாசன வசதி அளிக்க ஏற்பாடு செய்ய வேண்டுமாய் அரசை அன்போடு கேட்டுக்கொள்கிறேன். பட்டுக்கோட்டை மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கையான, துணை மண்டலப் போக்குவரத்து அலுவலகம் ஒன்று அமைக்க ஆவன செய்ய வேண்டுகின்றேன். பட்டுக்கோட்டையிலே இருக்கக்கூடிய அதிகக் கொசுத் தொந்தரவுகளை ஒழிக்கக்கூடிய வகையிலே பட்டுக்கோட்டை நகரிலே பாதாளச் சாக்கடைத் திட்டத்தினை நிறைவேற்ற வேண்டும் எனத் தெரிவித்துக்கொள்கிறேன். அதிராமபட்டினம் பேரூராட்சியிலே மீனவர்கள் மீன் பிடிக்கச் செல்லும் சாலை மிக மோசமான நிலையில் பழுதடைந்துள்ளது. ஆயிரக்கணக்கான மீனவர்கள் மழைக்காலங்களில் மீன் பிடிக்கச் செல்ல இயலாமல் தவிக்கின்றார்கள். எனவே, மீன்வளத்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினா திரு. சி. சண்முகவேலு.

பிற்பகல் 1-35

***திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவா் அவா்களே, காலத்தின் அருமை கருதி, ஆளுங்கட்சிக்காரா்களுக்கு பேசுவதற்கு 5 நிமிடங்கள்தான் இன்று அவையிலே கொடுத்திருக்கிறீா்கள் ஏதோ, சிறிது நேரத்தில் முடித்துக்கொள்கிறேன்.

சாதாரண கிராமத்தில் பிறந்த என்னை ஒன்றியக் கழகச் செயலாளராக்கி, மாவட்டக் கழகச் செயலாளராக்கி, சட்டமன்ற உறுப்பினராக்கி, இந்த அவையிலே அமைச்சராகவும் அமர வைத்து அழகு பாா்த்த எங்களது இதயதெய்வம் டாக்டா் புரட்சித் தலைவி அம்மா அவா்களுக்கு நானும், எனது குடும்பமும், உயிருள்ள வரை நன்றிக் கடன் பட்டவா்களாக இருப்போம் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சட்டமன்றத் தொகுதி மக்களின் சாா்பிலும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கையிலே என்னுடைய உரையைத் தொடங்குகின்றேன்.

தற்போது தமிழகத்தில் மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவா்கள் தலைமையின்கீழ் நமது அரசு,

'இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு'

என்ற திருவள்ளுவரின் கூற்றுக்கிணங்க செயல்பட்டு வருகிறது. நமது மாண்புமிகு இதயதெய்வம் முதல்வா் அம்மா அவா்களுக்கு எனது பரிந்துரைகளைப் பணிவோடு முன்வைக்க விரும்புகிறேன்.

'உழுதவன் கணக்குப் பாா்த்தால் உழக்குக்கூட மிஞ்சாது' என்பது கிராமத்தில் பேசப்படுவது. இங்குள்ள சட்டமன்ற உறுப்பினா்களில் பெரும்பாலோா் விவசாயக் குடும்பத்தைச் சோ்ந்தவா்கள்தான் உள்ளோம் என்பதை நாம் அனைவரும் நன்கு அறிவோம். மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவா்கள் ஆட்சிக்கு வந்தவுடன் விவசாயிகளுக்கு வட்டி, அபராத வட்டியைத் தள்ளுபடி செய்ததை யாரும் மறுக்க முடியாது. ஆனால், நேற்றையதினம் பேசும்போது, மாண்புமிகு உறுப்பினா்



பிச்சாண்டி அவா்கள், 5 ஆண்டு கால ஆட்சியிலே 200 கோடி தள்ளுபடி செய்தாா்கள் என்று பெருமையாக எடுத்துரைத்தாா்கள். ஆனால், எங்களது இதயதெய்வம் டாக்டா் புரட்சித் தலைவி அம்மா அவா்கள், கஜானா காலியாக இருந்த நேரத்தில், யாதொரு வாக்குறுதியும் இன்றி, விவசாயிகளுக்கு 311 கோடி ரூபாய் தள்ளுபடி செய்ததை மக்கள் நன்கு அறிவா். அதேபோல, ஒரு கிலோ அரிசி ரூ.3.50-க்கு நியாய விலைக் கடைகளில் வழங்கப்படும் என்பதை மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவா்கள் நிறைவேற்றி உள்ளாா்கள்.

அதேபோல, காவிரிப் பாசன விவசாயிகளின் நலன் கருதி, பல சலுகைகளை நமது முதல்வா் அம்மா அவா்கள் செய்துள்ளதை அப்பகுதி விவசாயிகள் நன்கு அறிவா். மேலும், தொடா்ந்து அம்மா அவா்களின் அரசு இலவச மின்சாரம் தருவோம் என்று சொன்ன உறுதி விவசாயிகள் மத்தியில் சிறந்ததொரு வரவேற்பைப் பெற்றுள்ளது என்பதை உறுப்பினா்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

தற்போது, வேளாண்மை, மரபு சாா்ந்த ஒரு வாழ்க்கை முறை என்பது மாறி, இன்றைக்கு அது வளமிகு தொழில் என்கிற ஆக்கப்பூா்வமான நிலையை அடைந்திருக்கிறது. டாக்டா் எம்.எஸ். சுவாமிநாதன் போன்ற விஞ்ஞானிகளின் ஆலோசனையின் பேரில் நம்முடைய மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவா்கள் பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்திக் கொண்டு வருகிறாா்கள். 1995-லேயே, நம்முடைய இதயதெய்வம் அம்மா அவா்கள் தமிழக முதல்வராக இருந்தபொழுதே, தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்திற்கு அன்றைய காலகட்டத்திலேயே 12 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, அன்று பணிகள் நடைபெற்றன. தரிசு நில மேம்பாட்டுத் திட்டமானது, நேற்றையதினம் அம்மா கூறியதுபோல, மொத்த நிலப் பரப்பு 20 இலட்சம் எக்டோ் உள்ளதிலே, அரசுத் துறையிலே 3 இலட்சம் எக்டோ் உள்ளது. தனியாா்களிடம் 17 இலட்சம் எக்டோ் நிலங்கள் உள்ளன. நமது அரசு தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தினை அமலாக்கம் செய்து, வேளாண்மை உற்பத்தியைப் பெருக்க மிகப் பெரிய திட்டம் வகுத்துள்ளது. இது பொது மக்களிடத்திலே மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளது. இத்திட்டத்தினை அரசு சாரா சேவை இயக்கங்களிடம் ஒப்படைக்க இருப்பதாகத் தெரிய வருகிறது.

வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்று வேலை இல்லாமல் இருக்கும் வேளாண்மைப் பட்டதாரிகளிடையே சுய வேலை

வாய்ப்புக் குழுக்கள் அமைத்து, அவற்றை வேளாண்மைத் துறையின் மேற்பார்வையின்கீழ் செயல்படுத்த ஆவன செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன். இதனால் தொழில்நுட்பப் பட்டதாரிகளிடையே நிலவி வரும் வேலையில்லாத் திண்டாட்டம் குறைக்கப்படுவதோடு, திட்டம் தகுதி வாய்ந்த நபர்களால் செயல்படுத்தப்படுவதால், வெற்றிகரமாக நிறைவேறி அரசு எதிர்பார்க்கும் குறியீடும் நிறைவேற்றப்படுமெனத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், 2006 ஆம் ஆண்டுக்குள் எந்த ஒரு குடும்பமும் வறுமைக்கோட்டிற்குக்கீழ் இல்லை என்ற நிலையை உருவாக்க வேண்டுமென்ற நம்முடைய மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்களுடைய இலட்சியம் இதன் மூலம் நிறைவேற்றப்படும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், இந்தத் தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்திலே அரசு கவனமாகக் கவனிக்க வேண்டிய ஒன்று உள்ளது. அதிலே, தமிழக அரசின் மூலமாக, சொட்டு நீர்ப்பாசனத்தின் மூலமாக மானியமாக, ஆண்களுக்கு 2 ஆயிரம்; அல்லது பெண்களாக இருந்தால் 4 ஆயிரம் கொடுக்கிறார்கள். அதேபோல, தமிழக அரசின் மூலமாக, வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலமாக மானியமாக ரூபாய் 4,000 கொடுக்கிறார்கள். அதைப்போல, மத்திய அரசின் தோட்டக்கலை வாரியத்தின் மூலமாக மானியமாக ரூபாய் 6,000 கொடுக்கிறார்கள். அதைப்போல, மத்திய அரசு தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின் மூலமாக ரூ.6,250 கொடுக்கிறது. மொத்தமாகக் கூட்டிப் பார்த்தீர்களென்றால், ஒரு ஏக்கருக்கு அரசு மூலமாகக் கிடைக்கக்கூடிய மானியமே 20,250 ரூபாய் வருகிறது என்பதை நீங்கள் கவனத்திலே எடுத்துக்கொள்ள வேண்டும். ஒரு ஏக்கர் தரிசு நிலத்தை மேம்படுத்துவதற்கு 35,000 ரூபாய்தான் செலவாகும். அதிலே 20,000 ரூபாய் அரசு மூலமாகவே நிதியாகக் கிடைக்க கூடிய ஒரு வாய்ப்புள்ளது. இதை ஒரே வங்கி மூலமாக ஒருங்கிணைந்து செய்தால் விவசாயிகளுக்குக் காலமும், நேரமும் மீதியாகக் கிடைக்கக்கூடிய வகையிலே அந்தப் பலனானது சுலபமாகக் கிடைக்கக்கூடிய ஒரு வகை இருக்கும். அதை நம்முடைய அரசு கவனத்தோடு செயல்படுத்த வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-40

மேலும், இங்கே நேற்றைய முன்தினம் பேசும்போது, கொப்பரைத் தேங்காயைப்பற்றிப் பேசினார்கள். கொப்பரைத் தேங்காயைப்



பொறுத்தவரை, நம்முடைய அரசு இன்னும் கவனத்தில் எடுத்து, கொள்முதல் செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். தென்னை விவசாயிகளுக்கு எங்களது பகுதியிலே வறட்சியான ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. உடுமலை, அதேபோல் கிணத்துக்கடவு, பொள்ளாச்சி போன்ற பகுதிகளிலே 1,15,000 ஏக்கரிலே தென்னை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. அங்கே பொள்ளாச்சி தாலுக்கா, கிணத்துக்கடவு, பொங்கலூர், தாராபுரம் போன்ற பகுதிகளிலே 15,000 ஏக்கர் பரப்பிலே பயிரிடப்பட்டுள்ள தென்னை மற்றும் உடுமலைப் பகுதியிலே பயிரிடப்பட்டுள்ள 7,100 ஏக்கர் பரப்பிலே உள்ள தென்னை ஆகியவை வறட்சியால் பாதிக்கப்பட்டு, இதில் கிணத்துக்கடவு, பொள்ளாச்சி, தாராபுரம் போன்ற பகுதிகளிலே 50 சதவீதத்திற்கு மேல் பாதிக்கப்பட்டுள்ளது. ஆகவே, பாதிக்கப்பட்ட, பாதிப்பை எதிர்நோக்கியுள்ள விவசாயிகளுக்குத் தென்னை வளர்ச்சி வாரியத்தின் மூலமாக நிவாரணம் பெற்று வழங்க நமது அரசை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். மேலும், உடுமலை மற்றும் பொள்ளாச்சிக்கு இடையே தென்னை வளாகம் அமைக்கும் திட்டமானது, நடைமுறையிலே இருந்து வருகிறது. அதைத் துரிதப்படுத்திச் செய்து த்ர வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். மேலும், தென்னையைத் தாக்கும் சிலந்திப்பூச்சி என்ற ஈரியோபைட் நோய்க்கு மருந்து இதுகாறும் கண்டுபிடிக்கப்படாமல் உள்ளது. அதை நம்முடைய அரசு கவனத்திலே எடுத்து, தென்னை விவசாயிகளினுடைய குறையைத் தீர்த்துத்தர வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, மூலிகைப் பண்ணைகள் அமைக்கப்படுதல்; மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிக்கு உட்பட்ட எங்கள் பகுதியிலே சாகுபடிக்குத் தேவையான மண் வளம், நீர் வளம் மற்றும் சீதோஷண நிலை நிலவி வருகிறது. ஆகவே, இத்தொகுதியில் ஒரு மூலிகைப் பண்ணையை அமைத்து, மூலிகைப் பயிர் சாகுபடிக்கு விவசாயிகளுக்குத் தேவையான நாற்றுக்கள் மற்றும் விதைகளை விநியோகித்து, விற்பனை செய்யப்படும் மூலிகைப் பயிர்களை, இடைத்தரகர்கள் இன்றி, ஏற்றுமதியை ஊக்குவிக்க, அந்நியச் செலாவணியைப் பெருக்க, கொள்முதல் மையங்களை அமைத்து அரசு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன் அதேபோல, அரசு விதைப்பண்ணைகள் உள்ளன. தமிழ்நாட்டிலுள்ள அரசு விதைப்பண்ணைகளில் சிலவற்றைத் த்விர, மற்றவை நட்டத்தில் இயங்கி வருகின்றன. அனைத்து அரசு விதைப்பண்ணைகளையும், வேலையில்லா வேளாண்மைப்

பட்டதாரிகளுக்கு 5 பேர்கள் அடங்கிய குழுக்களாக அமைத்து, குழுக்களுக்குக் குறைந்தபட்சக் குத்தகை நிர்ணயம் செய்து, உற்பத்தி செய்யப்பட வேண்டிய விதைகளின் அளவை நிர்ணயித்து, அவர்களிடமிருந்து விதைகளைப் பெற்று விரிவாக்க மையங்கள் மூலம் விநியோகம் செய்யலாம். வேலையில்லாப் பட்டதாரிகளுக்கு, மருத்துவம் மற்றும் பொறியியல் பட்டதாரிகளுக்கு வங்கிகள் கடன் உதவி செய்வது போல, கடன் உதவி பெற்றுத் தருவதன் மூலம் வேலையில்லாத் திண்டாட்டம் குறைக்கப்படுவதோடு, அரசுக்கு ஏற்பட்டு வரும் நட்டம் அறவே நீக்கப்படும். அதேபோல, முறைசாரா எரிசக்தி- வேளாண்மைப் பெருமக்கள் பயனடையும்பொருட்டு, சூரிய சக்தியின் மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யும் தொழில்நுட்பம் மத்திய அரசின் முறைசாரா எரிசக்தித் துறையின் மூலம் செயலாக்கம் செய்யப்பட்டு வருகிறது. மின் வேலிகள் அமைத்தல், சூரிய சக்தியில் இயங்கும் லாந்தர் எனப்படும் விளக்குகள், தெரு விளக்குகள் போன்றவற்றுக்கு மத்திய அரசிடமிருந்து அதிக அளவு மானியம் பெற்று விவசாயிகள் பயனடையத் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன். இதிலே மின் வேலி அமைப்பது, தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்திலே பயனடையக்கூடிய ஒன்று. அதற்கு மானியத்தின் மூலமாகச் செய்தால் அவர்களுக்கு அதிகப் பயன் கிடைக்கக்கூடிய வழி ஏற்படும். அதேபோல, வேளாண்மைக் கருவிகள் விநியோகத்திலே, தற்சமயம் tractor மற்றும் tiller போன்ற இயந்திரங்களுக்கு வழங்கப்பட்டு வரும் ரூபாய் 30 ஆயிரம் என்ற மானியத்தை உயர்த்தியும், மானியம் பெற நிர்ணயிக்கப்பட்ட tractor-ன் குதிரைத் திறனை—Horse Power— உயர்த்தவும் நடவடிக்கை தொடர வேண்டுமென அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, கரும்புக்கு ஒட்டுண்ணி வளர்ப்பானது முறையாக அந்தக் கரும்புப் பயிருக்குக் கிடைக்கக்கூடிய வகையிலே இருக்க வேண்டும். சர்க்கரைக் கட்டுமானத்தையும், மகசூலையும் அதிகரித்து, சர்க்கரை ஆலைகளுக்கும், விவசாயிகளுக்கும் பயன்தரும் வகையிலே கோ.86032 என்ற ரகத்தைத் தற்போது நமது அரசு அதிகப்படுத்தியுள்ளது. அதன் பயனாக, நமது அரசு பொறுப்பேற்ற பின், சர்க்கரைக் கட்டுமானம் அதிகப்படுத்தப்பட்டு, நட்டத்தைக் குறைக்கக்கூடிய ஒரு வகை ஏற்பட்டுள்ளது. காரணம், 1999-2000-லே 8.74 சதவீதமாக இருந்த சர்க்கரைச் சத்தானது, இப்பொழுது 2001-2002-லே 9.50 சதவீதமாகக் கூடியுள்ளது என்பதை உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



மேலும் முக்கியமான ஒரு பிரச்சினை, நம்முடைய கோவை மாவட்டமும், அதேபோல ஈரோடு மாவட்டமும் பயன்பெறக்கூடிய ஒரு திட்டமானது—பல ஆண்டு காலமாக நடைமுறைப்படுத்தப்படாமல் உள்ளது—பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டம். பரம்பிக்குளம்-ஆழியாறு நிமிடத்தில் இரு மாநில ஒப்பந்தத்தின்கீழ் மொத்தம் 30.5 டி.எம்.சி. தண்ணீரை தமிழ்நாட்டின் பாசனத்திற்காக எடுத்துக்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதில் ஆனைமலையாறு-சிற்றணைத் திட்டம் இதுகாறும் நிறைவேற்றப்படாமல் உள்ளதால் 2.5 டி.எம்.சி. தண்ணீர் இன்னும் தமிழ்நாட்டிற்குக் கிடைக்கப்பெறாத நிலையுள்ளது. இதற்கான பணிகளை நிறைவேற்ற கேரள அரசின் ஒத்திசைவு எதிர்பார்க்கப்படுகிறது. திட்டத்திற்கான மதிப்பீடு 2001-2002 ஆம் ஆண்டிற்கான விலைவாசிப்படி 200 கோடி ரூபாய்க்குத் தயார் செய்யப்பட்டுள்ளது. ஆனைமலையாறு-சிற்றணைத் திட்டத்தினை நிறைவேற்றினால்தான் தமிழ்நாட்டிற்குக் கிடைக்க வேண்டிய மொத்தம் 30.5 டி.எம்.சி. தண்ணீரைப் பெற இயலும். எனவே, திட்ட ஒப்பந்தத்தின்படி, இரு மாநிலங்களும் ஏற்கெனவே ஒப்புக்கொண்டபடி ஆனைமலையாறு-சிற்றணைத் திட்டத்தினை நிறைவேற்றினால், இன்னும் தமிழ்நாட்டிற்குக் கிடைக்க வேண்டிய தண்ணீர் 2.5 டி.எம்.சி. கிடைக்கப்பெற்று, பாசனத்திற்குத் தங்குதடையின்றி நீர் வழங்க இயலும்.

பிற்பகல் 1-45

அதேபோல, இன்னொரு திட்டமானது, நல்லாறு திட்டம். சோலையாறு, பரம்பிக்குளம் ஆகிய அணைகளிலே கொள்ளளவிற்கு மேல் அதிகமாக நீர்வரத்து ஏற்பட்டு, இரு மாநிலங்களுக்கும் உபயோகமில்லாத வகையில் நீர் வழிந்தோடி வீணாகிறது. இதனைத் தவிர்க்கும்பொருட்டு, (மணியடிக்கப்பெற்றது) மேல் நீராறு அணையிலிருந்து 15 கிலோ மீட்டர் தூரத்திற்கு சுரங்கப் பாதை ஒன்றை அமைத்து, அதன் மூலம் வினாடிக்கு 28.29 கன அடி என்ற விகிதத்தில் தண்ணீரைத் திருப்பி, தற்போது திருமூர்த்தி அணைக்கு மேல் ஆனைமலை வனப் பகுதியில், உடுமலை வட்டம், மாவடுப்பு என்ற இடத்தில் கடல் மட்டம் 950 மீட்டர் உயரத்தில், 7,000 மில்லியன் கன அடி கொள்ளளவு நீரினைத் தேக்கி வைக்க ஏதுவாக, நல்லாற்றில் ஓர் அணை, தோராயமாக 504 கோடி ரூபாய் செலவில் கட்ட ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் 125 மெகாவாட் திறன் கொண்ட இரண்டு மின் நிலையங்கள், அதாவது மொத்தம் 250 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி

செய்த பின்பு, 3.6. கிலோ மீட்டர் தூரத்திற்கு புதிய சம உயர்மட்டக் கால்வாய் ஒன்றை வெட்டி, திருமூர்த்தி அணையில் நீரைக் கொண்டுவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அமைச்சர் பதில் சொல்வதற்கு ரெடியாக உட்கார்ந்திருக்கிறார்.

**திரு. சி. சண்முகவேலு:** முடித்துவிட்டேன். மேலும், என்னுடைய தொகுதியிலே குதிரையாறு என்ற பாலம் ஒன்று உள்ளது. அது இரண்டு முறை பேசி பயணிகளோடு பஸ் அடித்துச் செல்லப்பட்ட ஓர் இடமாகும். அதற்குக் குறுக்கே 'ஹட்கோ' நிதியோடு ஓர் உயர்மட்டப் பாலத்தை அமைத்துத் தரவேண்டுமாய் மாண்புமிகு அம்மா அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, என்னுடைய பகுதியிலே உள்ள தார்ச் சாலைகள் மிகவும் மோசமாக உள்ளன. இவற்றை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் சரிசெய்து தரவேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, என்னுடைய பகுதியிலே பஸ் நிலையத்தின் அருகிலே அரிஜன காலனி உள்ளது. அதற்கு அருகில் உள்ள கோயில் நிலத்திலே நிலம் எடுத்து, அவர்களை அங்கே அனுப்பிவிட்டு, அந்த பஸ் ஸ்டாண்டை விஸ்தரிப்பு செய்து தரவேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, உடுமலையின் வளர்ச்சியை முன்னிட்டு, பை-பாஸ் ரோடு ஒன்றை அமைத்துத் தர வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். எனது பணிவான கோரிக்கைகளையும், கருத்துகளையும் விவசாயப் பெருமக்களின் சார்பாகவும், உடுமலை சட்டமன்றத் தொகுதி வாக்காளப் பெருமக்களின் சார்பாகவும் இப்பேரவைக்குத் தெரிவித்துக்கொண்டு, இந்த மாமன்றத்திலே எனக்குப் பேச வாய்ப்பளித்த, எங்களின் நடமாடும் மனித தெய்வத் தாய் அம்மா அவர்களுக்கும், அதேபோல மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நன்றியைக் கூறி விடைபெற்றுக்கொள்கின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் பதிலுரை.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வரலாற்றைத் திரும்ப வரவழைக்கும் ஆற்றல்



மிக்க, இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என்னுடைய வணக்கத்தை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

"வடக்கினில் தமிழர் வாழ்வை வதக்கி, பின்

தெற்கினில் வந்து இடக்கினைச் செய்ய நினைத்த எதிரியை

அந்நாள் தொட்டே அடக்கடா என்றுரைத்த

அறங்காக்கும் தமிழே,

இங்கு தடைகள் உண்டு என்று சொன்னாலும்,

தடந்தோள் உண்டெனச் சிரித்தாய்!

தமிழே, நீ நடுங்கவில்லை,

ஜாதி, மதம் இல்லை என்றாய்!

காதில் கடல் முழக்கத்தைக் கேட்டாய்,

தமிழ் அன்னையே!'

224373

உங்களை வணங்கி, இந்த மானியக் கோரிக்கையை நான் உங்கள் முன்னாலே சமர்ப்பிக்கின்றேன்.

தாயுள்ளம் கொண்ட அம்மா அவர்கள் தமிழகத்தை இந்தியாவின் முதன்மை மாநிலமாக்குவதுடன், எந்தக் குடும்பமும் வறுமைக் கோட்டிற்குக்கீழ் இல்லை என்ற கொள்கையுடன் இலட்சியப் பயணம் மேற்கொண்டுள்ளார்கள். அவர்களின் அருளாட்சியில் அந்த இலட்சியத்தை அடையும் வகையில், வேளாண்துறையின் செயல் திட்டங்கள் மாற்றியமைக்கப்பட்டு, பின்வரும் திட்டங்களுக்கு சிறப்பு முக்கியத்துவம் அளிக்கப்படும்.

பிற்பகல் 1-50

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் 15 அம்சத் திட்டத்தில் ஏற்கெனவே அறிவிக்கப்பட்டவாறு பின்வரும் செயல் திட்டங்களுக்கு சிறப்பு முக்கியத்துவம் அளிக்கப்படும். உற்பத்தித் திறன், தரம், வருமானம் மற்றும் சுற்றுச்சூழல் ஆகியவற்றை ஒருங்கிணைத்து, வளம் குன்றா வேளாண்மை ஏற்படுத்துதல், பண்ணைத் தொழிலில் ஈடுபடும் குடும்பங்களுக்கு மகிழ்ச்சிகரமான சூழலை உருவாக்கி, சுற்றுச்சூழல்

D
V 24,3' P02
P02.23.2

[திரு. இரா. ஜீவானந்தம்] [2002 ஏப்ரல் 23

ரீதியாக ஆதாயம் அளிக்கக்கூடிய பண்ணை முறைகளுமே நமது வேளாண்மைக் கொள்கையின் முக்கியமான நோக்கங்களாக இருக்கும். வேளாண்மைத் துறையில் அதிவிரைவுத் தொழில்நுட்ப முன்னேற்றம் காண்பது நம்முடைய மற்றுமொரு குறிக்கோளாக இருக்கும். வாய்ப்புள்ள விளைச்சலுக்கும், கிடைக்கும் விளைச்சலுக்கும் இடையே நிலவி வரும் இடைவெளியைக் குறைத்தலிலும், உணவுப் பாதுகாப்பிலும், வேளாண் பொருள்களின் தரத்திலும் உரிய கவனம் செலுத்தப்படும். வானிலை, மண், தண்ணீர் மற்றும் பூச்சி மேலாண்மை, சந்தை நிலவரம் ஆகியவை தொடர்பான தகவல்கள் உழவர்களுக்கு உரிய நேரத்தில் கிடைத்திட வகை செய்வதற்காகக் கணினி மற்றும் இணைய வசதிகள் நிறைந்த கிராமப்புற அறிவு மையங்கள் ஏற்படுத்தப்படும். தமிழ்நாட்டில் வேளாண்மை, அறிவு சார்ந்ததாக இருக்குமேயன்றி, இரசாயனத்திற்கு முக்கியத்துவம் அளிப்பதாக இருக்காது. நிலைத்த வேளாண்மை மற்றும் உழவர்கள் நலனே நமது நோக்கமாக இருக்கும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் 15 அம்சத் திட்டத்தில் இது முக்கியமான ஓர் அம்சமாகும். தனியார் துறை மற்றும் நிதித் துறை நிறுவனங்களின் உடனுழைப்புடன் வேளாண் உயிரியல் தொழில்நுட்பப் பூங்காக்களை ஏற்படுத்துவதுடன், உணவு பதப்படுத்தும் பூங்காக்கள், வேளாண்மை ஏற்றுமதி மண்டலங்கள், மூலிகைத் தொழில்நுட்பப் பூங்கா, துல்லியமான பண்ணை மையங்கள், உயிரியல் தொழில்நுட்பவியல், தகவல் தொடர்புத் தொழில்நுட்பவியல், விண்வெளி மற்றும் அணு தொழில்நுட்பவியல், புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் தொழில்நுட்பவியல் ஆகியவற்றை முழுமையாகப் பயன்படுத்தத் தமிழ்நாட்டில் வேளாண்மை வளர்ச்சியில் வேகம் துரிதப்படுத்தப்படும்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

வேளாண்மைத் துறையில் அதிவிரைவுத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தும் நோக்கத்தை எய்துவதற்காகத் தெரிந்தெடுக்கப்பட்ட வேளாண்மை உயிரியல் வாழ்க்கைச் சூழல் மண்டலங்களில் கலிஃபோர்னியா நாட்டு வல்லுநர்களின் உடனுழைப்புடன் செயல் விளக்கப் பயிற்சி மையங்கள் ஏற்படுத்தப்படும். இந்த நாடு சுதந்திரம் அடைந்த காலத்திலிருந்து நமது நாட்டில் கடைப்பிடிக்கப்பட்டு வந்த ஐந்தாண்டுத் திட்டங்களும், பொருளாதார அணுகுமுறைகளும் Primary Sector என்று சொல்லப்படும் Agricultural Sector. அதாவது விவசாயத் துறையின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இல்லாததைத் தற்போது நமது நாட்டின் அனைத்து மாநிலங்களும் உணர்வதை நாம் அறிவோம். 70



2002 ஏப்ரல் 23] [திரு. இரா. ஜீவானந்தம்]

சதவிகித மக்கள் வேளாண் தொழிலையும், அதையொட்டிய தொழிலையும் நம்பி வாழ்ந்து வருகிறார்கள். ஒட்டுமொத்த மக்களில் சுமார் 35 சதவிகித மக்கள் வறுமைக்கோட்டிற்குக்கீழ் வாழ்வதும் நாம் அறிந்ததே.

நமது விவசாயத்தில் தற்போது ஆதாயம் இல்லாத நிலை உள்ளது. தொழிற்சாலை ஒன்றில் ஒரு பொருளை உற்பத்தி செய்கின்றவர். உற்பத்திச் செலவிற்கு மேல் இலாபம் வைத்து விற்கமுடியும். அந்தத் தொழிற்சாலையும் பாதுகாக்கப்படுகிறது. மேலும், தொழிற்சாலைக்கு அரசின் பாதுகாப்பும் இருக்கிறது. ஆனால், ஒரு விவசாயி உற்பத்தி செய்யும் விவசாய விளைபொருளுக்கு இலாபம் கிடைக்கும் என்ற உத்தரவாதம் என்றுமே கிடைப்பதில்லை. இந்த நிலை மாறவேண்டும். விவசாய விளைபொருளுக்கு நல்ல விலை; நல்ல இலாபம் கிடைக்க வேண்டும். அதன் மூலம் விவசாயியும், அந்த விவசாயத்தை நம்பி வாழ்கிற உழைக்கும் வர்க்கமான விவசாயத் தொழிலாளர்களும் வருடம் முழுவதும் நல்ல வருமானம் பெறவேண்டும் என்பதுதான் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அணுகுமுறையாகும். இத்தகைய பொருளாதாரத் திட்டங்களைக் கிராமத்தை நோக்கி எடுத்துச்செல்ல வேண்டுமென்ற நோக்கோடுதான் மாண்புமிகு அம்மா அவர்கள் இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு, மாநிலத் திட்டக் குழுவினுடைய துணைத் தலைவராக உலக விவசாய விஞ்ஞானி டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் அவர்களை நியமித்ததையும் நீங்கள் அறிவீர்கள்.

வறுமை நிலையை வளமான நிலையாக மாற்றும் விவசாயத்தை ஒட்டிய தொழில் புரட்சி—இது அம்மா அவர்களது அரசு விவசாயத் துறையிலே மேற்கொண்டுள்ள அணுகுமுறையாகும். ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியத்திற்கும் இன்டர்நெட் வசதி செய்து தரப்படும். இதன் மூலம், விவசாயத் துறையின் மூலமாக விவசாயிகள் தங்கள் பகுதியில் எந்தெந்தப் பயிரை, எத்தனை ஏக்கரில் பயிரிட்டால் இலாபகரமாக இருக்கும் என்பதைப் பற்றியும், அந்த விளைபொருளை இலாபகரமாக விற்கும் மார்க்கெட் வசதி பற்றியும் உழவர்களுக்கு அறிவுறுத்தப்படும்.

நமது விவசாயிகளுக்கு நல்ல வருமானம் இல்லை என்றெல்லாம் இங்கே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். காரணம், low crop yield—மிகக் குறைந்த அளவே விளைபொருள் உற்பத்தி ஆகிறது. அதற்கான காரணம்; நாம் விஞ்ஞான முறைகளைக் கையாளுவதில்லை. நாம் தண்ணீரை வீணாக்குகின்றோம்.

பிற்பகல் 1-55

உதாரணமாக, அமெரிக்காவில் இருக்கின்ற கலிஃபோர்னியா நாட்டில், நம் நாட்டில் உபயோகிக்கும் தண்ணீரில் ஏழில் ஒரு பங்குத் தண்ணீரை மட்டுமே பயன்படுத்தி, நம்மைவிட ஐந்து மடங்கு பருத்தியை அதிகமாக உற்பத்தி செய்கிற நிலை இருக்கிறது. வீரிய விதைகளைப் பயன்படுத்துவதில் நாம் பின்தங்கியே உள்ளோம். வீரிய விதைகளைப் பயன்படுத்தாமல் நமது நாட்டில் அரிசி உற்பத்தி ஒரு எக்டேருக்கு 2.8 டன் மட்டுமே. ஆனால், உயர்தர விதைகளைப் பயன்படுத்தும் சீனாவில் 5.4 டன்னாகவும், அமெரிக்காவில் 8 டன்னாகவும் உற்பத்தியாகிறது. அதைப்போலவே, நாம் பயிர்களுக்கு நைட்ரஜன், பாஸ்பரஸ், பொட்டாசியம் ஆகிய மூன்று சத்துகளை மட்டுமே தருகிறோம். 16-க்கும் மேற்பட்ட ஊட்டச்சத்துகளை பயிர்களுக்குத் தந்தாக வேண்டும். இது போன்ற நவீன விவசாய அணுகுமுறைகளை மேற்கொள்ள அம்மாவினுடைய அரசு தற்போது திட்டங்களை மேற்கொண்டு உள்ளது. இதைப்போலவே, பயோ-டெக்னாலஜியை விவசாயத்தில் பயன்படுத்த, பூச்சியிலிருந்து பயிரைப் பாதுகாக்க, திட்டங்களை மேற்கொள்ள அம்மா அவர்கள் அறிவுறுத்தி இருக்கிறார்கள். இந்தத் திட்டத்தின் மூலமாக, தரிசு நிலங்களைப் பயன்பாட்டிற்குரிய நிலங்களாக மாற்றி, அதில் உயரின சவுக்கு, உயரின காட்டுக்கருவேலம் ஆகியவற்றை முதற்கட்டமாக ஒரு இலட்சம் எக்டேரில் பயிரிட்டு, அதன் மூலமாக பயோமாஸ் பவர்—மின்சாரம் உற்பத்தி செய்கிற தொழிற்சாலைகள் ஒவ்வொரு மாவட்டப் பகுதியிலும் அமைப்பதன் மூலம், ஆயிரக்கணக்கான விவசாயிகளும், விவசாயத் தொழிலாளிகளும் வருமானம் பெற அம்மாவின் அரசு நடவடிக்கை எடுக்கவுள்ளது.

உயரின மக்காச்சோளத்திற்கு முக்கியத்துவம் தந்து, அதன் மூலம் கார்ன் ஆயில், கார்ன்ஃப்ளேக்ஸ், கார்ன்சிரப், கால்நடைத் தீவனம் போன்ற இலாபகரமான பொருட்களைத் தயாரிக்கவும், தொழிற்சாலைகளைக் கிராமப்புறங்களில் நிறுவுவோம். அதன் மூலமாக ஆயிரக்கணக்கான விவசாயிகளுக்கு இலாபகரமான சுய வேலைவாய்ப்புக் கிடைக்கும். தொழிலின் தன்மைக்கு ஏற்ப, Agro-based industries அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் மூலம் செயல்படுத்தப்படும் என்பதை நான் இந்த நேரத்திலே பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.



குறைந்த தண்ணீர், பலதரப்பட்ட ஊட்டச்சத்து, உயரின விதை, விவசாயம் மற்றும் பயோ-டெக்னாலஜி அடிப்படையிலான உற்பத்திப் பெருக்கம், பயிர்ப் பாதுகாப்புத் திட்டம், மார்கெட்டிற்குத் தேவையுள்ள இலாபகரமான விளைபொருட்களை உற்பத்தி செய்வதற்கு முக்கியத்துவம் அளித்தல் ஆகியவற்றின் மூலம் விவசாயிகளுக்கு வருமானம், விவசாயத் தொழிலாளிகளுக்கும் நல்ல வருமானம், இறுதியில் மாண்புமிகு அம்மாவின் இலட்சியமான, வறுமையை ஒழித்து, தமிழகத்தை இந்தியாவிலே அனைத்துத் துறைகளிலும் முதன்மை மாநிலமாக்குவதற்கு முன்னிலை வகிப்பது வேளாண்மைத் துறையினுடைய தலையாய திட்டமாக இருக்கும் என்று அறிவிக்கிற இந்த நேரத்தில், எனக்கு முன்னாலே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் பேசுகின்றபோது, நல்ல கருத்துகளைச் சொன்னார்கள். அப்படிச் சொல்கிறபோது, கரும்பிற்கு விலை வேண்டுமென்று கேட்டார்கள். இலவச மின்சாரத்தை ரத்து செய்யக்கூடாது என்று சொன்னார்கள். காவிரி நீர்ப் பிரச்சினையைப்பற்றிச் சொன்னார்கள். அதுமட்டுமல்ல, நெல் கொள்முதல் பற்றியெல்லாம் சொன்னார்கள். நேரம் அதிகமாகிக் கொண்டிருக்கின்றது. பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைத் துணைத் தலைவர் இருக்கிறபோது, ‘எல்லோருக்கும் பசிக்கின்றது’ என்று சொன்னார். இங்கே பேரவைத் தலைவர் இருக்கின்ற காரணத்தால், யாருக்கும் பசிக்காது என்று எனக்கு நன்றாகத் தெரியும். ஆகவே, என்னைப் பொறுத்தளவிலே..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் அவர்களே, பேரவைத் துணைத் தலைவருடைய கருத்துத்தான் பேரவைத் தலைவருடைய கருத்து. (சிரிப்பு)

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** ஆகவே, நான் விரைவாக முடித்துவிடுகிறேன். சுருக்கமாக முடித்து விடுகிறேன். நீங்கள் நம்பிக்கை வையுங்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் இங்குச் சொல்கிறபோது, கரும்பிற்கு டன் ஒன்றிற்கு ஆயிரம் ரூபாய் கொடுக்க வேண்டும் என்கிற இக்கருத்தை எந்த உறுப்பினரும் சொல்லாமல் விடவில்லை. அத்தனைப் பேரும் பேசுகின்றபோது, கரும்பிற்கு ஆயிரம் ரூபாய் கொடுக்க வேண்டுமென்று சொன்னீர்கள். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில், இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், எந்த ஒரு நேரத்திலும் கரும்பிற்கு டன் ஒன்றிற்கு ஆயிரம் ரூபாய் தருவதாகச்

[திரு. இரா. ஜீவானந்தம்] [2002 ஏப்ரல் 23

சொல்லவேயில்லை. ஆனால், கரும்பிற்கு ஆயிரம் ரூபாய் தருவதாகச் சொன்னார்கள், 5 ஆண்டு காலம் ஆண்டபோது அதை அவர்கள் கொடுக்கவேயில்லை. நான் நினைக்கிறேன். இங்கே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் ஜி.கே. மணி அவர்களும் இருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சகோதரர் ஞானசேகரன் அவர்களும், பழனிசாமி அவர்களும் இருக்கிறார்கள். அவர்கள் பேசிய பேச்சுகள் எல்லாம் அன்றைக்கு சட்டமன்றத்திலே பதிவாகியிருக்கிறது. அப்பொழுது இவர்கள் கேட்கிறார்கள், 'ஆயிரம் ரூபாய் தருவதாகச் சொன்னீர்களே, கொடுங்கள்' என்று அதைக் கேட்கிறார்கள். அப்போதிருந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்ன சொன்னார்கள் என்பது உங்களுக்கே நன்றாகத் தெரியும். '5 ஆண்டு காலம் நீங்கள் பொறுத்துக்கொள்ள மாட்டீர்களா' என்று அன்றைக்குக் கேட்டார்கள்.

பிற்பகல் 2-00

அதுமட்டுமல்ல, திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமென்று சொன்னால், 3 ஆண்டுகளில் நிறைவேற்ற முடியுமா அல்லது 2 ஆண்டு காலத்திலே நிறைவேற்றிட முடியுமா? அதற்கு ஒரு 5 ஆண்டு காலம் தேவையில்லையா என்றெல்லாம் இந்தச் சட்டமன்றத்திலே பேசியிருக்கிறார். அதை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்களெல்லாம் நன்றாக அறிவார்கள். மாண்புமிகு உறுப்பினர்களே, ஒரு சில கருத்துகளை மட்டும் உங்கள் முன்னால் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகம் ஆளுகிற கட்சியாக இருக்கிறபோது, அப்பொழுது அவர்கள் சொன்ன உறுதிமொழிகளெல்லாம் மேலே இருக்கிறது. அதுமட்டுமல்ல, அந்த இயக்கத்தினுடைய மாண்புமிகு துணைத் தலைவராக இருக்கிற மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்கள் பத்திரிகையிலே அறிவித்திருக்கிறார்கள். கடந்த ஆண்டு அறிவிப்புகள் காற்றோடு போய்விட்டதாகப் பத்திரிகையிலே வந்திருக்கிறது. அதுமட்டுமல்ல, இந்த மாமன்றத்திலே அவர் சொல்லியிருக்கிறார். வேளாண்மைத் துறையில், திராவிட முன்னேற்றக் கழகம் ஆளுகின்ற கட்சியாக இருக்கின்றபோது அவர்கள் அறிவித்த அறிவிப்பையும், மூன்றாண்டு காலம் அந்த அறிவிப்புக்குப் பின்னாலே அவர்கள் எதையும் செய்யவில்லை என்பதையும் உங்கள் முன்னால் சுட்டிக்காட்டுவதை என்னுடைய கடமை என்றே கருதுகின்றேன்.



2002 ஏப்ரல் 23] [திரு. இரா. ஜீவானந்தம்]

பருத்தி வணிக வளாகம், தேனி. அடுத்து காய்கறிகள் வணிக வளாகம், மேட்டுப்பாளையம். காய்கறிகள் வணிக வளாகம், உடுமலைப்பேட்டை. தேங்காய் வணிக வளாகம், பட்டுக்கோட்டை. நெல் வணிக வளாகம், செங்குன்றம். வெல்லம் வணிக வளாகம், வேலூர். பன்னாட்டு ஏல மையம், சென்னை. மஞ்சள் வணிக வளாகம், ஈரோடு. திராட்சை குளிர் பதனிடும் கூடம், சின்னமனூர். நான் கேட்கிறேன். இதில் ஏதாவது ஓர் இடத்தில் பணி நடைபெற்றிருக்கிறதா அல்லது தொடங்கப்பட்டிருக்கிறதா? இல்லை. 5 ஆண்டு காலம் இந்த நாட்டிலே ஆண்டவர்கள் வாய்ப்பந்தல் போட்டுவிட்டே சென்றுவிட்டார்கள். நான் சில கருத்துகளை இந்த மன்றத்திலே பதிய வைக்க வேண்டுமென்று நினைத்தேன். இருந்தாலும், அவர்கள் இல்லாத காரணத்தினால் நான் அதை இங்குச் சொல்லாமல் இருக்கிறேன். இருந்தாலும்கூட, ஒரு கருத்தை நான் சொல்ல வேண்டும். கரும்பைப் பொறுத்தவரையிலே, போன ஆண்டு உரையாற்றும்போது சொன்னதை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் இங்குக் குறிப்பிட்டார். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், அன்றைக்குப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்வதாகச் சொன்னது. கரும்பாலையினுடைய நிதிநிலையைக் கணக்கிலே எடுத்துப் பார்க்கும்போது, கரும்பாலை நட்டத்திலே போய்க்கொண்டிருக்கிறது. ஆக, கரும்பாலையினுடைய நலனும் பாதுகாக்கப்பட வேண்டும். விவசாயியினுடைய நலனும் பாதுகாக்கப்பட வேண்டும். இரண்டு நலன்களையும் பாதுகாக்கின்ற வகையிலே, இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சி, அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை இந்த நேரத்திலே பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே நம்முடைய பாட்டாளி மக்கள் கட்சியினுடைய தலைவர் மாண்புமிகு மணி அவர்கள் இருக்கிறார்கள். உங்களைப் பார்த்து நான் ஒரு கருத்தைக் கேட்க விரும்புகிறேன். நேற்றையதினம் நீங்கள் பேசுகின்றபோது, இலவச மின்சாரத்தைப் பற்றி நீங்கள் சொன்னீர்கள். இலவச மின்சாரம் என்பது பற்றி நேற்றையதினம் எங்களுடைய இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பேசுகிறபோது சொன்னார்கள். இலவச மின்சாரத்தை எந்தக் காரணத்தைக் கொண்டும் நாங்கள் நிறுத்தமாட்டோம், ஏழை எளிய விவசாயிகளுக்குத் தருகின்ற எந்தத் திட்டத்தையும் (மேசையைத் தட்டும் ஒலி) அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் நிறுத்தாது என்று சொன்னார்கள். அதுமட்டுமல்ல, மேலும் சொன்னார்கள். நாங்கள்

அப்படி ஒரு G.O. போட்டது உண்மைதான். அதற்குப் பிறகு நாங்கள் எந்த வசூலும் செய்யாமல் அதை நிறுத்திவிட்டோம், எடுத்துவிட்டோம் என்று சொன்னது மட்டுமல்ல. விவசாயிகளுக்கு உதவி செய்கின்ற வகையிலே, நீங்களாக இருந்தாலும் சரி, திராவிட முன்னேற்றக் கழகமாக இருந்தாலும் சரி, போராடியது யாருக்காக என்று சொன்னால், ஏழை விவசாயிகளுக்காக அல்ல; பெரிய பணக்கார விவசாயிகளுக்காகத்தான் நீங்கள் அன்றையதினம் குரல் கொடுத்தீர்கள் என்பதையும் இந்த நேரத்திலே உங்களுக்குக் கூறிக்கொள்கின்ற அதே நேரத்திலே........

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் நேற்றுச் சொன்னார்கள். முதலமைச்சர் அவர்கள் அதற்கு முறையாக விளக்கம் சொன்னார்கள். அந்த அறிவிப்பு என்பது, பெரிய விவசாயிகளுக்கு மின் கட்டணம் வசூலிக்கப்படும் என்று சொல்லி அறிவித்திருந்தும்கூட, விவசாயிகள் என்று சொன்னாலே, எல்லோருக்கும் இலவச மின்சாரம் வேண்டுமென்ற முறையிலே, அது பெரிய விவசாயி, சின்ன விவசாயி என்று குறிக்கின்ற நேரத்திலே, வரையறைப்படுத்துகின்ற நேரத்திலே, சிக்கல் ஏற்படும் என்ற காரணத்தினாலே, விவசாயிகள் என்று சொன்னால், எல்லோருக்கும் இலவச மின்சாரம் வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தி நாங்கள் அன்று போராடினோம். அதை யாரும் மறுக்க முடியாது. இருந்தாலும்கூட, நாங்கள் எல்லோருக்காகவும் போராடினோம். அதை விடுத்து, நீங்கள் இலவச மின்சாரத்தை ரத்து செய்து உத்தரவிட்டதைத் திரும்பப் பெற்று, மீண்டும் மறுபரிசீலனை செய்து இலவச மின்சாரத்தை அறிவித்தீர்கள். நாங்கள் நன்றி சொன்னோம். வரவேற்கின்றோம். (குறுக்கீடு) பெரிய விவசாயிகளுக்கு என்று சொல்லி...

பிற்பகல் 2-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி அவர்களே, நேற்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்ன விளக்கம்; பணக்கார விவசாயிகளுக்குக் கட்டணம் வசூலிக்கப்படுவதற்காக ஓர் ஆணை பிறப்பிக்கப்பட்டது. அந்த ஆணை செயலாக்கப்படக்கூட இல்லை. அந்த ஆணை உடனே திரும்பப் பெறப்பட்டுவிட்டது என்றுதான் முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.

**திரு. ஜி.கே. மணி:** நாங்கள் போராடினோம். நீங்கள் திரும்பப் பெற்றீர்கள். உங்களுக்கு நன்றி சொன்னோம். ஆணையைத் திரும்பப் பெற்றீர்கள். இல்லையென்று சொல்லவில்லை. 40 ஆயிரம் பேர் நாங்கள்



சிறைக்குச் சென்றோம். இன்றைக்கும் வழக்குகள் இருக்கின்றன. 40 ஆயிரம் பேர் சிறை சென்றோம். உங்கள் கூற்றுப்படி எடுத்துக்கொண்டால், நாங்கள் பெரிய விவசாயிகளுக்காகப் போராடியதாக நீங்கள் எடுத்துக்கொண்டால், நீங்கள் ஆணையைத் திரும்பப் பெற்றதும் பெரிய விவசாயிகளுக்குத்தான் என்பதை ஒத்துக்கொள்கிறீர்களா? (குறுக்கீடு) பெரிய விவசாயிகளுக்காகத் திரும்பப் பெற்றதுதானே அந்த ஆணை? ஆக, எப்படியிருந்தாலும்கூட விவசாயிகளுக்காகப் போராடினோம். நீங்களும், விவசாயிகளுக்காகத்தான் திரும்பப் பெற்றோம் என்று ஒத்துக்கொள்வதை விட்டு, பெரிய விவசாயிகளுக்காக நாங்கள் போராடினோம் என்று சொல்வது தவறானது. அப்படி நாங்கள் ஒத்துக்கொள்வோம் என்று சொன்னால், நீங்களும் பெரிய விவசாயிகளுக்காகத்தான் அந்த உத்தரவைத் திரும்பப் பெற்றுக்கொண்டீர்கள் என்பதை ஒத்துக்கொண்டாக வேண்டும்.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே நடைபெற்ற நிகழ்ச்சியை நான் குறிப்பிட்டே ஆகவேண்டும். 1989 ஆம் ஆண்டு........

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற திராவிட முன்னேற்றக் கழக அரசில், தேர்தல் அறிக்கையில் சொன்னார்கள். அவர்களுடைய மாநாட்டில் சொன்னார்கள். கரும்புக்கு டன் ஒன்றுக்கு ரூ. 1,000 கொடுப்பதாகச் சொல்லி ஆட்சிக்கு வந்தார்கள். ஐந்தாண்டு காலம் ஆட்சியில் இருந்தபோதும் அது கொடுக்கப்படவில்லை. நாங்கள் எல்லாம் கேள்வியை எழுப்பியபோது, எங்களை ஐந்தாண்டு காலம் ஆள விடுங்கள், நீங்கள் பொறுத்திருந்து பாருங்கள் என்று சொன்னார்கள். அதிலும் ஏமாற்றமடைந்தோம். எங்களோடு சேர்ந்து வெளியில் இருந்து அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் குரல் கொடுத்தது. அவர்கள் செய்யாததை நீங்கள் செய்யப் போகிறீர்களா அல்லது செய்ய முடியவில்லையா? அந்த ஆயிரத்தைக் கொடுக்கப் போகிறீர்களா அல்லது கொடுக்கமுடியவில்லை என்று சொல்லப் போகிறீர்களா என்பதை அமைச்சருடைய பதிலில் விளக்கமாகச் சொல்ல வேண்டும். ஏனென்றால், அதற்கு விளக்கம் கொடுத்து அறிவிப்பிலே வரப் போகிறதா என்பதை எதிர்பார்க்கிறேன். அதிலேயாவது சொல்ல வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர்தான் சொல்லிவிட்டாரே!

[2002 ஏப்ரல் 23

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் தெளிவாகவே குறிப்பிட்டேன். நாங்கள் எந்த இடத்திலும் அல்லது எங்களுடைய கட்சியினுடைய மாநாடாக இருந்தாலும் சரி, தீர்மானமாக இருந்தாலும் சரி அல்லது தேர்தல் அறிக்கையாக இருந்தாலும் சரி, எதிலுமே நாங்கள் 1000 ரூபாய் தருவதாகச் சொல்லவில்லை. தேர்தலில் மக்களைச் சந்திக்கின்றபோது, நாங்கள் கரும்புக்கு டன் ஒன்றுக்கு 1000 ரூபாய் தருவோம், எங்களுக்கு வாக்களியுங்கள் என்று மக்களைப் பார்த்துக் கேட்கவில்லை. அப்படி மக்களைப் பார்த்து வாக்குக் கேட்டவர்கள் ஐந்தாண்டு காலம் ஏமாற்றிவிட்டுச் சென்றுவிட்டார்கள் என்பதைத்தான் இந்த அவையில் நான் குறிப்பிட்டேன். (குறுக்கீடுகள்)

**திரு. அ. வெங்கடாசலம்:** பேரவைத் தலைவர் அவர்களே, கரும்பாலை அதிபர்கள் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்து, எங்களைக் கேட்காமல், எங்களுடைய அனுமதியில்லாமல் கரும்பு விவசாயிகளுக்கு விலை நிர்ணயம் செய்யக்கூடாது என்று தடையாணை வாங்கியிருக்கிறார்கள். அந்தத் தடையாணை முடிந்த பிறகு, அதை முறையாக அரசு பரிசீலனை செய்யும்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் கரும்பாலை முதலாளிகள் தடையாணை பெற்றிருக்கிறார்கள் என்பது உண்மை. அது கொள்கை விளக்கக் குறிப்பில் இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. அதில் சாதகமான அம்சம் என்னவென்றால், தடையாணை பெற்றிருந்தாலும்கூட, அதிக விலையை விவசாயிகளுக்குக் கொடுக்கிறார்கள் என்று கொள்கை விளக்கக் குறிப்பில் சொல்லப்பட்டிருக்கிறது. (குறுக்கீடு) இருக்கிறது. நீங்கள் திரும்ப எடுத்துப் படித்துப் பாருங்கள். அப்படியானால் அரசு தனியாருக்கு ஆதரவு தெரிவிக்காமல் அந்தத் தடையாணையை நீக்குவதற்கான முயற்சியை ஏன் அரசு செய்யவில்லை என்பதற்கான காரணங்களைச் சொல்லவில்லை. அதைச் சொல்ல வேண்டுமா, இல்லையா?

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. இப்போது வழக்கு உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, அதில் நடவடிக்கை இல்லாமல் இல்லை. அதிலே இரண்டு விதத்தைப் பார்க்க வேண்டும். ஒன்று, கரும்பு ஆலைகளுடைய நிலையைப் பாதுகாக்க வேண்டும்.



2002 ஏப்ரல் 23] [திரு. இரா. ஜீவானந்தம்]

இரண்டாவது, கரும்பு விவசாயிகளின் நலனையும் பாதுகாக்க வேண்டும். சட்டியில் இருந்தால்தானே அகப்பையில் வரும்? சட்டியில் இல்லையென்றால் அகப்பையில் எப்படி வரும்?

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இருக்கிற நிதி நிலைமையில்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பசி நேரத்தில் சட்டி, அகப்பை என்றெல்லாம் சொல்லி நீங்கள் பசியைக் கிளப்பாதீர்கள். (சிரிப்பு)

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றுமே இல்லை.

பிற்பகல் 2-10

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு point of order (குறுக்கீடு)

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற சட்டப் பேரவைக் கூட்டத்திலே, அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய சட்டமன்ற உறுப்பினர்கள், டன்னுக்கு ஆயிரம் ரூபாய் கரும்புக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்கவில்லையா? (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** நான் சொல்கிறேன். மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும். நாங்கள் ஆயிரம் ரூபாய் தருகிறோம் என்று சொல்லவில்லை. நீங்கள் சொன்னதை ஏன் செய்யவில்லை என்று கேட்பதற்கும், நாங்களே தருகிறோம் என்று சொல்வதற்கும் வித்தியாசம் இருப்பதை நீங்கள் உணர வேண்டும். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே, டன்னுக்கு ஆயிரம் ரூபாய் தருகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள்; அந்த வாக்குறுதியை ஏன் காப்பாற்றவில்லை; உங்களுடைய தேர்தல் அறிக்கையிலே சொன்னதை ஏன் செய்யவில்லை? மாநாட்டிலே சொன்னதை ஏன் செய்யவில்லை என்று வலியுறுத்தி இருக்கிறோமே

[திரு. இரா. விசுவநாதன்] [2002 ஏப்ரல் 23

தவிர, நாங்கள் செய்கிறோம் என்று எப்போதும் நாங்கள் சொல்லவில்லை. நீங்கள் சொன்னதை ஏன் செய்யவில்லை என்று சொல்லியிருக்கிறோம். ஆகவே, இரண்டுக்கும் உள்ள வித்தியாசத்தைப் புரிந்துகொள்ள வேண்டும்.

• **திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சியாக இருந்தால் கேட்பதுதான் உரிமை; ஆளுங்கட்சியாக இருந்தால் மறுப்பதுதான் உரிமையா? இதற்கு என்ன பொருள்? (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சியாக இருக்கும்போது கேட்பது, ஆளுங்கட்சியாக இருக்கும்போது மறுப்பதா? (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** இல்லை, நான் சொல்கிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர், மூத்த உறுப்பினர்.........(குறுக்கீடு)

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** ஒரே ஒரு நிமிடம்.. (குறுக்கீடுகள்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் சொல்லிவிடட்டும், போக்குவரத்துத் துறை அமைச்சர் சொல்லிவிடட்டும்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு மூத்த உறுப்பினர், இரண்டுக்கும் பொருளைப் புரிந்து கொள்ள வேண்டுமென்று கேட்கிறேன். புரிந்தும், புரியாமல் பேசுகிறார் என்றுதான் நான் கருதுகிறேன். தி.மு.க.வினர், சென்ற ஆட்சியினர், 'நாங்கள் இதைச் செய்வோம்' என்று சொன்ன வாக்குறுதியை நிறைவேற்றவில்லை என்பதை அவர்களுக்கு நினைவூட்டி, ஏன் செய்யவில்லை என்று கேட்பதற்கும், நாங்கள் அதைச் செய்கிறோம் என்று பொறுப்பேற்றுக்கொள்வதற்கும் வித்தியாசம் இருக்கிறது. நாங்கள் அதைச் செய்வோம் என்று பொறுப்பேற்றுக்கொள்ளவில்லை. நீங்கள் சொன்னதை ஏன் செய்யவில்லை என்பதைத்தான் நாங்கள் கேட்டுப் போராடி இருக்கிறோமே தவிர, நினைவூட்டி இருக்கிறோமே தவிர, மீண்டும், மீண்டும் சொல்கிறேன்; இரண்டுக்கும் உள்ள பொருளை நீங்கள் நுணுக்கமாகப் புரிந்துகொள்ள வேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...(குறுக்கீடு)



2002 ஏப்ரல் 23]

***மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுடைய வட்டி, அபராத வட்டியைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று கடந்த ஆட்சியில், அப்போது இருந்த அனைத்து எதிர்க்கட்சித் தலைவர்களும் சரி, அனைத்து எதிர்க்கட்சிகளும் சரி சேர்ந்து பஸ் மறியல் செய்தோம். சட்டசபை நிகழ்ச்சி நடந்து கொண்டிருக்கிற நேரத்திலே, சரியாக ஒரு மணி அளவில், சரியான உச்சி வெயிலிலே, நடுரோட்டிலே பஸ் மறியல் செய்தோம். ஆனால், கடந்த தி.மு.க. ஆட்சியில் தள்ளுபடி செய்யவில்லை. மாண்புமிகு அம்மா அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடனேயே, வட்டியையும், அபராத வட்டியையும், 311 கோடி ரூபாய்க்குத் தள்ளுபடி செய்திருக்கிறார்கள். அதை நீங்கள் நினைவில் கொள்ள வேண்டும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடு)

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....(குறுக்கீடு)

**திரு. ஜே.ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அவர்களுடைய அரசு சொன்னதைச் செய்யாததால்தான், தேர்தலிலே அவர்களை ஆட்சியிலே இருந்து மக்கள் வெளியேற்றினார்கள் (குறுக்கீடு)

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள், ஞானசேகரன், (குறுக்கீடு) ஞானசேகரன், ரொம்ப நேரமாகத் துடிக்கிறார்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதே அவையிலே 7 மாதங்களுக்கு முன்னாலே கேள்வி நேரத்திலே ஒரு கேள்வியைக் கேட்டு, கவன ஈர்ப்புத் தீர்மானத்திலேயும் அது வந்து, மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம், இதே மன்றத்தில், கரும்புக்கு டன் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் கொடுப்பது குறித்துக் கேட்டபோது, 'பரிசீலிக்கிறோம்'என்று சொன்னார்கள், அதேபோல, கடந்த ஆட்சிக் காலத்திலும்கூட, அருமை நண்பர்கள் விசுவநாதன் ஆகட்டும், சுந்தரம் ஆகட்டும், கருப்பசாமி ஆகட்டும், எங்களோடு சேர்ந்து, அவர்களும் ஆயிரம் ரூபாய், டன் ஒன்றுக்குக் கேட்டு எங்களோடு குரல் கொடுத்தது உண்மை. இப்போது, இந்த அவை அறிய விரும்புவது எல்லாம், யார் என்ன சொன்னார்கள் என்பதைவிட, இப்போது நீங்கள் ஆட்சி செய்து அமைச்சரவையிலே இருந்துகொண்டிருக்கிறீர்கள்;

[திரு. சி. ஞானசேகரன்] [2002 ஏப்ரல் 23

கொண்டிருக்கிறீர்கள். ஆயிரம் ரூபாய் டன் ஒன்றுக்குக் கொடுக்கப் போகிறீர்களா, இல்லையா என்பதைத் தெளிவாகச் சொல்லிவிட வேண்டுமேயொழிய, 'கழுவுகிற மீனிலே நழுவுகிற மீன்' மாதிரி, நீங்கள் அதையே சொல்லிக் கொண்டிருப்பீர்கள் என்று சொன்னால், தமிழ்நாட்டு மக்களை இனியும் நீங்கள் திசை திருப்ப முடியாது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், "கரும்பாலை நட்டத்திலே ஓடிக் கொண்டிருக்கிறது; அல்லது case இருக்கிறது" என்று பலவற்றைச் சொன்னாலும்கூட, நீங்கள் அதற்குப் பொறுப்பேற்கப் போகிறீர்களா, கொடுக்கப் போகிறீர்களா, இல்லையா என்பதைத் தெளிவாக்க வேண்டுமென்று அவைத் தலைவர் மூலமாக நான் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர்தான் சொல்லிவிட்டார்; 'பரிசீலிக்கிறோம்' என்பதைத்தான் அமைச்சர் அவர்களும் சொல்லியிருக்கிறார். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே உறுப்பினர்கள் தங்களுடைய ஆதங்கத்தையெல்லாம் காட்டினார்கள். நான் ஏற்கெனவே இதுபற்றி விரிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறேன். கரும்புக்கு டன் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் கொடுப்பதை, நீங்கள் எங்களோடு சேர்ந்து கேட்டீர்களா, இல்லையா என்று கேட்டார்கள். நான் கேட்கிறேன்; ஏற்கெனவே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தேர்தல் அறிக்கையில், நாங்கள் கரும்புக்கு ஆயிரம் ரூபாய் கொடுப்போம் என்று சொல்லவில்லை. (குறுக்கீடு)

**திரு. சி. ஞானசேகரன்:** இப்போது கொடுக்கப் போகிறீர்களா, இல்லையா என்பதைச் சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** கொஞ்சம் கேளுங்கள், கொஞ்சம் அமைதியாக இருக்க வேண்டும்.

ஆனால், ஐந்தாண்டு காலம் இந்த அவையிலே உறுப்பினராக இருந்த மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்களைப் பார்த்துக் கேட்கிறேன். அப்போது தருவேன் என்று சொன்னவர்கள் 'ஐந்தாண்டு காலத்தில் கொடுத்துவிட முடியுமா, ஐந்தாண்டு காலம் பொறுத்துக்கொள்ளுங்கள்' என்றுதான் உங்களிடம் பதிலைச் சொன்னார்கள். ஆனால் நாங்கள் இன்றைக்கு அப்படிச் சொல்லவில்லை. ஆயிரம் ரூபாய் தருவோம் என்று நாங்கள் சொல்லவில்லை. இருக்கிற



2002 ஏப்ரல் 23] [திரு. இரா. ஜீவானந்தம்]

நிலையை நீங்கள் பார்க்க வேண்டும். கூட்டுறவு ஆலைகளினுடைய நிலையை நீங்கள் பார்க்க வேண்டும். விவசாயிகளினுடைய நலனையும் நீங்கள் பார்க்க வேண்டும். இரண்டையும் பார்த்து, எது நல்லதோ, அதை இந்த அரசு பரிசீலித்து நடவடிக்கை எடுக்கும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 2-15

அதுமட்டுமல்ல, இந்த அரசைப் பொறுத்தளவில்—நேற்றையதினம் பேசுகிறபோது சொன்னார்கள்—அதன் விவசாயிகளுக்கு நல்லது செய்யவில்லை; எதுவுமே நடக்கவில்லை என்றெல்லாம் சொன்னார்கள்; நான் சில கருத்துகளை மட்டும் உங்கள் முன்னால் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம், நேரம் அதிகமாகிவிட்டது. தமிழக அரசைப் பொறுத்தளவிலே, இந்த அரசு விவசாயிகளுக்குப் பல நல்லவற்றைச் செய்து இருக்கிறது என்பது மட்டுமல்ல; இதே அவையில் இருக்கிற மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி போன்றவர்கள், அன்றைதினம் முதலமைச்சராக இருந்த அன்றைய ஆட்சியாளர்களிடம், டெல்டா பகுதியிலே இருக்கிற விவசாயிகள் மழையினாலும், வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள்; அவர்கள், கடன் சுமையைத் தாங்க முடியாத நிலையிலே இருக்கிறார்கள்; அவர்களுடைய கடன் சுமையை இறக்குகிற வகையிலே, வட்டியையும் அபராத வட்டியையும் தள்ளுபடி செய்யுங்கள் என்று இந்த அவையிலே, இந்த மன்றத்திலே நீங்கள் கேட்டீர்களா, இல்லையா? அன்றைக்கு என்ன பதிலைச் சொன்னார்கள்? ஏதோ ஒரு காரணத்தைச் சொல்லி, சாக்குப் போக்கைச் சொல்லி, ஏற்கெனவே இருந்த எங்களுடைய இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நபார்டு வங்கிக்கு எழுதிக் கொடுத்துவிட்ட காரணத்தினாலேதான் வட்டியையும், அபராத வட்டியையும் தள்ளுபடி செய்ய முடியவில்லை என்று, விவசாயிகளுக்குச் செய்ய வேண்டிய ஓர் உதவிக்காக உண்மைக்கு மாறான தகவலை இந்த அவைக்குத் தந்துவிட்டுச் சென்றார்களா, இல்லையா? ஆனால், இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சர் பொறுப்பை ஏற்றதற்குப் பின்னால், அந்த விவசாயிகளினுடைய கோரிக்கையை ஏற்று, நீங்கள் எல்லாம் கேட்காமலேயே, வட்டியையும், அபராத வட்டியையும் 311 கோடி ரூபாய்க்குத் தள்ளுபடி செய்தார்களா, இல்லையா என்பதை

[திரு. இரா. ஜீவானந்தம்] [2002 ஏப்ரல் 23

(மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அதுமட்டுமல்ல. 2 மாதங்களுக்கு முன்னால் பருவம் தவறிப் பெய்த மழையால் டெல்டாப் பகுதி பாதிக்கப்பட்டது; வெள்ளத்தாலே பாதிக்கப்பட்டது. அப்போது புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எங்களை அழைத்து, உடனடியாக நீங்கள் போய்ப் பார்க்க வேண்டும்; வெள்ளச் சேதத்தைப் பார்த்து, அதனுடைய நிலையைத் தெரிவிக்க வேண்டும் என்று சொன்னார்கள். அம்மா அவர்கள் அறிவித்த உடனே, வெள்ளத்தாலே பாதிக்கப்பட்டிருக்கிறது அந்த டெல்டா பகுதி என்று சொன்ன உடனே, அம்மா அவர்கள் 49 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்தார்கள். ஆக, இப்படி விவசாயிகளினுடைய பிரச்சினைகள் எதுவாக இருந்தாலும் சரி, அந்தப் பிரச்சினைகளை உடனடியாகத் தீர்க்கிற ஆற்றல் பெற்றவர்களாக, விவசாயிகளுக்கு நல்லது செய்கிற ஓர் ஆட்சியாக புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சி இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்களுடைய ஆதங்கம் எங்களுக்கு நன்றாகத் தெரிகிறது. நாங்களும் விவசாயிகளுக்காகக் குரல் கொடுக்கிறவர்கள்தான். இருக்கிற நிலைமைக்கு ஏற்பத்தான் நாம் அதைச் செய்ய வேண்டும். இன்றைக்குத் தனியார் ஆலைகள் வழக்குத் தொடர்ந்து இருக்கிறார்கள். இன்றைக்கு வழக்கு உச்ச நீதிமன்றத்திலே இருக்கிறது. அந்த உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்புக்காகத்தான் நாம் இன்றைக்குக் காத்துக் கொண்டிருக்கிறோம். தீர்ப்பு வந்ததற்குப் பின்னால், நல்ல ஒரு முடிவு எடுக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி விவசாயிகள் ஆட்சி. எதற்காக இதைச் சொல்கிறேன் என்று சொன்னால், தமிழகத்திலே மட்டுமல்ல, இந்திய நாட்டிலேகூட எந்தவொரு அரசாங்கமும் எடுக்காத ஒரு திடமான முடிவை எடுத்து, இன்றைக்கு 20 இலட்சம் எக்டேர் நிலங்களை தரிசு நிலங்களாக இருக்கக்கூடிய அந்த நிலங்களையெல்லாம்—நல்ல விளை நிலங்களாக மாற்ற வேண்டும் என்பதற்காக ஒரு திட்டத்தை உருவாக்கித் தந்து இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதுபோன்ற ஒரு திட்டம் இந்தியாவிலே வேறு எந்தவொரு மாநிலத்திலேயும் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பது மட்டுமல்லாமல், வறுமைக்



2002 ஏப்ரல் 23] [திரு. இரா. ஜீவானந்தம்]

கோட்டுக்குக்கீழே யாரும்இருக்க மாட்டார்கள் என்கின்ற உறுதியை அளித்தது மட்டுமல்லாமல், இந்தியாவிலேயே தமிழ்நாட்டை முதல் மாநிலமாக ஆக்கிக் காட்டுவேன் என்று சொன்ன முதலமைச்சர்தான் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஆட்சியிலேதான், இன்றைக்கு நான் ஏற்கெனவே எடுத்துச் சொன்னதைப் போல, மிகப் பெரிய மாற்றங்களை இந்த விவசாயத் துறை சந்திக்க இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணைக்கிணங்க சில அறிவிப்புகளை உங்கள் முன்னாலே நான் படிக்கிறேன்:

வேளாண்மை மற்றும் தோட்டக் கலைத் துறைகளில் ஆண்டு வளர்ச்சி முறையே 4 விழுக்காடாகவும், 8 விழுக்காடாகவும் சாதனை அடைய பத்தாண்டுத் திட்டத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.

2001-2002 ஆம் ஆண்டு 1.36 இலட்சம் ஏக்கர் தரிசு நிலம் மேம்படுத்தப்பட எடுத்துக்கொள்ளப்பட்டது. அதுபோக, 2002-2003 ஆம் ஆண்டில் மேலும் 2.5 இலட்சம் ஏக்கர் தரிசு நிலம் மேம்படுத்தப்பட நடவடிக்கை எடுக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி). மாநில அரசின்கீழ் உள்ள தரிசு நிலங்கள் 30 ஆண்டுகள் வரை குத்தகைக்கு சலுகை வாடகை விகிதத்தில் கீழ்க்கண்டவாறு வழங்கப்படும்: முதலாண்டுக் குத்தகைத் தொகை, நிலத்தின் சந்தை மதிப்பில் 1 விழுக்காடு. இரண்டாம் ஆண்டுக் குத்தகைத் தொகை, நிலத்தின் சந்தை மதிப்பில் 2 விழுக்காடு. மூன்றாம் ஆண்டுக் குத்தகைத் தொகை, நிலத்தின் சந்தை மதிப்பில் 3 விழுக்காடு. நான்காம் ஆண்டு மற்றும் அதற்கு மேற்பட்ட காலத்திற்குக் குத்தகைத் தொகை, நிலத்தின் சந்தை மதிப்பில் 4 விழுக்காடு.

10

நிலச் சீர்திருத்தச் சட்டம் பிரிவு 37(எ)-ன்கீழ் உச்ச நில வரம்பிலிருந்து விதிவிலக்குக் கோரும் விண்ணப்பங்கள் தரிசு நிலங்களைப் பொறுத்தவரையில், ஏற்கெனவே ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள விரைவு வழி நடைமுறையின்கீழ் பரிசீலிக்கப்பட்டு, 60 நாட்களுக்குள் முடிவு [illegible]ப்படும். தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், புதிதாக [illegible]ார்க்கப்படும் மரங்களைப் பயன்படுத்தி, ஆயிரம் வேளாண்

[திரு. இரா. ஜீவானந்தம்] [2002 ஏப்ரல் 23

தொடர்புடைய ஊரகத் தொழில்கள் தொடங்கப்படும். பயோமாஸ், ஜட்ரோஃபா, ப்ரரடைஸ் மரங்களை வளர்த்து, மின்சார உற்பத்தி மற்றும் எண்ணெய் உற்பத்தி செய்யக்கூடிய ஒருங்கிணைந்த திட்டம் செயல்படுத்தப்படும். விளக்கப் பண்ணைகள் அமைத்து, ஒரு இலட்சம் விவசாயிகளுக்கு கலிஃபோர்னியாவில் நடைமுறைப்படுத்துவதுபோல நவீன வேளாண் முறைகளில் பயிற்சி அளிக்கப்படும். இவ்வாறு பயிற்சி அளிக்கப்படும் விவசாயிகளில் 50 சதவிகிதம் பெண்களாக இருப்பார்கள். மேலும், வேலூர், தலைவாசல், உடுமலைப்பேட்டை, வத்தலக்குண்டு, விருதுநகர் மற்றும் விளாத்திகுளம் ஆகிய இடங்களில் தனியார் குளிர்பதனக் கிடங்கு நிறுவ தனியார் துறைக்கு நிலம் குத்தகைக்கு வழங்கப்படும்.

வீரிய நெல், உயிரியல் உரம், பயிர்களுக்காக உழவர் வயல்வெளிப் பள்ளி, பருத்தியில் பூச்சிகள் கண்காணிப்பு மற்றும் ஒவ்வொரு மழைத் துளிக்கும் அதிக விளைச்சல் போன்ற வளர்ச்சித் திட்டங்களுக்கு ரூ.50 இலட்சம் ஒதுக்கப்படும்.

வேளாண்மை விரிவாக்க மையங்களில் உள் கட்டமைப்புகள் ரூ.100 இலட்சத்தில் மேம்படுத்தப்படும். வேளாண்மைப் பொறியியல் துறைக்கான நிரப்பி சமன்படுத்தும் இயந்திரம் மற்றும் தானியங்கி சமன்படுத்தும் இயந்திரம் ரூ.13.25 இலட்சத்தில் வாங்கப்படும். விதைச் சான்றுத் துறைக்கு ரூ.3 இலட்சம் செலவில் டிஜிட்டல் கேமரா, ஜெனரேட்டர், ஈரமாக்கும் கருவி மற்றும் விதைச் சேமிப்பு அலமாரிகள் வாங்கப்படும்.

ஒரு நாட்டின் வேளாண்மை உற்பத்தியும், உணவுப் பாதுகாப்பும் விவசாயிகளுடைய நிலத்திலே நிர்ணயிக்கப்படுகிறது. ஆனால், விவசாயிகளுடைய நலனோ சந்தையில்தான் நிர்ணயிக்கப்படுகிறது. கீழ்க்கண்ட திட்டங்கள் வேளாண் விற்பனை வாரிய நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும்: 20 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் ரூ.10 கோடி மதிப்பில் அனைத்து உள் கட்டமைப்பு வசதிகள் உருவாக்கப்படும். வேளாண் உணவுப் பொருட்களைப் பகுத்தறிந்து தரச்சான்றிதழ் வழங்க, உலகத் தரம் வாய்ந்த சோதனைக் கூடம் ரூ.3 கோடி செலவில் சென்னையில் உருவாக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆண்டிப்பட்டி, எழுமாத்தூர், ஓமலூர் மற்றும் தாத்தையங்கார்பேட்டை ஆகிய ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கு



2002 ஏப்ரல் 23] [திரு. இரா. ஜீவானந்தம்]

புதிய உள் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படும். ஏலக் கொட்டகை, கிட்டங்கி, உலர் களம், சுகாதார வசதி, குடிநீர் வசதி போன்றவை ரூ.3 கோடி மதிப்பீட்டில் உருவாக்கப்படும்.

செம்பனார்கோவில், கம்பம், சிவகிரி, சேவூர், நாகப்பட்டினம் ஆகிய இடங்களில் உள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் ரூ.96 இலட்சம் செலவில் ஊரகக் கிட்டங்கிகள் கட்டப்படும்.

ரூ.55 இலட்சம் செலவில் வேளாண் விளைபொருள் உற்பத்தி மற்றும் விற்பனைத் தகவல் மையம், திண்டிவனம், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, கோயம்புத்தூர், திண்டுக்கல், வந்தவாசி, பொள்ளாச்சி, கடலூர், தஞ்சாவூர், இராமநாதபுரம், கலவை, போளூர், சின்னசேலம், விக்கிரவாண்டி, தம்மம்பட்டி, அலங்கியம், வெள்ளக்கோவில், ஆலங்குடி, பழனி மற்றும் சிவகங்கை ஆகிய ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் நிறுவப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

வேளாண் விற்பனை குறித்த விரிவாக்கப் பயிற்சி ரூ.8 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்படும். சிப்பம் கட்டுதல் (packaging) தொடர்பான பயிற்சி ரூ.5 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்படும். மாநில வேளாண்மை விற்பனைப் பயிற்சி மையத்தின் மூலம் ரூ.6 இலட்சம் செலவில் 2000 உழவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும். தமிழ்நாடு உழவர் நல நிதித் திட்ட உதவித் தொகை உயர்த்தித் தரப்படும்.

விவசாயிகள்—குத்தகைதாரர்கள் விபத்தில் உயிரிழக்க நேரிட்டால் அல்லது நிரந்தர ஊனமுற்றால், பாம்புக்கடியில் மரணமடைந்தால், தற்போது வழங்கப்படும் தொகை ரூ.50,000 என்பது ரூ.75,000 ஆக உயர்த்தித் தரப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

விபத்தில் இரண்டு கைகள் அல்லது இரண்டு கால்கள் அல்லது இரண்டு கண்கள் இழக்க நேரிட்டால், ரூபாய் 25,000 என்பது ரூ.50,000-ஆக உயர்த்தித் தரப்படும் (மேசையைத் தட்டும் ஒலி)

விபத்தில் ஒரு கை அல்லது ஒரு கால் அல்லது ஒரு கண் இழக்க நேரிட்டாலோ அல்லது இடுப்பு ஊனமுற்றாலோ, ரூ.25,000 என்று இருப்பது ரூ.35,000 ஆக உயர்த்தித் தரப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

தருமபுரி மாவட்டம், ஓசூரில் ரோஜா மலர்கள் ஏற்றுமதி மண்டலம் உருவாக்க மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முன்னிலையில் மத்திய அரசு நிறுவனமான 'APEDA'-வும், தமிழ்நாடு வேளாண் துறையும் 20-3-2002 அன்று ஒப்பந்தத்திலே கையெழுத்திட்டிருக்கிறது.

பிற்பகல் 2-25

நேற்றையதினம் இங்கே தி.மு.க.-வைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் பிச்சாண்டி அவர்கள் பேசுகிறபோது, 'விவசாயிகளினுடைய காதிலே பூச்சுற்றாதீர்கள்' என்று, ஒரு பழமொழியைச் சொன்னார்கள். விவசாயிகளினுடைய காதிலே ஐந்தாண்டு காலம் அவர்கள் பூவைச் சுற்றிவிட்டுப் போயிருக்கிறார்கள்.

இதயதெய்வம் 'டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வந்ததற்குப் பின்னால்தான் தனியார் மூலமாக—இன்றைக்கு மலருக்கென தனியார் துறை நிறுவனமும், டிட்கோவும் உருவாக்கிய கூட்டு நிறுவனமான TANFLORA நிறுவனமும் இந்த ஏற்றுமதி மண்டலத்தை ரூ.24.85 கோடி செலவில் ஏற்படுத்தியிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) மத்திய அரசும், தமிழக அரசும் இந்தத் தொழில் வளர்ச்சி பெற அனைத்து உதவிகளையும் ஒருங்கிணைந்து செய்யும்.

தற்போது ஆண்டிற்கு ரூ.30 கோடி மதிப்புள்ள மலர்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. வரும் ஐந்தாண்டு காலத்தில், ஆண்டு ஒன்றுக்கு ரூ.1,000 கோடி அளவிற்கு மலர்கள் ஏற்றுமதி செய்ய வாய்ப்புள்ளது.

மாம்பழத்திற்கென தேனி, திண்டுக்கல், மதுரை, விருதுநகர் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களை உள்ளடக்கிய ஏற்றுமதி மண்டலம் தேனி மாவட்டத்தில் தனியார் துறையின் மூலம் ரூ.25 கோடி செலவில் உருவாக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஏற்றுமதி மண்டலத்திலிருந்து மாம்பழத்தினை மட்டும் அல்லாமல் இந்த மாவட்டங்களில் விளையும் மற்ற பழங்கள், காய்கறிகளைப் பதப்படுத்தியோ அல்லது பச்சைக் காய்கறிகளாகவோ, பழங்களாகவோ ஏற்றுமதி செய்யலாம்.

இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் தோட்டக்கலைக்கென தனியாகக் கொள்கை—Horticulture Policy—உருவாக்க மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். Mission Mode of Approach; வேளாண்மைத் துறையில் தோட்டக்கலை வளர்ச்சி இயந்திரமயமாக உருவாகி வருவதைக்



கருத்தில் கொண்டு, கனிகள், காய்கறிகள், மலர்கள் ஆகியவற்றை அதிக அளவில் உற்பத்தி செய்வதற்கு மண் வளத்தைப் பெருக்குவதிலிருந்து, உற்பத்தி செய்த விளைபொருள்கள் நுகர்வோருக்குப் போய்ச் சேரும் வரையில், இடையே உள்ள அனைத்துப் பணிகளையும் ஒருங்கிணைத்துச் செயல்படுத்த தோட்டக்கலைத் துறைப் பணிகள், இனி Mission Mode of Approach மூலமாகச் செயல்படுத்தப்படும்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகிறபோது, தென்னையில் இருக்கிற ஈரியோபைட் பற்றிச் சொன்னார்கள். ஆனால் ஒரு உண்மையை உங்கள் மத்தியிலே—மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே உண்மையை—சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். உலகத்தில் எந்த ஒரு நாட்டிலும் ஈரியோபைட்டிற்கு மருந்து கண்டுபிடிக்கப்படவில்லை. ஆராய்ச்சியிலே இருந்து கொண்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். ஆனால், கடந்த கால ஆட்சியிலே ரூ.19 கோடி ஈரியோபைட் மருந்தடிக்க வேண்டும் என்பதற்காக ஒரு டெண்டர் வைப்பதாக இருந்தார்கள். இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சி வந்ததற்குப் பின்னாலே, அதைப் பார்த்துவிட்டு, மருந்தே இல்லாததற்கு ரூ.19 கோடியா என்று நிறுத்தி வைத்து, இன்றைக்குத் தென்னை மரங்களுக்கெல்லாம் micro-nutrient தருகிற அளவுக்கு இன்றைக்கு அந்தத் தொகை மாற்றப்பட்டு, தென்னை மரங்களுக்கு micro-nutrient தருவதற்கான திட்டம் தயாரிக்கப்படுகிறது. இதிலே 2002-2003 ஆம் ஆண்டுக்கு தமிழகத்தில் ஈரியோ-பைட் சிலந்திப்பூச்சி தாக்கியுள்ள தென்னை மரங்களுக்கு வேர் மூலம் நுண்ணூட்டச் சத்துத் திரவத்தினைச் செலுத்திக் கட்டுப்படுத்த ரூ.19 கோடி மதிப்பில், கொச்சி, தென்னை வளர்ச்சி வாரியத்திடம் பெறப்பட்ட ரூ.9.5 கோடி நிதியினை, தென்னை வளர்ச்சி வாரியத்திடம் அனுமதி பெற்று, 50 சதவீத மானியத்தில் தென்னை விவசாயிகளுக்கு வேளாண்மை விரிவாக்க மையங்களின் மூலம் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இதனால் தென்னை விவசாயிகள் பெரிதும் பயனடைவார்கள்.

அதுமட்டுமல்லாமல், தென்னையில் காண்டாமிருக வண்டு மற்றும் சிகப்புக் கூன்வண்டுத் தாக்குதலை இனக் கவர்ச்சிப் பொறி மூலம் கட்டுப்படுத்த தென்னை வளர்ச்சி வாரியம், கொச்சி, வழங்கியுள்ள ரூ.25 இலட்சம் நிதியிலிருந்து, நடப்பாண்டில் தேவைப்படும் தென்னை விவசாயிகளுக்கு இலவசமாக இனக் கவர்ச்சிப் பொறிகள் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதனால், தென்னை விவசாயிகள் பெரிதும்

[திரு. இரா. ஜீவானந்தம்] [2002 ஏப்ரல் 23

பயன்பெறுவார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் அவையிலே பணிவோடு தெரிவித்துக்கொண்டு, இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்ற, பல்வேறு புதிய அறிவிப்புகளையும், நல்ல ஆலோசனைகளையும் வழங்கி, தரிசு நில மேம்பாட்டு அதிகார மன்றத்திற்குத் தலைமை ஏற்று, இந்தத் திட்டம் சிறப்பாகச் செயல்பட எங்களை வழிநடத்திக் கொண்டிருக்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியை நான் காணிக்கை ஆக்குகிறேன். வேளாண்மைத் துறை சிறப்பாகச் செயல்பட, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் தந்த நல்ல கருத்துகளை எல்லாம் கவனத்தில் கொண்டு, நமது மாண்புமிகு முதலமைச்சரின் வழிகாட்டுதலுடன், மாறி வரும் விஞ்ஞானத் தொழில்நுட்பங்களைக் கடைப்பிடித்து, வறுமையை ஒழித்து, வாழ்க்கையில் வளம் பெறுவதே மாண்புமிகு அம்மா அவர்களுடைய இலட்சியம். அந்த வகையில் இந்த அரசு செயல்படும்.

பிற்பகல் 2-30

நேற்றும், இன்றும், வேளாண்மை மானியக் கோரிக்கையின்மீது மாண்புமிகு உறுப்பினர்கள்—மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி அவர்கள், மாண்புமிகு செல்வி சி. கனகதாரா, மாண்புமிகு திரு. எம். ராம்குமார், மாண்புமிகு திரு. அ.இரா. மலையப்பசாமி, மாண்புமிகு திரு. கு. ஜெயக்குமார் அவர்கள், மாண்புமிகு திரு. கே.சி. கருணாகரன் அவர்கள், மாண்புமிகு திரு. வை. சிவபுண்ணியம் அவர்கள், மாண்புமிகு திரு. ஜெக. வீரபாண்டியன் அவர்கள், மாண்புமிகு டாக்டர் பி. வள்ளல் பெருமான் அவர்கள், மாண்புமிகு திரு. சி. சண்முகவேலு அவர்கள், மாண்புமிகு திரு. என்.ஆர். ரங்கராஜன் அவர்கள் கலந்துகொண்டு, பல்வேறு நல்ல கருத்துகளை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அவை அனைத்தையும் அரசு கருத்தில் கொண்டுள்ளது. மேலும், இந்த மானியக் கோரிக்கையின்மீது 50-க்கும் மேற்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் 238 வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறார்கள். அவற்றைத் திரும்பப் பெற்றுக்கொண்டு இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தரும்படி கேட்டுக்கொள்கிறேன். கேட்டுக்கொள்கிற இந்த நேரத்தில், நற்றமிழ்ச் சொல் இனிக்க இந்தப் பேரவையைச் சிறப்பாக நடத்திக் கொண்டிருக்கிற மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)



2002 ஏப்ரல் 23]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

**கோரிக்கை எண் 5 - வேளாண்மைத் துறை**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கோரிக்கை எண் 5 — வேளாண்மைத் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. ஆர். சக்ரபாணி, இருக்கையில் இல்லை. திரு. ஆர். சக்ரபாணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. டி. சுதர்சனன்.

**திரு. டி. சுதர்சனம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. சுதர்சனம் அவர்களின் வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.சி. கருணாகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. தி. வேல் முருகன்.

**திரு. தி. வேல் முருகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி. வேல் முருகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. இரவிராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது.

திரு. கே. ஆறுமுகம், இருக்கையில் இல்லை. திரு. கே. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. மு. கார்த்தி, இருக்கையில் இல்லை. திரு. மு. கார்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. மே.ப. காமராஜ், இருக்கையில் இல்லை. திரு. மே.ப. காமராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. க. முருகவேல் ராஜன்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. முருகவேல் ராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. கி. பாரிமோகன்.

**திரு. கி. பாரிமோகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கி. பாரிமோகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. அ.இரா. மலையப்பசாமி.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.இரா. மலையப்பசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி.

**திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது.

திரு. க. பாரமலை, இருக்கையில் இல்லை. திரு. க. பாரமலை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. ப. ரங்கநாதன், இருக்கையில் இல்லை. திரு. ப. ரங்கநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ஜெக. வீரபாண்டியன்.

**திரு. ஜெக. வீரபாண்டியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெக. வீரபாண்டியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது.

திரு. கு. பிச்சாண்டி, இருக்கையில் இல்லை. திரு. கு. பிச்சாண்டி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. டி.பி.எம். மைதீன்கான், இருக்கையில் இல்லை. திரு. டி.பி.எம். மைதீன்கான் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

[2002 ஏப்ரல் 23

திரு. எஸ்.ஏ.எம். உசேன், இருக்கையில் இல்லை. திரு. எஸ்.ஏ.எம். உசேன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. கே.என். சேகரன், இருக்கையில் இல்லை. திரு. கே.என். சேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. எம். ராம்குமார்.

**திரு. எம். ராம்குமார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எம். ராம்குமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது.

திருமதி காசாம்பு பூமாலை, இருக்கையில் இல்லை. திருமதி காசாம்பு பூமாலை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. எஸ். நடராஜன்.

**திரு. எஸ். நடராஜன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். நடராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ஏ.எஸ். கண்ணன்.

**திரு. ஏ.எஸ். கண்ணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏ.எஸ். கண்ணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ப. அரசன்.



2002 ஏப்ரல் 23]

**திரு. ப. அரசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. அரசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது.

திரு. இரா. திருமாவளவன், இருக்கையில் இல்லை. திரு. இரா. திருமாவளவன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கா. கந்தசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. டி.கே. இராஜா.

**திரு. டி.கே. இராஜா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி.கே. இராஜா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது.

திரு. பி.எஸ். உலகரட்சகன், இருக்கையில் இல்லை. திரு. பி.எஸ். உலகரட்சகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. மு.பெ. சாமிநாதன், இருக்கையில் இல்லை. திரு. மு.பெ. சாமிநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ. 599,76,82,000 மற்றும் மூலதனக் கணக்கில் ரூ. 3,69,86,000க்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்" என்னும் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

[2002 ஏப்ரல் 23

## 10. அரசினர் சட்டமுன்வடிவு (ஆய்வு செய்தல்)

### தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவு (ஆய்வு செய்தல்). 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 14/2002) மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 14/2002)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல முறை தேர்தல் அறிவிக்கப்பட்டும், இப்போது சமீபத்திலே தேர்தல் நடந்து, அந்தத் தலைவர்கள் எல்லாம் இப்போது பாப்பாபட்டி, கீரிப்பட்டியிலே ராஜினாமா செய்திருக்கிறார்கள். அரசே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது இல்லை இது. கொட்டகாச்சியேந்தல், நாட்டாமங்கலம்.

**திரு. சி. ஞானசேகரன்:** இதில் சேர்த்துக்கொள்ளவேண்டும். இதிலே அரசு எப்படியாவது, நம்முடைய அமைச்சர் அவர்களேகூட ஊருக்குச் சென்று, சர்வ கட்சிகளையும், அதேபோல சமூக அமைப்புகளையும், அந்த இடத்திலே நீங்கள் அழைத்துப் பேசி—ஏனென்றால், இப்படிப்பட்ட சமுதாயச் சீர்கேடு வந்துவிடக் கூடாது. சமுதாய அமைப்பு என்பது ஒன்றாக இந்த ஆட்சியிலே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை நிரூபிக்கின்ற வகையில்—அரசே இதில் தலையிட்டு, தேர்தலை உடனடியாக நடத்த வேண்டும் என்று தமிழ் மாநில காங்கிரஸ் சார்பாக வலியுறுத்தி, இந்தச் சட்டமுன்வடிவை வரவேற்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

---

@2002 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.



2002 ஏப்ரல் 23]

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவு மாறுதலுக்கு உட்பட்டதல்ல. தேவையான ஒன்றுதான். ஆனால், பாப்பாபட்டி, கீரிப்பட்டியிலே தேர்தல் நடத்திய கையோடு ராஜினாமாவும் நடந்து விட்டதே என்ற ஆதங்கத்தைத்தான் இப்போது வெளிப்படுத்துகிறோம். குறிப்பாக, அதில் நாம் ஒன்றும் செய்ய முடியாது என்று இருந்துவிட முடியாது. ஆனால், அது உள்நோக்கத்தோடு செய்யப்பட்டிருக்கிறது என்பதை நான் பதிவு செய்ய விரும்புகிறேன். காரணம், நேற்று நடைபெற்ற ஊர்வலத்திலே, கீரிப்பட்டி ஊராட்சி மன்றத் தலைவர் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டு, பதவிப் பிரமாணத்திலே கையெழுத்துப் போட்டு, அடுத்த கையெழுத்தையும்—ராஜினாமா என்ற கையெழுத்தையும்—போட்டு உடனே வழங்கியிருக்கிறார் என்று சொன்னால், அங்கே நிர்பந்தம் நடைபெற்றிருக்கிறது என்பது கண்கூடாகத் தெரிகிறது. அங்கே பல அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்களும், பொறுப்பாளர்களும் கலந்துகொண்டு ஊர்வலமாகச் சென்றார்கள் என்று குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படியென்றால், அரசு நிர்பந்தத்தின் காரணத்தினாலே தேர்தல் நடத்துவதும், அங்கே ஊர் ஒற்றுமை என்ற பெயராலே அதை மறுப்பதும், அதை நிர்பந்தப்படுத்தி, அந்தத் தேர்தலிலே வெற்றி பெற்ற ஒரு பிரதிநிதியை compulsory-ஆக ராஜினாமா செய்யச் சொல்லியிருப்பது என்பதே இந்த நாட்டினுடைய ஜனநாயகத்திற்கு மிகப் பெரிய கேள்வியாக அமைந்திருக்கிறது. இதை நான் சொல்கிறபோது, அதை வேறு ஒரு ரீதியான சிந்தனையிலே சொல்வதாகக் கருதக்கூடாது.

பிற்பகல் 2-35

அப்படிப்பட்ட பாதிப்பு நம்முடைய தமிழகத்திலே இருக்கக் கூடாது என்பதுதான் காரணம். இதைப்போலவே இந்த இடஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிற ஊராட்சியைப் போன்ற கருத்து தமிழகம் முழுவதும் இருக்கிறது. ஊராட்சிகளிலும் இருக்கிறது, பேரூராட்சிகளிலும் இருக்கிறது, நகராட்சிகளிலும் இருக்கிறது. இந்த இடஒதுக்கீட்டுக் கொள்கையை எதிர்த்துக்கூட பல பேர் மனுச் செய்திருக்கிறார்கள். ஆனால் அதையெல்லாம் தாண்டித்தான் தேர்தல் நடைபெற்றிருக்கிறது. இந்த இடத்தில் மட்டும்—இப்படி ஒரு 4 கிராமங்களில் இந்த நிலை நீடிக்கிறது என்பது தமிழகத்திலே ஜனநாயகத்திற்கு—உள்ளாட்சி அமைப்புகளுக்கான ஜனநாயகத்திற்குக் கேள்விக்குறியாகவும்,

இழுக்காகவும் இது அமைந்திருக்கிறது. ஆகவே இதைப் பற்றி அரசு பரிசீலித்து, உறுதியான நடவடிக்கையை மேற்கொண்டு, திரும்பவும் தேர்தலை நடத்துவதற்கான முயற்சிகளை எடுக்கவேண்டும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன். உள்ளாட்சித் தேர்தல் நடைபெறுகிறபோது, சிற்றூராட்சித் தேர்தல் நடைபெறுகிறபோது, வார்டுகளுக்கான தேர்தல் நடைபெறவில்லை, மனுத் தாக்கல் செய்யவில்லை என்று குறிப்பிடப்பட்டு இருக்கிறது. யாரையும் மனுத் தாக்கல் செய்ய அனுமதிக்கவில்லை என்றுதான் இதிலிருந்து தெரிகிறது. ஏனென்றால், நேற்றைக்கு நடைபெற்ற சம்பவத்தின் மூலமாக இது தெளிவாகத் தெரிகிற காரணத்தால் இப்படிப்பட்ட சூழ்நிலைகள் ஏற்படுமானால், தேவையில்லாத பிரச்சினைகளைத் தமிழகத்திலும், மற்ற இடங்களிலும் தோற்றுவிப்பதற்குரிய வாய்ப்பாக இது அமைந்துவிடும் என்று நான் அச்சப்படுகிறேன். இதை நான் கண்டிக்கிறேன். இதை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக, கருத்தாக நான் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன். (குறுக்கீடு) திருமதி யசோதா, திரு. நன்மாறன் பேசி முடிக்கட்டும். உட்காருங்கள்.

***திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவு ஒரு தவறான முன்னுதாரணத்திற்கு வழிவகுத்து விடக்கூடாது என்பதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறது. இது இப்படியே தொடர்ந்தால், பாதுகாப்பற்ற ஒரு நிலைமை தமிழகம் முழுவதிலும் ஏற்பட்டுவிடும். இதை ஆட்சியின் மீதான குற்றமாக மட்டும் நான் சொல்ல விரும்பவில்லை. இந்த மன்றத்திலுள்ள அனைத்து அரசியல் கட்சிகளும், நாம் இவ்வளவு தூரம் கட்சியை நடத்தினாலும், ஏதேதோ பேசினாலும் ஒரு குறைந்தபட்ச உத்தரவாதத்தைக்கூடச் செய்ய முடியாத நிலையில் இருக்கிறோம் என்பதை, அனைத்து ஜனநாயக சக்திகளுக்கும் ஒரு அவமானகரமானதாகத்தான் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கருதுகிறது என்பதைத் தெரிவித்து, இந்தச் சட்டமுன்வடிவை எதிர்க்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. முருகவேல் ராஜன். (குறுக்கீடு) திருமதி யசோதா, திரு. முருகவேல் ராஜன் பேசிவிடட்டும்.





**திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே கீரிப்பட்டி, பாப்பாபட்டி மற்றும் நாட்டாமங்கலம் போன்ற கிராமங்களில் கிராம வார்டுகளுக்கான உறுப்பினர் தேர்தல் நடைபெறவில்லை, நடத்த இயலவில்லை, எனவே, அடுத்து வருகிற ஓர் ஆறு மாதங்களுக்கு தனி அலுவலர்களின் பதவிக் காலத்தை நீட்டிப்பதற்கான சட்டம் இங்கே நிறைவேற்றுவதற்காக சட்டத் திருத்தம் முன்வைக்கப்பட்டிருக்கிறது. தேர்தல் நடைபெற முடியாத இடங்களில் தனி அலுவலர்களின் பதவிக் காலத்தை நீட்டிப்பதில் பாட்டாளி மக்கள் கட்சிக்கு மாற்றுக் கருத்து இல்லை. தேவைதான். ஆனால், எவ்வாறு தேர்தல் நடைபெற முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதை ஆய்ந்து, அது வருங்காலங்களில் தவிர்க்கப்பட்டால்தான், மீண்டும், மீண்டும் தனி அலுவலர்களின் பதவிக் காலத்தை நீட்டிப்பதற்கான இந்த நிலைமைகள் தவிர்க்கப்பட முடியும். சமூக நீதி, ஜனநாயகம், சமத்துவம், சகோதரத்துவம், இறையாண்மை, ஒற்றுமை, ஒருமைப்பாடு, தேசியம் என்றெல்லாம் பேசிக்கொண்டிருக்கிற இந்தக் காலத்திலே, சிறுபான்மையினர் ஆட்சி செய்வதை, தாழ்த்தப்பட்டோர் ஆட்சி செய்வதை, பெரும்பான்மையினரும், முன்னேறிய சமுதாயமும் பொறுத்துக்கொள்வதுதான் சகிப்புத் தன்மையாக இருக்க முடியும். ஆனால் இங்கே பதவி ஏற்ற மறு நிமிடமே பதவியை ராஜினாமா செய்யச் சொல்லியிருப்பது, மண வாழ்க்கைக்குத் தயார் ஆன ஒரு பெண், தன் கணவரிடம் தாலியை ஏற்றுக்கொண்டு, மறு நிமிடமே அவளே தாலியை அறுத்துக்கொண்டால், அவளுக்கு அந்த மண வாழ்க்கையில் சம்மதம் இல்லை என்று சொல்வதைப் போல ஆகிவிடும். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் ** போன்றவர்கள், இமயமலை அடிவாரத்திலிருந்து வேட்பாளர்கள் வருகிறார்கள், அரசியல் இலாபத்திற்காகத் தூண்டிவிடுகிறார்கள் என்றெல்லாம் வாதிடக்கூடும். ஆனால், உண்மையில் அந்தத் தாழ்த்தப்பட்ட மக்களுக்காகப் பேசச் சென்ற அந்தச் சமுதாயத் தலைவர்கள் எல்லாம் அங்கு செல்ல முடியாமல் அரசாங்கத்தாலேயே தடுக்கப்பட்டார்கள். நாங்கள் கேட்பதெல்லாம், அந்த இடத்தில் தேர்தல் நடத்தவேண்டுமென்று அரசாங்கம் முடிவு செய்தால் மட்டும் போதாது. இன்று ஜனநாயகம் நடைமுறைப்படுத்தப்படுவது, இங்கே இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர் ** போன்றவர்கள் அனுமதிக்காக ஜனநாயகம் காத்திருக்கிறது. ஜனநாயகம் வாழ வேண்டுமா, சாக வேண்டுமா என்பதற்கு இவர்களைப் போன்றவர்களுடைய ஒத்துழைப்புக்கும், அனுமதிக்கும் இன்றைக்கு ஜனநாயகம் காத்திருக்கிறது. எனவே, சகிப்புத் தன்மையை வளர்க்க,

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

சகோதரத்துவத்தை வளர்க்க, இறையாண்மையைக் காக்க, ஒற்றுமையைக் காக்க, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் போன்றவர்களெல்லாம் முன்வந்து அரசுக்கு உதவி செய்து, தேர்தலை விரைவில் நடத்தி ஜனநாயகத்தை நிலைநிறுத்துவதன் மூலமாகத்தான் இதுபோன்ற தனி அலுவலர்கள் பதவிக் காலத்தை நீட்டிப்பதைத் தவிர்க்க முடியும் என்பதை இந்த நேரத்திலே பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக சுட்டிக்காட்டி, . .

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய கட்சியின் மாண்புமிகு உறுப்பினர் திரு. முருகவேல் ராஜன் அவர்கள் பேசுகிற நேரத்திலே, ஓர் இயக்கத்தினுடைய சட்டமன்ற உறுப்பினர் பெயரைக் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார். அந்தப் பெயரை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுமாறு கட்சியின் சார்பிலே நானே கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ** என்ற பெயர் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு)

முருகவேல் ராஜன், உங்களுடைய தலைவர் சொல்லிவிட்டார். முருகவேல் ராஜன், பிரச்சினை என்ன என்பது எல்லோருக்கும் தெரியும். தேர்தல் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும்; எல்லோரும் அதிலே ஒத்துழைக்கவேண்டும் என்பதுதான் கருத்து. (குறுக்கீடு) சொல்லுங்கள், சொல்லுங்கள்.

பிற்பகல் 2-40

**திரு. க. முருகவேல் ராஜன்:** நான் மாண்புமிகு உறுப்பினர் ** அவர்களைக் குறைத்துச் சொல்லவில்லை. (குறுக்கீடு) இல்லை, இல்லை. அந்தப் பெயரை—அவர்கள் எல்லாம் மனது வைத்தால் தேர்தல் நடப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. அவர்கள் ஒத்துழைப்பைத்தான் கேட்டேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குறைத்தோ, பெருமைப்படுத்தியோ பெயரைச் சொல்ல வேண்டியதில்லை. அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. திருமதி டி. யசோதா.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவு முன்மொழியப்பட்டிருக்கின்ற இந்த நேரத்திலே, நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும், நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களும் அந்த மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்கூட அந்த மாவட்டத்தினுடைய சட்டமன்ற உறுப்பினராக இருக்கின்றார்கள். இந்த நிலையில், தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் அங்கே பஞ்சாயத்துத் தலைவர்களாக தேர்தலிலே வெற்றி பெற்றதுபோல ஒரு நிலைமை தோற்றுவிக்கப்பட்டு, பிறகு அவர்கள் ராஜினாமா செய்யப்பட்டு, அங்கே ஒரு தனி அதிகாரி மூலமாக நிர்வாகத்தை நடத்தக்கூடிய கட்டாயமான ஒரு சூழ்நிலைமை ஏற்பட்டிருப்பது என்று சொல்வது, 21 ஆம் நூற்றாண்டிலே நாம் அத்தனை பேரும் வெட்கித் தலைகுனியக்கூடிய ஒரு விவகாரம் என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்டி, அதே நேரத்திலே, இந்தத் தனி அதிகாரியினுடைய ஆயுட்காலத்தை அதிகரிக்காமல், மிகக் குறுகிய காலத்திலேயே மீண்டும் அங்கே தேர்தலை நடத்தவேண்டும். அனைத்துக் கட்சியினரையும் ஒன்று சேர்த்து அங்கு ஒரு நல்ல நிலைமையினை ஏற்படுத்தி, தேர்தலை நடத்தி, அந்தச் சமுதாயத்திற்குரிய உரிமையை நீங்கள் உருவாக்கித் தரவேண்டும். கடந்த ஆறு ஆண்டு காலமாக நடைபெறாத ஒரு தேர்தலை நடத்தி ஒரு மிகப் பெரிய சரித்திரத்தைப் படைத்தும்கூட, அந்தச் சரித்திரம் பாதியிலேயே தொய்வடையக்கூடிய நிலைமை ஏற்படாதவண்ணம், மற்ற சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் இதைத் தாங்கிக்கொண்டு, ஏற்றுக்கொண்டு, ஜனநாயகத்தினுடைய உரிமையைக் காப்பாற்றவேண்டுமென்ற என்னுடைய கருத்தை நான் பதிய வைக்கின்றேன்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கு பேசியவர்கள் எல்லாம் ஏதோ ** அரசியல் கட்சியைச் சார்ந்தவர்கள் இதற்கு இடையூறாக இருப்பது போன்ற ஒரு தோற்றத்தையெல்லாம் ஏற்படுத்திப் பேசியிருக்கிறார்கள். நானும் இந்த அவையில் கடந்த ஐந்தாண்டு காலம் சென்ற ஆட்சியிலும் பங்குபெற்று இருந்தேன். அப்போதெல்லாம் அன்புக்குரிய உறுப்பினர்கள் ** போன்றவர்கள் இந்த அவையிலே இடம் பெற்றிருந்தார்கள். அன்றைக்கும் ஐந்தாண்டுகள் தேர்தலே நடத்தாமல் ஒவ்வொரு முறையும் இந்தத் தனி அதிகாரிகளுடைய காலம் நீட்டிக்கப்பட்டுக் கொண்டிருந்தது. இந்த அவையிலே அந்தச் சட்டமுன்வடிவும் வரத்தான் செய்து

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

கொண்டிருந்தது. அன்றைக்கெல்லாம் இவர்கள் இப்படி ஒரு குரலை எழுப்பியிருந்தார்களேயானால்—அன்றைக்கு நான்கூட அந்த சட்டமன்றத் தொகுதியிலே இடம் பெற்றிருக்கவில்லை—சோழவந்தான் சட்டமன்றத் தொகுதியிலே இருந்தேன்—இவர்களோடு சேர்ந்து நானும் குரல் எழுப்பி இருப்பேன். நன்றாகவே இருந்திருக்கும். என்ன காரணத்தினாலோ, எனக்குத் தெரியவில்லை,. அந்த ஐந்தாண்டு காலம் ஒருவருமே அந்தக் குரலை எழுப்பவில்லை. (குறுக்கீடு.)

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை, பேசியிருக்கிறேன். இது தேவையில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குரல் எழுப்பப்பட்டதா, இல்லையா என்பதல்ல பிரச்சினை.

***திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** உள்நோக்கம் கற்பிக்கிற மாதிரி இருக்கிறது. இது தேவையில்லை. அவர் பெயரைச் சொன்னபோது பெருந்தன்மையாக நீக்கினோம். மற்றவர்கள் பெயரைச் சொல்லி உள்நோக்கம் கற்பிப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. அது முறையல்ல. அவர் உள்நோக்கம் கற்பிக்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் குறிப்பிட்ட மற்றப் பெயர்கள் நீக்கப்படுகின்றன.

பிற்பகல் 2-45

**திரு. லா. சந்தானம்:** அவர்கள் எல்லாம் இந்தச் சட்டமன்றத்திலே இடம்பெற்றிருந்தவர்கள் என்பதைக் குறிப்பிடுவதற்காகத்தான் சொன்னேனே தவிர, அப்படி இந்த முறை—ஆனால், இந்த அரசாங்கம் மிகுந்த சிரமத்தை எடுத்துக்கொண்டு—எனக்குக்கூட மிகுந்த பாதிப்புகள் எல்லாம் ஏற்பட்டன. மாவட்ட ஆட்சி நிர்வாகம் என்னைக்கூட என்னுடைய தொகுதிக்குப் போகக்கூடாது என்று தடை உத்தரவே விதித்தது. பத்திரிகைகளில் எல்லாம் செய்தி வந்தது. அத்தனையையும் பொறுத்துக்கொண்டு, எப்படியாவது நல்ல முறையிலே தேர்தல் நடக்கவேண்டும் என்று இந்த அரசாங்கமும் விரும்பியது. ஏறக்குறைய ஒரு மாத காலமாக அந்த இடத்திலே, காவல் துறையிலே உள்ள 50 அதிகாரிகளை அங்கேயே உட்காரவைத்து, அதை எப்படியும்



நடத்தவேண்டும் என்கின்ற முயற்சியோடு நடத்தினார்கள். தேர்தல் நடத்தப்பட்டது. தேர்வும் செய்யப்பட்டார் ஊராட்சி மன்றத் தலைவராக. அவர் விரும்பவில்லை என்றுதான் பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறது. அந்த ஊராட்சி மன்றத்திற்குப் பொறுப்பு வகிக்க என்னால் முடியாது. இங்கிருக்கிற சிரமங்களை ஏற்றுக்கொள்ள முடியவில்லை என்கிற காரணத்தினால், தானே முன் வந்துதான் அவருடைய பதவியை ராஜினாமா செய்திருக்கிறார் என்கின்ற செய்திதான் இன்றைக்கு பத்திரிகைகளிலே எல்லாம் வந்திருக்கிறது. அதில் யாருடைய தூண்டுதலும் இல்லை. நேற்றைக்கு ராஜினாமா செய்திருக்கிறார். நேற்றைக்கும், இன்றைக்கும் நான் இங்கு சட்டமன்றத்திலேதான் இருந்துகொண்டிருக்கிறேன். என்னுடைய பங்கு அங்கே என்ன இருந்திருக்க முடியும்? தேர்தல் நடந்த நேரத்திலும் இதே சட்டமன்றத்திலே இருந்து இருக்கிறேன். நேற்றைக்கு ராஜினாமா செய்கிறபோதும் இதே சட்டமன்றத்திலே இருந்து இருக்கிறேன். எனவே, எங்களைப் பொறுத்த அளவிலே, நேதாஜி அவர்களைத் தலைவராக ஏற்றுக்கொண்டிருக்கிறவர்கள் நாங்கள். ஒரு குறிப்பிட்ட இனத்திற்காக வாதாடுகிறவர்கள் அல்ல என்கிற முறையில், இங்கு அவர்கள் நினைக்கிற அளவிலே இந்த இயக்கம் இல்லை. எங்கள் இயக்கம் ஓர் இடதுசாரி இயக்கம். நானும் மிகுந்த மன வருத்தத்தோடுதான் இங்கு இருக்கிற தோழர்களோடு எல்லாம் பேசிக்கொண்டிருக்கிறேன். இவர்களிடத்திலே சொல்கிறபோது எனக்கும் உண்மையிலேயே மன வருத்தம் இருக்கிறது. அந்த மக்கள் நாங்கள் சொல்வதையும் ஏற்றுக்கொள்கிற நிலையிலே இல்லை. அவர்களுடைய எண்ண ஓட்டத்திற்குத் தகுந்தாற்போல் நாங்கள் நடக்கவேண்டிய காலக் கட்டாயத்திலே இருக்கிறோம் என்பதைத்தான் அவர்களிடத்திலே சொல்லிக்கொண்டிருக்கிறேன். எனவே இந்தச் சட்டமுன்வடிவு என்பது தவிர்க்க முடியாமல், அந்த ஊராட்சி மன்றத் தலைவர் இல்லை என்கிற நிலையினால், அரசுப் பொறுப்பிலே அதை நடத்த வேண்டும் என்பதற்காகக் கொண்டு வருகிற சட்டமுன்வடிவு என்கிற முறையிலே அதை ஏற்றுக் கொண்டு அமைகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

[2002 ஏப்ரல் 23

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம், நாட்டாமங்கலம், பாப்பாபட்டி, கீரிப்பட்டி மற்றும் விருதுநகர் மாவட்டம் கொட்டகாச்சியேந்தல் ஆகிய கிராம ஊராட்சிகளுடைய தனி அதிகாரி பதவி நீட்டிப்பு சம்பந்தமான இந்தப் பிரச்சினையில், மாண்புமிகு உறுப்பினர் திருமதி யசோதா அவர்கள். மாண்புமிகு முதலமைச்சர் அந்த மாவட்டத்தைச் சார்ந்தவர் என்று சொன்னார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தேனி மாவட்டத்திலே இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். இது மதுரை மாவட்டத்தைச் சார்ந்தது என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) மதுரை மாவட்டத்திலேயும், விருதுநகர் மாவட்டத்திலேயும்தான் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி யசோதாவிற்குச் சொல்கிறேன். நானும் அந்த மாவட்டத்தைத்தான் சேர்ந்தவன். என்ன பண்ணுவது?

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** 1996 ஆம் ஆண்டிலிருந்து 2000 ஆண்டு வரை 9 முறை தேர்தல் அறிவிக்கப்பட்டு—தி.மு.க. ஆட்சியில் இருக்கிறபோது 9 முறை அறிவிக்கப்பட்டு—உள்ளாட்சித் தேர்தலிலே அந்தக் குறிப்பிட்ட கிராமங்களுக்கு யாருமே வேட்பு மனுத் தாக்கல் செய்யவில்லை, செய்யவும் முன்வரவில்லை என்பதை இந்த நேரத்திலே நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதற்குப் பின்பு, தமிழகம் முழுமைக்கும் உள்ளாட்சித் தேர்தல் நடைபெறுகிறபோது, இந்தக் குறிப்பிட்ட 4 கிராமங்களுக்கும் தேர்தலில் போட்டியிட வேட்பு மனுத் தாக்கல் செய்ய யாரும் முன்வரவில்லை, இதைத் தெரிந்துதான் நாங்கள், அடுத்த 6 மாத காலத்திற்குப் பின்பு நடைபெற்ற தேர்தலில், எப்படியாவது அங்கும் தேர்தலை நடத்தவேண்டும் என்று இந்த அரசு நல்ல அக்கறையோடு, நல்ல ஒரு தீர்வு காண வேண்டும் என்று முழு முயற்சி எடுத்துக்கொண்டதன் அடிப்படையிலேதான் இங்கே சட்டமன்றத்திலேகூட பல மாண்புமிகு உறுப்பினர்கள் தேர்தல் பிரச்சாரத்திற்கு எங்களுக்குப் போலீஸ் பாதுகாப்பு வேண்டும், வேட்பு மனுத் தாக்கல் செய்வதற்கு போலீஸ் பாதுகாப்பு வேண்டும் என்றெல்லாம் கோரிக்கைகள் வைக்கின்றபோது, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுடைய மூலமாக மாவட்டக் காவல் .துறைக் கண்காணிப்பாளரை நேரடியாக அனுப்பி, அங்கே வேட்பு மனுத் தாக்கல் செய்வதற்கு ஏதுவாக இந்த அரசு முன்வந்தது என்பதையும்,



2002 ஏப்ரல் 23] [திரு. சி. துரைராஜ்]

தேர்தல் நடத்துகிற நாளன்று முழுமையான போலீஸ் பாதுகாப்புக் கொடுத்து, நல்ல முறையிலே தேர்தல் நடத்தப்பட்டுள்ளது என்பதையும் இந்த நேரத்திலே நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கின்றேன். ஆனால், நேற்றையதினம், தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி மன்றத் தலைவர்கள் திடீரென்று ராஜினாமா செய்ததற்கு, இங்கே சுட்டிக்காட்டிய மாண்புமிகு உறுப்பினர்கள், இது ஏதோ உள்நோக்கத்தோடு அல்லது வற்புறுத்தலின் பெயரால் என்றுதான் சொன்னார்கள். தயவுசெய்து அதை நான் மறுக்கிறேன் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். நேற்று மாலையே இந்தத் தகவல் எனக்குத் தெரிந்தவுடனே, மாவட்ட ஆட்சித் தலைவரோடு தொடர்பு கொண்டு, அங்கே மாவட்ட அளவிலே பொறுப்பிலே இருக்கக்கூடிய இணை இயக்குநர்—Project Officer அவர்களை—ஊரக வளர்ச்சி முகமையிலே Project Officer—அவர்களை அந்த இரண்டு கிராமங்களுக்கு நேரடியாகச் சென்று, யாராவது அவரை வற்புறுத்தினார்களா அல்லது கட்டாயத்தின் பெயரிலே அவர் தன்னுடைய பதவியை ராஜினாமா செய்தாரா என்று நீங்கள் உடனே விசாரிக்கச் செய்யுங்கள் என்று இங்கே இருந்து தொலைபேசி மூலமாகக் கூறி, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடமிருந்து இன்றைக்குக் கிடைக்கப்பெற்ற தகவலின் பேரில், யாருடைய வற்புறுத்தலோ அல்லது நிர்ப்பந்தமோ இல்லை என்பதை மாவட்ட ஆட்சித் தலைவர் அறிக்கையாக எனக்கு அனுப்பி இருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு எல்லா சமுதாய மக்களுக்கும் பொதுவான அரசு. குறிப்பிட்ட அல்லது இன்னொரு சமுதாய மக்கள்மீது யாருக்குமே அக்கறை இல்லாததுபோலக் கூறினார்கள்—கடந்த ஆட்சி வேண்டுமானால், 9 முறை தேர்தல் அறிவித்து, அதைப் பற்றிக் கண்டுகொள்ளாத அரசு. இந்த ஆட்சி ஆறு மாத காலத்திற்குள்ளே தேர்தலை நடத்துவதற்காக எந்த அளவுக்கு அக்கறை எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொண்டு, (மேசையைத் தட்டும் ஒலி) இனி வரக்கூடிய காலகட்டங்களில் தேர்தலை நடத்துவதற்கு உள்ளாட்சித் தேர்தல் ஆணையத்தின் மூலமாக முறையாக 6 மாத காலத்திற்குப் பின்பு அறிவிப்பு வரும். அப்போது தேர்தல் நடத்துவதற்குண்டான வழிமுறைகளையும், மற்றும் அந்த கிராமத்திலேயிருக்கக்கூடிய எல்லாத் தரப்பு மக்களிடமும் பேசுவதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய ஆலோசனையைப் பெற்று, அங்கே பிரச்சினை

[திரு. சி. துரைராஜ்] [2002 ஏப்ரல் 23

இல்லாமல் சுமுகமான முறையிலே தேர்தல் நடத்துவதற்கு வேண்டிய எல்லா முயற்சிகளையும் அரசு மேற்கொள்ளும், மேற்கொள்ள முன்வரும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து, இந்தச் சட்டத் திருத்தத்திற்கு இந்த மாமன்றம் அனுமதி வழங்குமாறு அன்போடு கேட்டுக்கொண்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

பிற்பகல் 2-50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்தில் பாப்பாபட்டி, கீரிப்பட்டி என்ற பஞ்சாயத்துகளில் தேர்தல் நடைபெறுவதற்கு ஆயத்தப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருந்த நேரத்தில் மாண்புமிகு மாமன்ற உறுப்பினர்கள் அந்தப் பகுதியில், அந்தக் கிராமத்தில் தேர்தல் சுமுகமான முறையில் நடைபெறுவதற்கு அரசு ஆவன செய்யவேண்டுமென்று பல்வேறு கட்டங்களில் கோரிக்கை விடுத்திருந்தார்கள். இப்போது பேசிய மாண்புமிகு உறுப்பினர் யசோதாகூட, இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தலையிட்டு, மீண்டும் அதை நடைமுறைப்படுத்த வேண்டுமென்று சொன்னார்கள். மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த பாப்பாபட்டி, கீரிப்பட்டி பிரச்சினையில், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களையும், என்னையும் அந்தப் பகுதிகளுக்குச் சென்று நிலவரங்களைக் கண்டறிந்து, அந்தப் பகுதிகளினுடைய கிராமத்து மக்களை அழைத்துப் பேசி தேர்தலை நடத்துவதற்குண்டான சாத்தியக்கூறுகளை நீங்கள் செய்ய வேண்டுமென்று பணித்திருந்தார்கள். அந்த நேரத்திலேதான் தேர்தல் அறிவிக்கப்பட்டு, அங்கு வேட்பாளர்களும் வேட்பு மனுத் தாக்கல் செய்த ஒரு சூழ்நிலை ஏற்பட்டது. ஆகவே நாங்கள் அங்குச் செல்வது ஒத்திவைக்கப்பட்டது. இன்று அந்தச் சூழ்நிலை மாறி, அங்கே தேர்தல் நடந்து, மீண்டும் ராஜினாமா செய்யப்பட்டிருக்கின்ற சூழ்நிலையில், மீண்டும் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆலோசனையைப் பெற்று, நாங்கள் அந்தப் பகுதிகளுக்குச் சென்று மீண்டும் தேர்தல் நடத்துவதற்குண்டான சூழ்நிலையை உருவாக்குவோம்



2002 ஏப்ரல் 23] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 4 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 4 வரை, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

[2002 ஏப்ரல் 23

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 14/2002) நிறைவேற்றப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (24-4-2002) புதன்கிழமை காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-54 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 11. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும் ஆணைகளும்

140. 2000-2001 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் ஆண்டறிக்கையும், ஆண்டுக் கணக்குகளும். [1974 ஆம் ஆண்டு நீர் (மாசுத் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் [மத்தியச் சட்டம் 6/1974) 39(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

141. 1999-2000 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தகவல் தொழில் நுட்ப நிறுவனத்தின் இரண்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)



2002 ஏப்ரல் 23]

142. 2000-2001 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் முப்பதாவது ஆண்டறிக்கை. [1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1971) 49(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

143. 2000-2001 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் ஆண்டுக் கணக்குகள். [1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1971) 33(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (ஆங்கிலம்)

144. 2000-2001 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கணக்குகள் மீதான தணிக்கை அறிக்கை. [1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1971) 33(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] ( ஆங்கிலம்)

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

150. பொது நிறுவனங்கள் குழுவின் பத்தொன்பதாவது அறிக்கை. (2001-2002)

151. பொது நிறுவனங்கள் குழுவின் இருபதாவது அறிக்கை. (2001-2002)

152. வேளாண்மை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பிற்குப் (2001-2002) பிழைத் திருத்தம். (தமிழ், ஆங்கிலம்)

153. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் "புதிய பயிர் ரகங்கள் மற்றும் பண்ணைக் கருவிகள்" என்ற புத்தகம். (2002) (தமிழ், ஆங்கிலம்)

224373